வெளியீடு: 11-03-2004

Issued: 11-03-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 29, 2003 - தொகுதி 46 - எண் 1

**Tuesday the 29th April, 2003 – Volume 46 - No. 1**



*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George.**
**Chennai - 600 009**

*. 3.00]* **[Price Rs. 3.00**

235/2004

**29-4-2003**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள்— (19-வது மற்றும் 20-வது பட்டியல்) | 1-69 |
| **2. தகவல் கோரல்—** | 70 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| மொடக்குறிச்சி வட்டம், ஓடாநிலை கிராமம், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்ன மலைக்கு மணி மண்டபம் கட்டுதல் | 70-73 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 73-74 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 74 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு | 74 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 74-243 |
| (அ) கோரிக்கை எண் 33 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 75,84,93-94, 100,101, |
| (ஆ) கோரிக்கை எண் 40 — ஊரக வளர்ச்சித் துறை | |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 102,103,104, 107,108,118, 119-120,124, 152-153,154, 158,159,160-161, 162,187,190, 208-233 |
| *திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி | 94-100, 101-102,103 104-107,108, 109,111,112 |
| *திரு. கா.தி. இளையகண்ணு | 112-116 |
| திரு. கே. ஆறுமுகம் | 116-118,119, 120-122,123, 124-126 |
| திரு. ரா. ஈ...வரன் | 132-135,136, 137-144 |
| திரு. டி. ம... | 146-152, 154-155 |
| *திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 156-159, 160-161,162, 163-164-165 |
| *திரு. லெ. நீலமேகவர்ணம் | 165-167 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *திரு. கே.வி. முரளிதரன் | 167-172, 173,174-176, 179, 180 |
| *திரு. இரா.தா. இன்பத் தமிழன் | 180-185 |
| *திரு. லா. சந்தானம் | 104,145, 185-188,189, 191,192, 193-195 |
| *திரு. எஸ்.கே. செல்வம் | 195,196-201 |
| திரு. எஸ்.எம். சீனிவேல் | 201-208 |
| **6. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்**— | 126-132 |
| (அ) குழந்தையின் பெயருக்கு முன்னால் தாய்/தந்தை பெயர் முதல் எழுத்தை (Initial) பயன்படுத்துவது பற்றி வெளியிடப்பட்ட ஆணை | 126-128 |
| (ஆ) Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல் | 128-132 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 243-245 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**
   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**
   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**
   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
   சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

**5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

**8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**9. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



**10. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**12. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

**13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**14. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

**15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**16. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்:**

கால்நடை பராமரிப்பு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**21. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



**2. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

**3. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**4. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**5. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health and Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru A. Papasundaram:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



12. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. **Minister for Electricity and Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes.

15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** .. **The Hon. Thiru P. Mohan:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodaran:**

Animal Husbandry.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vadivel:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

20. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.



**பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்**

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

---

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ.,எம்.பி.ஏ. சிறப்பு | - பேரவைத் தலைவரின் நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், பி.எல். | - குழு அலுவலர் எம்.ஏ., |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் எம்.ஏ., |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |

| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந
உளுந்தூர்பேட்டை (செ.வ.) -
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். (செ.வ.) - கிருஷ்ணராயபுரம்
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்



88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு



133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

| | |
|---|---|
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 155. பாப்பாசுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 157. பாரிமோகன், திரு. இ. | - தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | - ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி க. | - திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | - லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | - சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | - கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. பெருமாள், திரு. என்.கே. | - விளாத்திகுளம் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 170. பொன்னம்பலம், திரு. ப. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 171. பொன்னையன், திரு. சி. | - திருச்செங்கோடு |
| 172. போளூர் வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 173. மகாலிங்கம், திரு. எஸ். | - அவினாசி (செ.வ.) |
| 174. மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 175. மகேஸ்வரி, திருமதி எஸ். | - கோயம்புத்தூர் மேற்கு |



| | |
|---|---|
| 176. மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 177. மணி, திரு. டி. | - விளவங்கோடு |
| 178. மணி, திரு. ஜி.கே. | - பெண்ணாகரம் |
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | - கபிலர்மலை |
| 180. மல்லிகா சின்னசாமி, திருமதி | - முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | - நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | - கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | - தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | - வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆ.கு. | - ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பூ. | - காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | - சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | - புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | - கோபிசெட்டிப் பாளையம் |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | - திருமயம் |
| 194. ராதாரவி, திரு. | - சைதாப்பேட்டை |
| 195. ராமசாமி, திரு. பி.சி. | - மொடக்குறிச்சி |
| 196. ராமராஜ், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 197. ராம்குமார், திரு. எம். | - பாபநாசம் |
| 198. ராஜகோபால், திரு. ஆ. | - சிவகாசி |

199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். - காரைக்குடி

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்

214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் ஜி. - புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I



220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்

221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

235. சாண்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 16, சுபானு திருவள்ளுவர் ஆண்டு 2034,**

**2003 ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி"*

*ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்*

### பத்தொன்பதாவது பட்டியல்

### கோயில்கள்

1—

**வினா 20666—திரு. பீ.அ. வைதியலிங்கம்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதியில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் எத்தனை கோயில்கள் உள்ளன?*

*(ஆ) அவற்றின் மூலம் மொத்த வருவாய் எவ்வளவு?*

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்கள் மொத்தம் 78.

(ஆ) இத்திருக்கோயில்களின் மூலம் கிடைக்கப்பெறும் மொத்த வருவாய் ரூ. 26,25,908/-

2—

**இரத்த தானம்**

**வினா 20058—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 2001ஆம் ஆண்டில் இரத்த தானம் செய்ய முன்வந்த நபர்களிடம் எவ்வளவு பேரிடம் எவ்வளவு யூனிட் இரத்தம் தானமாக பெறப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 2001ஆம் ஆண்டில் அரசு குருதி வங்கியில் 95,053 நபர்களிடம் (தன் விருப்பார்ந்த குருதி கொடையாளிகள் 60,381 + உறவினர்களுக்காக பதிலளிப்பு கொடையாளிகள் 34,672) 95,053 யூனிட்டுகள் இரத்தமும், தனியார் குருதி வங்கிகளில் 2,63,561 நபர்களிடம் 2,63,561 யூனிட்டு இரத்தமும் தானமாக பெறப்பட்டுள்ளது. இதில் உறவினர்களுக்காக பதிலளிப்பு செய்த 1,43,191 நபர்களும் அடங்கும்.

3—

**நூல்கள்**

**வினா 27162—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பாரதியார், பாரதிதாசன், பட்டினத்தார் ஆகியோரின் கவிதைகளையும் மற்றும் இலக்கண, இலக்கிய வளமுடைய பதினெண் மேல் கணக்கு, பதினெண்கீழ் கணக்கு ஆகியவற்றை மலிவு விலையில் பதிப்பித்து வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாரதியார், பாரதிதாசன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதால் எவர் வேண்டுமானாலும் அவர்களின் படைப்புகளை அச்சிட்டு வெளியிடலாம். இதனடிப்படையில் தற்போது இவர்களின் படைப்புகள் பலராலும் அச்சிட்டு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பட்டினத்தாரின் படைப்புகள், பதினெண்மேல் கணக்கு, பதினெண்கீழ் கணக்கு ஆகியனவும் தனியாரால் அச்சிட்டு விற்பனை செய்யத் தடையேதுமில்லை. மேலும் இதுபோன்ற அரிய நூல்களை/சிறந்த நூல்களை அச்சிட்டு வெளியிட முனைவோருக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்நூல்களை அரசு மலிவு விலையில் பதிப்பித்து வழங்கவேண்டிய அவசியம் எழவில்லை.

கீழ்க்குறிப்பிட்டுள்ளவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டுள்ளன. இவர்களின் நூல்களை எவர் வேண்டுமானாலும் அச்சிட்டு மலிவு விலையில் விற்பனை செய்யலாம்.

1. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. (விடுதலைப் போரில் தமிழகம் என்னும் நூல் மட்டும்)
2. பாவேந்தர் பாரதிதாசன்
3. பேரறிஞர் அண்ணா
4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
5. தேவநேயப்பாவாணர்

6. மறைமலையடிகள்

7. திரு. வி.க.

8. திரு. கல்கி

9. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

10. திரு ப. ஜீவானந்தம்

11. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

12. திரு வ.உ. சிதம்பரனார்

13. நாவலர் சோமசுந்தர பாரதியார்

14. திரு. கா.மு. ஷெரீப்

15. திரு பரலி சு. நெல்லையப்பர்

16. திரு. வா.வே.சு. ஐயர்

17. காரைக்குடி சா. கணேசன்

18. திரு. சதுசு. யோகி

19. திரு. வெ. சாமிநாத சர்மா

20. கவிஞர் முடியரசன்

21. தமிழறிஞர் மயிலை சினி வெங்கடசாமி

22. திரு. சாமி சிதம்பரனார்

23. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

24. திரு. புதுமைப்பித்தன்

25. திருமதி. கு.ப. சேது அம்மாள்

4—

**மருத்துவ வசதி**

**வினா 31500—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய அளவில் மருத்துவ வசதி இல்லை. இதற்குத் தீர்வு காண அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கென ஒப்பளிப்பு செய்யப்பட்ட இரு மருத்துவ அலுவலர் பதவிகளும் நிரப்பப்பட்டு இரு மருத்துவ அலுவலர்களும் ஆரம்ப சுகாதார நிலையப் பணிகளை செவ்வனே செயலாற்றி வருகின்றனர். இச்சுகாதார நிலையத்திற்கென நடப்பு நிதியாண்டில் ரூ. 63,000/- மருந்துகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் தேவையான மருந்துகள் அனைத்தும் வாங்கி வழங்கப்படுகின்றன. மேலும் நாளொன்றுக்கு சராசரியாக 101 புறநோயாளிகளும், ஆண்டொன்றுக்கு 16 உட்புற நோயாளிகளும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தால் பயன்பெறுகின்றனர். இவ்வாரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படுவதால் அதற்குத் தேவையான மருத்துவக் கருவிகளும் வழங்கப்பட்டு மருத்துவப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

5—

**சர்வ சிக்ஷா அபியான்**

**வினா 32042—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் "சர்வ சிக்ஷா அபியான்" என்ற அனைவருக்கும் கல்வித் திட்டம் நடப்பு ஆண்டில் எத்தனை பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன?

(ஆ) இந்தத் திட்டத்தின்கீழ் புதிதாக எத்தனை வகுப்பறைகள் கட்டப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) நடப்பு ஆண்டில் "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின்கீழ் புதிதாக 304 துவக்கப்பள்ளிகள் துவக்கிடவும், 479, தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டம் 32779 அரசுப் பள்ளிகளிலும், 8291 நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளிலும் ஆக மொத்தம் 41070 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் 2 வகுப்பறை கட்டடங்கள் 964-ம் மற்றும் 3 வகுப்பறை கட்டடங்கள் 716-ம் கட்ட திட்டமிடப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. தற்போது மொத்தம் 38 வகுப்பறை கட்டடங்கள் (20 இரண்டு வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 18 மூன்று வகுப்பறை கட்டடங்கள்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

6—

### விடுதி

**வினா 1874—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான மாணவர் விடுதி எத்தனை உள்ளன?

(ஆ) அவர்களுக்கு மேலும் புதிய விடுதிகள் கட்டித் தரப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசி தொகுதியில் கீழ்க்கண்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதிகள் மட்டும் இயங்கி வருகின்றன:-

1. அரசு மாணவர் விடுதி, வந்தவாசி,
2. அரசு மாணவர் விடுதி, இரும்பேடு,
3. அரசு மாணவியர் விடுதி, வந்தவாசி.
4. அரசு மாணவியர் விடுதி, மருதாடு.

(ஆ) புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

7—

### விடுதி

**வினா 19610—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் பகுதியை மையமாக வைத்துக்கொண்டு மாணவர்களுக்குப் பொதுவான தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

புதிய விடுதிகள் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

8—

### கான்கிரீட் கட்டடம்

**வினா 19612—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஈச்சம்பட்டி கள்ளர் துவக்கப்பள்ளிக்கு புதிய கான்கிரீட் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஈச்சம்பட்டி கள்ளர் துவக்கப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

9—

**கட்டடம்**

**வினா 19613—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வெள்ளைமலைப்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி, ஒன்றியம், வெள்ளைமலைப்பட்டி, அரசு கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

10—

**மகளிர் விடுதி**

**வினா 30607—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 29]

(அ) புதுக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

11—

**கசிவுநீர்க் குளங்கள்**

**வினா 17847—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பாசன நீர் ஆதாரத்தைப் பெருக்கும் வகையில் எத்தனை கசிவுநீர்க் குளங்களை அரசு ஏற்படுத்தியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 20 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டன.

[2003 ஏப்ரல் 29

மாவட்ட வாரியாக அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் விவரம்:-

| வஎண் | மாவட்டம் | அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகளின் எண்ணிக்கை | செலவுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | 4 | 11.98 |
| 2. | திருவண்ணாமலை | 2 | 22.65 |
| 3. | நாமக்கல் | 2 | 3.84 |
| 4. | திருச்சி | 7 | 17.92 |
| 5. | விருதுநகர் | 5 | 7.40 |
| | | 20 | 63.79 |

12—

## உழவர் சந்தைகள்

**வினா 23007—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் வேளாண்மை விற்பனை மையங்கள் இருந்த நிலையில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக அரசிற்கும், உழவர்களுக்கும் என்ன இலாபம்?

(ஆ) அதனால் அரசிற்கு ஏற்பட்ட வீண் செலவு எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விற்பனைக் குழுக்களின் முக்கியப் பணிகள் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை விற்பனைக்கூட வளாகத்தில் ஒன்றுகூட்டி, விளைபொருட்களை வாங்குவது, விற்பது போன்றவற்றை முறைப்படுத்தி, மறைமுக ஏல முறையில் போட்டி விற்பனை ஏற்படுத்தி அதிகபட்ச விலை விவசாயிகளுக்கு பெற்றுத்தருவது; இலவசமாக விளைபொருளின் தரத்தினை வியாபாரிகள் அறிந்துகொண்டு அவற்றின் தரத்திற்கேற்ப விலை



2003 ஏப்ரல் 29]

கிடைப்பதை உறுதி செய்யும் பணிகளாகும். இவ்வாறு செயல்படும் விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உழவர் சந்தையானது விவசாயிகள் தமது விளைபொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்திட துணைபுரியும் வகையில் அமைக்கப்பட்டதாகும். விவசாயிகள் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதைத் தவிர்த்து நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதினால் அவர்களுக்குக் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற சேவை நோக்கில் உழவர் சந்தைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் உழவர் சந்தைகள் அனைத்தும் விற்பனைக் குழுக்களின் நிதியிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியிலிருந்தும் அமைக்கப்பட்டதாகும். அவ்வாறு அமைக்கப்பட்ட உழவர் சந்தைகளில், சராசரியாக உழவர் சந்தை ஒன்றுக்கு ரூ.15.00 இலட்சம் என்ற அளவில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் 103 இடங்களில் அமைக்கப்பட்ட உழவர் சந்தைகளில் இதுவரை 27 இடங்களில் அமைக்கப்பட்ட உழவர் சந்தைகள் செயலற்றவை என கண்டறியப்பட்டு அவற்றை மூடிவிட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

13—

## பண்ணை இயந்திரமாக்கும் திட்டம்

**வினா 28907—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002-ல் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் எவை எவை?

(ஆ) பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

(இ) எந்த அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் பண்ணைக் கருவிகள் இயந்திரமாக்கும் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை தொகுதியில் ரூ. 30,000/- மானியத்தில் 6 (ஆறு) பவர் டில்லர்கள் விநியோகம் செய்யப்பட்டு 6 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

(இ) சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகளிடம் இத்திட்டம் பற்றி விரிவாக எடுத்துக்கூறி அவர்களிடம் விண்ணப்பம் பெற்று வேளாண்மை விரிவாக்க மையத்தில் பராமரிக்கப்படும் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் சிறு/குறு ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

14—

**மானிய விலையில் விவசாயக் கருவிகள்**

**வினா 28949—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியிலுள்ள புதுக்கோட்டை ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்குக் கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) 2002-2003 ஆம் நிதியாண்டில் எத்தனை விவசாயிகள் இத்திட்டத்தில் பயன் பெற்றுள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள புதுக்கோட்டை ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயக் கருவிகள் மத்திய-மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களான ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் (அரிசி) கீழ் ரூ.30,000/- மானியத்தில் 3 பவர் டில்லர்களும், வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.30,000/-





மானியத்தில் 1 டிராக்டரும், 2002-2003 ஆம் ஆண்டில் சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை தொகுதியில் இலவசமாக 5 (ஐந்து) நவீன கொத்துக் கருவிகள் மற்றும் 2 மேம்படுத்தப்பட்ட களை எடுக்கும் கருவிகளும் 2002-2003 ஆம் ஆண்டில் சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. தேசிய பயறு பெருக்கத் திட்டத்தில் புதுக்கோட்டை தொகுதியில் 50 சத மானிய விலையில் கைத் தெளிப்பான் ஒன்றும், விசைத் தெளிப்பான் ஒன்றும், நீர்த்தூவான் ஒன்றும் எண்ணெய் வித்து பெருக்கத் திட்டத்தில் நீர்த்தூவான் ஒன்றும் 2002-2003 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ளது.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை மூலம் புதுக்கோட்டை தொகுதியில் 15 சிறு/குறு ஆதிதிராவிடர் விவசாயிகள் பல்வேறு திட்டங்களில் பயன் பெற்றுள்ளார்கள்.

15—

**விவசாயக் கருவிகள் வழங்குதல்**

**வினா 28951—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியிலுள்ள கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ் மானிய விலையில் விவசாயக் கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை விவசாயிகள் பயன் பெறுவர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் மத்திய—மாநில அரசுகள் பங்கேற்கும் வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை தொகுதியிலுள்ள கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் ரூ.30,000/- மானியத்தில் 2 பவர் டில்லர்கள் சிறு/குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

(ஆ) இதன் மூலம் இரண்டு விவசாயிகள் பயன் பெற்றனர்.

16—

**ஆயில் இன்ஜின் வழங்கும் திட்டம்**

**வினா 30613—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆயில் இன்ஜின் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளில் 331 விவசாயிகளும் 1998-99 ஆம் ஆண்டில் 111 விவசாயிகளும் ஆயில் இன்ஜின் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.

17—

**வழக்குகள்**

**வினா 24775—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மூலம் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் தண்டனை எத்தனை வழக்குகளில் வழங்கப்பட்டது?

(இ) அதில் தள்ளுபடியான வழக்குகள் எத்தனை?



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 38.

(ஆ) தண்டனை வழங்கப்பட்டவை : இல்லை.

(இ) தள்ளுபடி செய்யப்பட்டவை : 7

18—

**மயான சாலை**

**வினா 29231—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிட மக்களின் மயானத்திற்கு சாலை போட்டுக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சி, ஆரப்பள்ளம் ஆதிதிராவிட மக்களின் மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்கத் தக்க வகையில் 2001-2002 ஆம் ஆண்டிற்கான 11-வது நிதிக் குழு மானிய திட்டத்தில் ரூபாய் 30,000 மதிப்பீட்டில் 10-10-2002-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஆரப்பள்ளம் ஆதிதிராவிட மக்களின் மயானத்திற்கு சாலைப் பணி நடைபெற்று வருகிறது.

19—

**சாலை வசதி**

**வினா 29294— திரு நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆயங்குடிப்பள்ளம் ஆதிதிராவிடர்கள் சுடுகாட்டிற்குச் செல்வதற்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி, ஆயங்குடிப்பள்ளம் ஆதிதிராவிடர் மக்களின் மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்கத் தக்க வகையில் 2001-2002 ஆம் ஆண்டிற்கான 11-வது நிதிக் குழு மானிய திட்டத்தில் ரூபாய் 50,000/- மதிப்பீட்டில் 10-10-2002-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஆயங்குடிப்பள்ளம் ஆதிதிராவிட மக்களின் மயானத்திற்கு சாலைப் பணி நடைபெற்று வருகிறது.

20—

**மயான சாலை**

**வினா 29474—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியிலுள்ள தில்லைவிடங்கம் ஆதிதிராவிடர் மக்கள் மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, தில்லைவிடங்கம் ஆதிதிராவிடர் மயான சாலை பராமரிப்புப் பணிக்காக 2001-2002 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு (வட்டார ஊராட்சி)



மானியத்தில் ரூ.50,000/- ஒதுக்கீடு செய்து 13-1-2003-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் நிதியாண்டிற்குள் மேற்படி சாலை விஸ்தரிப்பு செய்து ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு பராமரிப்புப் பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

**குடியிருப்புகள்**

**வினா 14311—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி கிளையிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு எடப்பாடியில் குடியிருப்புகள் கட்டித்தர அரசு திட்டமிட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோ-I)-ன் எடப்பாடி கிளையிலுள்ள பணியாளர்களுக்காக எடப்பாடியில் அப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

**முன்பதிவகம்**

**வினா 14390—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்தோ அல்லது எடப்பாடி வழியாகவோ விரைவுப் பேருந்துகள் எதுவும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்படவில்லை. எனவே, எடப்பாடியில் முன் பதிவகம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

23—

**பணிமனைகள்**

**வினா 21254—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் ஏதாவது தனியார் இடத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அரசு இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் எதுவும் தனியார் இடத்தில் இயங்கவில்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

24—

**ப்ளாக் மீட்டர்**

**வினா 3249—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தொழிற்சாலைகளில் நடக்கும் மின்சாரத் திருட்டைத் தடுக்க தொழிற்சாலைப் பகுதியில் மின் விநியோகக் கருவி பொருத்தப்பட்டு (ப்ளாக் மீட்டர்) உபரியாக வரும் மின் செலவை பொதுவில் வசூல் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின்திருட்டைக் கண்டுபிடித்துத் தகுந்த இழப்பை ஈடு செய்வதற்காகத் தலைமையிடத்தில் பறக்கும் படையும் மற்றும் மின்பகிர்மான கட்ட அளவில் மின் திருட்டு தடுப்புப் படையும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவர்கள் உயர் மற்றும் குறைந்த அழுத்தத் தொழில் மின் இணைப்புகளில் நடக்கும் மின் திருட்டைக் கண்டுபிடிக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக தலைமையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படை சந்தேகிக்கப்படும் தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வு செய்து மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுத்து வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் பணியை சிறப்பாக ஆற்றி வருகின்றது.

மேலும் சந்தேகிக்கப்படும் மற்றும் அதிக மின்சாரம் பயன்படுத்தப்படும் இணைப்புகளில், தொழிற்சாலைக்கு வெளியே தனியாக மீட்டர் (Check meters) பொருத்தப்பட்டு, செலவாகும் மின்சாரத்தைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மின் நிலையங்களில் ஒவ்வொரு மின் தொடரிலும் மீட்டர் பொருத்தப்பட்டு மின்சாரம் கண்காணிக்கப்பட்டு அதிக கணக்கில் வராத வணிக மின் இழப்பு ஏற்படும் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதிகளில் அடிக்கடி ஆய்வு செய்து மின் திருட்டு நடைபெறுகின்றதா என்று கண்டறியப்படுகிறது. இந்திய மின்சாரச் சட்டம், 1910 பிரிவு 39 மற்றும் 44ன் கீழ் மின் திருட்டில் ஈடுபடும் நுகர்வோர்களை (அ) மின் அளவியில் (மீட்டர்) குறுக்கீடு செய்யும் நுகர்வோர்களுக்கு ரூபாய் 500 முதல் 5000 வரை அபராதத் தொகையையும் அல்லது அதிகபட்சமாக மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும் அல்லது இரண்டு தண்டனைகளையும் வழங்கி தண்டிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆகையால் ப்ளாக் மீட்டர் பொருத்தி உபரியாக மின்சாரத்தைக் கணக்கிட்டு பொதுவில் வசூல் செய்தால் ஒரு தவறும் செய்யாத நேர்மையான மின் நுகர்வோரிடம் வசூல் செய்ய

வேண்டிய நிலை ஏற்படும். இது நீதிக்குப் புறம்பானதாகவும், இயற்கைக்குப் புறம்பான செயலாகவும் அமையும். ஆதலால் இந்த யோசனை நடைமுறைக்கு உகந்தது இல்லை.

25—

**மின் உற்பத்தி**

**வினா 21572—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் கரும்புக் கழிவுகளிலிருந்து கட்டாயம் மின்சாரம் தயாரிக்கும் அமைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விதியை அரசு அமல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் கரும்புக் கழிவுகளிலிருந்து கட்டாயம் மின்சாரம் தயாரிக்கும் அமைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விதி ஏதும் தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இல்லை. ஆனால் சர்க்கரை ஆலைக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை ஊக்குவிக்கும் கொள்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்துள்ளது. அதன்படி சர்க்கரை ஆலைக் கழிவை, அதாவது கரும்புச் சக்கையை (Begasse) உபயோகித்து பதினோரு தனியார் சர்க்கரை ஆலைகளிலும் (182.6 மெ.வா.) மற்றும் மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் (20.0 மெ.வா.) இணை மின் உற்பத்தி செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது. அவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அவற்றின் உபயோகம் போக, மீதமுள்ளவற்றை தமிழ்நாடு மின்சார வாரியம் விலைக்குப் பெற்றுக்கொள்கிறது.

மேலும் நான்கு தனியார் சர்க்கரை ஆலைகளிலும் (125.8 மெகா வாட்) மற்றும் மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் (39.60 மெகா வாட்) மின் உற்பத்தித் திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.



**இணை மின் உற்பத்தி செய்து வரும் சர்க்கரை ஆலைகளின் விவரம்:—**

| வ. எண். | பெயர் | நிறுவுத்திறன் (மெ.வா.) |
|---|---|---|
| 1. | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, சேத்தியாத்தோப்பு | 7.50 |
| 2. | செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, செய்யாறு | 7.50 |
| 3. | திரு ஆரூரான் சுகர்ஸ்-2, திருமண்டங்குடி | 28.42 |
| 4. | ராஜஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், வரதராஜபுரம், வைகை அணை | 12.00 |
| 5. | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், போளூர் | 15.00 |
| 6. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ், லால்குடி | 12.00 |
| 7. | திரு. ஆரூரான் சுகர்ஸ்-1, கொல்லுமாங்குடி (இது கடலூர் மாவட்டம், ஏ. சித்தூருக்கு மாற்றியமைக்கப்பட்டு வருகிறது) | 18.68 |
| 8. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நெல்லிக்குப்பம் | 30.00 |
| 9. | எஸ்.வி. சர்க்கரை ஆலை, பழையசீவரம் | 6.00 |
| 10. | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஹரூர் | 5.00 |
| 11. | சக்தி சுகர்ஸ், சிவகங்கை | 5.50 |
| 12. | அருணாச்சலம் சுகர்ஸ், திருவண்ணாமலை | 19.00 |
| 13. | பண்ணாரியம்மன் சுகர்ஸ், சத்தியமங்கலம் | 20.00 |
| 14. | ஆரே எனர்ஜி, திருவிடைமருதூர் | 16.00 |
| | **மொத்தம்** | **202.60** |

**இணை மின் உற்பத்தி செய்ய இசைவு அளிக்கப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளின் விவரம்:**

| வ. எண். | பெயர் | நிறுவுத்திறன் (மெ.வா) |
|---|---|---|
| 1. | சுப்ரீம் ரினீவபில் எனர்ஜி, பெண்ணாடம் | 54.00 |
| 2. | சக்தி சுகர்ஸ், ஆப்பக்கூடல் | 32.00 |
| 3. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) புகளூர் | 24.80 |
| 4. | தைலான் சுகர்ஸ், மொடக்குறிச்சி | 15.00 |
| 5. | கும்மிடிப்பூண்டி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கும்மிடிப்பூண்டி | 18.60 |
| 6. | வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வேலூர் | 15.00 |
| 7. | கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை-2, கச்சிராப்பாளையம் | 6.00 |
| | **மொத்தம்** | **165.40** |

26—

### சிப்காட்

**வினா 25049—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சிப்காட் தொழிற்போட்டை எத்தனை இயங்கி வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் இதுவரை சிப்காட் தொழில் மைய வளாகங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை.



27—

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 1063—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில், தெரு விளக்குகள் எரியாததால் பல தெருக்கள் இருளில் மூழ்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியில் மொத்தம் உள்ள 5241 தெரு விளக்குகளில் எரியாமல் பழுதடைந்திருந்த 141 தெருவிளக்குகள் சரிசெய்யப்பட்டு எரிய வைக்கப்பட்டுள்ளன.

28—

### குளம் பழுதுபார்த்தல்

**வினா 6159—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சி, பிரான்சேரி குளத்தில் படித்துறைகளைக் கட்ட அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மண்டலம், சேரன்மகாதேவி, கோபாலசமுத்திரம் பேரூராட்சி, பிரான்சேரி குளத்தில் படித்துறைகள் மற்றும் தடுப்புச் சுவர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை உடனடியாகப்

பழுதுபார்க்க வேண்டியதில்லை. மேலும் பழுதுபார்க்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

29—

**படித்துறை அமைத்தல்**

**வினா 6204—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாகாதேவி பேரூராட்சி, ஜெயந்தி நகர் காலனி, கீழ்புறம் மற்றும் அரசடி தென்பாகம், 4 ஆம் தெரு ஆகிய பகுதிகளில் கரையோரம் படித்துறைகளை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மண்டலம், சேரன்மகாதேவி பேரூராட்சி, ஜெயந்தி நகர் காலனி, கீழ்புறம் மற்றும் அரசடி தென்பாகம் 4 ஆம் தெரு ஆகிய பகுதிகளில் இரண்டு படித்துறைகள் பழுதடைந்துள்ளன. இதனைப் பழுதுபார்க்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லை.

(ஆ) கருத்துரு ஏதுமில்லை.

30—

**படித்துறைகள் கட்டுதல்**

**வினா 6207—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆலடித் தெரு மற்றும் சூரபுரம் பெரிய படித்துறை ஆண், பெண் மற்றும் அனைவரது நல்லூர் தெரு ஆகிய பகுதிகளில் கன்னடியின் கால்வாய் கரையோரம் படித்துறைகள் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மண்டலம், சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆலடித்தெரு மற்றும் சூரபுரம் பெரிய படித்துறை ஆண், பெண் மற்றும் அனைவரது நல்லூர் தெரு ஆகிய பகுதிகளில் கன்னடியன் கால்வாய் கரையோரம் இரண்டு படித்துறைகள் மட்டும் தற்போது பழுதடைந்துள்ளன. இதனை உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் தற்போது சேரன்மகாதேவி பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லை.

(ஆ) கருத்துரு ஏதுமில்லை.

31—

**வடிகால் அமைத்தல்**

**வினா 8435—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சி, சொக்கலிங்கபுரம் பிரதான சாலை மற்றும் களத்துத் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் வடிகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் பேரூராட்சி, சொக்கலிங்கபுரம் பிரதான சாலை மற்றும் களத்துத் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் வடிகால் அமைக்க இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

32—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 10341—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட மாந்தோப்பு முதல் தாமரை நகர் வரை தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட மாந்தோப்பு முதல் தாமரை நகர் வரை உள்ள சாலையின் தூரம் அரை கி.மீ. ஆகும். இதனை தார்ச் சாலையாக அமைக்க சுமார் ரூபாய் 2.50 இலட்சம் செலவாகும். இப்பணியினைச் செய்து முடிக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை என்பதால் தற்போது இப்பணியை மேற்கொள்ள இயலாது.

33—

**நாளங்காடி**

**வினா 10598—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் காய்கறி நாளங்காடி (கடை) ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாட்றாம்பள்ளி பேரூராட்சியில் காய்கறி நாளங்காடி அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

34—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 11790—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி, மல்லிகா நகரில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி, மல்லிகா நகரில் சுமார் 240 மீட்டர் நீளம் தார்ச் சாலை அமைக்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியை மேற்கொள்ள இயலாது.

35—

**குடிநீர்**

**வினா 12583—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம் பாளையம் கிராமம், பேக்காடு பகுதியில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம் பாளையம் கிராமம், பேக்காடு பகுதியில் ஒரு கைப்பம்பு உள்ளது. மேலும் குடிநீர் வசதி செய்ய இப்பகுதி காவிரி குடிநீர் இணைப்பு கிராம திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**குடிநீர்**

36—

**வினா 12584—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடவனேரி கிராமம், வேலகவுண்டம்பாளையம் பகுதியில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி கிராமம், வேலகவுண்டம்பாளையம் பகுதி பள்ளி அருகில் ஒரு கைப்பம்பும், விசைப்பம்பும் உள்ளன. மேலும் குடிநீர் வசதி செய்ய இப்பகுதி காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

37—

**குடிநீர் இணைப்பு**

**வினா 12585—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் கட்டப்பட்ட குடிநீர்த் தொட்டிக்கு இணைப்பு வழங்கி மாணவ/மாணவியர்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இப்பள்ளிக்கென்று கைப்பம்பு, விசைப்பம்பு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதி காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் குடிநீர்ப் பற்றாக்குறை எழ வாய்ப்பில்லை.

38—

**குடிநீர் வசதி**

**வினா 12601—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம், நொருக்கம்பாளையம் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம் பாளையம், நொருக்கம்பாளையம் பகுதியில் இரண்டு கைப்பம்புகளும் ஒரு திறந்த வெளிக் கிணறும் தற்போது உள்ளன. இக்கிராமம் குடிநீர் வசதி பெற காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

39—

**காவிரி குடிநீர்**

**வினா 12602—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம், மொண்டான்பாளையத்தில் வசிக்கும் மக்களுக்கு காவிர் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளிகவுண்டம்பாளையம், மொண்டான்பாளையத்தில் விசைப்பம்பு மேல்நிலைத் தொட்டி ஒன்றும், கைப்பம்பு ஒன்றும் ஏற்கெனவே உள்ளன. தற்போது இவ்வூராட்சி காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

**40—**

**காவிரி இணைப்பு**

**வினா 12603—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை கிராமம், லட்சுமணவளவு, பொட்டியம்மா காட்டுவளவு, காரமத்து கோவில் ஆகிய பகுதிகளில் காவிரி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை கிராமம், லட்சுமணவளவு, பொட்டியம்மா காட்டு வளவு ஆகிய பகுதிகளில் தலா ஒரு கைப்பம்பு தற்போது உள்ளது. இப்பகுதிகளில் குடிநீர் வசதியைப் பெருக்கிட காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 29]

**41—**

**காவிரி இணைப்பு**

**வினா 12604—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், வ.வெங்காடு பகுதியில் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் கிராமம், வ.வெங்காடு பகுதியில் ஏற்கெனவே கைப்பம்பு ஒன்று உள்ளது. மேலும் இக்கிராமம் காவிரி குடிநீர் இணைப்பு கிராமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

**42—**

**தார்ச் சாலை பழுதுபார்த்தல்**

**வினா 17864—திரு. ஐ. கணேசன்:-**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி 1- வது வார்டு-4 வது வார்டு இணைக்கும் கண்ணாங்காட்டில் இருந்து முண்டாச்சியூர் செல்லும் தார்ச் சாலை மிகவும் மோசமாக உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள தார்ச் சாலையைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் கண்ணாங்காட்டில் இருந்து முண்டாச்சியூர் செல்லும் தார்ச் சாலையைப் பழுதுபார்க்க தற்போது இயலவில்லை.

**43—**

**கழிப்பிட அறை**

**வினா 20845—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லாரப்ஷா தர்கா தெருவில் பெண்கள் கழிப்பிட அறை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு- எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட லாரப்ஷா தர்கா தெருவில், இரு இருக்கைகள் கொண்ட கழிவறை, குளியல் அறைகள் இருபாலருக்கும் பொதுவானதாகவும், அதன் அருகில் அம்பேத்கர் நகரில் பெண்களுக்கு என இரண்டு இருக்கைகள் கொண்ட கழிவறை தனியாகவும் உள்ளன.

**44—**

**நூலகம்**

**வினா 21003—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில் நகராட்சி வாயிலாக செயல்பட்டு வரும் நூலகம், அதற்கென கட்டப்பட்ட கட்டடத்தில், தேவையான தளவாடங்களுடன் மக்கள் உட்கார்ந்து படிக்க வசதி செய்யப்படுமா?



2003 ஏப்ரல் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நகராட்சி, படிப்பகம் அதற்கென உரிய கட்டடத்தில் மக்கள் உட்கார்ந்து படிக்கத் தேவையான போதிய தளவாடங்களுடன்--அதாவது ஒரு மேஜை, ஒரு நாற்காலி, மேஜையுடன் கூடிய சாய்வு பெஞ்சு நான்கும்--நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**45—**

**நகராட்சி ஊழியர்கள்**

**வினா 23527—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு நகராட்சி ஊழியர்கள் தங்களது பணியை செவ்வனே செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு- எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவத்திபுரம் (செய்யாறு) நகராட்சியில் பணியாற்றும் எல்லா பிரிவு அலுவலர்கள், எழுத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் அவரவர்களின் பணியை செவ்வனே செய்து வருகிறார்கள். இருப்பினும் நகராட்சிப் பணியாளர்கள் தங்கள் பணியினை செவ்வனே செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

46—

## ஆழ்கிணறுகள் அமைத்தல்

**வினா 29531—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூர் பேரூராட்சியில் 5 இடங்களில் ஆழ்கிணறுகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் பேரூராட்சியில் 2002 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆழ்வார் மாரியம்மன் கோயில் அருகிலும், 10-வது வார்டு நெல்லித்துறை ரோட்டிலும், தேங்காய்பாறை ரோடு இலங்கை அகதிகள் முகாம் அருகிலும், ஆக மொத்தம் 3 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 2002-2003ஆம் ஆண்டிற்கு, எதிர்வரும் வறட்சியினை முன்னிட்டு அரசால் முன்மொழிவு சமர்ப்பிக்கக் கேட்கப்பட்டதில், கூடுதலாக 4 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க பட்டியல் தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

47—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 29534—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு ஆழ்கிணறு போட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணா நகர், சர்க்கார்பவி, சரளபதி, மூவேந்தர் காலனி மற்றும் தம்மம்பதி ஆகிய பகுதிகளில் வாழும் மலைவாழ்/தாழ்த்தப்பட்ட பகுதி மக்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு தற்போது பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

48—

## நிதி ஒதுக்கீடு

**வினா 31187—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் நிதியாண்டில் சேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது?

(ஆ) எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே அவ்வாண்டில் அவ்வொன்றியத்தில் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

49—

## கால்நடைத் துறைப் பணிகள்

**வினா 24215—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில், கால்நடைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில், கால்நடைத் துறை மூலமாக கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ உதவி மற்றும் உடல்நலம் பேணும் பணி 1 பிரதம மருத்துவமனை, 4 கால்நடை மருத்துவமனைகள், 31 கால்நடை மருந்தகங்கள், 2 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் 13 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் முதலுதவி அளித்திட 73 கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. மாவட்டத்தில் உள்ள பசுவினம் மற்றும் எருமையினங்களின் மரபியல் குணங்களை முன்னேற்றும் பொருட்டு, திரவ்விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல், 124 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம், 1-08-1990 முதல் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. கால்நடை பாதுகாப்புத் திட்டம் மூலம் 1999-2000 முதல் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதிகள் பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களிலும் சிறப்பு முகாம்கள் மூலமாக உடல்நலம் பேணுதல், நோய்த் தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், கிளை பரிசோதனை மற்றும் மலட்டுத் தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

50—

## வனக் குழுக்கள்

**வினா 20649—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர், மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதி கிராமங்களிலுள்ள மக்கள் தொழில் செய்ய உதவிட வனக் குழுக்கள் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி கிராமங்களில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் ஏற்கெனவே கிராம வனக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வரிசை எண் | கிராம வனக்குழுவின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | காப்புக்காடு | செயல்படுத்தும் கோட்டம் |
|---|---|---|---|---|
| 1. | திரிகூடபுரம் | 1997-1998 | சொக்கம்பட்டி | சமூகக் காடுகள், திருநெல்வேலி. |
| 2. | காந்திநகர் காலனி | 1998-1999 | கிருஷ்ணாபுரம் | சமூகக் காடுகள், தூத்துக்குடி. |
| 3. | முத்துசாமிபுரம் | 1998-1999 | வைரவன்குளம் | சமூகநலக் காடுகள், தூத்துக்குடி. |
| 4. | காசிதர்மம் | 1998-1999 | சின்னக்காடு மற்றும் வெள்ளக்கல்தேரி | சமூகநலக் காடுகள், தூத்துக்குடி. |
| 5. | பார்வதிபுரம் | 1999-2000 | வெள்ளக்கல்தேரி | ஷை |
| 6. | மேலகிருஷ்ணாபுரம் | 1999-2000 | கடையநல்லூர் | ஷை |
| 7. | ரகுமானியாபுரம் | 1999-2000 | வடகரை | திருநெல்வேலி கோட்டம் |
| 8. | சிங்கிலிப்பட்டி | 2001-2002 | சொக்கம்பட்டி | சமூக நலக்காடுகள், திருநெல்வேலி. |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து திட்ட கிராமங்களிலும் அதிகமான வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு, நாற்றங்கால் அமைப்பதிலிருந்து நடுகைப் பணி வரை பல்வேறு வேலைகளில் உள்ளூர் கிராம மக்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அறிவியல் அடிப்படையில் நில வளத்தினை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொண்டு கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பினைப் பெருக்கி, கிராம வனக் குழுக்கள் மூலம் கூட்டு வன நிர்வாகத்தில் உள்ளூர் மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி,

எளிய தொழில்களான கூடை முடைதல், பாய் பின்னுதல், தென்னை ஓலை தயாரித்தல், கறவை மாடு வளர்த்தல் போன்ற பல வேலைவாய்ப்பு வழிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மேலும் அடுத்த நிதியாண்டில் (2003-2004) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த வாவா நகரம் கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## இருபதாவது பட்டியல்

1—

### குடிநீர்

**வினா 1035—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு ஒன்றியம், களிமங்கலம் பஞ்சாயத்து, ஓவலூர் கிராமத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், களிமங்கலம் ஊராட்சி, ஓவலூர் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு, பொதுக் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 2000 ஆம் வருடம் ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2—

### குடிநீர்

**வினா 1194—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், சீமானூத்து பஞ்சாயத்து, எஸ். பெருமாள் கோவில்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சீமானூத்து ஊராட்சி, எஸ். பெருமாள் கோவில்பட்டி குடியிருப்புக்கு சிறு மின்விசைத் திட்டம் அமைத்து மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

3—

### குடிநீர்

**வினா 4164—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரியில் உள்ள பொந்தனூர் காட்டுவளவு பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சி, பொந்தனூர் காட்டுவளவு பகுதி மக்களுக்கு பயனில் உள்ள பொந்தனூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து ஒரு பொதுக் குழாய் மற்றும் ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் இக்குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி குடிநீர் வழங்கப்படவுள்ளது.

4—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 5541—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கீழ்செம்பேடு கிராமத்தில் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், கீழ்செம்பேடு ஊராட்சி, கீழ்செம்பேடு குடியிருப்பின் மக்கள்தொகை 950 ஆகும். இக்கிராமக் குடியிருப்பிற்கு திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு அத்தியாவசியத் தேவைக்கு வேண்டிய அளவு (40 லிட்டர்) குடிநீர் தற்போது வழங்கப்படுவதால் இக்குடியிருப்புக்கு கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

5—

## மேல்நிலைத் நீர் தேக்கத் தொட்டி

**வினா 5551—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளூர் கிராமத்தில் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், தெள்ளூர் ஊராட்சி, தெள்ளூர் கிராமக் குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 650 ஆகும். இக்கிராமக் குடியிருப்பிற்குத் திறந்தவெளிக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே இக்குடியிருப்பிற்குக் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

6—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 5559—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சாலவேடு மேட்டுப்பாளையம் தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், சாலவேடு ஊராட்சி, மேட்டுப்பாளையம் கிராமக் குடியிருப்பின் மக்கட்தொகை 350 ஆகும். இக்கிராமக் குடியிருப்பிற்கு சாலவேடு குடியிருப்பிலுள்ள 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. மேலும் சாலவேடு காலனியில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் மேட்டுப்பாளையம் குடியிருப்பிற்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே இக்குடியிருப்புப் பகுதிகளுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்படுவதால் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2003 ஏப்ரல் 29

7—

## ஆழ்துளைக் கிணறு

**வினா 7172—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒசவுள்ளி புதூர் கிராமத்திற்குக் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பேடரஅள்ளி ஊராட்சியைச் சார்ந்த ஒசவுள்ளி புதூர் குடியிருப்பிற்குத் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இக்குடியிருப்பிற்குக் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்க இயலாது.

8—

## ஆழ்துளைக் கிணறு

**வினா 9114—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, குண்ணமலை கிராமத்தில் தண்ணீர் இல்லாததால் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, குண்ணமலை கிராமத்திற்குப் பயனிலுள்ள மூன்று கையிறைப்பான்கள், ஒரு மின்னிறைப்பான் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே மேலும் அங்கு ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

9—

## குடிநீர்

**வினா 10620—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளக்காடு தொடக்கப் பள்ளிக்கு மேச்சேரி செல்லும் குடிநீரிலிருந்து பிரித்து குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்தில் உள்ள பள்ளக்காடு தொடக்கப் பள்ளிக்கு 1000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது பருவ மழை பொய்த்ததினால் ஆழ்துளைக் கிணற்றில் நீர் மட்டம் குறைந்துள்ளது. புதிய ஆழ்துளைக் கிணறு வறட்சி நிவாரணத் திட்டத்தின் மூலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

## குடிநீர்

**வினா 10637—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, சக்கிலிநத்தம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, சக்கிலிநத்தம் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 50 ஆகும். இக்குடியிருப்பில் திறவுக் கிணறு ஒன்று பயனில் உள்ளது. இக்குடியிருப்பில் மக்கட்தொகை குறைவாக இருப்பதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

11—

**குடிநீர்**

**வினா 10652—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அமரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அமரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு 1000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 29]

12—

**குடிநீர்**

**வினா 10698—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, கருப்பட்டி மூலை, வாட்டார் ஊராட்சி, மேலபுதூர் ஆகிய கிராமங்களில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, கருப்பட்டி மூலை கிராமத்தில், வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003-ஆம் ஆண்டு இறுதிக்குள் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவுறும்போது இக்குடியிருப்பும் குடிநீர் வசதி பெறும். கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், வாட்டார் ஊராட்சி மேலப்புதூர் (கீழப்புதூர்) பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் கிராமமாக உள்ளது. வரும் நிதியாண்டில் தகுதி மற்றும் தேவை அடிப்படையில் நிதி ஆதாரத்திற்கேற்ப புதிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்வது பரிசீலிக்கப்படும்.

13—

**குடிநீர்**

**வினா 10753—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓ.ஜி.அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டி கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசின் கவனத்திற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓ.ஜி.அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 620 ஆகும். இக்குடியிருப்பில் நான்கு கையிறைப்பான் திட்டங்கள் மற்றும் 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் 1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. கோடைக்காலத்தில் நீர் வரத்து குறைந்து விடுவதால் போதுமான அளவு குடிநீர் வழங்க இயலவில்லை. மற்ற சமயங்களில் தற்போதுள்ள குடிநீர் வசதியே போதுமானதாக உள்ளது. இருப்பினும் கூடுதல் குடிநீர் வசதிக்கு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்குடியிருப்புக்கு வரும் நிதியாண்டுகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

14—

**வினா 10760—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம் பழைய இண்டூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதை மாற்றி, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 ஏப்ரல் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பழைய இண்டூர் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 800 ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் செயலில் உள்ளன. ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்நீர்த் தேக்கத் தொட்டியில் உள்ள பழுதுகள் தற்பொழுது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும். எனவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதில்லை.

15—

## போர்வெல்

**வினா 10765—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சென்றாயன் கொட்டாயில் போர்வெல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சென்றாயன் கொட்டாய் என்ற சந்திரப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 210 ஆகும். இக்குடியிருப்பில் தற்போது கையிறைப்பான் திட்டம் ஒன்று செயலில் உள்ளது. ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு வரும் நிதியாண்டுகளில் இக்குடியிருப்புக்குத் தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில் கூடுதல் நீராதாரம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்.

16—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 10788—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதே அள்ளி ஊராட்சி, ஆண்டார அள்ளி கிராமத்திற்குப் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாதே அள்ளி ஊராட்சி, ஆண்டார அள்ளி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 54 ஆகும். இக்குடியிருப்பில் தற்போது ஒரு கையிறைப்பான் மற்றும் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்பட்ட சிறு மின் விசைத் திட்டம் பயனில் உள்ளது. எனவே புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

17—

## ஆழ்துளைக் கிணறு

**வினா 10794—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் நெக்குத்தி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் நெக்குத்தி குடியிருப்பிற்கு 1987 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் இரு கையிறைப்பான் திட்டங்களும் செயலில் உள்ளன. இக்குடியிருப்பிற்கு தற்போது செயலில் உள்ள குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால் புதிய ஆழ்துளைக் கிணறு அமைப்பது பரிசீலனையில் இல்லை.



2003 ஏப்ரல் 29]

18—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 10825—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், காணப்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், காணப்பட்டி குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் 1999 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு கையிறைப்பான் திட்டங்களும் பயனில் உள்ளன. மேலும் இந்த விசைப்பம்புத் திட்டத்தில் நீராதாரமான ஆழ்துளைக் கிணற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்துவிட்டது. ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்பாடுகளுக்குட்பட்டு இக்குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதி நிலைமைக்கேற்ப புதிய நீராதாரம் உருவாக்கப் பரிசீலிக்கப்படும்.

19—

## குடிநீர்

**வினா 10900—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளம் கோனார் குடியிருப்புப் பகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச்சினை தீர ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளம் கோனார் குடியிருப்பு என்பது அச்சம்பாடு ஊராட்சியிலுள்ள புதூர் யாதவர் குடியிருப்பாகும். இக்குடியிருப்பிற்குச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ள பணகுடி-வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்கப்படவுள்ளது. எனவே வேறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**20—**

### ஃபுளோரைடு திட்டம்

**வினா 11405—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிப் பகுதியில் 2000-2001-ல் தமிழக அரசின் ஃபுளோரைடு திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகள் எத்தனை?

(ஆ) அதன் விவரம், நிதி செலவிட்ட விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிப் பகுதியில் 2000-2001 ஆம் ஆண்டில் ஃபுளோரைடு திட்டத்தின் கீழ் திட்டப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக சென்ற நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் செலவினம் ஏதும் செய்யப்படவில்லை.

**21—**

### ஃபுளோரைடு திட்டம்

**வினா 11406—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 29]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் 2000-2001-ல் தமிழக அரசால் ஃபுளோரைடு திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகள் எத்தனை?

(ஆ) அதன் விவரம், நிதி செலவிடப்பட்ட விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் 2000-2001-ல் தமிழக அரசால் ஃபுளோரைடு திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் அப்பணிக்காக செலவிடப்பட்ட நிதித் தொகையின் விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகிறது:—

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் | பஞ்சாயத்து | குடியிருப்பு | நிறைவேற்றப்பட்ட திட்டம் | செலவினம் (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | எடப்பாடி | இருப்பாளி | இருப்பாளி | தனி மின்விசைத் திட்டம் | 4.11 |
| 2. | எடப்பாடி | இருப்பாளி | அக்கரைப் பட்டி | " | .. |
| 3. | எடப்பாடி | இருப்பாளி | மலங்காட்டான் தெரு | " | 2.81 |
| 4. | எடப்பாடி | இருப்பாளி | பெருமாள் கோவில் தெரு | " | 4.70 |
| 5. | எடப்பாடி | இருப்பாளி | கவுண்டன் தெரு | " | 4.12 |
| 6. | கொங்கணாபுரம் | கொரணம் பள்ளி | கருங்காடு | " | 2.57 |
| | | | மொத்தம் | .. | 18.31 |

22—

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 11773—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலகுத்தப்பாஞ்சான், கலியன்குளம், ஆழ்வார் துலுக்கர்பட்டி, வேலாயுதசாமி குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மேலகுத்தப்பாஞ்சான், கலியன்குளம், ஆழ்வார் துலுக்கர்பட்டி வேலாயுதசாமி குடியிருப்பு ஆகிய அனைத்து குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதியாண்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 11/2002-லிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

23—

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 11777—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, தாளை சுப்பிரமணியபுரம், கீழகுத்தப்பாஞ்சான் ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, தாளை சுப்பிரமணியபுரம் மற்றும் கீழகுத்தப்பாஞ்சான் ஆகிய கிராமங்களுக்கு பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பணிகள் நிறைவுற்று 11/2002-லிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

24—

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 12016—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு தற்போது அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், கூட்டுக் குடிநீர்த் திட்டக் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

25—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12048—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மாடத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம், பொங்கம்பட்டி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மாடத்தூர் பஞ்சாயத்து, பொங்கம்பட்டி கிராம குடிநீர்த் திட்டம் 6/2002-ல் நிறைவுற்று மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**26—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12243—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சி, கருங்கல் காட்டுவளவு பகுதிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டிட அரசு அனுமதி அளித்து இன்னும் மேல்நிலைத் தொட்டி கட்டப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சி, கருங்கல் காட்டுவளவு (கருங்கல் வளவு) குடியிருப்பு, செயலாக்கத்திலுள்ள இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இக்குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு உள்ளது. மேலும் இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் அனைத்தும் நடப்பு நிதி ஆண்டு



இறுதிக்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**27—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12628—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கீழிருப்பு கிராமத்தில் வடக்கு நடுத் தெருவிற்கு குடிநீர் வசதிக்காக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழிருப்பு வடக்கு நடுத் தெருவிற்கு தனியாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருகிறது. தற்போதுள்ள மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாகவும், சில பகுதிகள் மேடாக உள்ளதாலும், பகிர்மானக் குழாய்களில் அதிக அளவு வீட்டு இணைப்புகளில் தண்ணீர் பிடிப்பதாலும், மேடான பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில்லை. தற்போது மக்கள் பங்களிப்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**28—**

## குடிநீர்

**வினா 13206—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், பெரடியம் ஊராட்சியில் பெரடியம், பெரடியம் ஆதிதிராவிடர் காலனி போன்ற கிராமங்களுக்கும், தூரம்பாடி ஊராட்சியில் குழந்தை கவுண்டன் வலசு, வள்ளியப்ப கவுண்டன் வலசு, நத்தம்பாளையம் ஆகிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்யும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், பெரடியம் ஊராட்சியில் பெரடியம், பெரடியம் ஆதிதிராவிடர் காலனி போன்ற கிராமங்களுக்கும், தூரம்பாடி ஊராட்சியில் குழந்தை கவுண்டன் வலசு, வள்ளியப்ப கவுண்டன் வலசு, நத்தம்பாளையம் ஆகிய குடியிருப்புகளுக்குத் தற்போது அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால் புதிய திட்டம் அமைப்பது பரிசீலனையில் இல்லை.

29—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13338—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சா அள்ளி ஊராட்சி, சோளப்பாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி, ஊராட்சி சோளப்பாடி குடியிருப்பில் மூன்று கையிறைப்பான் திட்டங்கள் மற்றும் 2000-2001 ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செம்மேடு மற்றும் சோளப்பாடி குடியிருப்புகளுக்குச் சேர்த்து 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது செயலில் உள்ளன.



இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு செயலில் உள்ள திட்டங்களே போதுமானதாக உள்ளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

30—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13340—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், திண்ணப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழியில் சிறிய அளவில் குடிநீர் தேக்கத் தொட்டி அமைத்திருப்பதால் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், நடப்பாண்டில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், திண்ணப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கேற்ப பயனிலுள்ள 0.15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாக உள்ளதால், நடப்பாண்டில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

31—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13353—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, கருங்கல்மேடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, கருங்கல்மேடு டாமின் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 90 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் திட்டம் செயலில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் வாரிய நிதிநிலைமைக்கேற்ப தேவை, தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் சிறு மின்விசைப்பம்புத் திட்டம் பரிசீலிக்கப்படும். எனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13354—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, மூலை லைன் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி மூலை லைன் காலனியில் ஒரு கையிறைப்பான் திட்டமும், 1999 ஆம் ஆண்டு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் டீக்கடை குடியிருப்பு குடிநீர்த் திட்டத்திலிருந்து பகிர்மானக் குழாய் நீட்டிப்பு



2003 ஏப்ரல் 29]

திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிக்கப்பட்டு மூன்று பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகையான 70-க்கு தற்போது செயலில் உள்ள குடிநீர்த் திட்டமே போதுமானதாக உள்ளது. எனவே இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**33—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13362—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, கொம்பாடியூர் மேல்காட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, கொம்பாடியூர் அருகில் மேல்காடு குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான் திட்டங்கள் மற்றும் திறவு கிணற்றை நீராதாரமாகக் கொண்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் ரூ.9.24 இலட்சம் மதிப்பீட்டில் 1999 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு தற்போதுள்ள குடிநீர்த் திட்டங்களே போதுமானதாக உள்ளன.

**34—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13366—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி, ஆதனூர் கிராமத்திற்கு நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி, ஆதனூர் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 1,087 ஆகும். இக்குடியிருப்பில் நான்கு கையிறைப்பான் திட்டங்களும், மேலும் 60,000 லிட்டர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் 2,000 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தற்போது செயலில் உள்ளது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு செயலில் உள்ள திட்டமே போதுமானதாக உளளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

35—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13392—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதன அள்ளி ஊராட்சி, எட்டிக்குட்டை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, எட்டிக்குட்டை குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 217 ஆகும். இக்குடியிருப்பிற்கு 1999 ஆம் ஆண்டு 30,000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது பயனில் உள்ளது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு செயலில் உள்ள திட்டமே போதுமானதாக உள்ளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 ஏப்ரல் 29]

36—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13396—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெத்தம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெத்தம்பட்டி குடியிருப்பில் மூன்று கையிறைப்பான் திட்டங்கள் மற்றும் 30,000 லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் 1999ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு, செயலில் உள்ள திட்டங்களே போதுமானவையாகும். எனவே தற்போது அங்கு கோரும் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13525—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பண்டஅள்ளிக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஅள்ளி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 650 ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் செயலில் உள்ளது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கு தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும். எனவே அங்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**38—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 15056—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பரப்பட்டிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பரப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 300 ஆகும். இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் திட்டம் தற்போது செயலில் உள்ளது. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் வரும் நிதியாண்டில் வாரிய நிதி நிலைக்குட்பட்டு தேவை, தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் அமைக்க பரிசீலிக்கப்படும்.





**39—**

## காவிரி குடிநீர்

**வினா 17870—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் புதிதாகக் கட்டி காவிரி குடிநீர் வழங்க அரசு உத்தரவு பிறப்பித்தது?

(ஆ) இதில் எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் கட்டி பொது மக்களுக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஐந்து 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட திட்டமிடப்பட்டு ஐந்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட திட்டமிடப்பட்டு நான்கு கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள ஒரு தொட்டிக்கான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குழாய் பதிக்கும் பணிகள், சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் இதர உட்கட்டமைப்புப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டப் பணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவுறும்போது மேற்காணும் தொட்டிகளின் மூலம் காவிரி குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

**40—**

## கழிவறை கட்டுதல்

**வினா 20845—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

(அ) பண்ருட்டி தொகுதி. லாரப்ஷா தர்கா தெருவில் பெண்கள் கழிப்பிட அறை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட லாரப்ஷா தர்கா தெருவில் இரு இருக்கைகள் கொண்ட கழிவறை, குளியல் அறைகள் இருபாலாருக்கும் பொதுவானதாகவும், அதன் அருகில் அம்பேத்கர் நகரில் பெண்களுக்கு என இரண்டு இருக்கைகள் கொண்ட கழிவறை தனியாகவும் உள்ளன.

41—

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா 21108—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சியிலுள்ள கரையப்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சியைச் சார்ந்த கரையப்பட்டி குடியிருப்பின் மக்கட்தொகை 115 ஆகும். மேற்கண்ட குடியிருப்பில் தற்போது ஒரு கையிறைப்பான் மூலமும், பகிர்மானக் குழாய் நீட்டிப்பின் மூலமும் நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கரையப்பட்டி குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.



2003 ஏப்ரல் 29]

42—

## குடிநீர்த் தொட்டி

**வினா 27068—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி மருதம்புத்தூர் ஊராட்சியில் குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் ஊராட்சிக்கு 2001-2002-ல் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத தொட்டி கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

43—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 27069—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, வடக்கு அரியநாயகிபுரம் மனுஜோதி ஆசிரமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, வடக்கு அரியநாயகிபுரம் மனுஜோதி ஆசிரமம் ஒரு தனியார்

நிறுவனமாக உள்ளதால் அரசு நிதியில் இதற்குத் தனியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வழிவகை இல்லை.

44—

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 27070—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, தெற்கு வீரவநல்லூர் செங்குளம் பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எபபோது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், தெற்கு வீரவநல்லூர் செங்குளம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

45—

**தொட்டி அமைத்தல்**

**வினா 27439—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம், துப்பாக்குடி இராவுத்தர்பேரி இந்திரா நகரில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்டத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம், துப்பாக்குடி இராவுத்தர்பேரி இந்திரா நகர் என்பது இராவுத்தர்பேரி குடியிருப்பின் ஓர் பகுதி. இப்பகுதியில் நடப்பு நிதியாண்டில் (2002-2003) சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

46—

**குடிநீர் விநியோகம்**

**வினா 28434—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் கண்டபட்டி சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் கண்டப்பட்டியில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

47—

**குடிநீர் கிடைக்கச் செய்தல்**

**வினா 28435—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 29

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளக்கால் வடக்குப் பகுதியில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளக்கால் வடக்குப் பகுதி மற்றும் கடைச்சானி ரோட்டில் நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

48—

**குடிநீர்**

**வினா 28436—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் தாழை சுப்பிரமணியபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் சிறு மின்விசைத் திட்டத்தின் கீழ் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் தாழை சுப்பிரமணியபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் சிறு மின்விசைத் திட்டம் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

49—

**குடிநீர்**

**வினா 28437—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 29]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ரெங்கசமுத்திரம், பாப்பாக்குடி ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனி, பள்ளக்கால் அடைச்சானி ரோட்டில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளக்கால் வடக்குப் பகுதி மற்றும் அடைச்சானி ரோட்டில் நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

50—

**குடிநீர் விநியோகம்**

**வினா 28437—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் ஆழ்வார் துலுக்கப்பட்டி பள்ளியின் அருகில் சிறு மின்விசைத் திட்டத்தின்கீழ் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் சேரன்மகாதேவி தொகுதி, ஆழ்வார் துலுக்கப்பட்டி பள்ளியிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் சிறு மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு பெரிய மானியக் கோரிக்கை. வேறு எதுவும் எடுப்பதாக இல்லை. (குறுக்கீடு) எல்லாமே முக்கியமான பிரச்சினைதான்.

## 3. கவன ஈர்ப்பு

### மொடக்குறிச்சி வட்டம், ஓடாநிலை கிராமம், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலை என்னும் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் கட்டாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், 30-4-2002 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது தீரன் சின்னமலை அவர்களுக்கு பிறந்தநாள் விழா நடத்துவதற்கும், மண்டபம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்த விவாதத்திற்கு, "மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற உறுதிமொழியினை அளித்தார்கள்.

மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில், தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து விரிவான அறிக்கை அனுப்புமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 4-10-2002 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டார். அதனைத் தொடர்ந்து 10-2-2003 அன்று சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடைபெற்ற உறுதிமொழிக் கூட்டத்தில் உறுதிமொழிக் குழுத் தலைவர் அவர்கள் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவது குறித்து, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் குழு அமைக்குமாறும், அதில் மக்கள் பிரதிநிதிகளையும், மணிமண்டபம் அமைக்க விழைவு கொண்டு முன்வரும் ஆர்வலர்களையும் சேர்த்து மண்டபம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார். மேலும் ஆர்வலர்கள் வழங்கும் நன்கொடைத் தொகைகளையும் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் 14-2-2003 அன்று அறிவுறுத்தப்பட்டார்.

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு வட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலை என்ற இடத்தில் தீரன் சின்னமலை நினைவாக மணிமண்டபம் அமைப்பது தொடர்பாக தற்போது அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார்கள். அதன்படி ஈரோடு வட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலை என்ற இடத்தில் புல எண் 1289/13-ல் தீரன் சின்னமலை வழிபட்டதாகக் கூறப்படுகின்ற கோயில் உள்ளது என்றும், மேற்படி கோயிலை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள பட்டா நிலங்களான ரீச. எண் 1282/1, 2, 3, 1289/1 முதல் 7 வரை உள்ள மொத்தம் 3.38 ஏக்கர் நிலம் மணிமண்டபம் கட்டவும், விழா எடுக்கவும் தேவைப்படும் நிலங்களெனத் தீரன் சின்னமலை நற்பணி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாகவும், மேலும் தங்கள் மன்றத்தால் ரூபாய் 3 இலட்சம் முதல் ரூபாய் 4 இலட்சம் வரை நிதி திரட்டித் தர இயலும் என 19-12-2002 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் தெரிவித்ததாகவும் அதன்பிறகு மேற்படி தீரன் சின்னமலை நற்பணி மன்ற உறுப்பினர்களிடமிருந்து எந்தவித பதிலும் இதுவரை பெறப்படவில்லையெனத் தெரிவித்துள்ளார். மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில், தீரன் சின்னமலை மணிமண்டபம் அமைப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ள ஈரோடு வட்டம், ஓடாநிலை என்ற இடத்தில் உள்ள நிலம் ரீச. எண் 1282/1, 2, 3 மற்றும் 1289/1 முதல் 7 வரை உள்ள 3.38 ஏக்கர் நிலத்தின் தற்போதைய

மதிப்பு சுமார் ரூ.6,06,360/- எனவும், மேலும் இவ்விடத்தில் உள்ள 57 தென்னை மரங்களின் தற்போதைய மதிப்பு சுமார் ரூ.2,85,000/- எனவும் இச்செலவினத்தையும் நிலமதிப்புடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் தீரன் சின்னமலை மணிமண்டபம் கட்ட நற்பணி மன்றத்தாரால் தேர்வு செய்யப்பட்ட புலங்களுக்கு நிலமதிப்பு ரூ.6,06,360/- எனவும் இத்துடன் மணிமண்டபக் கட்டுமானச் செலவு ரூ.25.00 இலட்சம் சேர்த்தால் சுமார் ரூ.31.00 இலட்சம் தேவைப்படும் என்ற விவரத்தினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, அரசு உறுதிமொழிக் குழு தெரிவித்துள்ளபடி, தீரன் சின்னமலை மணிமண்டபம் அமைப்பது குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைத்து, அதனடிப்படையில், அறிக்கையினை 1 மாத காலத்திற்குள் அனுப்புமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் 20-3-2003 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டார். அதனடிப்படையில் 18 நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் மணிமண்டபம் அமைப்பது தொடர்பான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் 3-4-2003 தேதியிட்ட கடிதத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை பெறப்பட்டதும், மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். தீரன் சின்னமலை அவர்கள், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலை என்னும் கிராமத்தில் கோட்டை கட்டி, கொங்கு வேளாளர் இளைஞர்களைத் திரட்டி வெள்ளையனை எதிர்த்து 1801-1802 மற்றும் 1804 ஆம் ஆண்டுகளில் போரிட்டு, வெற்றிபெற்ற சூழ்நிலையில், 31-7-1805 ஆம் ஆண்டு சங்ககிரிக் கோட்டையில் வீர மரணம் எய்தினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு கரூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு தீரன் சின்னமலை மாவட்டம் என்று பெயர் சூட்டி பெருமை சேர்த்தார்கள். சென்னையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கித் தந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் தெய்வப்புலவர் திருவள்ளுவர்



பெருமகனாருக்கு மாவட்டம் தொடங்கி, பல்கலைக்கழகம் துவங்கிய தாயே! பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக அறிவித்து மாவட்டந்தோறும் விழா எடுத்த தாயே! அண்மையில் நெல்லை மாவட்ட வளர்ச்சிப் பணிகளைத் தொடக்கி வைத்து, கப்பலோட்டிய தமிழன் என்று அனைவராலும் போற்றப்பட்ட வ.உ.சி.க்கு 75 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிய தாயே! 12-2-2002 அன்று ஈரோட்டில் நடந்த அரசு நலத் திட்ட விழாவில் சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையிலே சின்னமலையாக விளங்கிய தீரன் சின்னமலையினுடைய புகழைப் பெருமையுடன் மனதாரப் பாராட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மனதில் நீங்காத இடம்பெற்ற தீரன் சின்னமலைக்கு மொடக்குறிச்சி தொகுதி ஓடாநிலை என்னும் கிராமத்தில் மணிமண்டபம் கட்டுவதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுப்பதற்கு தேவசேனாபதியும் ஜெயராமன் ஆகியோர்கள் முன்வந்துள்ளார்கள். இதனைப் பரிசீலித்து இந்த ஆண்டு அந்த இடத்தில் மணிமண்டபம் கட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆலோசனையின்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிக்கை பெறப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.

[2003 ஏப்ரல் 29

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை குறித்த 15-வது அறிக்கையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த 16-வது அறிக்கையினையும், சாலைகளும் பாலங்களும் குறித்த 17-வது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 149 முதல் 160 வரையிலான 12 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-05

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 105 முதல் 113 வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 29]

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 33-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.276,22,87,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 737, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4637, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5194, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5433, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5864, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6526, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7194, திரு க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7439, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7962, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 1005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8210, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8596, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4270, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6022, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4889, திரு. எச். எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6784, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7478, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5710, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6858, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6282, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6193, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வள்ளியூர் பகுதியிலிருந்து குழாய் மூலம் திருவள்ளூர் நகராட்சிக்குக் கொண்டு வரப்படும் குடிநீரை வெங்கத்தூர் ஊராட்சிக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4736, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, தவிட்டு மாரியம்மன் கோயில் அருகே உள்ள குடிநீர்க் குழாயை வேறு இடத்திற்கு மாற்றியதைத் திரும்பவும் அதே இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1318, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் குடிப்பதற்குக் குடிநீர் இல்லாமல் பொதுமக்கள் கஷ்டப்படுவதால் ஆழ்குழாய்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6323, திரு. கே.வி. முரளிதரன்.



THIRU K.V. MURALIDHARAN: Hon. Speaker Sir, "To discuss the need to dig bore wells and ensure water to the villages and towns", I move—

"That the sum of Rs.1,005,08,09,000/- allocated under Revenue Account, Rs. 545,00,03,000/- allocated under Capital Account and Rs. 276,22,87,000/- allocated under Loan Account under Demand No.33—Municipal Administration and Water Supply Department be reduced by Rs. 100/-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5016, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சியில் உள்ள 36 வார்டுகளுக்கும், குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5299, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகராட்சியில் 10 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கும் நிலையை மாற்றி 3 நாளைக்கொருமுறை குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7536, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4693, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகராட்சி, ஆவுடையார் கோவில் ஒன்றியம், மணமேல்குடி ஒன்றியம் ஆகிய பகுதிகளுக்குக் கொள்ளிடம் உபநீரைக் குடிநீராக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 329, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவணைப்பட்டி, கல்லாளி, மேட்டுத்தாங்கல், ஊனாம்பாளையம், நொச்சிப்பட்டி, ஊத்தங்கரை ஆகிய ஊர்கள் பயன் பெறும் வகையில் பாரூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4568, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டத்தில் பட்டணம்-சிராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ. 545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/ -ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7659, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6117, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழித்துறை நகராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6885, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5259, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை கண்ணப்பர் திடலிலுள்ள குடிநீர் நீரேற்று நிலையத்தின் முழுமைக்கும் மற்றும் அதன் நுழைவுச் சாலைக்கும் சிமெண்ட் கான்கிரீட் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6978, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முறைப்படுத்தாத அங்கீகரிக்கப்படாத விதிமுறைகளுக்கு முரணாகக் கட்டப்பட்ட கட்டடங்களை முறைப்படுத்தும் கட்டணத்தை 10 சதவீதமாகக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,22,87,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 40-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.12,84,51,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.



முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 735, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4657, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5208, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7052, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7137, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,846,50,32,000/- மற்றும் மூலதனக்கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7364, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7419, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8080, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8260, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8565, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8685, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4266, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6017, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4881, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6767, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6123, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6279, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3508, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியின்கீழ் உள்ள ஆழியார் செக்போஸ்ட் அருகில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுத்தும்கூட இதுவரை குடிநீர்க் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படாமல் உள்ள நிலையைப் போக்கி உடன் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4118, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ஜக்கேரி ஊராட்சி, ஒன்னுகுறுக்கி கிராமத்திலும், பைரமங்கலம் ஊராட்சி, பைரமங்கலம் கிராமத்திலுமுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டதால் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து புதிய பைப் லைன்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5301, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை கிராமத்தில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க இரு இடங்களில் திறந்தவெளிக் கிணறும், 8 இடங்களில் மினி பவர் பம்பும் அமைத்து குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6230, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி பேரூராட்சிப் பகுதியில் அடிக்கடி குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் அவதிப்படுவதால் அப்பகுதியில் முப்பது கைப் பம்புகள் உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4732, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், ாத்தகிரி ஒன்றியம், தேனாடு கிராமம், ஓம்சக்தி நகர் ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6888, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியிலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஊராட்சி ஒன்றிய அளவிற்கு ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5024, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் பேரூராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் சாலை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7552, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9063, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், பூமாலைப்பட்டி ஊராட்சி, முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் முனியப்பசாமி கோயில், பள்ளிக்கூடம், குடிநீர் இறைக்கும் ஆற்றுப் பகுதி ஆகியவற்றை இணைக்க சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3714, திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் உள்ள மணிமங்கலம் சாலை, நடுவீரப்பட்டு சாலை, புதுச்சேரி சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை சாலை பழுது பார்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4561, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு வரிசை வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7477, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஒன்றியம், 1. திருநாலூர், 2. ராமானுஜபுரம்,



3. அவவந்திபுரம், 4. ஆதனூர், 5. துருட்டூர், 6. கோவிந்த நாட்டுச்சேரி போன்ற ஊராட்சிகளிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு உடனடியாக இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4700, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை தெரிவித்த பின்னர்,

@ 247 முதல் 363 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைத்து திரு. வினாயகமூர்த்தி பேசுவார்.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய எண்ணங்களைப் பதிவு செய்ய வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே இந்தத் துறைகளின் அமைச்சர் மாண்புமிகு சம்பத் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்திருப்பதற்காக நான் பாராட்டுகின்றேன். இது ஒரு விஷயம்.

*முற்பகல் 10-15*

இன்னொரு வகையிலே, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டிலே நான் ஒரு புதிய கோணத்திலே பார்க்க விரும்புகிறேன். இருக்கின்ற துறைகளிலேயே மிகப்பெரிய அளவிலே வலுவான துறையாக இருப்பது இந்தத் துறைதான். இதனோடு அனைத்துத் துறைகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதைக்கூட நான் புரிந்து வைத்திருக்கின்றேன். அந்த நிலையிலே பார்க்கின்றபோது இந்தத் துறையின் கீழாக 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 611 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 12,619 ஊராட்சிகள் தமிழகத்தில் வாழும் 6 கோடி மக்களுக்காக பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படியானால் ஒட்டுமொத்தத் தமிழகத்தில் வாழுகின்ற மக்கள் அனைவருக்கும் சேவையை ஒழுங்காகச் செய்கின்ற பொறுப்பை இந்த உள்ளாட்சித் துறை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அமைப்புகள் அனைத்திலுமே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள்; இருக்கின்றார்கள் என்று சொல்கின்றோமே ஒழிய யாருக்குமே திருப்தி இல்லாத நிலையிலே இந்த அமைப்புகள் இயங்கி வருவதாக நான் கருதுகின்றேன்.

நீண்ட காலமாக தேர்தலே இல்லாமல் இருந்த நிலையிலே இடையிடையே தேர்தல் நடந்து இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டு இருப்பதனாலே பல்வேறு நிருவாகக் கோளாறுகள் இருப்பதை உணர முடிகின்றது. நகர பாலிகா சட்டம், பஞ்சாயத்து ராஜ் சட்டம் ஆகியவற்றை எந்த உணர்வோடு கொண்டு வர வேண்டுமென்று அமரர் இராஜீவ் காந்தி அவர்கள் விரும்பினார்களோ அந்த உணர்வு முழுமையாக



பிரதிபலிக்கின்ற அளவிலே இந்த அமைப்புகள் உருவாக்கப்படவில்லை என்பதைத் தெரிய முடிகின்றது. அதற்கும் மேலாக இந்த அமைப்புகளுக்கு வேண்டிய நிதியாதாரங்கள் சரியாக இல்லாத காரணத்தினாலே மக்கள் பிரதிநிதிகள் கூட ஒன்றும் செய்ய முடியவில்லையே என்கின்ற ஏக்கத்தோடு அவ்வப்போது கருத்துகளைச் சொல்லிவருவதை நாம் பார்க்க முடிகின்றது. இந்த நிலையில் இந்த அமைப்புகளெல்லாம் ஒழுங்காகச் சீர் பெற, செயல்பட வேண்டுமென்று சொன்னால் பெரிய அளவிலே நிருவாகச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கின்றது. சட்டரீதியான மாற்றங்களையெல்லாம் கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கின்றது. இவற்றையெல்லாம் செய்வதற்கு வேண்டிய துணிவு, இந்த ஆட்சிக்கு இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதனையடுத்து இந்த அமைப்பு முக்கியத்துவம் பெறுவதற்குரிய ஒரு முக்கியக் காரணம் இந்த ஆட்சி, இன்றைக்கு ஒரு இலட்சியத்தை முன்வைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் உருவாக்கப்பட வேண்டுமென்கின்ற இலட்சியத்தை முன்வைத்துத்தான் இப்போது அனைத்துத் துறைகளும் இயங்கி வருவதாக நான் எண்ணிப் பார்க்கின்றேன். இந்த நிலையிலே முதன்மை மாநிலம் என்பதற்கு என்னென்ன அடையாளங்கள், என்னென்ன குறியீடுகள் என்பதைப் பற்றிய விளக்கங்கள் நமக்குச் சொல்லப்படவில்லை. நவீனமயமாக்கலின் விளைவாக எழுந்திருக்கின்ற சில கட்டடங்களை வைத்தோ அல்லது விஞ்ஞானரீதியாக உருவாக்கப்படுகின்ற சில செயல்பாடுகளை வைத்தோ இவைதான் முதன்மை மாநிலத்திற்கான அடையாளங்கள் என்று எடுத்துச் சொல்ல முடியாது. இவற்றையெல்லாம் வளர்ச்சியின் சின்னங்களாக எடுத்துக்கொள்ள முடியுமே ஒழிய முதன்மை மாநிலம் என்கின்ற அடிப்படைக்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று நான் கருதுகின்றேன். என்னைப் பொறுத்த அளவிலே முதன்மை மாநிலம் என்பதற்குரிய ஒரு அடையாளமே தமிழகத்திலே வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்வதிலே சாதனை பெறுவதுதான் என்று நான் கருதுகிறேன். உள்ளாட்சித் துறையினுடைய செயல்பாடுகள் இந்தப் பணிகளைத்தான் செய்து வருகின்றன. சுகாதாரம், கல்வி, குடிநீர் முதலிய 13 விஷயங்களை அடிப்படை வசதிகளாக உள்ளாட்சித் துறை செய்து கொண்டிருக்கின்றது. ஆக, இந்த விஷயத்தில்

பெரிய அளவிலே கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு இருக்கின்றது என்பதை மீண்டும் ஒருமுறை நான் நினைவுபடுத்துகின்றேன். இந்த அளவிலே இந்த மாற்றங்கள், இந்த வசதிகள் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் போய்ச் சேர்ந்துவிட்டால் நாம்தான் இந்தியாவின் முதன்மை மாநிலம் என்கின்ற பேற்றினைப் பெற முடியும். ஆகவே அந்தத் திசையை நோக்கிச் செல்வதற்கு, நிறைய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதை இங்கே சொல்கின்றேன். அந்த மாற்றங்களை எல்லாம் கொண்டு வருவதிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பெரிய பொறுப்பு இருக்கின்றது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-20*

ஏற்கெனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைகளிலே பெருத்த கவனத்தைச் செலுத்தி வருகின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், சென்னையை, சென்னையைச் சுற்றி இருக்கின்ற பெருநகரப் பகுதியை மட்டும் நான் எடுத்துக்கொண்டு சொல்ல முடியும். சென்னை மாநகரத்தினுடைய கட்டமைப்பு வசதிகளை எல்லாம் மேம்படுத்துவதற்காக முதலீட்டுத் திட்டம் ஒன்றினைத் தயார் செய்து, 10 ஆண்டுகளிலே 18,000 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தைத் தயார் செய்து, முதலாம் வருடமாக இந்த ஆண்டு ரூ.1,780.75 கோடிக்குச் செயல் திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. இச்செயல் திட்டத்தின்கீழ் செயலாக்கத்தை மேற்பார்வையிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னைப் பெருநகரக் கட்டமைப்பு மேம்பாட்டுக் குழு என்னும் உயர்நிலை அமைப்பு ஒன்றினை அமைக்கக் கருதப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இது மிகப் பெரிய விஷயம். இந்த விஷயத்திலே மட்டுமல்ல, சாதாரண சிறிய விஷயங்களிலேகூட முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கின்றார்கள் என்பதற்கு இன்னொரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகின்றேன்.

சென்னை மாநகரத்திலே உள்ள கொசுத் தொல்லையை அறவே போக்கிட முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலே உயர்மட்ட ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்க முடிவு



செய்யப்பட்டுள்ளதாகவும், முதல்வரின் சீரிய முயற்சியால் சென்னை மக்களும் அவர்களது எதிர்காலச் சந்ததியினரும் கொசுத் தொல்லையிலிருந்து விரைவில் விடுபடுவார்கள் என்றும் மாநகராட்சியினுடைய பொறுப்பு மேயரான திரு. கராத்தே தியாகராஜன் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக கட்டமைப்பு வசதிகளிலேயிருந்து கொசுத் தொல்லை வரையிலே எல்லா விஷயங்களிலுமே முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தி வருவதைப் பார்க்கின்றபோது, ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு குழு அமைத்துச் செயல்படுவதைக்காட்டிலும், இந்த உள்ளாட்சித் துறையினுடைய முழுப் பொறுப்புகளையும் தன்னுடைய நேரடிப் பார்வையின் கீழாக, ஒரு கூடுதல் பொறுப்பாக முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டால், காரியங்கள் விரைவிலே செய்யப்படுமோ என்கின்ற ஒரு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இதை முதல்வர் அவர்களுடைய சிந்தனைக்கு நான் விட்டுவிடக் கருதுகின்றேன்.

இந்த நேரத்தில் இவ்வளவு பெரிய துறையினுடைய பல்வேறு விஷயங்களை எடுத்துச் சொல்வதற்கு நேரம் இடம் கொடுக்கவில்லை. அதனாலே சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலே செய்ய வேண்டிய சில சட்டரீதியான மாற்றங்கள், நிர்வாகரீதியான மாற்றங்களை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னையைப் பொறுத்த அளவிலே, மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், பெருநகர வளர்ச்சிக் குழுமம் என்று மூன்று அமைப்புகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் இணைந்து செயல்பட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இதிலே மாநகராட்சியும், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியமும், உள்ளாட்சித் துறை அமைச்சருடைய நேரடிப் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால் பெருநகர வளர்ச்சிக் குழுமம் வீட்டுவசதித் துறை அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கின்றது. இது நியாயம் அல்ல, சரி அல்ல என்று நான் கருதுகின்றேன். இந்த பெருநகர வளர்ச்சிக் குழுமம்கூட உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பொறுப்பிலே வருவதுதான் நிர்வாகத்திற்குச் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்கப்பாலே மாநகராட்சி என்பது மக்கள் பிரதிநிதிகளுடைய ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியமும், பெருநகர வளர்ச்சிக் குழுமமும் அந்தக் கட்டுப்பாட்டின்கீழ் வர இயலவில்லை. இன்றைக்கும்கூட தண்ணீர் வரவில்லை என்று

சொன்னாலோ அல்லது சாக்கடை அடைப்பு என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டாலோ, மக்கள் பிரதிநிதிகளை அணுகித்தான் மக்கள் கேட்கின்றார்களேயொழிய, மாநகராட்சிக்கும் இந்த வாரியத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆகவே லக்னோ போன்ற சில மாநகரங்களில் இருப்பதைப் போல மாநகராட்சியினுடைய ஆளுகைக்கு உள்ளாக, கட்டுப்பாட்டுக்கு உள்ளாக குடிநீர் சாக்கடை நீரகற்று வாரியத்தையும் பராமரிப்பு வேலைக்காக ஆயினும் கொண்டு வருவது முக்கியமானது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-25*

அதைப் போலவே ஒரு கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்று சொன்னால் Ground plus I Floor, அது மாநகராட்சியிடம் இருக்கிறது. III & IV Floor, அது பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் இருக்கின்றது. அதற்கு மேலாக அரசாங்கத்திற்கு வந்து, ஒரு ஆணை பிறப்பித்துத்தான் கட்டடம் கட்ட அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இதற்கு எட்டு, பத்து மாதங்கள் ஆகிவிடுகின்ற காரணத்தினாலேதான் அனுமதி இல்லாமலேயே கட்டடங்கள் கட்டப்படுகின்ற சூழ்நிலை இருப்பதாக நான் கருதுகின்றேன். கட்டட அனுமதி கொடுக்கின்ற பொறுப்பு பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் இருந்தாலும்கூட இவற்றையெல்லாம் மேற்பார்வையிடுகின்ற பொறுப்பு மாநகராட்சியிடம் இருக்கின்றது. குடிநீர் வழங்குகின்ற பொறுப்பு இன்னொரு இலாகாவிலே இருக்கின்றது. ஆக, பெருநகர வளர்ச்சிக் குழுமத்தையும்கூட மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டிற்கு உள்ளாகக் கொண்டு வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கட்டடங்களை வரன்முறைப்படுத்துகின்ற விஷயத்திலேகூட எவ்வளவு பொறுப்போடு இங்கே அங்கத்தினர்கள் பேசி இருக்கின்றார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் இதை அந்தந்த மாநகராட்சியின்கீழ் கொண்டு வருவது முக்கியமானது என்பதை அரசு உணரவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன். நிர்வாக மாற்றங்கள் சென்னையைப் பொறுத்த அளவிலே உடனடியாகத் தேவைப்படுகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் எல்லாம் திருத்தி



அமைக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அது முடிந்த உடனேயே இன்றைக்கு பத்து மண்டலங்களாக இருப்பதை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியையும் ஒரு மண்டலமாக ஆக்குகின்ற முறையிலே சட்டச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே அங்கே நான்கு துணை கமிஷனர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் Works Deputy Commissioner, Health Deputy Commissioner, Education Deputy Commissioner என்ற ரீதியிலே இருந்து கொண்டு இருக்கின்றார்கள். இது சரியல்ல என்று நான் கருதுகின்றேன். எல்லா இலாகாக்களையும் பார்க்கின்ற அளவிற்கு அவர்களுக்கு ஏரியா வேண்டுமென்றால் பிரித்துக் கொடுத்தால் கமிஷனருடைய பாரம் குறையும்; நிர்வாகம் சௌகரியமாக நடைபெறும் என்று நான் நினைக்கின்றேன். எல்லாத் துறைகளையும் பார்க்கின்ற அளவிற்கு ஒவ்வொரு Deputy Commissioner-க்கும் மூன்று மண்டலங்கள் ஒதுக்கிக் கொடுப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்கப்பாலே இன்றைக்கு சென்னை நகரத்திலே இருக்கின்ற தலையாய பிரச்சினையே குப்பை அகற்றுகின்ற பிரச்சினைதான் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிறைய விஷயங்கள் நவீனமயமாக்கலின் விளைவாக நடந்து கொண்டு இருக்கின்றன. அதிலே நான் எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை. சாலைகளுக்கு எல்லாம் பிளாஸ்டிக் சாலைகள், சிமெண்ட் சாலைகள், இரப்பர் சாலைகள் போன்றவற்றைப் போடுவதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கின்றன. குடிநீர் விஷயத்திலேயும், சாக்கடை நீர் விஷயத்திலேயும்கூட அப்படி பல அபிவிருத்தி நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. Tidel Park போன்ற விஞ்ஞானரீதியான புதிய அமைப்புகளை உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம்கூட எடுக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் இருந்தாலும்கூட குப்பைகள் அகற்றப்படவில்லை என்றால் நகரம் நாறி விடுகின்றது என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன காரணத்தினாலோ குப்பைகள் வாருகின்ற விஷயத்தைப் பொறுத்தமட்டிலே சென்னை மாநகராட்சி மிகுந்த தடுமாற்றத்துடன் நடந்து கொண்டிருப்பதாக நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே மூன்று மண்டலங்களில் குப்பை அகற்றும் பணி ஓனிக்ஸ் என்ற நிறுவனத்திற்குக் கொடுத்து இருப்பதை நேற்றையதினம் பத்திரிகைகள் உறுதி செய்திருக்கின்றன.

அவர்கள் செய்கின்ற ** பற்றி எல்லாம் மாநகராட்சி கமிஷனர் அவர்கள் பார்வையிட்டு நேற்றையதினம் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கின்றார்கள். இதற்கிடையிலே மேலும் இரண்டு மண்டலங்களை தனியாருக்கு விடுவதற்கான முயற்சி இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பத்து மண்டலங்களிலேயே ஐந்து மண்டலங்களை தனியாருக்கு விடுவதற்கான முயற்சி எடுத்துக் கொண்டு மீதி ஐந்து மண்டலங்களை மாநகராட்சி பார்ப்பது என்பதை ஒரு சரியான நடவடிக்கையாக நான் கருதவில்லை.

*முற்பகல் 10-30*

நான் பார்த்திருக்கிறேன். நான் சென்னையிலே பிறந்து வளர்ந்தவன். மாட்டு வண்டிகளிலே குப்பைகள் ஒழுங்காக வாரப்பட்டு வந்தன. படிப்படியாக வளர்ந்தபோது லாரிகளிலே குப்பைகள் ஒழுங்காக வாரப்பட்டு வந்தன. ஆனால் இப்போது லாரிகள் பராமரிக்கின்ற ஒரு பிரிவு சரியாக இயங்காத காரணத்தால்தான் இவ்வளவு கோளாறும் வருகிறது என்பதை நான் அழுத்தமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனக்கு ஒரு சந்தேகம். இந்த லாரிகள் சரியாக இயங்கவில்லை என்கின்ற ஒரு தோற்றத்தைக் கொண்டுவந்து விட்டாலே தனியார் மயம் ஆக்குவதற்கு எல்லோரும் குரல் எழுப்புவார்கள் என்கின்ற நோக்கத்திலே ஒரு சதி நடக்கின்றதோ என்கின்ற ஒரு ஐயப்பாடுகூட என்னிடத்திலே இருக்கிறது. இதை முழுமையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் நடத்துவதா?...

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகம் குப்பைகளை அள்ளுவதில் தள்ளாடுகிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓனிக்ஸ் என்ற நிறுவனம் ஒரு நாளைக்கு 1,600 டன் குப்பைகளை அள்ளி பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் போன்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். 3 மண்டலங்களுக்கு உண்டான பகுதிகளிலுள்ள குப்பைகளை அள்ளி, தினந்தோறும் டன் ஒன்றுக்கு 760 ரூபாய் என்ற கணக்கில் அவர்களுக்குக் கட்டணம் கொடுக்கப்பட வேண்டும். குப்பைகளை அப்புறப்படுத்தினால் 760 ரூபாய் கொடுக்க வேண்டிய நிபந்தனை அவர்களுக்கு. அவர்கள், வீடுகளில் உடைக்கப்பட்ட debris என்ற செங்கற்களை அதிகப்படியாக ஏற்றி தினந்தோறும் கணக்கில் வரவு வைத்துள்ளார்கள். அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

V 2 185080



அடிப்படையிலே அந்த ஓனிக்ஸ் நிறுவனத்தின் மேல் தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அம்மா அவர்கள், சுகாதாரம், துப்புரவு, தூய்மை ஆகிய மூன்றையும் பிரதானமாகக் கொண்டு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் அத்தனை பகுதிகளும் முழுமையாகப் பராமரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையோடு செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் கடந்த 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெரு மழையினால் 10 நாட்களுக்கு பெரும்பாலான சாலைகள் பாதிக்கப்பட்டன. அந்தச் சாலைகளை எல்லாம் உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே பணிகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. இந்த குப்பை அள்ளும் பணிகளில் மேலும் அதிகமாக, முழுமையாக சென்னை மாநகரம் முழுவதையும் சுத்தமாக வைக்கின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குப்பைக்குள்ளேயே ஒரு ** குப்பை சேர்ந்திருக்கிறது.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஆணையாளர் ** என்று அறிவித்தார். ஓனிக்ஸ் கம்பெனி இன்றைக்கு அதற்கு மறுப்பு தெரிவித்து அறிக்கை கொடுத்திருக்கிறது. குப்பைகளை அகற்றுவதிலே அரசாங்கத்திற்கு இருக்கின்ற நல்ல உணர்வை நான் குறை சொல்லவில்லை. அரசாங்கத்தினுடைய உணர்வுக்கும், வேகத்துக்கும் ஈடு கொடுக்கின்ற அளவிலே மாநகராட்சியினுடைய குப்பை வாரும் இலாகா இல்லை என்பதைத்தான் நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு இந்த இலாகா செயல்படவில்லை. குப்பைகள் தினம் சேருகின்றன. வாருவதற்காக, குப்பையை அகற்றுவதற்கான ஆட்கள் இருக்கின்றார்கள். தேவையான லாரிகள் கொடுக்கப்படாத காரணத்தாலே அங்கே ** குப்பைகள் சரியாக அகற்றப்படுவதில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அந்த ** அகற்றி லாரிகள் கொடுத்தால் நிச்சயமாகக் குப்பைகள் அகற்றப்படும் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சென்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வெள்ளத்தின்போது முதல்வர் அவர்கள் சாலைகளை வந்து பார்வையிட்டதைப் பற்றி எல்லாம்கூட இங்கே அமைச்சர் சொன்னார். நான் மறுக்கவில்லை, அவர்கள் வந்து பார்த்த பின்னாலே மழை நீர் வடிகால்களில் தூர் வாருகின்ற விஷயம் மிக வேகமாக...(குறுக்கீடு)

***திரு. பி.கே. சேகர்பாபு:** இந்தக் குப்பை அள்ளுகின்ற பணியிலே ** நடைபெறுவதாகக் கூறிய குற்றச்சாட்டில் அந்த ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த ஓனிக்ஸ் என்ற தனியார் நிறுவனத்திற்குக் குப்பைகள் அள்ளுகின்ற ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்தது என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகள் முறையாக மாநகராட்சி நிர்வாகத்தால் முறைப்படி கொடுக்கப்படவில்லை, குப்பைகள் அகற்றப்படவில்லை, அதில் ** என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். மேலும் மாநகராட்சி நிர்வாகம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய, முதல்வர் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் நிச்சயமாக, முழுமையாக சென்னை மாநகரைத் துப்புரவாக, தூய்மையாக—உலக நாடுகளுடைய பொருளாதாரம் எல்லாம் வரவேண்டும், இங்கே தொழில் தொடங்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சென்னை மாநகரத்தைக்கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேரடிப் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்; அப்படிக் கொண்டு செல்லப்பட்டால்தான் அத்தனை அடிப்படைத் தேவைகளும் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று குறிப்பிட்டார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு முழுமையாக—தூய்மையான சென்னை மாநகரமாக மாற்றுவதற்கு அத்துணை நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



முற்பகல் 10-35

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓனிக்ஸ் நிறுவனம் வந்து, தனியாருக்குக் கொடுத்ததிலே ஏதோ தவறுகள் என்ற மாதிரி தெரிகிறது. ஆகவே, ** என்ற வார்த்தை நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** நான் அமைச்சரையோ அல்லது அரசாங்கத்தையோ ** செய்து விட்டதாகக் குறிப்பிடவில்லை. இந்த வார்த்தைக்கு இவ்வளவு sensitive-ஆக பதில் சொல்வதைப் பார்த்து என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. அப்படியென்றால் ஒழுங்கீனம் என்று எடுத்துக்கொள்ளுங்கள். சீர்கேடு என்று எடுத்துக்கொள்ளுங்கள். நான் சொல்வதிலே இருக்கின்ற உண்மைகளை ஆய்வு செய்கின்ற மனப்பான்மைதான் வரவேண்டுமேயொழிய, உடனே இதற்கு react செய்கின்ற அளவிலே பதில் வரக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) I am not yielding, Mr. Sekar Babu. I can yield only to Minister.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; பேசி முடிக்கட்டும். பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், Heavy Vehicles *275-ம்*, Light Vehicles *122-ம்* உள்ளன. அவற்றில் தற்போது *265* Heavy Vehicles நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு குப்பைகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றபடி, எந்த இடத்தில் குப்பைகள் அகற்றப்படவில்லை என்று குறிப்பிட்டாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து முழுமையாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் கொடுக்கின்ற கணக்கைச் சொல்லியே இப்படி எவ்வளவு காலம் நடந்துகொள்ளப்போகின்றீர்கள் என்று எனக்குத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தெரியவில்லை. நான் இதை prove பண்ணவேண்டுமென்று சொன்னாலும்கூட, இதை prove பண்ணத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) நண்பர்களே, sorry, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற இந்த ஓனிக்ஸ் என்கின்ற தனியார் நிறுவனம்--சிங்கப்பூரைச் சார்ந்தது. அதற்கு குப்பை அள்ளுகின்ற contract-ஐ மாநகராட்சி வழங்கியிருக்கின்றது. அவர்கள் விஞ்ஞானபூர்வமாக நமது நகருக்குள்ளே இருக்கின்ற வீடுகளில் இடிக்கப்படுகின்ற செங்கல், மணல் போன்றவற்றை எல்லாம் ஏற்றி, அதன் மூலமாக அதனுடைய எடையை கூட்டிக்காட்டி அதிகப்படியான தொகையை மாநகராட்சியிடமிருந்து பெறுவதாகத்தான் அந்தச் செய்தி இருக்கிறது. எனவே அப்படி அந்த எடையைக் கூட்டி அதிகப்படியான தொகையைப் பெறுவதிலே ஏறக்குறைய பலகோடி ரூபாய் அதிலே தவறு நடந்திருக்கிறது என்பதைத்தான் பத்திரிகைகள் சுட்டிக்காட்டி இருக்கின்றன. எனவே அந்த ஓனிக்ஸ் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த contract-ஐ இரத்து செய்வதற்கு அரசு முன்வருமா? அதில் தவறு நடந்திருக்கிறது என்பதை அரசு அறியுமா என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு...

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இது தேவையில்லாத குறுக்கீடு. இதற்கு அமைச்சர் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லையென்று நான் நினைக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சந்தானம் அவர்கள் குறிப்பிட்ட ஓனிக்ஸ் நிறுவனத்தைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விநாயகமூர்த்தி, *2* மணித்துளிகளில் பேசி முடித்து விடுங்கள். ஏற்கெனவே 18 நிமிடங்களுக்கு மேலே பேசி இருக்கிறீர்கள்.



**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** குறுக்கீடுகள் எல்லாம் நிறைய இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் கழித்துவிட்டுத்தான் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாலையிலேயும் அவை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** சென்ற ஆண்டு வெள்ளப் பெருக்கிலே முதல்வர் அவர்கள் பார்வையிட்டதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; பார்வையிட்டார்கள். நீண்ட தூரத்திற்கு மழை நீர் வடிகால்கள் எல்லாம் தூர் வாரப்பட்டன என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். அதிலே ஒரு குறைபாடு. மழை நீர் வடிகால்கள் அனைத்திலும் சாக்கடைக் கால்வாய்கள் அங்கீகாரம் இல்லாமல் unauthorised-ஆக இணைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் நீக்கப்பட்டால்தான் இந்தத் தூர் வாரியதன் பலனை நாம் பெறமுடியும். மாநகராட்சியோ அல்லது குடிநீர் வடிகால் வாரியமோ இதைப்பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படவில்லை. ஆகவே முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் அந்த விஷயத்திலே கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-40*

அதைப்போலவே சாலைகளிலே பள்ளம் தோண்டுகின்ற விஷயத்திலே இன்றைக்கு வேலைகள் வரைமுறை இல்லாமல் நடந்துகொண்டிருப்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். குடிநீர்க் குழாய்கள் பதிப்பதற்காக, பராமரிப்பதற்காக, சாக்கடைக் குழாய்கள் பதிப்பதற்காக, பராமரிப்பதற்காக, டெலிபோன் இலாகாவினுடைய கேபிள்கள் புதைப்பதற்காக, மின்சார இலாகாவினுடைய கேபிள்கள் புதைப்பதற்காக பள்ளங்கள் தோண்டப்படுகின்றன. இப்படிப் பள்ளங்கள் தோண்டுகின்றார்கள் என்று இந்த இலாகாக்களின்மீது குறை சொல்லப்படுகின்றதேயொழிய, இந்தப் பள்ளங்களைத் தோண்டுவதற்காக அந்த இலாகாக்கள் மாநகராட்சிக்கு Reclamation-க்காக தனியாக பணம் கொடுக்கின்றார்கள். உடனுக்குடனேயே இந்தப் பள்ளங்களை மூடுவதற்கான முயற்சிகளை மாநகராட்சி எடுத்துக்கொள்ளாத காரணத்தினாலே பொதுமக்களினுடைய விமர்சனங்களுக்கு நாம் ஆளாகின்றோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கின்றேன்.

வேகமாகச் செயல்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். சென்னையிலே இன்றைக்கு மாநகராட்சிக்குத் தேவையான 324-total complements—இளநிலைப் பொறியாளர்கள் இருக்க வேண்டும். 126 vacancy—பல மாதங்களாக பூர்த்தி செய்யப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றது.

மெட்ரோ வாட்டரைப் பொறுத்தமட்டிலே 60 வார்டுகளிலே இளநிலைப் பொறியாளர்கள் இல்லாமல இருந்து கொண்டிருக்கின்றார்கள். 60 வார்டுகளிலே டெலிஃபோனுக்குக் கட்டணம் கட்டாமல் அவற்றையெல்லாம் அங்கே cut செய்திருக்கின்றார்கள். டெலிஃபோன் கட்டணம் கட்ட முடியாமல், இளநிலைப் பொறியாளர்களுடைய Vacancy—பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தால் எப்படி காரியங்களைச் செய்ய முடியும்? இதைக் குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** அடுத்தபடியாக சென்னை நகரத்திலே இருக்கின்ற அல்லது தமிழகத்திலே இருக்கின்ற பெரிய குறை, எந்தச் சுவற்றிலேயும் கன்னா, பின்னாவென்று எழுதி விடுவது. எந்தச் சுவற்றிலேயும் போஸ்டர்களை ஒட்டி விடுவது என்கின்ற ரீதியிலே அசிங்கப்படுத்துவது ஒரு குறையாக இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்கள், அரசுக்குச் சொந்தமான கட்டடங்களிலேதான் இப்படி எழுதுவதும், போஸ்டர் ஒட்டுவதும் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றது. மின்சார இலாகாவினுடைய Piller Box எதுவும் தவறுவதில்லை. அதிலே எல்லாம் Poster இருந்து கொண்டிருக்கின்றது. அது அதிகாரிகளினுடைய கவனத்திற்கு ஏன் வருவதில்லை? இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு, மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே சாலையோரத்திலே மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள்; நடைபாதைகளில் வாழ்கின்றார்கள். அவர்களால் நகரம் அசுத்தமடைகின்றது. அதற்கு வேண்டிய கணக்கெடுப்பு எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன்.



மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே, இன்னும் ஒரேயொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது நீண்டகாலமாக மேயர் தேர்தலே நடைபெறாமல் இன்றைக்குத் துணை மேயரினுடைய மேற்பார்வையிலேயே நிர்வாகம் நடந்துகொண்டிருக்கின்றது. அரசு, மேயர் தேர்தலை துரிதமாக நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, சில வருடங்களாகவே அது அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. இந்த அரசைப் பொறுத்தமட்டிலே தற்காப்பு நடவடிக்கையாகவும், தொலைநோக்குப் பார்வையுடனும் ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகப் பல்வேறு முயற்சிகளில் இறங்கியிருக்கிறது என்பதை நான் நன்றியுடன் பாராட்டுகின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

கிருஷ்ணா நீர்த் திட்டம் ஒழுங்காக நிறைவேறியிருந்தால், இந்தப் பிரச்சினை இவ்வளவு கடுமையாக ஆகி இருக்காது. 20 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய இந்தத் திட்டம் இன்று வரை முழுமை பெறாமல் இருப்பதற்கான காரணங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கப்படவில்லை. அது ஒரு மர்ம முடிச்சாகவே இருக்கிறது. இந்நிலையில் வீராணம் ஏரி அருகேயுள்ள பூதாமூர்-பாலூர் வாய்க்கால் அலுவலகத்தில் கடந்த 20-4-2003 அன்று நிருபர்களைச் சந்தித்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு சம்பத் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்கள். முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் சென்னை நகர மக்களின் குடிநீர் பிரச்சினையைப் போக்க பக்கத்து மாநிலமான ஆந்திராவிடம் 550 கோடி ரூபாய் கொடுத்தார்கள். அந்தத் திட்டம் பலனளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். இது ஒரு அதிர்ச்சியான செய்தி.

*முற்பகல் 10-45*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களால் கிருஷ்ணா தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு 550 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு அந்தத் திட்டம் பலன் அளிக்கவில்லை என்று சொல்லவில்லை. எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை என்றுதான் நான் குறிப்பிட்டுள்ளேன். அதை மாற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சென்னை நகர் வாழ் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை முடிவாக, இறுதியாக, நிறைவாகத் தீர்ப்பதற்கு அவர்கள்

எந்த அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நான் இந்த அவையில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தெலுங்கு கங்கைத் திட்டம் என்ற திட்டத்தை ஆந்திர அரசுடன் பேசி ஒப்பந்தம் செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு, நீண்ட நெடு நாளைக்குப் பிறகு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையில் புதிய வீராணம் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து அந்தத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறார்கள். எனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கும் அரசு— மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும்—சென்னை நகர் வாழ் மக்களுடைய தீராத குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னின்ற அரசு என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சென்னை நகர் வாழ் மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கு அவர்கள் எந்தத் திட்டமாவது கொண்டு வந்தார்களா? அதோடு மட்டுமல்ல. 2001-ல் ஆட்சி முடிகின்ற நேரத்தில் கஜானாவை காலி செய்தது போல சென்னையில் குடிநீர் வழங்குகின்ற 3 ஏரிகளுடைய நீர் நிலைகளையும் காலி செய்துவிட்டுச் சென்றார்கள் என்று நான் இந்த அவையில் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி, ஒரு மணித் துளிக்குள் முடித்துவிடுங்கள். ஏறத்தாழ அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசாங்கத்தை ஒரு குறையும் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் பலன் அளிக்கவில்லை என்று பேட்டியிலே கொடுத்திருக்கின்றார்கள். இது தினத்தந்தி பேப்பரிலே வெளி வந்திருக்கிறது. ஒரு பொறுப்பான பத்திரிகை. அது தவறாக வெளியிடும் என்று யாரும் சொல்ல முடியாது. அது அப்படிக் குறிப்பிட்டாலும்கூட அ.தி.மு.க.வினுடைய அதிகாரபூர்வமான ஏடான நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையிலேயும் அதே பேட்டி வந்திருக்கிறது. அதிலேயும் இந்த வார்த்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலே இப்படிச்



சொல்வதற்கு உரிய காரணம் என்ன, உண்மை நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள கேட்கிறேனேயொழிய, அரசாங்கத்தை குறை சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளையகண்ணு. (குறுக்கீடு) அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) 40 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 8 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரு முக்கியமான விஷயம் பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறுவிலிருந்து பூண்டிக்கு வருகின்ற கால்வாயிலே உடைசல்கள் இருந்த காரணத்தினாலே அவற்றையெல்லாம் சரி செய்து விட்டால் நமக்கு ஒழுங்காகத் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. அந்தக் கால்வாயைச் சீரமைக்க வேண்டுமென்று நினைத்த நேரத்திலேதான் பகவான் ஸ்ரீசத்திய சாய்பாபா அவர்கள் ஸ்ரீசத்திய சாயி டிரஸ்ட்டின் மூலமாக 200 கோடி ரூபாய் செலவு செய்வதற்கு முன்வந்து அந்தக் கால்வாயைச் சீரமைக்கின்ற பணியை அவரே ஹெலிகாப்டர் மூலமாகப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. இவ்வளவு பெரிய தொகையை உதவி இருக்கின்றவர்களுக்கு ஆளுநர் உரையிலேயோ அல்லது நிதிநிலை அறிக்கையிலேயோ அல்லது குறைந்தபட்சம் கொள்கைக் குறிப்பிலேயோ ஒரு நன்றியைத் தெரிவித்திருக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆக அதைச் செய்யவில்லை. அதே நேரத்தில் தெலுங்கு கங்கைத் திட்டம் என்று இதுவரையிலே பேசப்பட்டு வந்த இந்தத் திட்டம் சாய் கங்கைத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்து இன்றைக்கு ஆந்திராவிலே அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையும் நாம் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கின்றேன். அங்கே 5 டி.எம்.சி. தண்ணீர் இன்னும் கண்டலேறுவிலே இருக்கின்றது. பம்ப் செய்து நாம் கொண்டு வர முடியும். ஆந்திர அரசாங்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாயகமூர்த்தி, இன்னும் 8 பேர் பேச வேண்டும். தயவுசெய்து உரையை முடித்துவிடுங்கள்.

முற்பகல் 10-50

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விநாயகமூர்த்தி அவர்கள் தவறான தகவலை இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். கண்டலேறுவில் 5 டி.எம்.சி. தண்ணீர் இல்லை. அங்கே 3 டி.எம்.சி. தண்ணீருக்கும் சற்று அதிகமாகத்தான் இருக்கிறது. அது dead storage ஆகும். ஏற்கெனவே நான் ஆந்திர மாநில முதலமைச்சரைச் சந்தித்தபோதும் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஆந்திர மாநிலத்தின் தலைமைச் செயலாளரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதும், வேண்டுமானால், அந்த dead storage தண்ணீரை நீங்கள் பம்ப் செய்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று முதலில் சொன்னார்கள். ஆனால் அந்த dead storage 3 டி.எம்.சி. அடிக்கும் சற்று அதிகமாக இருக்கின்ற அந்தத் தண்ணீரை பம்ப் செய்து கால்வாயில் விட்டால்கூட, தமிழ்நாடு வரை வந்து சேராது. போதுமான அளவு தண்ணீர் இல்லை. அதன் பின்னர் இங்கே நிலைமை மிகவும் நெருக்கடியாக இருப்பதால், மீண்டும் ஆந்திர மாநில அரசை அணுகினோம். நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மீண்டும் ஆந்திர மாநில தலைமைச் செயலாளருடன் பேசி, 'பரவாயில்லை; அந்த dead storage தண்ணீரை பம்ப் செய்து பார்க்கிறோம்; வருவது வரட்டும்; கொஞ்சம் தண்ணீர் கிடைத்தால்கூட நமக்கு உதவியாக இருக்கும்' என்று கேட்டபோது, அப்போது அவர்கள் அளித்த பதில், 'அந்தக் கால்வாயை லைன் செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; ஆயிரக்கணக்கில் ஊழியர்களும் இயந்திரங்களும் அங்கே இப்போது பணியில் இறக்கப்பட்டிருக்கின்றன; இப்போது கால்வாயில் தண்ணீரைத் திறந்துவிட்டால், அவர்கள் அனைவரையும் அங்கிருந்து அனுப்பிவிட வேண்டிய ஒரு அவசியம் ஏற்படும்; மீண்டும் அவர்களை அங்கே பணியில் அமர்த்துவது என்றால் இரட்டிப்புச் செலவாகிவிடும்; ஆகவே, இப்போது அது சாத்தியம் இல்லை' என்று தெரிவித்தார்கள்.

உண்மை நிலைமை என்னவென்றால் இன்றைக்கு ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீசைலம் அணையிலே தண்ணீர் இல்லை. ஸ்ரீசைலம் அணையிலே தண்ணீர் இருந்தால்தான் அங்கேயிருந்து பாய்ந்து சோமசிலா அணைக்கு வரும். சோமசிலாவிலும் இன்றைக்குத் தண்ணீர் இல்லை; சோமசிலா அணையில் தண்ணீர் இருந்தால்தான் அங்கேயிருந்து கண்டலேறுவுக்கு வரும். இன்றைக்கு கண்டலேறுவிலேயும் தண்ணீர் இல்லை. கண்டலேறுவிலே தண்ணீர் இருந்தால்தான் அங்கேயிருந்து பாய்ந்து இங்கே பூண்டிக்கு வரும்.



ஆகவே இன்றைய நிலவரப்படி, ஆந்திர மாநிலத்திலேயே தண்ணீர் இல்லை. அதனால்தான் அவர்களால் தர முடியவில்லை. இப்போது கால்வாயை லைன் செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகள் ஜூன் மாத இறுதிக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு தென்மேற்குப் பருவமழை பெய்து, ஆந்திர மாநிலத்தில், அவர்களுடைய அணைக்கட்டுகளில் தண்ணீர் வந்தால், இங்கே தமிழ்நாட்டிற்கு, சென்னை மாநகருக்குத் தண்ணீர் கிடைக்கும்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு சந்தேகம். இந்தக் கால்வாய் வழியாகத்தான் காளஹஸ்தி வரையிலே பம்ப் செய்து ஆந்திர அரசாங்கம் திருப்பதிக்கு தண்ணீர் கொண்டு போகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை தமிழக அரசு அறியும். அதைத்தான் கேட்டோம். நீங்கள் கண்டலேறுவிலிருந்து, அந்த dead storage தண்ணீரை, பம்ப் செய்து திருப்பதிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள்; அதைப்போலவே மீதமுள்ள தண்ணீரை நாங்கள் பம்ப் செய்து எங்கள் கால்வாயில் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று கேட்டதற்கு, அவர்கள் திருப்பதிக்கு பம்ப் செய்கின்ற பணி ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியோடு நிறுத்தப்படும்; அதன்பிறகு கால்வாயை லைன் செய்கின்ற பணிகள் தொடர்ந்து நடைபெறும்; ஆகவே, இப்போது dead storage தண்ணீரை பம்ப் செய்து எடுத்துக்கொள்ள முடியாது என்று ஆந்திர மாநில தலைமைச் செயலாளர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் நான் பேசி முடித்துவிடுகிறேன். ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஆண்டுதோறும் 82 இலட்ச ரூபாய் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; இதோடு பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இல்லை, இல்லை, அதைப்பற்றி இல்லை. ஒரே வார்த்தையிலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏறத்தாழ முக்கால் மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. திரு. இளையகண்ணு.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரே வார்த்தையிலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளையகண்ணு, பேசுங்கள். (குறுக்கீடு) ஏறத்தாழ முக்கால் மணி நேரத்திற்கு மேல் ஆயிற்று. (குறுக்கீடு) இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

***திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனைச் செழுமையும், செயல் திறமையும், கொள்கையில் உறுதியும், குறிக்கோளில் தெளிவும் . . . .

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முக்கால் மணி நேரத்திற்கு மேலே பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கா.தி. இளையகண்ணு:** பகைக்கு அஞ்சா பண்பும், இலக்கினை நோக்கி நடைபோடுகின்ற இலட்சியப் பயணத்தில் சோர்வு இல்லாமல், தளர்ச்சியில்லாமல் வெற்றியின் விலாசத்தை நெற்றியிலே பதித்து இந்த மண்ணிலே புகழுக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு இம்மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கியமைக்காக நான் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 10-55

இரவு பகல் என்று பாராமல், உழைக்கின்ற மக்கள் எல்லா நலன்களும் பெற்று, அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்கள் யாவும், அந்தந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளும் திறமை மிக்கவர் எங்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது நகரப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகும். அந்த அடிப்படையில், 2003-2004 ஆம் ஆண்டிற்கு மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் செலவு செய்ய ரூ.1109.88 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு



செய்து நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று நிதி உதவிகளை வாரி வழங்கியுள்ளதை நல்ல உள்ளம் படைத்தவர் எவராலும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள் என்று வாழ்ந்து காட்டிய நம் பொன்மனச் செம்மல் அவர்கள் சுட்டிக்காட்டிய புரட்சித் தலைவியாக, மகா சக்தியாக, மாசற்ற அன்னையாக, தொண்டர்களை வழி நடத்திடும் தலைவியாக, நம்மை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் அன்னையின் நல்லாட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது . என்பதை எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்தும், நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் வருவாய் பெற்றுத் தரத்தக்க திட்டத்திற்காகவும், சேவைப் பணிக்காகவும் ரூ.50 கோடி நிதி உதவி பெற்று செயல்படுத்த உள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். 2006 ஆம் ஆண்டிற்கு முன்பாகவே அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்று அறிவித்த எங்கள் அன்னையின் உன்னதத் திட்டத்தின்கீழ், ஏற்காடு தொகுதிக்கு முன்னுரிமை அளித்து, குடிநீர் வசதி இல்லாத மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 4,000 சிறு மின்விசைத் திட்டங்கள் இக்குடியிருப்பில் இருப்பவர்களுக்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் என்று அறிவிப்பு தந்தமைக்காக மலைவாழ் பழங்குடியின மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநிலத்தில் மைய அரசு உதவியுடன் செயல்படுத்தும் 'அனைவருக்கும் கல்வி' என்ற திட்டத்தின்கீழ் ஏற்காடு தொகுதியில் உள்ள மலைவாழ் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கி வேண்டுகிறேன்.

ஏற்காடு தொகுதி, ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாக உள்ளதால், அம்மாணவர்கள் உயர் கல்வி படிக்க வெளியூர்களுக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. எனவே வெள்ளிக்கவுண்டனூர் — புழுதிக்குட்டை மலைவாழ் மாணவர்கள்

பயிலும் நடுநிலைப் பள்ளி மற்றும் கருமந்துறை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தரவேண்டும் என மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மலைவாழ் மக்கள் பயன் அடைவதற்காக தனியாக ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை கருமந்துறையில் தொடங்குவதற்கும், ஆனைமடுவு அணை மற்றும் கரியகோயில் அணையில் தூர்வாரி, சீர்படுத்தி, பாசன வசதியை ஏற்படுத்தித் தருமாறும், சேலத்திலிருந்து வாழப்பாடி, பேளூர், எடப்பட்டி, தும்பல் வழியாக கோட்டப்பட்டி, திருவண்ணாமலை செல்வதற்கு பேருந்து வசதிகள் செய்து தருமாறும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். கைப்பம்புகளில் இருந்து குடிநீர் பெறுவதில் கிராமப்புறப் பெண்கள் படும் சிரமங்களைக் கண்டு, அவர்களுக்கு வசதியாக மினி பவர் பம்புகள் அமைத்து, அதன் மூலமாக அவர்கள் குடிநீர் பெற வழிவகை செய்து கொடுத்த தாயுள்ளம் கொண்ட எங்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு மலைவாழ் மகளிர் சார்பாகவும், என் நெஞ்சார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

பெண்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களது சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, மாவட்டம்தோறும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என சுகாதார வசதியுடன் கூடிய கழிவறை மற்றும் குளியலறை வசதிகள் ஏற்படுத்திட ரூ.104.42 கோடியை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்து கொடுத்தது எங்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான். தமிழகத்தில் கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதி மக்கள் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருவதை எல்லோரும் அறிவார்கள். இதுவரையில் ஆதிதிராவிடர் பெண்கள் 1,15,505 பேரும், பழங்குடியினப் பெண்கள் 2,14,808 பேரும் பயனடைந்துள்ளார்கள். மேலும் 2003-2004 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.9.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சார்பாக என் நன்றியினை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

*முற்பகல் 11-00*

மலைவாழ் கிராமங்களை இணைக்கும் விதத்தில், சாலைகளே இல்லாத கிராமங்களுக்குச் சாலைகள் அமைத்தும், மின் வசதி செய்துதர



முடியாத தொலைதூர மலைக் கிராமங்களுக்கு, சூரிய ஒளி மூலமாக மின்விளக்கு வசதி செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு மலைவாழ் மக்களின் சார்பாக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்பு அதிரடிப்படையில் 684 பேர்கள் பணிபுரிகிறார்கள். அதில் காவல் துறையில் பணியாற்றும் தகுதியான 221 மலைவாழ் இளைஞர்களுக்கு வாய்ப்பினைத் தந்துள்ளதைக் கண்டு வரவேற்கிறேன்; வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பேரூராட்சிப் பராமரிப்பில் வரும் மண் சாலைகளை, தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்ற விருப்பத்தின்படி, இந்த ஆண்டு 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வழங்கியதற்கு நெஞ்சார வாழ்த்துகிறேன்.

ஏற்காடு தொகுதி மலைவாழ் கிராமங்கள் உள்ள பகுதியாகும். இப்பகுதியில் உள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை வணங்கி வேண்டிக் கொள்கிறேன். இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் 31,453 வீடுகள் கட்டுவதற்கு அறிவிப்பு செய்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மேலும் ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தின்கீழ் அனைத்து ஊராட்சிகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்காடு தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் உள்ள சின்ன கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை மற்றும் நெய்யமலை ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில், கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் எனத் தனியாக ஒரு ஒன்றியத்தை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதியிலுள்ள கர்ப்பிணிப் பெண்கள் நலனுக்காக 2003-2004 ஆம் ஆண்டில், 385 இலட்சம் ரூபாய் செலவில், 385 மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு கிராமப்புற மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அன்னையின் நோக்கம் தெளிவானது; எங்கள் அன்னையின் திட்டம் சிறப்பானது; செய்யமுடியாத காரியம் என்று உலகத்தில் எதுவும் இல்லை. விடாமுயற்சி இருந்தால், எண்ணியதை நிச்சயமாக அடையலாம் என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஒப்பாக, முயற்சிகள் யாவும் முழுநிலவாக, தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றும் முயற்சியில் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது நிச்சயம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைப் பணிந்து, என் சார்பாகவும், ஏற்காடு தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மனிதநேயப் பற்றாளர், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைப் புரட்சியாளர் டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி, எம்.எல்.ஏ., அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி நிர்வாக மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, நாங்கள் அவையிலே கலந்துகொள்ள முடியாத ஒரு வாய்ப்பு இருந்தது. என்னுடைய தொகுதியிலே, செங்கற்பட்டிலே இந்த நிதி ஆண்டிலே புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில், 12,619 கிராம ஊராட்சிகளும், 385 வட்டார வளர்ச்சி அலுவலகங்களும் செயல்பட்டு



மக்கள் நலனைக் காத்து வருகின்றன. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, 1855.21 கோடி ரூபாய்க்கு திட்டங்களைச் செயல்படுத்த உள்ளதாக அரசாங்கம் அறிவித்திருப்பதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேசமயத்திலே கடந்த ஆண்டினுடைய சாதனைப் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிற பல்வேறு மேற்கோள்களையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மனித உழைப்பு நாட்கள் அதிகப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றும், அது 2001-2002-ஐவிட, 25.54% கூடுதலாக இருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லியிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். நம்முடைய அரசாங்கம் கடந்த ஆண்டு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 115 கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டைவிட 43.7%-க்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசாங்கத்திற்கு நான் இந்தச் சமயத்திலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒன்றை நான் அதிலே குறிப்பிட விரும்புகிறேன். மனித உழைப்புகளை உயர்த்துகிற சமயத்திலே, மனித உழைப்புகளுக்கு இப்போது ஒரு நாளைக்கு 54 ரூபாய் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. அப்படிக் கணக்குப் பார்த்தால், கிராமங்களிலே இன்றைக்குக்கூட நாங்கள் எல்லாம் விவசாயம் செய்துகொண்டிருக்கிறோம். ஒரு சாதாரண கூலித் தொழிலாளிக்கு 80 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரையில் இன்றைக்கு ஒரு நாளைக்குக் கூலி கொடுக்கிறோம். ஆனால் மனித உழைப்புக்குக் கொடுக்கப்படுகிற கூலி, இப்போது நம் அரசாங்கம் நிர்ணயித்து இருப்பது வெறும் 54 ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்த வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

கடந்த ஆண்டு நம்முடைய தமிழக அரசாங்கம் புதிய தெரு மின்விளக்குக் கம்பங்களோடு கூடிய திட்டத்தை அறிவிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு கிராமங்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. புதிய பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் கிராம ஊராட்சிகளிலே, நிதி இல்லாத காரணத்தால் புதிய மின்விளக்குக் கம்பங்களை அமைக்க முடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருப்பதை இந்த அரசாங்கம் அறிந்து இந்த ஆண்டிலாவது அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வரப்பிரசாதமான ஒரு நிலை இருந்தது. அது என்னவென்று சொன்னால், கிராம ஊராட்சியே அங்கே வரியை வசூலிக்கிறபோது, அவர்கள் எவ்வளவு நிதியைக் கொடுக்கிறார்களோ—அதை வசூலிக்கிறார்களோ—அதுபோன்று இரண்டு மடங்கு நிதியினை அரசாங்கம், matching grants என வழங்கி வந்தது. அதை கடந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய அரசாங்கம் செயல்படுத்தவில்லை. அதனால் நலிந்து இருக்கிற, மிகச் சிறிய கிராமங்கள் இருக்கிற, வருவாய் குறைவாக இருக்கிற கிராமங்கள் அதனுடைய சாதாரண நிலையைக் கூட அவர்கள் எட்டமுடியவில்லை. குடிநீருக்கான மின் கட்டணம்கூட கட்ட முடியவில்லை. அங்கே பணிபுரிகிற ஊழியர்களுக்குக்கூட . . .

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஏற்கெனவே மூன்று மாதத்திற்கு ஒரு முறை வழங்கிய நிதியை மாதாமாதம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி மாதந்தோறும் ரூபாய் 53 கோடியே, 53 இலட்சம் விடுவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் ரூபாய் 730 கோடியே 28 இலட்சத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய-மாநில அரசுகள் விடுவிக்கும் மொத்த நிதியைக் கணக்கிட்டால், ஒவ்வொரு ஊராட்சிக்கும் கடந்த ஆண்டு மட்டும் 13,87,820 ரூபாய் அளவுக்கு சராசரியாக மாண்புமிகு அம்மா ' அவர்கள் அரசு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியைப் பற்றிச் சொல்லவில்லை. இந்த matching grants கிடைத்தால் இன்னும் அதிகமாக கிராமங்கள் முன்னேற வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்திலே சொன்னேன்.

நம்முடைய தமிழக அரசு கடந்த ஆண்டுக்கு முன் ஆண்டிலே உள்ளாட்சித் தேர்தல் நடத்திய பிறகு, மிக தைரியமாக ஒரு தேர்தலை நடத்தியது. அந்தத் தேர்தல் எது என்று சொன்னால், மாவட்ட திட்டக் குழுவிற்கான தேர்தல். அந்தத் தேர்தல் ஒரே வாரத்திலே மிக அற்புதமாக நடைபெற்றது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தத் திட்டக் குழுவிற்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று அந்த உறுப்பினர்கள் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது; இப்போது ஒன்றைச் சொல்ல இருக்கிறேன். இன்றைக்கு 3½ கோடி அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக்கிற கிராமத்து மக்களுக்கும், அதேபோன்று ஏறக்குறைய 2½ கோடிக்கு மேலாக வாழ்கிற நகர மக்களுக்கும் ஒன்றாகவே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே திட்டங்கள் எதுவும் இல்லை. நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்குச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. அனைத்து மக்களுக்கும் இந்தத் திட்டம் செயல்பட வேண்டும். இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே ஊரகத் துறைக்கு என்று தனி அமைச்சரும், நகரப் பகுதிகளுக்கு என்று தனி அமைச்சருமாக இயங்கி வருகிறார்கள். அதேபோன்று நம்முடைய தமிழக அரசாங்கமும் செயலாற்ற முடியுமா என்ற கேள்வியை இங்கே நம்முடைய முதல்வர் அவர்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன்.

நம்முடைய கிராமப் பஞ்சாயத்துகளும் அதேபோன்று இருக்கிற அமைப்புகளுக்கும் 29 சட்டங்களை, 29 பணிகளைப் பற்றிய ஒரு அறிவிப்பை மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அது இந்திய அரசமைப்புச் சட்டத்திலேகூட திருத்தப்பட்டிருக்கிறது. அந்த 29 அதிகாரங்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுமா என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே இன்றைக்குக் கடுமையான வறட்சியால் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. அதை முழுமையாகப் போக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் இப்போது தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும்கூட, அதை எட்ட முடியாமல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியிலே 80 சதவீதம் பேர் இன்றைக்கு தண்ணீர்ப் பஞ்சத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், செங்கற்பட்டு நகரம் பாலாற்றுக் கரையிலே அமைந்திருந்தாலும்கூட, இன்னொரு பக்கத்திலே கொளவாய் ஏரிக்கு அருகில் அமைந்திருந்தாலும்கூட, செங்கற்பட்டிலே....

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொலைதூர ஊரகக் குடியிருப்புகளுக்கு முழுமையாக

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துவருவதால், தமிழக மாநிலம்தான், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவில் முதன்மை வாய்ந்த மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல் செங்கற்பட்டு நகராட்சியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒரு கேள்வியை வைத்தார். 280 இலட்சம் ரூபாய் செலவில் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

*முற்பகல் 11-10*

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்றைக்கு முன்தினம்கூட, அங்கே இருக்கிற அதிகாரிகளையெல்லாம் கலந்து பேசி, இந்த 1 ஆம் தேதியிலேயிருந்து, அங்கே இருக்கிற வணிகர் சங்கம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களெல்லாம் சேர்ந்து, வாடகையாக புதிதாக மூன்று Tank-களை ஏற்படுத்த வேண்டுமென்றுகூட நாங்கள் திட்டமிட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த வேளையிலே, புதிய திட்டம் அடுத்த ஆண்டிற்குள் நிறைவேறுமா என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மாமல்லபுரத்திலே 2001-2002 ஆம் ஆண்டு பயணிகளுடைய நலனைக் கருதி, ஒலி-ஒளிக் காட்சி அமைக்கப்படும் என்று நம்முடைய தமிழக அரசாங்கம் அறிவித்திருந்தது. அதேபோன்று கூட்டுறவுத் துறை மூலம் அங்கே இருக்கக்கூடிய Consumer Court-க்கு ரூ.16.80 இலட்சம் செலவிலே புதிய கட்டடம், செங்கற்பட்டிலே கட்டித் தரப்படும் என்று சொல்லியிருந்தார்கள். அந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. இதை தொகுதி மக்களுடைய வருத்தமாகவும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நம்முடைய நெரும்பூர், விட்டலாபுரம், வாயலூர் சாலைக்கு தமிழக அரசாங்கம் கணிசமான நிதி ஒதுக்கியிருக்கிறது. அதற்கு எப்போது டெண்டர் வை க்கப்படும் என்ற என்னுடைய கோரிக்கையையும் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.481.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் திருத்திய மதிப்பீட்டிலே அது ரூ.398.08 கோடியாக, சுமார் 84 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அது ஏனென்று தெரியவில்லை. நடப்பு ஆண்டில், 2003-2004-ல் இந்த வகையில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தை மாதாமாதம் விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மாநகராட்சியிலே ஒரு சிக்கல் இருந்து கொண்டு இருக்கிறது. மாநகராட்சியினுடைய வருமானம் தடைபட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே ஒன்று, முக்கியமாக இருப்பது, இன்றைக்கு கட்டட வரன்முறைச் சட்டம். அந்தக் கட்டட வரன்முறைச் சட்டத்திலே கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சியிலே, நாளையதினம், கடைசித் தேதியாக dead line-ஆக வைத்திருக்கிறார்கள். அதை இன்னும்கூட நீட்டித்தால் நலமாக இருக்கும். மக்கள் அதிகமான அளவிற்கு, ஆர்வமாக வந்து பணம் கட்டுவதற்குத் தடையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய தொகையிலே 25 சதவிகிதமாக, நான்கில் ஒரு பங்காகக் குறைத்தால், இந்த வரன்முறைச் சட்டத்தின்கீழே மாநகராட்சிக்கு அதிகமாக வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்பாகப் பேசிய அண்ணன் விநாயகமூர்த்தி அவர்கள்கூட ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். மாநகராட்சியிலே ONYX நிறுவனம் குப்பை அள்ளுவதிலே பல்வேறு தவறுகள் செய்திருக்கிறது —நான் ஊழல் என்று சொல்ல வரவில்லை. தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறது—என்று சொல்லி மேற்கோள் காட்டினார்கள். அதற்குக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; நான் இதன் மீது நடவடிக்கை எடுத்து அந்த நிறுவனத்துடன் உள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கு முயற்சி எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேசமயத்திலே இந்த முறைகேட்டிற்குத் துணைபுரிந்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய சென்னை குடிநீர் பெருக்கத் திட்டம்-2-ன்கீழ் எங்களுடைய செங்கற்பட்டு தொகுதியிலே இரண்டு குடிநீர்த் திட்டங்களை நம்முடைய தமிழக அரசாங்கம் நிறுவுவதாக அறிவித்திருக்கிறது. அதிலே ஒரு திட்டம், கல்பாக்கம் அருகிலே இருக்கிற வாயலூர் அருகிலே பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணையை ஏற்படுத்தி அதன் மூலம் தண்ணீரைச் சென்னைக்கு மங்கலம் வழியாக எடுத்து வருகின்ற ஒரு திட்டம். அதற்காக 95 கோடி ரூபாய்ச் செலவு. இன்னொரு திட்டம், செங்கற்பட்டுக்கு அருகிலே இருக்கிற கொளவாய் ஏரியிலேயிருந்து 29 கோடி ரூபாய் செலவிலே, கொளவாய் ஏரியைச் சுத்தப்படுத்தி, அங்கேயிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருகிற திட்டம் என்று இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. அதைக்கூடக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். செங்கற்பட்டினுடைய ஒட்டுமொத்தக் கழிவுகளும் கொளவாய் ஏரியிலேதான் வந்து விழுகிறது. அதைச் சுத்தம் செய்ய இருக்கிறோம்....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளவாய் ஏரி செங்கற்பட்டுக்கு மிக அருகில் இருந்தும், சென்னைக்கு அருகில் இருந்தும் இத்தனை காலமாக, ஏற்கெனவே இருந்த அரசுகளின் தவறான அணுகுமுறையால், அந்தத் தண்ணீர் செங்கற்பட்டுக்கும் பயன்படவில்லை; சென்னை மாநகருக்கும் பயன்படவில்லை. மாறாக, அந்த அழகான பெரிய ஏரியை மாசுபடுத்தி, செங்கற்பட்டு நகரத்திலிருந்து கழிவு நீரையெல்லாம் அந்த ஏரிக்குள் விட்டுக் கொண்டிருந்தார்கள். அண்மைக்காலத்தில், சென்னை மாநகரத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருப்பதால், நான் அடிக்கடி அந்த வழியாகச் செல்லும்போதெல்லாம், கொளவாய் ஏரியைப் பார்ப்பதால், நான் இங்கே அதிகாரிகளைக் கேட்டேன், கொளவாய் ஏரியிலிருந்துதானே செங்கற்பட்டுக்குக் குடிநீர் போகிறது என்று கேட்டேன். அப்போது அவர்கள் அளித்த பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "இல்லை, செங்கற்பட்டு நகரத்தில் உள்ள sewage — கழிவு நீரெல்லாம் அந்த ஏரியில் விடப்படுகிறது" என்றார்கள். அப்போது நான் 'இது அக்கிரமமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய ஏரியை வீணாக்கிக் கொண்டு இருக்கிறீர்களே' என்று சொல்லி, செங்கற்பட்டு நகரத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை வேறு இடத்திற்குத் திருப்பி, அதற்கு மாற்று ஏற்பாடு செய்து, கொளவாய் ஏரியைச் சுத்தப்படுத்தி அந்தத் தண்ணீரைச் சுத்திகரித்து, வீராணம் திட்டம் நிறைவேறும்போது, அந்தப் பைப்-லைனோடு, அந்தக் கால்வாயோடு, இந்தத் தண்ணீரையும் சேர்த்து சென்னைக்குக்



குடிநீராக வழங்குவதுதான் இந்தத் திட்டம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-15*

**திரு. கே. ஆறுமுகம்:** நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய தொகுதியிலே அதிகமாக குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அந்த இரண்டு திட்டங்களும், எனது தொகுதியிலே, மையப் பகுதியாக இருக்கிற திருக்கழுக்குன்றம் பகுதியிலே இருக்கின்ற மங்கலத்திலேதான் இணைக்கப்படுகிறது. அப்படி வருகிறபோது, அருகிலே இருக்கிற அனைத்துக் கிராமங்களுக்கும், அந்தத் தண்ணீரைக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கும் கொடுத்தால், அதை ஒரு வரப்பிரசாதமாக நினைப்போம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியிலே பசுமைப் புரட்சித் திட்டம் என்கின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்குவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய இன்னொரு கருத்தை இங்கே வெளியிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இதற்காக, சாலை ஓரங்கள், பூங்காக்கள், தரிசாக இருக்கின்ற இடங்களில் எல்லாம் பயிரிடப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அரசு அதிகாரிகளை விட்டு, மிகவும் நெரிசலாக இருக்கிற வீடுகளைத் தவிர்த்து, ஓரளவு இடம் இருக்கிற பகுதிகளை எல்லாம் தேர்வு செய்து ஆண்டிற்கு, ஒரு வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்கப்படுகின்ற திட்டத்தை தமிழக அரசாங்கம் கொண்டு வந்து, அதனை மக்கள் விழிப்புணர்வு பங்களிப்போடு நடைமுறைப்படுத்தினால், குறைந்தது ஒரு ஆண்டிற்கு சென்னை மாநகரத்திலே மட்டும் 10 இலட்சம் மரங்களை நட முடியும். அதைத் தொடர்ந்து பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு வந்தால், பசுமைப் புரட்சியும் செய்ய முடியும்; 'மரம் பெருகின் மழை பெருகும்' என்று சொல்வார்களே, இந்த மழை பெருகுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும். அதுமட்டுமல்ல. *(மணியடிக்கப்பெற்றது)* பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** அதுமட்டுமல்லாமல் மாசுபடுகின்ற காற்றை, இந்தத் தாவரங்கள் இழுக்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே அந்தத் திட்டத்தையும் நம்முடைய அரசாங்கம், மக்களின் விழிப்புணர்வுத் திட்டமாகச் செயலாற்றிட வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்திலே இருக்கிற 35 ஆயிரம் கால்நடைகளை அப்புறப்படுத்தும் ஒரு திட்டம் இருக்கிறது என்று அரசாங்கம் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறது. அந்தக் கால்நடைத் தொழிலை முக்கியமாக நம்பி இருப்பது பால் வியாபாரிகள். அந்த அன்றாடங்காய்ச்சி மக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில், சென்னை நகரிலே, எந்தப் பகுதிகளிலே அவர்களை அப்புறப்படுத்த முடியுமோ அந்தப் பகுதிகளிலேயிருந்து அப்புறப்படுத்தி அவர்களுடைய தொழில் நசுங்காமல் பார்த்துக்கொள்வதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வருமா என்பதையும் கேட்டுக்கொண்டு, இந்த அரசு உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகள் . .

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில் சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். அந்த அடிப்படையிலேதான் கால்நடைகளை மாதவரம் அருகில் கொண்டு செல்வதற்காகத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே பால் வியாபாரிகளும் அங்கு சென்று பால் தொழிலை நிரந்தரமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டுமென்றும், சுகாதாரத்தின் நிலைமையைக் கருதி அவர் இதற்கு முழுமையான ஒத்துழைப்புத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை சம்பந்தமான ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். நம்முடைய ஒசூர் சட்டமன்ற உறுப்பினர், விவசாயம் குறித்து ஒரு குறையைச் சொன்னார்கள். அதேபோன்று எங்களுடைய செங்கற்பட்டு



தொகுதியிலே 20 ஆண்டுகாலமாக இருக்கிற ஒரு பிரச்சினை. அது 30-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கான ஒரு பாசனத் திட்டமாக இருக்கிறது. செங்கற்பட்டிலே பாலாற்றங்கரையிலே ஓரமாக இருக்கிற நீஞ்சல்மடுவு உடைந்து கிடக்கிறது. அது சீர்செய்யப்படவில்லை. அதிலேயிருந்து செல்கிற களத்தூரான் கால்வாய் 20 ஆண்டுகாலமாக சீரமைக்கப்படாமல் இருக்கிறது. மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை ஏற்கெனவே பல திட்டங்களிலே Phase 2-லே சேர்க்கப்பட்டதாக கடந்த காலங்களில் எல்லாம் சொன்னார்கள். இப்போது கேட்கிறபோது ஏறக்குறைய ஒன்றரை கோடி ரூபாய் இதற்குச் செலவு பிடிக்கும் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தைச் செயலாற்றினால், ஏறக்குறைய 30 கிராமங்களுக்கும், ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பிற்கும் பாசன வசதி பெறப்படுகின்ற ஒரு திட்டமாக இருக்கும். எனவே அதை இந்த அரசாங்கம் செய்து கொடுக்க முன்வருமா என்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

என்னுடைய தொகுதியிலே இருக்கிற பொன்விளைந்தகளத்தூர் மேல்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம் மேல்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சதுரங்கப்பட்டினம் மேல்நிலைப் பள்ளி மற்றும் மணம்பை மேல்நிலைப் பள்ளி போன்ற பள்ளிகள், போதிய கட்டட வசதி இல்லாமல் இருக்கின்றன. அதற்கான கூடுதல் கட்டடம் கட்டித்தர, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டிலே இருக்கிற தேசிய யானைக் கால் நோய்த் தடுப்பு மருத்துவமனை மாற்றப்படுவதாக அங்கே இருக்கிற மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவமனை, 1953-லே நிருவப்பட்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து நோய் சிகிச்சைக்காக மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயே அந்த மருத்துவமனை இயங்க வேண்டுமென்பது மக்களுடைய கோரிக்கை. அதனை மாற்றுவதற்காக மக்கள் வருத்தமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், அதை மாற்றக் கூடாது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது Health Department-னுடைய D.D. அலுவலகம் சைதாப்பேட்டையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த

சைதாப்பேட்டைக்கும், எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்திற்கும் தொடர்பு இல்லாத பகுதியில், அந்த D.D. அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மையப் பகுதியான செங்கற்பட்டிலே வைத்தால், அங்கே இருக்கிற சித்தாமூர், லத்தூர், திருக்கழுக்குன்றம், காட்ட ாங்கொளத்தூர், திருப்போரூர், பரங்கிமலை, செங்கற்பட்டு, மதுராந்தகம், ஆலந்தூர், பல்லாவரம் போன்ற பகுதிகளுக்கு இது மையப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, அந்த D.D. Health அலுவலகம், செங்கற்பட்டுக்கு மாற்றப்படுமா என்ற கேள்வியையும் இங்கே விடுத்து, எனக்கு உரிய வாய்ப்பினைக் கொடுத்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 6. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

### (அ) குழந்தையின் பெயருக்கு முன்னால் தாய்/தந்தை பெயர் முதல் எழுத்தை (initial) பயன்படுத்துவது பற்றி வெளியிடப்பட்ட ஆணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ், இரண்டு அறிக்கைகளை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அறிக்கையை இப்போது அளிக்கிறேன்:

*25-4-2003* அன்று, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, குழந்தைகளின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரை முதல் எழுத்தாக வைத்துக்கொள்வது பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி காசாம்பு பூமாலை அவர்கள், தனது கட்சித் தலைவரான டாக்டர் ராமதாஸ் அவர்கள்தான், தந்தையின் பெயருக்குப் பதிலாக, தாயின் பெயரை முதலில் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை உலகிற்கே அறிமுகப்படுத்தியதாகக் குறிப்பிட்டார். மேலும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, அண்மையில் குஜராத் மாநில அரசு, தந்தை பெயரின் முதல் எழுத்துக்குப் பதிலாக, தாயின் பெயரின் முதல் எழுத்தை ஒருவர்



தன்னுடைய பெயரோடு சேர்த்துப் போட்டுக்கொள்ளலாம் என்ற அரசாணையை வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு பலர் இந்தக் கருத்துக்கு முன்னுரிமை கோரினாலும், உண்மையில், 1994 ஆம் ஆண்டிலேயே நான் இத்தகைய ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறேன் என்பதை அப்போது தெரிவித்தேன்.

*1993-1994* ஆம் ஆண்டில், சட்டப் பேரவையில், கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சில உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின், *28-3-1994* நாளிட்ட அரசாணை நிலை எண் *246*-ன் மூலம், தந்தை இல்லாதிருக்கும்பட்சத்தில், குழந்தையின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தைப் போட்டுக்கொள்ள ஆணையிடப்பட்டது என்பதை நான் தெளிவுபடுத்தினேன்.

இந்திய நாட்டிற்கே முன்னோடியாக, தமிழகத்தில்தான், அதுவும் எனது தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது, தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை initial-ஆகப் பயன்படுத்தலாம் என்று ஆணையிட்டது என்று தெரிவித்தேன். அப்போது, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களின் கோரிக்கையையும் ஏற்று, மேலும் ஓர் அறிவிப்பினை வெளியிட்டேன். அதாவது, "இனிமேல் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கும்போது, அவர்கள் விரும்பினால், முதலில் தாயின் பெயரையும், பின்னர் தந்தையின் பெயரையும் குறிப்பிட்டு, அவர்கள் அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்யலாம். சில குடும்பங்களில் தாயின் பெயரை மட்டும் போட்டுக்கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம். சில குடும்பங்களில் தந்தையின் பெயரை மட்டும் போட்டுக் கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம்" என்று கூறியிருந்தேன். இந்த அறிவிப்பின் அடிப்படையில், தேவையான அரசு ஆணையை உடன் வெளியிடுமாறு கல்வித் துறைக்கு ஆணையிட்டேன்.

பள்ளிக் கல்வித் துறை, *28-4-2003* அன்று, அரசாணை (நிலை) எண் *60*-ன்படி, இதற்கான ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணைப்படி, ஒரு குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது, அக்குழந்தையின்

பெற்றோர்களின் விருப்பப்படி, குழந்தையின் பெயருக்கு முன் தாயின் பெயரில் உள்ள எழுத்தையும் அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம். அல்லது தாயின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம். அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம்.

*முற்பகல் 11-25*

இதனை, அனைத்துவகைப் பள்ளிகளிலும், பள்ளிச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தில் அதாவது, School Admission Application Form-ல் உரிய இடத்தில் சேர்த்து, தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே பெண்ணுரிமையை நிலைநாட்டுகின்ற வகையிலும், பெண்ணுக்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையிலும் உள்ளதொரு ஆணையை அன்று கொண்டுவந்ததும் நான்தான்; அதனை விரிவுபடுத்தி இன்று கொண்டு வந்திருப்பதும் நான்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பேருண்மையை இந்த மாமன்றத்தில் தெள்ளத் தெளிவாக நான் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

ஒரு சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுகின்ற திருநாளாக இந்த நாள் வரலாற்றில் குறிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இரண்டாவது அறிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 25-4-2003 அன்று, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, பெண்களுக்குச் சம உரிமை வழங்குவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. அப்போது இதைப்பற்றி என்னுடைய நிலைப்பாடு ஒன்றினை நான் தெரிவித்தேன். அதாவது, 'தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி





இழைக்கப்பட்டுள்ளது. முதல்வராக பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகன் ஆகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம். குடிமகள் ஆகிய நான் என்று கூறி பதவி ஏற்கக்கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டும் என்பதே, பெண் குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி. குடிமகள் என்ற சொல் புழக்கத்துக்கு வருவதற்காகப் பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்திருக்கிறேன்' என்று கூறியிருந்தேன்.

பொதுவாக பெயரிலே என்ன இருக்கிறது என்று சொல்வார்கள். எந்தப் பெயரில் இருந்தால் என்ன? காலம் காலமாக வழக்கத்தில் இருந்து வந்ததை ஏன் மாற்ற வேண்டும் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் நான் கேட்கிறேன், ஒரு பெயரைக்கூட மாற்ற முடியாதபோது, எந்த வகையான பெரிய சீர்திருத்தத்தை நாம் செய்துவிட முடியும் என்பதே எனது கேள்வி. பெண் குலத்திற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்றால் இப்படிப்பட்ட பெயர் மாற்றங்களை உடனடியாகச் செய்ய வேண்டியதும் காலத்தின் கட்டாயம் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தமிழகம் முழுமைக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் Citizen என்று ஒருமையில் குறிப்பிடுகிறபோது, தமிழில் குடிமகன் என்ற ஆண்பாலுக்குரிய ஒரு சொல்லே ஆண் பெண் வேறுபாடின்றி இரு பாலுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் உறுதிமொழி எடுக்கிற நேர்வுகளில் குடிமகன் என்று கூறியே உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்பில் குறிப்புகள் தொடங்கி எல்லா நேர்வுகளிலும் Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, தமிழில் குடிமகன் என்ற ஆண்பால் சொல் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் Citizen என்பது ஆண்பாலுக்கும், Citizeness என்பது பெண்பாலுக்குமாக ஒரு காலத்தில் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. காலப்போக்கில் அது மறைந்து, இவ்வேறுபாடு இப்போது காணப்படாமல் Citizen என்ற சொல்லையே இருவருக்குமாக பொதுவாகப் பயன்படுத்தும் போக்கு உள்ளது.

மேலும் எழுத்திலும் பேச்சிலும் Citizen-என்ற சொலால் குறிக்கப்பட்டுள்ளவர் ஆணா, பெண்ணா என்ற ஐயப்பாட்டுக்கும் இடமளித்து விடுகிறது. ஆனால் தமிழில் குடிமகன் என்ற சொல் ஆண்பாலை மட்டுமே குறிப்பதாக அமைகிறது. எனவே

[செல்வி ஜெ ஜெயலலிதா]

[2003 ஏப்ரல் 29

பெண்பாலரைக் குறிக்க 'குடிமகள்' என்ற சொல் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருப்பது பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும். எனவேதான் இந்த அநீதியை உடனடியாகக் களைய வேண்டும் என்பதற்காக அரசு ஆணை ஒன்றை உடனே வெளியிடுமாறு தமிழ் வளர்ச்சித் துறைக்கு நான் ஆணையிட்டேன்.

அதன் அடிப்படையில், *28-4-2003* அன்று தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் அரசாணை (நிலை) எண் 62-ன்படி Citizen என்ற சொல்லுக்கு தமிழில் பெண்பால் சொல்லாக 'குடிமகள்' என்னும் சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த அரசாணையில், உறுதிமொழி ஏற்றல், அரசு ஆணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள், பள்ளி, கல்லூரிப் பாட நூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், அகராதிகள், படிவங்கள் ஆகிய அனைத்து நேர்வுகளிலும் Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் குடிமகன் அல்லது குடிமகள் என்றே இனி பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-30*

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழிச் சட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஆங்கிலத்திற்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை அவ்வப்போது உருவாக்கித் தருவதற்காக அமைக்கப்பட்டுள்ள 'சொல் வங்கி' அமைப்பு வழி வெளிவரும் சொற்களையும் அரசு அலுவலகங்கள் தவறாமல் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

'தன்னைக் குறிப்பதற்குத் தனியாகச் சொல்கூட இல்லாதவள் பெண்' என்ற நிலையை இந்த அரசாணையால் மாற்றுவதன் மூலம் ஒரு புதிய சரித்திரத்தை நாம் இன்று உருவாக்கி இருக்கிறோம் என்று பெருமிதத்தோடும், பெரு மகிழ்ச்சியோடும் கூறி அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2003 ஏப்ரல் 29]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதம் ஒன்றும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. சர்ச்சை இல்லை. சர்ச்சைதான் கூடாது. சர்ச்சையே இல்லை. நான் நல்ல விஷயத்தைத்தான் சொல்ல வருகிறேன். Initial போட்டுக்கொள்வதிலே, தமிழ்நாட்டிலே பலகாலமாக பலவிதமான வழக்கங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக, சாதாரணமாக ஊரின் பெயர், பிறகு தந்தையின் பெயர், பிறகு பெயரை போட்டுக்கொள்வார்கள். சிலர் தனியாக ஊரின் பெயரை மட்டுமே போட்டுக்கொள்வது உண்டு. கருங்குழி நாராயணசாமி முதலியார், கே. நாராயணசாமி முதலியார் அவருடைய பெயர். அவருடைய மகனுடைய பெயர் கே. ராஜேந்திரன். கருங்குழி ராஜேந்திரன்.

அதேபோல சிலர் ஊரின் பெயர், பிறகு தாயின் பெயர், பிறகு பெயரை போட்டுக்கொள்வது உண்டு. பெயர் வேண்டுமென்றால் உங்களுக்குத் தெரியும். கு.உ. தங்கவேலன். குன்னக்குடி உலகம்மாள் மகன் தங்கவேலன். அதேபோல தாயின் பெயர், தந்தையின் பெயர் பிறகு தங்கள் பெயரைப் போட்டுக்கொள்வதும் உண்டு. உதாரணம் வேண்டும் என்று சொன்னால் கே.ஜி. கௌதமன், குஞ்சிதம் குருசாமி கௌதமன், குஞ்சிதம் குருசாமி ரஷ்யா, மகனின் பெயரும், மகளின் பெயரும் அவர்கள் அப்படித்தான் வைத்து இருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் ஆண் தன்னுடைய பெயருக்குப் பின்னாலே -- பெண் தன்னுடைய பெயருக்குப் பின்னாலே கணவரின் பெயரைப் போடுகிற பழக்கம் ஏராளமாக உண்டு. நிறைய பெயர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அதேமாதிரி ஆணின் பெயருக்குப் பின்னால்--தன் மனைவியின் பெயரைப் போடுகின்ற பழக்கமும் தமிழ்நாட்டிலே இருந்து வந்திருக்கிறது. இளமுருகு பொற்செல்வி. அந்த அம்மையார் பெயர் பொற்செல்வி இளமுருகு. ஆக இந்தப் பழக்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. இன்றையதினம் புதிதாக அமலுக்கு வருவதற்கு அவர்கள் சட்டவடிவம் தருகிறார்களே தவிர இதுவரையில்கூட அந்த மாதிரி போட்டுக்கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை, தடையும் இருந்ததில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

[2003 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன் உட்காருங்கள்; விவாதம் ஒன்றும் இல்லை. அரசாணையாக வெளியிடப்படுவது இதுதான் முதல் முறை. அதாவது சில பேர் அதைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பம்போல் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் அரசாணையாக வெளியிடப்படுவது இதுதான் முதல் முறை. இது ஒரு மகத்தான சமுதாயப்புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுடைய வாழ்க்கையிலே, தமிழகத்தினுடைய பெண் குலத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒரு மைல் கல் என்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை. திரு. ஈஸ்வரன். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய டாக்டர் ஐயாவினுடைய நீண்ட நாள் கொள்கை. இன்று சட்டமாகக் கொண்டு வந்த தமிழக முதல்வருக்கு என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### (ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். திரு. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உங்கள் கட்சி மாநாட்டிலே முதலமைச்சருக்கு நன்றி சொல்லி ஒரு தீர்மானம் போடுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** தமிழகத்தை இந்தியாவில் முதல் மாநிலமாக மாற்ற சிறப்புத் திட்டங்களைத் தீட்டி நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா



2003 ஏப்ரல் 29] [திரு. ரா. ஈஸ்வரன்]

அவர்களை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.19.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்கிற நேரத்தில், மகளிர் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்ட 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.104.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் கிராமத்திலிருந்த விவசாயிகளிடம் வசூல் பண்ண முடியாத நிலைமை இருந்து தெருக்களிலேயும், மர நிழல்களிலும் இருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதை உணர்ந்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கு சிறப்பான முறையில் தமிழகம் முழுவதும் கிராம அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன.

அதேமாதிரி ஒருங்கிணைந்த சுகாதார வளாகம். தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்கிற நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கிராமத்தில் இருக்கக்கூடிய பெண்கள், ரோட்டின் நெடுகில் இருந்து, எங்களுக்கு நவீன கழிப்பறைகள் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததை ஏற்று, இன்று தமிழகம் முழுவதும் நவீன கழிப்பறைகள் கட்டப்பட்டு உள்ளன.

முற்பகல் 11-35

அதேமாதிரி மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் விவசாயிகள் நலன்மீது அக்கறை கொண்டு உலக வங்கியிடமிருந்து 310 கோடி ரூபாய் பெற்று விவசாயிகளுக்கு, கடன், வட்டி, அசல் ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. வட்டியும், கூடுதல் வட்டியும். அன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற நேரத்தில் நாங்கள் எல்லாம் விவசாயிகளுடைய கடனை, வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும், கூடுதல் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறிய நேரத்தில், அப்படியெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது என்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவர் கலைஞர் கருணாநிதி கூறினார். ஆனால் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு ரூ.310 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது.

அதேமாதிரி ஊழலை ஒழிப்பதற்கு, ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய counselling system என்ற முறையைக் கொண்டு வந்ததினால் இன்று சிறப்பான முறையில் அரசைச் சார்ந்த அதிகாரிகளுக்கு நல்ல

வாய்ப்பாக இருக்கிறது. அன்று — C.E.O., D.E.O. எல்லோரும்— ஆசிரியர்கள் இடமாற்றத்திற்காக பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு பண்ண வேண்டிய நிலைமை இருந்தது. அவற்றையெல்லாம் மாற்றி, இன்று ஒரு புதுமையான முறையில் செய்ததை அரசு அதிகாரிகள் பாராட்டுகிறார்கள்; அம்மாவைப் பாராட்டுகிறார்கள்.

அடுத்து தமிழகத்தில் லாட்டரிச் சீட்டு முறை. கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் எங்கு பார்த்தாலும், லாட்டரிச் சீட்டுக் கடையில்தான் இருப்பார்கள். அதனால் ஒரு கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமையை மாற்றி தைரியமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதைத் தடை செய்தார்கள். அதனால் கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களும், சாதாரண தாய்மார்களும் இன்று லாட்டரிச் சீட்டை ஒழித்ததைப் பாராட்டுகிறார்கள்.

கிராம நீர்நிலைகளைப் புனரமைக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும், அதன் மூலமாக 89,746 குளங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் புனரமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் இத்திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேமாதிரி இத்திட்டத்திற்கு தோற்றுவித்தல், பராமரித்தல் பணிகளுக்காக 2002-2003 ஆம் ஆண்டில் 714 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் செயல்படுகிறது. இதுவரை ரூ.267.19 கோடி மதிப்பீட்டில் 2,291.15 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆகவே 2003-2004 ஆம் நிதி ஆண்டில் மானியக் கோரிக்கை எண் 40-ன்கீழ் ஊரக வளர்ச்சிக்கு ரூ.1855.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் திட்டம் சார்ந்த செலவுகளுக்காக ரூ.906.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைப் பாராட்டுகிறேன்.

தமிழக வரலாற்றிலேயே இதற்கு முன்பு எப்போதும் காணாத அளவுக்கு மிகவும் கடுமையான வறட்சி இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அரசு சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, உரிய நேரத்தில் தக்க



நடவடிக்கை எடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-40

அடுத்து காவிரி டெல்டா பகுதி. காவிரி டெல்டா பகுதிவாழ் விவசாயிகள் நலனைக் கருத்தில்கொண்டு, சிறப்பு துயர் துடைப்புத் திட்டங்களை அறிவித்து, அந்தத் திட்டங்களை அம்மா அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மூன்று மாவட்டங்களிலும் எலிக் கறி, பட்டினிச்சாவு என்ற பிரச்சினை இருந்தது. தென்மாவட்டங்களில், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை போன்ற மாவட்டங்களில் எல்லாம் இந்தப் பிரச்சினையே இல்லை. பட்டினிச் சாவும் இல்லை; எலிக்கறிப் பிரச்சினையும் இல்லை. அதேமாதிரி சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலேயும் இந்தப் பிரச்சினையே இல்லை. இங்கு வேண்டுமென்றே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஏதோ எலியைப்பிடித்து எலிக்கறி சாப்பிடுகிற மாதிரி ஒரு பிரச்சினையை அரசியல் இலாபத்திற்காக இங்கே வைத்தார்கள். அதே மாதிரி பட்டினிச் சாவு என்று சொன்னார்கள். அந்தமாதிரி பட்டினிச் சாவும் இல்லை. தென் மாவட்டங்களில் எல்லாம்-பத்து மாவட்டங்கள் இருக்கின்றன வறட்சி இருக்கிறது, புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி சேலம், ஈரோடு, கோயம்புத்தூரில் எல்லாம் வறட்சி இருக்கிறது. அங்கே எல்லாம் பிரச்சினை இல்லை. அரசியல் இலாபத்திற்காக இங்கே இருக்கக்கூடிய எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் எலிக்கறியைச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். எலிக்கறி என்ன ஆடு, கோழி வளர்ப்பது மாதிரியா இருக்கிறது? பண்ணை மாதிரியா இருக்கிறது, பிடித்துச் சாப்பிட? ஒரு எலியைப் பிடிக்க வேண்டுமென்றால் அது முயல் மாதிரி ஓடும். இவர்கள் எல்லாம் சொல்வது அரசியல் இலாபத்திற்காக, ஒரு பிரச்சினையை உண்டாக்குவதற்காக எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரை யாரும் சொல்லாத ஒரு விவரத்தை இங்கே சொல்லியிருக்கிறார். எலியைப் பிடிப்பது மிகவும் கடினம்; பிடிக்கப் போனால் முயல் மாதிரி ஓடும்

என்கிறார் மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன். எலியைத் துரத்தி ஒருவேளை அவருக்குப் பழக்கம் உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது. (சிரிப்பு)

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஈஸ்வரன் வீட்டிலே அடிப்பதற்காக விரட்டியிருப்பார். (சிரிப்பு)

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயல்களில் வந்து நெற்கதிர்களை கட் பண்ணும். அந்த நேரத்தில், எலியைச் சாதாரணமாகப் பிடிக்க முடியாது. தென்மாவட்டங்களிலே இன்னும் வறட்சி இருக்கிறது. பத்து, பதினைந்து மாவட்டங்களிலே, தென் பகுதியிலே இருக்கிறது. வட பகுதியிலே கோயம்புத்தூர், ஈரோட்டில் எல்லாம் இருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யாருமே சொல்லவில்லை. ஆனால் குறிப்பிட்டு, இந்த மூன்று மாவட்டங்களிலேயும் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள்தான் சொல்கிறார்கள். அதேமாதிரி பட்டினிச் சாவு என்றும் சொல்கிறார்கள். ஏன் தென் மாவட்டங்களில் உள்ளவர்கள் யாரும் அதைச் சொல்லவில்லையே! ஈரோடு, கோயம்புத்தூர், அந்த மாதிரி சேலத்திலேயும் யாரும் சொல்லவில்லையே! இவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த நபர்கள் யாராவது இறந்திருந்தால் அதைத் தூக்கி வைத்து மாலைபோட்டு, மேளம் அடித்து, உடனே பட்டினிச் சாவில்தான் இறந்துவிட்டார்கள் என்று இப்படி ஒரு கோரிக்கையை சட்டமன்றத்திலே வைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடந்த உண்மை; வேறு எதுவும் இல்லை (சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை பழனிசாமி, உங்களைச் சொல்லவே இல்லையே.

**திரு. ஜி. பழனிசாமி:** என்னைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னார் என்பதற்காக அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சோதனையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பது உண்மை. அதை அரசு ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அதைக் கொச்சைப்படுத்திவிடக்கூடாது என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் கொச்சைப்படுத்தவில்லை.



**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் பேசுகின்றபோது யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக இதை அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்றார். ஆனால் உடனே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி எழுந்து "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பதுபோல (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப்பற்றித்தான் சொல்கிறார் என்று அவரே உறுதி செய்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சிவபுண்ணியம் எழுந்திருக்கிறார். (சிரிப்பு) ஈஸ்வரன் பேசுங்கள். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) இல்லை, பழனிசாமி சொல்லிவிட்டார். போதும். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார். அதனால் தான் பழனிசாமி அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் அன்று சொன்னீர்கள். நம் பழனிசாமி அண்ணனும் அன்று சொன்னார். ஆகையினால் உண்மையைச் சொல்கிறேன். வேறு எந்தப் பகுதியிலும் எந்தப் பிரச்சினையும் கிளப்பவில்லை. நீங்கள் அரசியல் உள்நோக்கத்துடனே, வேண்டுமென்றே இந்தச் சட்டமன்றத்திலே தவறான பிரச்சினையை எடுத்துச் சொன்னீர்கள். அது நடைபெறாது. மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நம் மாவட்டத்திலே இல்லை, அந்த மூன்று மாவட்டங்களிலே மட்டும் இருக்கிறது என்று சொன்னீர்கள் என்றால் அதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் எனக்கு வேண்டியவர்கள் எல்லாம் இருந்தார்கள். போனில் கேட்டேன். 'என்ன, மாவட்டத்தில் பட்டினிச்சாவு என்று நிறைய வருகிறது? எலிக்கறியைச் சாப்பிடுகிறதாகச் சொல்கிறார்களே, என்ன இப்படி இந்த

மாவட்டத்திலே இருக்கிறது' என்று கேட்டேன். 'அந்த மாதிரி இல்லை. அரசியல் நோக்கத்துடனேயே அவர்கள் வேண்டுமென்றே தப்பான பிரச்சினையைக் கிளப்புகிறார்கள்' என்றுதான் என்னிடம் தொலைபேசியிலே நான் கேட்டதற்குச் சொன்னார்கள். இதுதான் உண்மை.

**திரு. ஜி. பழனிசாமி:** இப்படி ஒரு அக்கறையுள்ள மாண்புமிகு உறுப்பினராக இருந்தால் அந்த மாவட்டத்திற்கு நேரே சென்று பார்த்தால் தெரியும். தொலைபேசியிலே கேட்டதாகச் சொல்கிறார். எவ்வளவு தூரம் முழுப்பூசணிக்காயை சோற்றிலே மறைக்கிறார் என்பதற்கு இதுவே ஒரு உதாரணமாகிறது.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்மாறன், நீங்கள் மதுரைக்காரர். நீங்கள் எதற்கு விவகாரம் பண்ணுகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதையெல்லாம் ஒப்புக்கொள்ளவில்லை. ஈஸ்வரன், பேசுங்கள்.

(முற்பகல் 11-45

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், தீவிரவாதத்தையும், மதவாதத்தையும் ஒடுக்குவதற்காக இந்த நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட பொடா சட்டம் நாட்டிற்கு மிகவும் அவசியம். பொடா சட்டத்தின் மூலமாக இன்னும் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவின் எந்த மாநில முதல்வரும் செய்ய முடியாத காரியத்தை நம்முடைய முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் தைரியமாகச் செய்திருக்கிறார்கள். அது ரொம்பவும் பாராட்டத்தக்கது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எந்த முதல்வரும், யாருமே செய்யவில்லை. அதேநேரத்தில் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எல்.டி.டி.ஈ. இயக்கத்தை ஆதரித்து யார் பேசினாலும் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால், இல்லை.

சர்வதேசக் குற்றவாளி பிரபாகரன் வந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்ட நேரத்தில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலே எங்கும் பேசக்கூடாது என்று தைரியமாகச் சொன்ன



முதல்வர் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எந்த மாநிலத்திலாவது சொன்னார்களா? இல்லை. காங்கிரஸ் ஆண்டு கொண்டிருக்கின்ற மாநிலத்தில் யாராவது சொன்னார்களா? ராஜீவ் காந்தி பிரபாகரனால் கொலை செய்யப்பட்டார். Number one accused-ஆக இருக்கிறார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று அந்த இயக்கத்திலே, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அது பெரிய வேதனை. இதைவிட ஒரு பெரிய மோசடி, இதைவிட தவறான நடவடிக்கை, ஒழுக்கக்கேடு வேறு எங்காவது இருக்க முடியுமா என்று சொன்னால், இருக்க முடியாது. இந்த பொடா சட்டத்தின் மூலமாக மதவாதத்தையும் தீவிரவாதத்தையும் இன வெறியையும் தூண்டிவிடக்கூடிய சில நபர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் தைரியமாகக் கைது செய்து இருக்கிறார்கள். வேறு யாரும் செய்ய முடியாது. வேறு எந்த மாநிலத்திலும், இதுவரையில் துணிச்சலாகச் செயல்படவில்லை.

1989 மார்ச் 25 அன்று இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் நடந்தது. நான் உடனிருந்தேன் அப்போது, 1989 மார்ச் 25 அன்று. ஆனால் இங்கு சட்டமன்றத்தில் முன்னாள் கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பேசும்போது— அதாவது, திரு. பழனிசாமி அண்ணன் சொன்னமாதிரியே முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைத்த கதைபோல—அப்படி ஒரு சம்பவமே இந்தச் சட்டமன்றத்தில் நடக்கவில்லை என்று அவர் அன்றைக்குச் சொல்கிறார். கடுமையான பிரச்சினை சட்டமன்றத்தில் இருந்தது. அம்மாவின் மேல் விழுகிற அடி, மறைந்த மாண்புமிகு ஐயா மூப்பனார் அவர்கள் மீதும் அடி விழுகிறது. உடனே இதைத் தடுங்கள் என்று சொன்ன உடனே, நாங்கள் எல்லாம் இருந்து விலக்கினோம். தாக்கினது துரைமுருகன், ஆற்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் சுற்றியிருந்து தாக்குகிறார்கள். நாங்கள் எல்லாம் விலக்கி விடும்போது எங்கள் மீதும் அடி விழத்தான் செய்தது. இந்தச் சட்டமன்றத்தில் பல்வேறு பொறுப்புகளில் இருந்த ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர், முன்னாள் கல்வி அமைச்சர் அன்பழகன் அவர்கள் அப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை என்று சொல்கிறார். இது எவ்வளவு பெரிய பொய் பாருங்கள். தவறான செய்தி. இந்தச் சட்டமன்றத்தில் சொன்ன தவறான செய்தி. அவையெல்லாம் நாங்கள் நேரடியாக இருந்து பார்த்தது. அதுமாதிரி குமரி அனந்தன் கையிலே கட்டுப்போட்டு இருப்பதாக ஒரு பொய் சொன்னார். அது

மாதிரி இல்லை. தவறான தகவலைக் கொடுத்தார்கள் சட்டமன்றத்திற்கு. குமரி அனந்தன், எப்போது தாக்கப்பட்டார் என்று சொன்னால் அது 1988, ஜனவரி 28 ஆம் தேதி. அப்போது சட்டமன்றத்தில் நடந்த தகராறில் எனக்குக்கூட இதுமாதிரி காயம் ஏற்பட்டு பின்னர் பார்க்கிறபோது சட்டையில் இரத்தம் நனைந்திருந்தது. குமரி அனந்தன், அக்கா யசோதா ஆகியோருக்கும் கையிலே அடி. பெரியசாமி, வால்பாறை தங்கவேல் போன்றவர்களுக்கெல்லாம் அந்த அடிதடி நடந்தது 1988 ஜனவரி 28-ஆம் தேதி நடந்தது. அப்போதுதான் குமரி அனந்தன் அவர்கள் கையிலே கட்டுப் போட்டிருந்தார். ஆனால் இது 1989 மார்ச் 25-ல் நடந்தது அது ஒரு பொய்யான தகவலை, தவறான தகவலை இந்தச் சபைக்குத் தெரிவித்திருக்கிறார்.

புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இராணி மேரி கல்லூரி இருக்கிற இடத்திலே பார்த்து அதுதான் பொருத்தமான இடம் என்று சொல்லி தேர்வு செய்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு ஒரு பெண்கள் கல்லூரியிலே, பெண்கள் படிக்கின்ற இடத்திலே, அங்கே என்ன ஜோலி? அப்படியென்றால் பெண்கள் அணி இருக்கிறது; மகளிர் அணி வைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே போய் பேசச் சொல்கிறது? இவர்கள் அங்கு போய் தேவையில்லாத பிரச்சினையெல்லாம் செய்து அரசியலைத் தூண்டிவிட்டு, என்ன தப்பு பண்ண வேண்டுமோ, அதைப் பூரா செய்கிறார்கள். தப்பு செய்தால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தைரியமாகப் பிடித்துப் போட்டால் உள்ளே போகவேண்டியதுதானே? அதிலே என்ன பிரச்சினை?

முற்பகல் 11-50

இந்தச் சட்டமன்றம் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டியது; பழமையான கட்டடம். சில இடங்களிலே எல்லாம் இடிந்து விழுகிறது. நானே இங்கு இருக்கிறேன். இந்தப் பக்கம் போக வேண்டும் என்றால், இங்கே சிவபுண்ணியம் கனமாக இருக்கிறார் ஆளு. இவரைத் தாண்டிப் போக முடியவில்லை. அவ்வளவு நெருக்கடியாக இருக்கிறது. இங்கே பேசும்போது, இங்கேகூட எல்லோருமே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அப்புறம், அங்கே போய், கலைஞர் என்ன சொல்வாரோ, என்ன மந்திரம் போடுவாரோ, கேட்டுவிட்டு, ஆமாம் தாளம் போட்டுவிட்டு, அங்கே சுற்றிவிட்டு வந்து, போராட்டம், பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். இதுதான் நடக்கு.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இதுதான் திருநெல்வேலி மொழி. திருநெல்வேலி பாஷை இது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஒரு நியாயம் வேண்டாமா? அதுமாதிரி, கலைஞரை கைது செய்த நேரத்தில், கருணாநிதியை கைது செய்கிற நேரத்தில் அவர் வீட்டிலே ஒரு பெரிய பிரச்சினையை உண்டாக்கினார். "என்னைக் கொல்லுறாங்க, கொல்லுறாங்க, ஐயோ அப்பா, கொல்லுறாங்க, கொல்லுறாங்க" என்று சத்தம் போடுகிறார். நான் அன்றைக்குச் சென்னையிலேதான் இருந்தேன். டி.வி.-யைப் பார்க்கிறோம். "கொல்லுறாங்க, கொல்லுறாங்க" என்றால் ஒரு அர்த்தம் வேண்டாமா? என்ன, அரிவாள் எடுத்துக்கொண்டு வெட்டிப் போடுகிறார்களா? வெட்டப்போனாலும், வெட்ட வருகிறார்கள் என்று சொல்லலாம்; இல்லை; துப்பாக்கியிலே தோட்டாவைப் போட்டு சுடப்போகிறார்கள் என்றாலும், 'என்னுடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது' என்று சொல்லலாம்; இல்லை; போலிஸ் அதிகாரி, ஏதாவது கத்தியை எடுத்து குத்தப் போனாலும் சொல்லலாம்; "கொல்லுறாங்க, கொல்லுறாங்க, கொல்லுறாங்க" என்று தவறான பிரச்சாரத்தைச் செய்கிறார்கள். சன்.டி.வி.யில் இதைத்தான் தினம் விளம்பரம் போடுகிறான். நான் அப்போது சென்னையிலேதான் இருந்தேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அம்மா மேலேயும் ஒரு தவறான பிரச்சாரத்தை உருவாக்குவதற்காக அப்போது கருணாநிதி அவர்கள் பல்வேறு நாடகத்தை நடத்திப் பார்த்தார்கள். அதை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது எல்லோரும் சொல்கிறார்கள், கருணாநிதி மாதிரி மோசமாக அரசியல் பண்ணுகிறவர் நாட்டிலே வேறு யாரும் இல்லை என்று. (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே மாறன், சென்னையிலே ஸ்டாலின், மதுரையிலே அழகிரி, கோயம்புத்தூரிலே தமிழரசன், இப்படி தமிழ்நாட்டை, ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு எடுத்து, இதிலே கலைஞர் வேறு மேற்பார்வை, என்ன செய்யவேண்டும் என்று; இந்த மாதிரி நிலைமை எல்லாமே தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கிறது. குடும்ப அரசியல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் எல்லாம் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே இனிமேல் அவருடைய பாச்சா—எப்படிச் சொன்னாலும், எவ்வளவு பொய் சொன்னாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்—இங்கே எடுபடாது

அடுத்து கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம். இந்திய வரலாற்றில், தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால்

நிறைவேற்றப்பட்டது இச்சட்டம். எதிர்க்கட்சிகள் குற்றம், குறைசொல்லி, அரசியல் இலாபத்திற்காக, சிறுபான்மை மக்களைக் குழப்புகிறார்கள். ஆனால் சாத்தான்குளம் இடைத்தேர்தலில் சிறுபான்மை மக்கள் அதிகம் வசிக்கும் அந்தத் தொகுதியில் மாபெரும் வெற்றியைப் பெற்றது, மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்க்கட்சிகளுக்குக் கொடுத்த மிகப்பெரிய சவுக்கடி. ஏனென்றால், நாங்கள் எல்லாம் 15 நாட்களாக அங்கே இருந்தோம்; நான், ஹக்கீம், குமாரதாஸ், எல்லோரும் இருந்தோம். அமைச்சர்கள் எல்லோரையும் சந்தித்தோம். இவர்கள் எல்லாம் ஊரைச்சுற்றிக்கொண்டு திரிந்தார்கள். யார்? காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள். என்ன பேசினார்கள் என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு பண பலம் இருக்கிறது; படை பலம் இருக்கிறது என்று சொன்னார்கள்.

நான் பொதுக் கூட்ட மேடையிலே பேசினேன். நீங்கள் இந்தியாவிலே 13 Chief Ministers இருக்கிறார்கள். எல்லோரிடத்திலேயும் ரூபாய் வாங்கியிருக்கிறீர்கள். ஆளுக்கு ஒரு கோடி ரூபாய் வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதே நேரத்திலே டெல்லியிலேயிருந்து அம்மா சோனியா காந்தி வேறு கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே முழுவதும் வசூல் பண்ணியிருக்கிறார்கள். நீங்கள் இந்த ரூபாயைப் பங்கு போடுவதிலேயே பொழுதன்றைக்கும் சண்டை போட்டுக் கொண்டிருந்தீர்கள். காலையிலேயிருந்து ஆரம்பித்தது சண்டை, ரூபாயைப் பங்கு போடுவதிலே.

அங்கே எல்லாம் நம்முடைய ஆட்கள் எல்லோருமே Booth-வாரியாக, Complete-ஆக எல்லோருமே, அமைச்சர் பெருமக்கள், அதற்கு அப்புறம் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் Booth வாரியாக கொடுத்த தேர்தல் பணியை தீவிரமாக, அடிப்படையிலிருந்து பணிகளைச் செய்து கொண்டிருந்தோம். இவர்கள் அந்த வேலையே செய்யவில்லை. படைபலம், படைபலம் என்று சொன்னார்கள். சாத்தான்குளம் தொகுதி, கிருத்துவர்கள் கூடுதலாக, அதிகமாக இருக்கக்கூடிய இடம். இவர்கள் எல்லோரும் சொல்லிப் பார்த்தார்கள்; நடைபெறவில்லை. அங்கே பெருவாரியான வெற்றி கிடைத்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பி தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்கள் வாக்களித்தார்கள். அதாவது, ஒரு சின்ன....(சிரிப்பு)



முற்பகல் 11-55

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இது என்ன உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையா இல்லை வேறு ஏதாவது பொது மேடையாகப் பயன்படுத்தி பேசிக் கொண்டிருக்கிறோமா? அவர் ஏதாவது பொது மேடையில் பேச ஆள் சேர்க்கச் சொன்னாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர் திரு. ஈஸ்வரனுடைய கன்னிப் பேச்சு. (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு உண்மை தெரிகிறது. புதிதாக அண்ணா தி.மு.க.-விலே இணைந்து இருக்கிறார். நிறைய மேடைகள் அமைத்துக் கொடுத்து அவர் பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவர் உண்மையிலேயே நன்றாகப் பேசுவார். அங்கே பேசட்டும். சட்டமன்றத்திலே உள்ள மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசினால் நன்றாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, எல்லாம் தொகுதிப் பிரச்சினை. அப்புறம் நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டியுள்ளது. வேறு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; அதனால் ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்கிறேன். அவ்வளவுதான்.

அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் திருநெல்வேலிக்கு வருகின்ற நேரத்தில் புளியங்குடி நகராட்சிக்கு 8.45 கோடி ரூபாயை குடிநீருக்காக ஒதுக்கினார்கள். இந்த வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் ஒரு நீண்ட நாள் பிரச்சினை. அதற்கு 39.20 கோடி ரூபாயில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு இருக்கின்றன. அதை மாண்புமிகு டாக்டர் முதல்வர் அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள்

முதல்வராக இருந்த நேரத்திலே எனக்கு அவர்கள் ஒரு சர்க்கரை ஆலையைக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவர்களுடைய காலத்தில் ஒரு சர்க்கரை ஆலையைக் கொடுத்தார்கள். அது சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தையும் வாழமலையார் அணைத் திட்டத்தையும்—அது புளியங்குடி பகுதியிலே இருக்கிறது. அதற்கு 10 கோடியே 60 இலட்சம். அதனால் இந்தத் திட்டத்தையும்—நிறைவேற்றிக் கொடுத்தால் சுமார் 15,000 ஏக்கர் பாசன வசதி பெறும். அந்தப் பகுதியினுடைய விவசாயிகள் நிலத்தடி நீர் பெற்று விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து செந்துவேலி அணை உடைப்பு அடைப்புத் திட்டம். கேரள அரசுக்கும் நமக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. 1986-லேயே தமிழகத்திற்கு நேரடியாக என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதிக்கு வரக்கூடிய அந்தத் தண்ணீர் உடைப்பு ஏற்பட்டு கேரளாவிற்குப் போகிறது. தண்ணீர் கேரளாவிற்குப் போன காரணத்தினால் அந்த உடைப்பை அடைப்பதற்கு தமிழ்நாடு அரசு 1986-ல் மொத்தம் ரூபாய் 10 இலட்சத்து 30 ஆயிரம் அளவிற்கு மதிப்பீடு போட்டது. இன்றைக்கு வேண்டுமென்றால் நான்கு பங்கு கூட இருக்கும். அதை அடைத்துவிட்டால் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கும், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்கும் நிரந்தரமாக தண்ணீர் வரும். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இது குறித்து நான் தபால் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் நேரடியாக இது சம்பந்தமாகக் கொடுத்து இருக்கிறேன். நான் கேரளாவுக்குப் போகிற நேரத்தில் கேரள பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலும் பேச்சு வார்த்தை நடத்தி, நான் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்களும் அதற்கு வேண்டிய உதவி செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்ற.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் என்ன, சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் பேச்சை முடிக்கிறபோது, அவர் அண்ணா தி.மு.க.-வுக்கு வந்து விட்டதை மறந்து விட்டு பழைய பாணியிலேயே ஜெய் ஹிந்த் என்று முடிக்கிறாரே! (சிரிப்பு) (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அது, பெருங்காயம் இருந்த டப்பாவில் கொஞ்சம் வாசனை இருக்கத்தான் செய்யும்! (சிரிப்பு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெய் ஹிந்த் என்பது பாரத தேசத்திற்கு வெற்றி என்கிற ஒரு நல்ல வார்த்தைதான். எந்தக் கட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை. இன்றைக்குக்கூட தந்தி பத்திரிகையிலே நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய வீர சாகசங்களை வர்ணித்து எழுதியிருந்தார்கள். அதை நமது நண்பர் படித்திருப்பார் என்று நினைக்கிறேன். அதனால் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், பார்வர்டு பிளாக் கட்சியினுடைய தலைவர் நேத்தாஜி அவர்கள் சொன்ன வாசகம்தான் ஜெய் ஹிந்த். அதை காங்கிரஸ் கடன் வாங்கியது.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை எல்லாம் நாங்கள் - காங்கிரஸ்காரர்கள் - பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்தோம். அதுபோல காங்கிரஸ்காரர்களும் ஏதாவது குற்றச்சாட்டுகள் பேசினால் அவர்களும் பொறுமையாக இருப்பார்களா என்று முதலமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகின்றபோதெல்லாம் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறார்கள். அவற்றுக்கு அவ்வப்போது நாங்கள் பதில் அளித்துக் கொண்டுதான் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட, நகராட்சிகள் சம்பந்தப்பட்ட இந்த மானியத்தில் சில விவரங்களை, கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய நகராட்சிகள் ஆனாலும் சரி, பேரூராட்சிகள் ஆனாலும் சரி, அதிக அதிகாரம் வேண்டுமென்பது முதல் கோரிக்கை. இரண்டாவதாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர் நம்முடைய தமிழ்நாட்டினுடைய எல்லா சந்து பொந்துகளிலும் கிடைக்கக்கூடிய அளவிற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். மூன்றாவதாக, நகரத்தினுடைய, கிராமத்தினுடைய சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற நடவடிக்கை வேண்டும். நான்காவதாக, நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இல்லை என்றாலும்கூட சரிவர மின்சாரம் தருவது, ஆக இந்த 4 பிரச்சினைகளையும் பின்னணியாகக் கொண்டுதான் இந்த நிர்வாகம் பூராவிலும் இன்று வந்திருக்கின்ற அதனுடைய ஏடுகளைப் படிக்கின்றபோது, அந்த விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. நான் இங்கே அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கின்றபோது, 1980 ஆம் ஆண்டில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த அவையினுடைய முதலமைச்சராக இருந்தபோது, இருந்த அதிகாரங்கள் இன்று குறைக்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்று அதற்குப் பின்னால், 1986-லிருந்து 1990-க்குள் நகராட்சியின்—நான் ஒரு நகராட்சியில் 4 ஆண்டு காலம் நகர மன்றத் தலைவராக இருந்தேன்—அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அதனுடைய விளைவுகள் என்னவென்றால், நாம்— தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய நகராட்சிகள் ஆனாலும் சரி, பேரூராட்சிகள் ஆனாலும் சரி—ஜனநாயக அடிப்படையில் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றி நம்முடைய அதிகாரிகளுக்கு அனுப்பினால், அது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுதான் அதனுடைய பொருள்.

குறிப்பாக கடந்த ஆட்சிக் காலத்திலே அன்றைய இந்த அமைப்பினுடைய செயலாளர் அவர்களிடம் நேரடியாக குழித்துறை நகராட்சியினுடைய ஒரு பிரச்சினையை எடுத்துச் சொன்னபோது



அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் ஒரு முடிவெடுத்து உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம், அதை நீங்கள் அமல்படுத்தவில்லை என்றால் உங்களுக்கு மானியம் தருவதோ, கடன் தருவதோ சாத்தியம் இல்லை என்று நேரடியாகச் சொல்லிவிட்டார்கள். அந்த நிலையில் இருந்துகொண்டுதான் நம்முடைய நகராட்சிகள் ஆனாலும் சரி, பேரூராட்சிகள் ஆனாலும் சரி, கார்ப்பரேஷன் ஆனாலும் சரி, அதற்குப் போதுமான அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல அதிக நிதி; இப்போது நிதிப் பற்றாக்குறை இருக்கிறது; அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. அது தமிழ்நாட்டிலேயும் இருக்கிறது. நம்முடைய தேசம் பூராவிலும் இருக்கின்ற நிலைதான். ஆக அந்த நிதிப் பற்றாக்குறையைப் போக்கிக் கொள்கிறபோது, நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு, கார்ப்பரேஷனுக்கு யார் நிதியைத் தருவது? அதற்காக நம்முடைய அதிகாரிகள் என்ன கட்டளையிடுகிறார்கள் என்று சொன்னால், அதிகப்படியான வரியைச் சுமத்துவதுதான் இன்று ஒரு நிலையாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த வரிச்சுமை என்பது சாதாரண ஒரு நகராட்சியிலே போய் அதிகப்படியான வரியை சுமந்திக் கொள்ள முடியாது. காரணம் இன்று நம்முடைய நகரத்தினுடைய, கிராமத்தினுடைய பொருளாதார நிலை அந்த அடிப்படையில் இருக்கின்றது. எனவே இதிலே ஒரு முக்கியமான பங்கு என்பது நம்முடைய அரசு, சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத் தருகின்ற 82 இலட்சம் ரூபாய். இந்த 82 இலட்சம் ரூபாயை—மாண்புமிகு முதல்வருடைய அந்த நல்ல நெம்பர் இருக்கிறது, 9. அதை—99 இலட்சமாக மாற்றித்தர வேண்டும். இதை எல்லாத் துறைகளிலும் செயல்படுத்துவற்கு, அதாவது பல துறைகள் இருக்கின்றன. சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணிக்கு 9 என்ற எண்தான் வேண்டுமென்றால் அதை 99 ஆக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. 82-ஐ 81 ஆக்கினால்கூட 9 வந்துவிடும்.

*பிற்பகல் 12-05*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. குறைக்கக்கூடாது; கூட்டித்தர வேண்டும் என்பதுதான் அதனுடைய

நோக்கம். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டுதான்— பெருவாரியாக என்னைப் பொறுத்தமட்டிலே நான் இருக்கின்ற தொகுதியானாலும் சரி, ஒரு நகர மன்றம், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைமையிலே இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய ஒரு நகராட்சி எங்களுடைய கையிலே இருக்கிறது. அதிலே போதுமான வரி வசூல் என்றெல்லாம் பண்ணுவதற்கோ, அதிகப்படியான வரியைப் போடவோ முடியாது. எனவே இந்தப் பணத்தை வைத்துக் கொண்டுதான்—குடிநீருக்காகக் கொடுக்கின்றோம். கிணறு தோண்டுவதற்காகக் கொடுக்கின்றோம்; பைப் லைனுக்காகக் கொடுக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும்; எப்படிச் செலவழிக்கின்றோம் என்பது. பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் எங்கேயாவது சாலை போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வந்தாலும் என்னிடம் அதற்குப் பணம் கிடையாது என்கிற நிலை இருந்தாலும்கூட நீங்கள் ஏதாவது சில சாலைகளை கவனித்தாக வேண்டுமென்று அரசு ஆணை மூலம் சில நிர்பந்தங்கள் வருகின்றன. எனவே இதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கின்றபோது அரசு தருகின்ற நிதியை சற்று அதிகமாகத் தந்து உதவினால், இந்தப் பணிகளை முழுமையாகச் செய்ய முடியும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சுகாதாரம்; இந்தச் சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலேதான் துப்புரவுத் தொழிலாளர்களுடைய பிரச்சினை வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்திலேதான் சென்னை கார்ப்பரேஷனிலே துப்புரவுப் பணியை பூராவும் தனியாருக்கு அல்லது அதை contract-க்கு விடுகின்ற சம்பிரதாயத்தை மேற்கொண்டார்கள். அவ்வாறு contract விட்டதனால் துப்புரவு சரியாகச் சா என்று சந்து, பொந்துகளிலேயெல்லாம் சென்று பார்க்கின்றபோது அது சரிவர நடந்ததாகத் தோன்றவில்லை. நான் பார்த்த மட்டிலும் போதுமானதாக இல்லை. இருந்தாலும்கூட அதனுடைய விளைவை எப்படிச் சந்திக்கின்றோம்; அதனுடைய நிலை என்னவென்று இன்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. குப்பை அள்ளுவதிலே contract விட்டதில் இலட்சங்கள் அல்ல, பல கோடி முறைகேடுகள். அதிலே யார், எப்படி மாட்டுகிறார்கள் என்ன ஏமாற்றுத்தனம் இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கே பேசப்பட்ட சமாச்சாரம்தான். அதிலே ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இதிலே அதிகாரிகளுக்குக்கூட கொஞ்சம் பங்கு இல்லையென்று நாம் சொல்லிவிட முடியுமா? அதையும் கூட நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். குப்பை அள்ளுகின்ற பணியைச்



செய்வது அடித்தட்டிலே வாழ்கின்ற மக்கள். அவர்களுக்கு வேறு வேலையும் கிடையாது. அந்த அடிப்படையிலே, அந்தத் துறை இவர்களை வைத்து, நவீன ரீதியாக நாம் செய்தால் மாநிலத்திலே இருக்கக் கூடிய நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள், கார்ப்பரேஷன், ஆகியவற்றிலே வேலை கிடைக்கும், கொஞ்சம் தொழிலாளர்களுக்கு, நவீனமயமாக்கக்கூடிய அதிகப்படியான லாரிகளைத் தருவது. அதுபோல சாக்கடையை ஏற்றுவதற்கான லாரி; ஒரு விஞ்ஞான ரீதியிலே ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்கள். அதைத் தருவதன் மூலம் நகரத்தினுடைய, கிராமத்தினுடைய சுகாதாரத்தை பேணிப் பாதுகாத்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே 4 நகராட்சிகள் இருக்கின்றன. 3 நகராட்சிகளுக்கு கமிஷனர் கிடையாது. குழித்துறைக்கு கமிஷனர் இல்லை. தக்கலைக்கு கமிஷனர் இல்லை. குளச்சலுக்கு கமிஷனர் இல்லை. எப்படி அவை செயல்படும்? பொறியாளரை வைத்துக் கொண்டு அந்த நிர்வாகத்தைச் சரிவர ஓட்டிவிட முடியுமா? போதுமான அதிகாரிகள் இல்லை. அங்கே ஊழியர்களைக் கேட்டால், பணக் கஷ்டம் இருப்பதினாலே தருவதில்லை என்கிறார்கள். அந்த நகராட்சியிலே மேடு பள்ளம் ஜாஸ்தி. 9 பேர் தேவைப்படுகிறார்கள். குடிநீர்க் குழாய்களின் அந்த வால்வைத் திறந்து ஆப்பரேட் பண்ண தண்ணீரை காலாகாலத்தில் கொடுப்பதற்கு 9 பேர் தேவைப்படுகிறது. ஆனால் அரசு தந்திருப்பது 3 பேர். இதனால் காலாகாலத்திலே தண்ணீர் கொடுக்க முடியாது. அந்த நிலையிலே ஒரு மாற்றத்தை, தேவையைச் செய்து அத்தியாவசிய தேவை என்று வருகின்றபோது, சில பணியாளர்களை நியமனம் செய்வதற்கு, இருக்கின்ற தடையை மாற்றி நியமனம் செய்ய அதனுடைய உரிமையைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீரிலே வரக்கூடிய பிரச்சினை. பொதுவாகச் சொன்னால், இப்பொழுது பெரிய அளவில் குடிநீர்ப் பஞ்சம் உள்ளது. நாகர்கோவில் நகராட்சியிலே 10 நாளைக்கு ஒரு தரம்தான் குடிநீர் தருகின்றார்கள். கடந்த பல வருடங்களுக்கு முன்னாலே சொல்லப்பட்ட திட்டம். இப்பொழுது நாகர்கோவில் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கின்ற நண்பர் அவர்களும் உலக்கை அருவி திட்டத்தை இங்கே சொல்லி, அதை அமல்படுத்தினால், எந்தக் காலத்திலேயும் நாகர்கோவில் நகராட்சியிலே குடி தண்ணீர்ப் பஞ்சமே வராது என்றார்கள். எனவே அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது அவசியம்.

அதுபோன்று bore-wells என்று சொல்வது ரொம்ப அத்தியாவசியத் தேவை. தண்ணீர் இருக்கின்ற இடத்திலே குழாய்க் கிணறைப் பயன்படுத்தினால், அதிலே சிறிய மோட்டார் வைத்துக்கொடுத்தால், 100, 200 வீடுகளுக்கு நாம் தண்ணீரைத் தரமுடியும்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலேயிருந்து மலையடி ஊராட்சியிலே அதற்கான பணத்தைச் செலவிட்டு அங்கே அந்தத் திட்டத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்தோம். ஆனால் அவர்களுக்கு உரிய பங்கு, அந்த ஊராட்சியினுடைய தலைவருக்கு உரிய பங்கு இல்லை என்ற காரணத்தைக் காட்டி சில பகுதிகளுக்குத் தடை செய்துவிட்டார்கள். சம்பந்தப்பட்ட அந்த ஊராட்சியினுடைய அதிகாரி, மேல்புறம் ஊராட்சியினுடைய அதிகாரியிடம் இந்தத் தகவலைச் சொன்னபோதும் அது இன்னும் சரிப்படுத்தப்படாத ஒரு நிலையிலேதான் இருக்கிறது.

பிற்பகல் 12-10

அதேபோல குடிநீர் வடிகால் வாரியத்திலே தொகுப்பு ஊதியத்திலே ஊழியர்கள் கொஞ்சம் பேரைப் போட்டார்கள். அவர்களை முழுமையாக நாம் பயன்படுத்திக் கொண்டு, முழு நேர ஊழியர்களாக மாற்ற வேண்டும்.

அடுத்து இயந்திரம். இந்த bore-wells-க்கு இயந்திரங்கள் தேவை என்னும்போது தனியார்கிட்டே போவதைவிட அந்த இயந்திரங்களை அரசுத் துறையின் மூலமாக வாங்கி எங்கே நல்ல தண்ணீர் கிடைக்கிறது என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தால் அதைத் துரிதப்படுத்துவதற்கும், தேவையான தண்ணீரைக் கொடுப்பதற்கும் சாத்தியமாகும். எனவே அந்தத் துறையை மூடிவிடக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவது. இந்தக் குடிதண்ணீர் பிரச்சினை வருகின்றபோதுதான் நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போக வேண்டிய கட்டாயம் வருகின்றது.

எங்கள் நகராட்சி வழியாக, தாமிரபரணி ஆறு வருகிறது. நெல்லையிலே ஓடுகின்ற ஆற்றினுடைய மறுபகுதியாக அந்த ஆறு செல்கின்றது. இரண்டு பகுதிகளிலுமே இப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால் அந்தக் கிணறுகள் பூராவையும் ஆற்றுக்குள்ளேயே



போட்டிருக்கின்றார்கள். திருட்டுத்தனமாக மணல் அள்ளுவதன் காரணமாக இப்போது விளாத்துறை ஊராட்சியிலே இருக்கின்ற 3 கிணறுகள் சரிந்து விட்டன. குழித்துறை ஆற்றுப் பாலத்தில் தூண் அரிக்கப்பட்டுவிட்டது. அங்கு இரயில்வே பாலத்தின் தூண் அரிக்கப்பட்டுவிட்டது. இதற்கு, அந்தப் பேரூராட்சியிலே வருகின்ற, விளாத் துறை பேரூராட்சியின் கட்டுப்பாட்டிலே வருகின்ற ஒரு காவல் நிலையம், புதுக்கடை காவல் நிலையம். அதிலே அந்த ஆள் 6 மையங்களை வைத்திருக்கிறார்கள். அந்த 6 மையங்களிலேயும் வாரத்திலே ஒரு மையத்திலே 5,000 ரூபாய் என்றால் என்ன ஆயிற்று? நம்முடைய அரசாங்கம் ஒரு அதிகாரிக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தைவிட எத்தனை மடங்கு கையூட்டுப் பெறுகின்றார்கள். இதன் விளைவாகத்தான் அந்தக் குடிதண்ணீர் திட்டங்கள் பூராவும் பாழாய்ப்போன ஒரு நிலையைப் பார்க்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விவாதம் வருகின்றபோது மிகத் தெளிவாக, உறுதியான ஒரு கருத்தைச் சொன்னார்கள், உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவருகிறேன். அதற்கான கடிதத்தையும் அந்தப் படங்களையும் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக முதலமைச்சரிடம் கொடுப்பதற்காகக் கொடுத்திருக்கின்றேன். அதைக்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது திண்டுக்கல்லிலே பெரிய குடிநீர் பஞ்சம். தண்ணீர் 7 நாளைக்கு, 10 நாளைக்கு ஒரு தடவைதான் கிடைக்கிறது. ஒரு திட்டத்தை நாம் வகுத்திருக்கின்றோம். பாராட்டக்கூடிய திட்டம். அதை விரைவுபடுத்துவதற்கு, இந்த ஆண்டிலேயே ஆரம்பித்தாலும்கூட அடுத்த ஆண்டு கடைசியிலேதான் அது முடிவடையும். அதுவரையிலும் bore-wells-லேயிருந்தும், அதுபோன்ற மற்றதண்ணீரையும் பயன்படுத்தி அந்த மக்களுடைய குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல அங்கே இன்னொரு சம்பிரதாயம் உள்ளது. நகராட்சி கொஞ்சம் கட்டடங்களைக் கட்டி அதை குத்தகைக்கு விடுகின்றது. ஆனால் நீதிமன்றம் வசூல் பண்ணுவதிலே தடை விதித்ததன் காரணமாக கிட்டத்தட்ட இப்போது ஒரு கோடி ரூபாய் அந்த நகராட்சிக்கு வரவேண்டியிருக்கிறது. அதை வசூலிப்பதிலேகூட

பெரிய சிக்கல்களும், முறைகேடுகளும் இருந்து கொண்டேயிருக்கின்றன. அந்த நிலைக்கு ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

அதுபோன்று மதுரை கார்ப்பரேஷன். போதுமான நிதி இல்லை. நிதிப் பஞ்சம் என்று சொல்கின்றார்கள்; பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அதைப் போக்குவதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கடுத்தாற்போல பெரம்பூர் தொகுதியிலே இருக்கின்ற ஒரு பாலத்தினுடைய பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. பெரம்பூர் மேம்பாலத்தை உடனடியாக கட்டி முடிக்க வேண்டுமென்றும், பெரம்பூர் கணேசபுரம் இரயில்வே கடவை Concrete-ஆக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் இங்கே வைக்கின்றேன். அதேபோல்தான் நம்முடைய கோவை நகராட்சி—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. டி. மணி:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுகிறேன். அடுத்து கோவை கார்ப்பரேஷனிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய பிரச்சினை. ஏற்கெனவே கடந்த தடவை நம்முடைய நண்பர் திரு கருணாகரன் அவர்கள் அந்த விவரங்கள் பூராவையும் இங்கே சொன்னார்கள். இன்றுவரை அவற்றிற்கு ஒரு முடிவும் ஏற்படவில்லை. என்னவென்று சொன்னால், சில கட்டடங்களை முறைப்படுத்த, 2002 ஜனவரி முதல் 2005 டிசம்பர் வரை, 3 ஆண்டுகளில் 6 தவணைகளில் கட்டணங்களைச் செலுத்த கால அவகாசம் தர வேண்டும். உள்ளூர் திட்டக் குழுமத்திற்குக் கட்ட வேண்டிய கட்டணங்களை 1999 ஆம் ஆண்டிற்குப் பின்னால் கட்டிய கட்டடங்களுக்காக மட்டும் நிதி செலுத்த வேண்டும். அந்தப் பிரச்சினை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். எனவே இந்தப் பிரச்சினையில் அரசு தலையிட்டு எப்படி இதை வசூலிக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டிட வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே நான் வலியுறுத்த விரும்புகின்றேன். எனவே கோவை மாநகராட்சியினுடைய பிரச்சினையிலே தலையிட்டு அரசு உரிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் கட்டடங்களை வரைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டும், அதன் மனைகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசு,



மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதன் கட்டணங்கள் குறித்து தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோளாக வந்திருந்தாலும், ஜன நெருக்கடி, போக்குவரத்து நெருக்கடி, மக்கள் நடமாடுகின்ற சாலை நெருக்கடி ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் 20 அடி சாலையிலே கட்டிய 3 அடுக்கு மாடிக் கட்டடங்களை எல்லாம் வரைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில்தான் தமிழக அரசு அந்தத் திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தியுள்ளது. எனவே பொதுமக்கள் அந்தக் கட்டடங்களுக்கு உண்டான கட்டணங்களைச் செலுத்தி வரைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்து, அமர்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கருணாகரன், அந்தச் சட்டமுன்வடிவு வரும்போது நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, விஷயம் இதனோடு இணைந்திருக்கும்போது சொல்லி விடுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லித்தான் மணி பேசுகிறார்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை, ஓரேயொரு நிமிடம். அதாவது கட்டடங்களை வரைமுறைப்படுத்துவதற்கோ, குறைந்தபட்ச நியாயபூர்வமான கட்டணங்களைக் கட்டுவதற்கோ ஜனங்கள் தயாராக இருக்கிறார்கள். தயவுசெய்து இதனுடைய யதார்த்தத்தை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு சதுர அடிக்கு 10 ரூபாய் இருந்த கட்டணத்தை 50 ரூபாய் என்று ஓரே நேரத்தில் உயர்த்தி, 1,000 சதுர அடிக்கு 50,000 ரூபாயிலிருந்து 85,000 ரூபாய் வரைக்கும் அபிவிருத்திக் கட்டணம் கட்ட வேண்டும் என்று சொன்னால், அது எப்படி? முடியாது. ஜனங்கள் கட்டமாட்டார்கள் என்பது ஒன்று. Reserve site என்கிற பெயரால் காலி இடம் 10 சதவிகிதம் ஒதுக்கவேண்டும் என்று கேட்கிறீர்கள். அங்கு இடம் இல்லை. இடம் இல்லை என்பதோடு குடியிருக்கிற ஜனங்கள் 20 இலட்சம் ரூபாய் rate வருகிறது என்றால், பங்கு போட்டுக் கட்ட வேண்டும் என்று கேட்டால், சாதாரண

ஜனங்கள் எப்படிக் கட்ட முடியும்? ஆகவேதான் நீங்கள் அந்தக் காலத்தை, விண்ணப்பத்தைப் பெறுகிற காலத்தை மேலும் மேலும் நீட்டித்துக் கொண்டே போகிறீர்கள். அங்கு கட்டமாட்டேன் என்கிறார்கள். தயவு செய்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் சரி, நம்முடைய உள்ளாட்சி அமைச்சகமும் சரி, இதன்மீது மறுபரிசீலனை செய்ய வேண்டும். கட்டாயம் அதைக் குறைக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் அங்கு வரியை வசூலிக்க முடியாது அங்கு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. நாங்கள் தவிர்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கையை வைத்ததன் அடிப்படையில் பாதியாகக் குறைக்கப்பட்ட கட்டணம். அந்த அடிப்படையில்தான் மேன்மேலும் காலத்தை நீட்டிக்க வேண்டாம். போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டு, அனைவரும் கோவை, மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சி ஆகிய மாநகராட்சிக்குட்பட்ட 5 மாநகராட்சிப் பகுதிகளில் இந்த வரன்முறைச் சட்டத்திற்குட்பட்டு கட்டடங்களை, நில மேம்பாடுகளை, மனை மேம்பாடுகளை வரைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, 1 மணித்துளிக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்திருக்கின்றார்கள். அதிலே பாதி என்று சொல்கின்றார். இன்னும் கொஞ்சம்கூட கீழே வந்து கொஞ்சம்கூட குறைத்து அவர்களுக்கு வசதி செய்து தந்தால் - ஏனென்றால், கிராமப்பகுதிகூட அதிலே இணைந்திருக்கிறது. அதையும் கூட சேர்த்து அங்கே கணக்குப் பண்ணிப் பார்க்கின்றபோது—அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்த முடியும் என்று நான் கருதுகின்றேன். அந்த அடிப்படையிலே இந்த வருமானத்திலே வரக்கூடிய பணத்தை அந்த கார்ப்பரேஷனுக்கு நீங்கள் முழுவதுமாகக் கொடுத்து விட்டீர்கள் என்று சொன்னால் கார்ப்பரேஷன் சங்கடப்படாது என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



குளித்தலை பகுதியிலே இருக்கின்ற நகராட்சியிலே ஒரு குடிநீர்த் திட்டம். தண்ணீர் இருக்கிறதா என்றால் தண்ணீர் இருக்கிறது. ஆற்றிலே இருந்து தண்ணீர் எடுக்க முடியும். இப்போது 6 மாதமாக குழாய் வாங்கியதிலே பிரச்சினை. இங்கே கம்பெனியிலே வந்து கேட்டால் 10 சதவிகிதம் increase ஆகிப்போய் விட்டது விலை. அதிலேயிருந்து உங்களுக்குக் குறைத்துத் தர முடியாது. ஆனால் ஒப்பந்தக்காரர்கள் என்ன சொல்கின்றார்கள் என்று சொன்னால், 10 சதவிகிதம் எங்களுக்குக் கட்டவும் முடியாது. அதிகாரிகள் ஒன்றைச் சொல்லிவிட்டார்கள், இதற்கு மேலே கட்டித் தர அதிகம் தர, செலவிட முடியாது என்று. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தக் குழாய்களைப் பதிக்கின்ற வேலையைச் செய்வீர்களேயானால், அதிகச் செலவு வராது. ஏன் என்றால், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மேல்நிலைத் தொட்டி கட்டியாகிவிட்டது. ஆற்றிலே கிணறு போட்டாகிவிட்டது. தங்கு தடையின்றி தண்ணீரைத் தருவதாக ஏற்கெனவே தேர்தல் காலத்திலே நாங்களும் சொன்னோம். இவ்வளவு சாகசங்களைச் செய்து, 6 மாதத்திற்கு மேலாகி, இந்தக் குழாய் பதிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதைத் தீர்வு செய்கின்ற வகையில் குடிநீர் வடிகால் வாரியம் இதை ஏற்றுக்கொண்டு, அந்தப் பணியைத் துரிதமாக செய்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டது நகர சுகாதாரம் பற்றி. அதிலே வேண்டுமென்கிற அளவிற்கு கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

அதுபோன்றுதான் மின் கட்டண உயர்வு. இப்போது பேரூராட்சி, ஊராட்சி இருக்கிறது. இந்த மின் கட்டண உயர்வை ஊராட்சிக்குத் தரவே முடியாது. அந்த அளவுக்கு வருமானம் குறைவு. எனவேதான் அந்தக் கட்டணத்தை அரசே செலுத்த வேண்டுமென்கிற கோரிக்கையைத்தான் முன்னே வைக்க முடியுமே தவிர, நீங்கள் அதிகப்படியான நிதியைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு சாத்தியம் இருக்காது. அதையும்கூட அரசு சிந்திக்க வேண்டும். அதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கின்றேன். நன்றி.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் குடிநீர் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அரசு கட்டடங்களின் மேற்பரப்பில் விழும் மழை நீரைச் சேமிப்பதன் மூலம் நிலத்தடி நீரைச் செறிவூட்டுவது என்கிற ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இதை வரவேற்கிற அதே வேளையில், பிரதான பணிகளான, ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஊருணிகள், ஓடைகள், குட்டைகள் மற்றும் குளங்கள் ஆகிய அனைத்தும் தூர் எடுத்து, அவற்றின் கரைகளை உயர்த்துவதும், ஆக்கிரமிப்புகளை அகற்றி, செப்பனிடப்படுகிற பணிகளையும் தொடங்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

சுய நிதி உதவிக் குழுக்கள் மூலம் இன்று பெண்களே தங்கள் சொந்தக் காலில் நிற்க முடியும் என்னும் அளவிற்கு தொழில் துறையில் அரசு நிதி உதவி அளித்து ஊக்கம் அளித்து வருவதை வரவேற்கின்றேன். அதே நேரத்தில் பாரதி இதைத்தான், 'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்று ஒரு பாடல் வரியில் குறிப்பிட்டிருக்கிறான். அது மெல்ல இப்போது தலைதூக்க ஆரம்பித்து இருக்கிறது. இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

நீண்ட கால சுதந்திர இந்தியாவில் இப்போது பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்னதான் அமல்படுத்தப்பட்டாலும், உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாகப் பொறுப்பேற்று இருக்கின்ற பெண்களின் கணவர்களே அந்தப் பொறுப்புகளை, பெரிய அளவில் கவனிக்கின்ற ஏஜெண்டுகளாகச் செயல்படுகிறார்கள் என்கிற நிலை நீடித்து வருகிறது. இதை மாற்றி, பெண் தலைவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் சுயேச்சையாகச் செயல்படுகின்ற முறையில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்ஜெட் உருவாக்கம் மற்றும் மறு வடிவம் செய்யப்பட்டு 50 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையில், ஊராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஒதுக்கப்படும் நிதியில் 50 சதவீதத்திற்கு மேலாக மின்சாரக் கட்டணமாக பிடித்தம் செய்யப்படுகிறது. இதனால் இதர முன்னேற்றத் திட்டங்களுக்கும், நலப் பணிகளுக்கும் போதிய நிதி இல்லாமல் போய்



விடுகிறது. அதேநேரத்தில் உள்ளாட்சியின் தலைவர்கள் ஊரகக் கட்டமைப்பு வசதியின் பல்வேறு பணிகளை நிறைவேற்றும் Agency-களாக நடத்தப்படுகிறார்கள். இது மாற்றப்பட வேண்டும்.

அரசியல் சாசனத்தில் 73 மற்றும் 74-வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ள, உள்ளாட்சிகளுக்குக் கொடுக்கும்படியான அதிகாரப் பரவலாக்கம் பற்றி எந்த ஓர் அறிவிப்பும் இதிலே இல்லை.

மாநிலத்தில் மிகத் தீவிரமாக கவனிக்க வேண்டிய பிரச்சினைகள் மூன்று உள்ளன. மத்திய அரசு மற்றும் உள்ளாட்சி அரசமைப்புகள் சந்தித்து வரும் தொடர் பிரச்சினைகளாகும். அவை வறுமை, வேலையின்மை, மண்டல மற்றும் சமூக ரீதியிலான பிரச்சினைகள். அதோடு சமத்துவமின்மையும் ஆகும்.

நீர் வளப் பங்கீடு மற்றும் நீர் வள ஆதாரங்கள், வணிகமயமாகியுள்ளதால் ஏற்பட்டுள்ள அதிகப்படியான நிலத்தடி நீர் சுரண்டுதல், இவற்றால் ஏற்பட்டுள்ள அதிதீவிர வறட்சியை எதிர்நோக்குவதற்கும், அதைச் சமாளிப்பதற்கும், போதுமான திட்டங்கள் தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டில், எந்தவிதமான உத்திகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேபோன்று பல்வேறு வகைகளில் வரக்கூடிய வரிகள், உள்ளாட்சிகளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுவது இல்லை. அவை வழங்கப்பட வேண்டும். ஆனால் இப்போது மாதத்திற்கு ஒரு முறை வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

அதேபோன்று குறிப்பாக, கிராமங்களில் தெருக்கூட்டும் தொழிலாளிக்குச் சம்பளம் கொடுக்க முடியாமலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து வந்த, ஈமச் சடங்குகளுக்குக் கொடுத்து வந்த உதவித் தொகையைக் கொடுக்க முடியாமலும் தெரு விளக்குகள் பழுதடைந்தால் அவற்றைப் பழுதுபார்க்க முடியாமலும் தலைவர்கள் மிகப் பெரிய அளவிலே கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த நிதியை உடனடியாகக் கொடுத்து, அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

நெடுஞ்சாலைத் துறையினாலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களினாலோ பராமரிக்கப்படாத ஏறத்தாழ 12,000 கிலோ மீட்டர் சாலைகள் எந்தப் பிரிவிலும் வகைப்படுத்தப்படாமல் இருந்து

வருகின்றன. இந்தச் சாலைகள் அனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்காமல், ஏற்கெனவே உள்ள நிதிப் பகிர்விலிருந்து ஒரு பகுதியை இதற்காக ஒதுக்குவது என்பது சரியாக இருக்காது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

ஊராட்சிகளுக்கான புறம்போக்கு நிலங்கள், எந்த வகைப் புறம்போக்கானாலும், அவை பயன்படவில்லை. ஏனெனில், கிராம சபையின் ஒப்புதலோடு ஊராட்சிகள் தீர்மானிக்கும் தேவைகளுக்காக இதைப் பயன்படுத்திக்கொள்ள சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். புறம்போக்கு நிலங்கள் வேறு வகை நிலங்களாக மாற்றப்பட வேண்டுமானாலும், அதேபோன்று ஊராட்சிகளுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பிற்குள்ளான பொது நிலங்களை மீட்பதற்கும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

*பிற்பகல் 12-25*

பாரதப் பிரதமர் சாலைத் (P.M.G.) தொகுதிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது போதுமானதாக இல்லை. அவை இன்னும் விரிவுபடுத்தப்பட்டு 500 பேர் கொண்ட மக்கள் தொகை மற்றும் 1000 பேர் கொண்ட மக்கள் தொகைக்கு மேலும் பல சாலைகளை....

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் கிராமச் சாலை திட்டத்தின்கீழ் 2,937 கிலோ மீட்டர் கிராமச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மேம்படுத்த 367 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில்—மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற தமிழகம்தான் முதலிடம் என்ற அளவுக்கு தார்ச் சாலைகளாக மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருமுயற்சியினால் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அந்தச் சாலைகளைப் போடும்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து, அந்தச் சாலைகளைப் போட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர், கழிப்பிடம், சுகாதாரம் ஆகியவற்றைப் பராமரிப்பது உள்ளாட்சிகளாகும். எனவே உள்ளாட்சிகளுக்கு நிதி என்பது மிக மிக



அவசியம் ஆகும். அந்த நிதியை அவசரமாகக் கொடுத்து உதவ வேண்டும். அதேபோன்று பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் என்ற பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் நடத்த முடியாத அளவில் ஒரு சவாலாக இன்றைக்குவரை இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு, குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, மருத்துவம் போன்றவற்றைத் தடை செய்து, அவை திருந்தும்படியான ஏற்பாட்டைச் செய்து அங்கு தேர்தலை நடத்துவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தனி அலுவலர் போட வேண்டும். தமிழக அரசினுடைய திட்டங்கள் எல்லாம் அங்கு போய்ச் சேர வேண்டும், அந்த மக்களை ஒதுக்கக்கூடாது, அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி அலுவலரைப் போட்டு, உடனடியாக அங்கே நிவாரணப் பணிகள் வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையில்தான் செயல்படுத்தப் போகிறோமேயொழிய, தமிழக அரசு அவர்களை நிராகரிக்க முடியாது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நிராகரிக்க வேண்டும் என்பது அல்ல. அவர்கள் திருந்துகின்ற ஒரு வாய்ப்பை எற்படுத்துவதற்காக இப்படி ஒரு [illegible]கர்ப்பத்தை—

*மாண்...

**மாண்[illegible] திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டது. மாவட்ட ஆட்[illegible] தலைவர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், [illegible]வருவாய்த் துறை அலுவலர்கள், வட்டாட்சியர் போன்ற அனைத்து [illegible] அலுவலர்களையும் அங்கே அனுப்பி அவர்களோடு சமாதா[illegible]னக் கூட்டங்களையெல்லாம் போட்டு, உடனடியாக நீங்கள் மனு[illegible] செய்ய வேண்டும், வேட்பு மனுவைத் தாக்கல் பண்ண வேண்டு[illegible] என்ற முயற்சியை தமிழக அரசு—மாண்புமிகு அம்மா அவர்களு[illegible]டைய அரசு முயற்சியை—எடுத்தது. அதற்கு பல முறை இடைத் [illegible]தர்தலையும், பொதுத் தேர்தலையும் சந்திக்க அவர்கள் யாருமே முன்[illegible]வரவில்லை. அப்படியே வேட்பு மனு தாக்கல் பண்ணினாலும், வா[illegible]பஸ் பெற்றார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை என்ப[illegible]தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். இது ஒரு முக்கியமான விஷயம். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதில் கொஞ்சம் மாறுதல் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். தேர்தல் நடைபெறாத அந்த 4 ஊராட்சிகளுக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாமல் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர்களைத் திருத்துவதற்கான முயற்சியை அரசு பல வழிகளிலே எடுக்க வேண்டும். தேர்தலை நடத்தி ஜனநாயகத்திலே நம்பிக்கையைப் பெறச் செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்ற அந்த அளவிலே அதை திருத்திக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களைக் கூப்பிட்டு நீங்கள் சொல்லியிருக்கலாமே.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த சாலை விபத்து ஒன்றில் இரண்டு சக்கர வாகனத்தில் சென்ற பெண்மணி ஒருவர் இறந்துள்ளார். இதற்குக் காரணம் சாலை சரியில்லை என்று Traffic Police Joint Commissioner, சாஸ்திரி என்பவர் சாலை சரிசெய்யப்பட வேண்டும், அதற்காக நான் வழக்குத் தொடுப்பேன் என்று கூறியுள்ளார். இது, 'The Hindu' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. எனவே சாலையின் பெரும்பகுதி, கிராமச் சாலைகள்கூட செப்பனிடப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, தியாகராய நகர் ரோட்டில் ஆயிரக்க
குடிசைகளும், பல்லாயிரக்கணக்கான குடியிருப்புகளும் . ணக்கால
வடக்கு போக் சாலையில் புதியதாக கட்டப்பட்டு உள்ளன. அங்கு
என்ற 5 நட்சத்திர ஹோட்டலுக்கு வள்ளுவர் கோ ளள Residency Tower
ஏறத்தாழ 1800 மீட்டர் தூரம் 8 அங்குல மைதானத்திலிருந்து குடிநீர்
இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறப்பில் ஒரு நாளைக்கு :
மக்களுக்கு இந்தத் தண்ணீர் கிடைக்காதட்டு. அங்குள்ள ஏழை எளிய
உயர்ந்த ஆடம்பர ஓட்டல்களுக்கு 4 ட்சத்தில், இப்படிப்பட்ட மி
வழங்குவது நியாயம்தானா? என் இலட்சம் லிட்டர் தண்ணீர்
விழைகிறேன். று கேட்க இந்த நேரத்தில்

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உமாண்புமிகு பேரவைத் தலைவர்
தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள் றுப்பினரின் இந்தத் தகவல் தவறான
கிறேன். சென்னை குடிநீர் வடிகால்



வாரியத்தின் மூலமாக உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த மாதிரி நிகழ்வுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** விளக்கத்திற்கு நன்றி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் லிட்டர் அளவு தண்ணீர் அவர்கள் எடுப்பதற்கான எல்லாப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் எடுப்பதனாலேதான் அவர் சொல்கிறார். அந்தப் பகுதியில் மிகவும் பதட்டமான ஒரு சூழ்நிலை இருப்பதால்தான் அவர் சொல்கிறார். நீங்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதை உண்மையிலேயே வரவேற்கிறோம்.

பிற்பகல் 12-30

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நடப்பாண்டில சென்னை மாநகரில் குப்பைகளைச் சேகரித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைத் தொடங்குவதாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அது என்ன ஆனது என்று இதுவரையிலும் தெரியவில்லை. அதேபோன்று ஒரு நாளைக்கு தினசரி 600 டன் குப்பைகள் சென்னையில் மட்டும் கிடைக்கின்றன. இதில் மின்சாரம் தயாரித்தால் ஏறக்குறைய 14.85 மெகாவாட் மின்சாரம்
ிக்கலாம். இது தடைப்பட்டுள்ளது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை
து என்று தெரியவில்லை.
*மாண்...

தலைவர் அவி செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத்
கைவிடப்படவில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம்
அறிவிக்கப்பட்ட ஒரு அது ஏற்கெனவே இந்த அவையிலேயே
அமைந்திருக்கிறது. இ மாகும். இந்த நிறுவனம் ஆஸ்திரேலியாவில்
ஆஸ்திரேலியாவில் அ க் திட்டத்தை ஏற்படுத்தும் நிறுவனம்
புத்தாண்டு அன்று ஒப்பந்த ந்திருக்கின்ற ஒரு நிறுவனம். தமிழ்ப்
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ல் கையெழுத்துப் போடுவதாக நிகழ்ச்சி
தொடுத்த ஆனால் ஈராக் மீது அமெரிக்கா போர்
காரணத்தினால், அந்தச் சூழ்நிலையில்,
ஆஸ்திரேலியாவிலிருந்து, அந் நிறுவனத்தின் முக்கிய தலைவர்கள்,
முக்கிய அதிகாரிகள் வர வேண்டியிருந்ததால, அவர்களால்
வரமுடியவில்லை. அதனால் அந் நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.
அவ்வளவுதான். திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** விளக்கத்திற்கு நன்றி. சுகாதாரம், கிராம நீர்நிலைகள் பராமரிப்பு, கிராம நிர்வாக அலுவலகம் குடியிருப்பு ஆகியவற்றைச் செயல்படுத்தும் தமிழக அரசின் திட்டத்தை வரவேற்கிறேன்.

கச்சா வீடுகளுக்கு 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது. ஏழை மக்கள் வீடுகளைக் கட்டி முடித்த பிறகுதான் அந்த 10,000 ரூபாயைப் பெறவேண்டும் என்ற நிலையிருக்கிறது. இதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதேநேரத்தில் அந்தப் பணம் போதுமானதாக இல்லை. அதை 15,000 ரூபாயாக உயர்த்தி, அதை இரண்டு தவணையாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குரூப் ஹவுஸ் கட்டும்போது, இடத்திற்கு இடம், மண் சாயல் வேறுபடுகிறது. அதேபோன்று செங்கல், மணல் போன்றவற்றை தொலைதூரத்திலேயிருந்து கொண்டுவர வேண்டியிருப்பதால்— ஏறத்தாழ 34 ஆயிரம் ரூபாய் அதற்குக் கொடுக்கப்படுகிறது—இது போதுமானதாக இல்லை; எனவே யாரும் இந்த வீட்டைக் கட்ட முன்வருவதில்லை. (குறுக்கீடு) 34 ஆயிரம் ரூபாய்; 34 ஆயிரம் ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது. இதை மாற்றி 50 ஆயிரம் ரூபாயாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, மத்திய அரசு கிலோ அரிசியை 3 ரூபாய்க்குக் கொடுக்கிறது. தமிழக அரசு அதை ரூ. 5.65 என வழங்குகிறது. நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 57 ரூபாய் மட்டும் கூலி கொடுக்கப்படுகிறது. இதனை மாற்றி 75 ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாநில
அரசுக்கு 5 ரூபாய் 65 காசு என்றுதான் அரிசி வழங்குகிறது. நாங்கள்
அதை எப்படி குறைத்துக் கொடுக்கமுடியும்? இந்த வேலைக்கு உணவுத்
திட்டம் மூலம் பல்வேறு திட்டப் பணிகளை மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிகளிலே எடுக்கலாம். இந்த
வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் உடனடியாக அனைத்து அடிப்படைத்
தேவைகளையும் நிறைவேற்றுவதற்குண்டான திட்டங்கள் நிறைவேற்றித்
தரப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.



**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நன்றி. இந்தத் திட்டங்கள் அமல்படுத்தப்படும்போது, பணிகளுக்குக் கூலியாக 90% அரிசியும், 10% பணமும் கொடுக்கப்படுகிறது. அப்படி அரிசியை மட்டுமே அதிகமாகக் கொடுப்பதால், எப்படி குடும்பச் செலவையும், வாழ்க்கைப் பிரச்சினைகளையும் சமாளிக்க முடியும்? இந்த அரிசியை விற்கமுடியாது. விற்கச் சென்றால் D.S.O./T.S.O. போன்றவர்களின் நடவடிக்கைக்கு உட்படும். எனவே இதனை மாற்றி, பாதிப் பணமும், பாதி அரிசியுமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அரசியல் சாசனத்தின்படி உள்ளாட்சிகளில் ஒப்படைக்கவேண்டிய 29 துறைகளுக்கான அதிகாரங்கள் உள்ளாட்சிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதற்கு தமிழ்நாடு அரசு, அரசியல் சாசனச் சட்டத்தில் உள்ள, உள்ளாட்சிகளுக்கான நடவடிக்கைப் பட்டியல் கொண்டுவர முன்மொழிய வேண்டும். கல்வி, ஆரம்பத்தில் குழந்தைகளைப் பராமரிப்பது, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, பொது விநியோகம், வேளாண்மை, பாசனம், நீர்வள மேம்பாடு, நீர்வளப் பாதுகாப்பு, நிலச் சீர்திருத்தம், நில உபயோகமின்மை, கிராமப் பொது வளங்கள் மீதான கட்டுப்பாடு, கனிம வளம், காடுகள் பராமரிப்பது, சிறுகாடுகளின் வளங்கள், சாதி வருமானச் சான்றிதழ்கள் வழங்குவது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தொழிற்சாலைகள் மற்றும் ரியல் எஸ்டேட்டுகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம், மாசுக் கட்டுப்பாடு தகவல் பெறவும், அந்தத் தகவல்களைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தும் அதிகாரம் போன்ற அனைத்தையும் உள்ளாட்சி நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவர, சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

வருவாய்த் துறையையும், காவல் துறையையும் உள்ளாட்சிகளின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். கேரளா உள்ளாட்சிப் பிரிவு 252-ல், போலிஸ் துறை, உள்ளாட்சித் துறைகளின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு, அதனை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் எனவும், அதனை போலிஸ் அதிகாரிகள் மீறினால் குற்றம் செய்தவர்களாகக் கருதப்படும் என்று ஒரு சட்டத் திருத்தம் உள்ளது. அதேபோன்று இங்கேயும் கொண்டுவர வேண்டுமென்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-35

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான மக்கள் பிரதிநிதிகளின் நேரடித் தேர்தல் தொடர வேண்டும். அதேசமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் அடுத்தடுத்த அடுக்குகளில் அங்கம் வகிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று எதற்கெடுத்தாலும் தமிழ்நாடு அரசு எந்த மானியக் கோரிக்கையானாலும் மேற்கு வங்கத்தையும், கேரளாவையும் உதாரணம் காட்டுவதும், கம்யூனிஸ்டுகள்மீது புழுதிவாரித் தூற்றுவதை நிறுத்தி, இங்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, கேரளாவைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) கேரளாவையும் சொல்லுகிறார். சரி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** கூட்டுறவுத் துறைகளில்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகச் சொல்வதை விடுத்து எந்த இடத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நிரந்தர குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க தொலைதூரப் பார்வையோடு திட்டங்கள் தீட்டப்படவேண்டும். எங்கள் மாவட்டமாகிய தருமபுரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி கோரிக்கைகள். பாம்பாற்றின் குறுக்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தொகுதி கோரிக்கைகளை எல்லாம் அப்புறம் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். அரை மணித் துளிக்குள் முடித்துவிடுகிறேன். பாம்பாற்றின் குறுக்கே வாணியம்பாடி வட்டத்தில் 25 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு அணை கட்டப்படுகிறது. இது ஏற்கெனவே 1983ஆம் ஆண்டு என் தொகுதியிலே கட்டப்பட்ட ஒரு சிறு அணையாகும். இதற்கு நீர் வரத்து என்பது ஜவ்வாது மலையிலிருந்துதான் வர வேண்டும். இப்போது இங்கே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தில் ஒரு புதிய திட்டமாக அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சென்ற ஆட்சிக் காலத்தில் இது-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணமூர்த்தி, தொகுதி கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு முதலமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு கோரிக்கைகள்; முடித்துவிடுகிறேன். அணை கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டையை அடுத்துள்ள பெரிய ஏரி தூர் எடுக்கப்பட வேண்டும்.

அரூரில் ஒரு அரசுக் கலைக் கல்லூரியும், ஊத்தங்கரையில் ஒரு தொழிற் கல்லூரியும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளகம்பட்டி ஊராட்சி, பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் உள்ளது. அதை அரூரில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாத்தான்குளம் திரு. லெ. நீலமேகவர்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. லெ. நீலமேகவர்ணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மானியக் கோரிக்கையில் அதாவது உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே என்னைப் பேச அழைத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். அம்மா, ஏழை விவசாயியாகிய என்னை சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினராக்கி என்னை வாழ வைத்த தெய்வமே, நானும் என் குடும்பத்தினரும் என் இறுதி மூச்சு இருக்கும் வரை உங்களது விசுவாசியாக இருப்போம் என்று சொல்லி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து நாட்கள் இரவு என்றும் பகல் என்றும் பாராமல் சாத்தான்குளம் தொகுதி முழுவதும் சுற்றி வந்து அமோக வெற்றிதேடித் தந்த எங்கள் அன்னையே, என் சார்பாகவும்,

என் தொகுதி மக்கள் சார்பாகவும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதி மக்களுக்கும், அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த என் தொகுதி மக்களுக்கும் நன்றி சொல்லி, அம்மா எங்களுக்கு நீங்கள் ஐந்து நாட்கள் சுற்றி வந்து அப்போது தொகுதியிலிருந்த குறைகளை எல்லாம் நிறைவேற்றச் செய்ய வேண்டுமென்று நீங்கள் தூத்துக்குடியிலே நலத் திட்டம் என்று அறிவித்ததை சாத்தான்குளத்திற்கு அறிவித்து வாரி வாரி வழங்கிய எங்கள் இதய தெய்வமே, நீங்கள் அங்கே 40 வருடங்களாக காங்கிரஸ்காரர்கள் எம்.எல்.ஏ-க்களாக இருந்தார்கள். 5 வருடங்களாக தி.மு.க.வினர் எம்.எல்.ஏ.-வாக இருந்தார்கள். அம்மா அந்தத் தொகுதிக்கு எந்த வசதியும் செய்யாமல், அடிப்படை வசதிகூட இல்லாமல் புறக்கணித்த தொகுதியை, எங்களை வாழ வைத்த தெய்வமே, நீங்கள் நலத் திட்டம் என்று சாத்தான்குளத்தில் அறிவித்ததிலே பெரியதாழை கடற்கரையில் தூண்டில் வளைவு என்று அறிவித்ததும் அங்கே மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியோடும், ஆனந்தத்தோடும் இருக்கிறார்கள் அம்மா. அம்மா அந்தக் கடற்கரை மக்கள் கடலுக்குச் செல்லும்போதெல்லாம் வருடத்திற்கு இரண்டு மூன்று பேர்கள் இறந்துவிடுவார்கள் அம்மா. நீங்கள் நலத் திட்டம் என்று அறிவித்ததும் அந்த மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடும் ஆனந்தத்தோடும் இருக்கிறார்கள் அம்மா.

அதோடு மட்டுமல்லாமல் நீங்கள் பாபநாசம் Dam-லிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டு அதாவது சடையநேரி கால்வாய் வழியாக புத்தன்தருவைக்குத் தண்ணீர் தந்த இதய தெய்வமே, அங்குள்ள ஏழை விவசாயிகளும், பாட்டாளி மக்களும், பாட்டாளி ஏழைகளும் மிகவும் சந்தோஷத்தோடும் ஆனந்தத்தோடும் இருக்கிறார்கள் அம்மா. அதிலே நீங்கள் பாட்டாளி என்றால் நாங்கள் ஏழை என்றும், எங்களது ஏழை விவசாயிகளுக்கு பாட்டாளி என்ற பெயர் உண்டு. ஐயா, அதனால்தான் நான் பாட்டாளி என்று சொன்னேன். ஆகவே அங்குள்ள புத்தன்தருவைக்குத் தண்ணீர் வந்ததும் அங்குள்ள கிணற்றிலே நீர் மட்டம் உயர்ந்திருக்கிறது. அங்குள்ள உப்புத் தண்ணீரும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருக்கிறது அம்மா. ஆகவே எங்களை வாழ வைத்த தெய்வமே, நீங்கள் சாத்தான்குளத்திற்கு பெண்கள் காலேஜ் என்று அறிவித்தீர்கள் அம்மா. அங்குள்ள ஏழையெளியவர்களெல்லாம் மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் இருக்கிறார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)



*பிற்பகல் 12-40*

அதோடு மட்டுமல்லாமல் அம்மா, சாத்தான்குளம் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தி, 50 படுக்கைகள் கொண்டதாக மாற்றித் தந்த எங்கள் இதய தெய்வமே, எங்களது மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் அம்மா. அதோடு மட்டுமல்லாமல் இன்னும் இரண்டு ஆஸ்பத்திரிக்கு நீங்கள் அடிக்கல் நாட்டி, சாத்தான்குளம் தொகுதி மக்களை மிகவும் உற்சாகப்படுத்தி, பின்தங்கிய எங்களை பலப்படுத்தி இருக்கிறீர்கள் எங்கள் இதய தெய்வமே.

அதோடு மட்டுமல்லாமல் புத்தன்தருவைக்கு—மீண்டும் இரண்டு கால்கள், அதாவது—சடயனேரி கால்வாயை அகலப்படுத்தித் தருவதற்கு உத்தரவிட்ட எங்கள் அன்னையே, அதோடு மட்டுமல்லாமல் புதுக்கால், தாமிரபரணியிலிருந்து புத்தன்தருவைக்கு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள் அம்மா. அங்குள்ள மக்கள் என்றென்றும் உங்களது விசுவாசிகளாக இருப்பார்கள் அம்மா.

அதோடு மட்டுமல்லாமல் என் தொகுதியிலே ஒரு நீதிமன்றம் இருக்கிறது அம்மா. அது தனியார் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது அம்மா. அதை நீங்கள் கருணைபுரிந்து, அரசுக் கட்டடமாக மாற்றித் தரவேண்டும் அம்மா. அது மிகவும் பழுதடைந்தும் இருக்கிறது. ஆகவே அதை எங்களுக்கு அரசுக் கட்டடமாக மாற்றித் தர வேண்டுமென்று உங்கள் பாதம்தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

அதோடு மட்டுமல்லாமல் நீங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் திறந்து வைத்தீர்கள். ஏழையெளியவர்களை, எல்லோரையும் பாதுகாக்கிறபடி, கிராமத்திற்கும் குடிதண்ணீர் செல்வதால், அங்குள்ள மக்கள் இப்போது இந்த பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை அருந்திக்கொண்டு, மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் அம்மா. அம்மா, எப்பொழுதும் இந்தத் தொகுதி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எஃகுக் கோட்டையாக இருக்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, என்னையும் இந்தச் சட்டமன்றத்திலே பேச வைத்த என் தாயே, உங்களை வணங்கி, நான் அமர்கிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன்.

**•திரு. கே.வி. முரளிதரன்:** முக்கிய மந்திரிகாரிக்கு வந்தனாலு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தமிழ் அவ்வளவு நன்றாகப் பேசத் தெரியாது. ஆனாலும் நான் தமிழிலேயே பேசுகிறேன்.

*2003-2004*ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு முன்னால், தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்மொழி கட்டாயம் இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் சென்ற வாரம் இந்த அவையில் அறிவித்தமைக்காக நான் மிகவும் பாராட்டுகிறேன்; நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் எங்கள் ஓசூர் தொகுதியிலும், தளி தொகுதியிலும், நாங்களெல்லாம் தெலுங்கு படித்தவர்கள். அங்கு தெலுங்கு படித்துவிட்டு, இங்கே இந்த அவையிலே தமிழ் பேசுவதற்குக் கஷ்டமாக உள்ளது. எங்களுக்கு அவ்வளவு நன்றாக தமிழ் பேசத் தெரியாது. ஆனால் இப்பொழுது நீங்கள் கட்டாயம் தமிழ் என்று, இந்த scheme-ஐ கொண்டு வந்ததற்கு மிகவும் நன்றி. ஏனென்றால், நாங்களெல்லாம் தமிழ் கற்றுக் கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் கட்சிகள் எல்லாம், தமிழ் வளர்ச்சி செய்கிறோம் என்று சொல்லி, ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உண்மையாக ஒன்று சொல்கிறேன் தாயே. நீங்கள் தமிழ்த் தாய் என்று உங்களுக்கு ஒரு பெயர் இருக்கணும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் கட்டாயம் தமிழ் என்று கொண்டு வந்தது, இது பெரிய விஷயம். நாங்களெல்லாம் தமிழ் கற்றுக் கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பு. Tamil Development ஆகட்டும், அன்னதானத் திட்டமாகட்டும், சத்துணவுத் திட்டமாகட்டும், கட்டாய மத மாற்றத் தடைச் சட்டமாகட்டும், இந்தியாவிலேயே, உண்மையாகவே கொண்டு வந்தது, நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த முதலமைச்சரும் இதைக் கொண்டுவரவில்லை. நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரு முதலமைச்சர் வந்தால், இவ்வளவு செய்தார், இந்த முதலமைச்சர் வந்து இவ்வளவு செய்தார் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் இன்றைக்கு உண்மையைச் சொல்கிறேன். *10* to the power of *10* மெஹா என்று சொல்வார்கள் அதற்கு மேலே ஒரு நம்பரே இல்லை. அந்த மாதிரி நீங்கள் மெஹா முதலமைச்சர் என்று நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

அதேமாதிரி தமிழ்நாட்டில் எல்லா மக்களும், பல்லே இல்லாத குழந்தையிலிருந்து என்மாதிரி *32* பற்கள் இருக்கும்



இளைஞர்களிலிருந்து, பல்லில்லாத முதியோர் வரை எல்லோரும் உங்களை அம்மா, அம்மா, அம்மா என்று பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நேற்றுவரைக்கும் நாங்கள் இந்த Minority language-ல் சித்தி, சித்தி என்று சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் நேற்று நீங்கள் தெலுங்கிலே Question Paper கொடுக்கிறோம்; தெலுங்கு அகாடெமியைப் பற்றி நாங்கள் கேபினட்டிலே பேசி நிர்ணயிக்கிறோம் என்று சொன்னது, நாங்கள்கூட நேற்றிலிருந்து அம்மா, அம்மா, என்று கண்டிப்பாக, Minority Language-காரர்கள் சொல்ல வேண்டும். நாங்கள் எதற்காக இந்தத் தெலுங்கு அகாடெமி வேண்டுமென்று கேட்கிறோம் என்றால், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் நேற்றுப் பேசியது ஆகட்டும், முன்னாளில் இருந்த எம்எல்ஏ-க்கள் எல்லாம் எதற்காகச் சொன்னார்கள்? சில officials செய்கிற தவறுகளுக்கு, அதாவது இந்த தெலுங்கு teachers, post போடாமல் விட்டுவிடுவது, இப்போது போலிஸ் துறையில் உங்கள் துறையிலே, *10* ஆயிரம் போலிஸ் போட்டீர்கள். அதில் தெலுங்கு மொழி படித்தவர்களுக்கு interview வருகிறது. ஆனால் இங்கே வந்தால், தமிழிலே எழுதச் சொல்கிறீர்கள். தெலுங்கு படித்தவர்கள் தமிழிலே எப்படி எழுதுவது? அவர்கள் தமிழில் எழுத கண்டிப்பாக வாய்ப்பில்லை. அதனால் அவர்கள் போலிசாக வருவதற்கு வாய்ப்பே கிடையாது. இப்போதுகூட *10* ஆயிரம் போலிஸ் நியமிப்பதற்கு நீங்கள் call for பண்ணியிருக்கிறீர்கள். இன்றைக்குக் கூட, தளி, ஓசூர் ஏரியாக்களில் உள்ளவர்களுக்கு நீங்கள் தெலுங்கு question paper கொடுங்கள்; அல்லது இரண்டு வருடம் time கொடுத்தால் நாங்கள் தமிழ் pass பண்ணிவிடுவோம். இதைக் கண்டிப்பாக நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் Prime Minister-ஆக இருந்தபோது—நீங்கள் *1991-96* வரை ஆட்சியில் இருந்தபோது—15% minority languages-களுக்கு Second official language Status கொடுக்கவேண்டுமென்று சொல்லி ஒரு ஆணை பிறப்பித்தார்கள். நீங்கள் *1994*-ல் அந்த ஜி.ஓ.-வைப் பாஸ் பண்ணினீர்கள். ஆனால் implement செய்யவில்லை. எங்கள் district *40%* தெலுங்கு பேசுபவர்கள் இருக்கிறார்கள். Second official language என்று எங்களுடைய district-ல் அறிவிக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, இந்த மானியக் கோரிக்கையின் மீது...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நலனைக் காக்கவேண்டுமென்கின்ற ஓர் உயர்ந்த மனப்பான்மையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சரித்திரம் படைக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே 1996ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த நிலையில், அன்றைக்கே ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கிற சிறுபான்மையினர்-linguistic minorities—அவர்களுடைய அந்த மொழி, ஆட்சிமொழியாக அன்றைக்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** நன்றி. அதேமாதிரி தெலுங்கு மொழி, கன்னடம், மலையாளம், இவற்றில் officials தவறு செய்யாமல் இருப்பதற்கு கர்நாடகாவிலும், பீகாரிலும் minority languages-களுக்கு அங்கு ஒரு Director-ஐ நியமித்திருக்கிறார்கள். அதேமாதிரி, தமிழ்நாட்டிலேகூட minority-களுக்கு Director-ஐ நியமித்துவிட்டால், எங்கள் மாவட்டத்தில் minority languages-களுக்கு எந்தவித பாதிப்பும் வராது. எனவே minority languages-களுக்கு ஒரு Director-ஐ நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*2003-2004*ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், இந்த அரசு கொண்டு வந்திருக்கும் சில திட்டங்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இதில் பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் தலைமையிலுள்ள மத்திய அரசின் திட்டங்கள், Integrated Housing Rural Programme for new houses, Upgradation of unserviceable kutcha houses, Innovative Stream for Rural Housing and Habitat Development for rural poor people with infrastructure facilities.

Pradhan Mantri Grammodaya Yojana — Rural Shelter — for creating basic amenities such as shelter, primary education, primary health, nutrition, drinking water and electrification in rural areas.

Another one, Sampoorna Grameen Rozgar Yojana — for providing employment opportunities to the rural poor along with food security through the creation of infrastructural facilities.



Pradhan Mantri Gram Sadak Yojana - This programme aims to provide a connectivity to all unconnected habitations. இந்தத் திட்டத்தில் கிராம வழிச் சாலைகள் தமிழகத்தில் சிறந்தவையாக செயல்படுகிறது என்று The National Quality Monitors for Government of India தெரிவித்திருப்பதற்கு நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Another one, Swarnjayanthi Gram Swarozgar Yojana — This is a holistic programme on self employment which aims at organising the rural poor into Self Help Groups, provide training for them, help them to get credit linkage with financial institutions and provide infrastructure and marketing support for the products they produce.

District Rural Development Agency Administration--to meet the administrative expenditure of the DRDAs and Restructured Central Rural Sanitation Programme for the construction of individual household latrines, women sanitary complexes, school toilets and Anganwadi toilets.

National Project on Bio-gas Development - This programme aims at promoting eco-friendly non-conventional energy sources with multiple benefits.

Human Resource Development for giving training to the elected representatives and officials. And also Urban Development, namely Nirmal Bharath Abhiyan Scheme, to construct sanitary complex in urban slum areas.

*பிற்பகல் 12-50*

Swarna Jayanthi Sahari Rozgar Yojana - This Scheme provides self-employment and wage employment to people below poverty line in the urban local bodies. National Slum Development Programme—the main objective of this Scheme is to provide basic amenities like roads, culverts, water supply, street lights, construction of community latrines, integrated sanitation and rain water harvesting in the slum areas.

இதுபோன்ற நல்ல திட்டங்களை, யாரும் செய்யாத அளவுக்கு நம்முடைய பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய மாநிலத்தில் நீங்கள் கொண்டு வந்திருக்கும் இந்த Member of Legislative Assembly--M.L.A.-- Fund-ல் 82 இலட்சம் ரூபாய் நீங்கள் கொடுக்கிறீர்கள். அதைப் பாராட்டுகிறோம். அந்த 82 இலட்சத்தில sani-tary complex-க்கு, B.C. Hostel-க்கு, Water-க்கு நீங்கள் ரூ. 50 இலட்சம்

எடுத்துக்கொண்டால் மீதமுள்ள 32 இலட்சத்திலே நாங்கள் தொகுதியில் ஒன்றும் development செய்ய முடியாது. முக்கியமாக இந்த sanitary complex திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வந்தது. எம்.ஜி.ஆர். வந்தபோது அது இருந்தது. இப்போதுகூட அந்த toilets இருக்கின்றன. MYRADA என்று ஒரு private scheme இருக்கிறது. அவர்களும் கட்டுகிறார்கள். இப்போது நீங்களும் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் இது waste scheme. யாரும் use செய்வதில்லை. Urban areas-லேதான், அது use ஆகிறது. இதைப்பற்றி எங்களுடைய பக்கத்து மாநிலமான கர்நாடக மாநிலத்திலே என்ன சொல்கிறார்கள் என்றால், இவையெல்லாம் Operation success; patient dead. Well tried but no use என்கிற மாதிரி சொல்கிறார்கள். நான் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. உண்மையாக, practical-ஆக, யதார்த்தமான நிலைமையை..... *(குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெண்களுக்குத் துப்புரவு வளாகங்கள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம், வெற்றிகரமாகத் தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் துப்புரவு வளாகங்கள், தமிழகத்திலுள்ள அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும், அதாவது 12,618 ஊராட்சிகளிலும் கட்டித் தரப்படுமென்று அறிவித்திருக்கிறோம். இரண்டாண்டு காலத்தில், இந்தத் திட்டம் முழுவதுமாக நிறைவுபெறும் என்று அறிவித்திருக்கிறோம். பல்வேறு கிராமங்களில், பல மாவட்டங்களில், பல தொகுதிகளில், பெண்கள் சுய உதவிக் குழுக்களே, இந்தத் துப்புரவு வளாகங்களைப் பராமரித்து வருகிறார்கள். அங்குள்ள பெண்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இந்தத் துப்புரவு வளாகங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போது இந்தத் திட்டம் வெற்றியடைந்ததைப் பார்த்து, ஆண்கள்கூட, எங்களுக்கும் இதுபோன்ற துப்புரவு வளாகங்களைக் கட்டிக் கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு உறுப்பினர், பெண்கள் இதைப் பயன்படுத்துவதில்லை என்று கூறுகிறார். ஒருவேளை, அவரது தொகுதியில், பெண்கள் இந்த வளாகங்களைப் பயன்படுத்தாமல் இருக்கலாம். அப்படியானால், மாண்புமிகு உறுப்பினர், அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லி, நல்ல அறிவுரைகளைச் சொல்லி, கட்டித் தரப்பட்ட வளாகங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கன்னியாகுமரி மாவட்டத்தில், முழுவதுமாக பெண்களுக்குத் தேவையான அனைத்து துப்புரவு வளாகங்களும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அது நிறைவுபெற்ற மாவட்டமாக இன்றைக்குத் திகழ்கிறது. ஆகவே அந்த மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரே கோரிக்கை வைத்ததன்பேரில், இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு, ஆண்களும் இதுபோன்ற துப்புரவு வளாகங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள்; பெண்களின் தேவையைப் பூர்த்தி செய்தாகிவிட்டது; அங்கே ஆண்களுக்கும் கட்டித் தரலாமா என்று கேட்டு, பிரத்தியேக அனுமதியைப் பெற்று, இப்போது ஆண்களுக்கும் அங்கே கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே operation success; patient dead என்பது, இந்தத் திட்டத்திற்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலான இடங்களில், மகளிர் மகிழ்ச்சியோடு இந்தப் புதிய வசதியைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் பயன்படுத்தவில்லை என்றால், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவரே எடுத்து, பெண்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே.வி. முரளிதரன்:** விளக்கத்திற்கு நன்றி. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரும், நானும் B.D.O. எல்லோரும் போய் எல்லா ஊர்களுக்கும், இந்தமாதிரி sanitary complexes கொண்டு வந்திருக்கிறார்கள்; இவற்றையெல்லாம் use செய்துகொள்ளலாம் என்று நாங்கள் எவ்வளவோ சொன்னோம். இங்கே urban developed area-விலே, 2 ரூபாய் தாமாகவே கொடுத்து, urine போகிறார்கள். அங்கே கையிலே 5 ரூபாய் கொடுத்தாலும்கூட, நாங்கள் போவதில்லை; எங்களுக்கு வேண்டாம்; அது தேவையில்லை என்று சொல்கிறார்கள். அதனால்தான் நாங்கள் சொல்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களே இது தேவையில்லை என்று சொல்கிறார்கள் என்று சொல்கிறார். இது தவறான கருத்து. இதுவரை, 6,406 துப்புரவு வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் 5,934 உபயோகத்தில் உள்ளன. தொடர்ந்து வறட்சி உள்ளதால், கட்டி முடிக்கப்பட்டதில், 170 வளாகங்களில் மட்டும் போதிய தண்ணீர் வசதி இல்லை. மொத்தம் 5 இலட்சத்து 70 ஆயிரத்து 806 குடும்பங்களில், மகளிரும், குழந்தைகளும் இதனால் பயனடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-55

**திரு. கே.வி. முரளிதரன்:** விளக்கத்திற்கு நன்றி. 82 இலட்ச ரூபாய் கொடுப்பதை வைத்து தொகுதியில் development செய்வதற்கு அது போதாது. எனவே ஒரு கோடி ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி நீங்கள் தருமபுரி மாவட்டத்திற்கு வந்தபோது, தளி, களி, புளி, கம்பளி என்று பேசினீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் நாங்கள் களியை மட்டும் சாப்பிட்டுவிட்டு இருக்க முடியாது. தளி தொகுதியில், ஒரூர் தொகுதியில் நாங்கள் சோறு சாப்பிட வேண்டுமென்றால் நீங்கள் ஒரு Check dam ஒன்றை தண்டரை அருகில் கட்டித் தரவேண்டும். அதேபோல் அஞ்செட்டி அருகில் தொட்டெல்லா என்ற இடத்திலே ஒரு check dam கட்டித் தரவேண்டும். அந்தமாதிரி நேற்று ஒரூர் சட்டமன்ற உறுப்பினர் சொல்லும்போது கெலவரப்பள்ளி Check dam ஒன்று தொரப்பள்ளி வரைக்கும் Channel நீண்டிருக்கிறது; அது ஏற்கெனவே, கார்கொண்டபள்ளி ஏரி வரைக்கும் வந்தது; ஆனால் funds இல்லாத காரணத்தால் அதை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதைக் கொஞ்சம் extension செய்தால் எல்லா ஏரிகளுக்கும் தண்ணீர் வரும். நீங்கள் கண்டிப்பாக அதை எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிப் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. எனது தொகுதியிலே, வனப் பகுதி நக்சலைட்டுகள் நிறைய பேர் இருக்கிறார்கள். 45 ஊரில் இப்போது நக்சலைட்டுகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் உங்கள் அரசு வந்தபின்பு, நக்சலைட்டுகளை ஊத்தங்கரையில் பிடித்திருக்கிறார்கள். இப்போது எங்கள் forest area கர்நாடக மாநிலம் மற்றும் ஆந்திரா மாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தால் நக்சலைட்டுகளை உருவாக்குகிறார்கள். எந்த மாதிரி? 4, 5 டைப்பில் இளைஞர்களை நக்சலைட்டுகளாக உருவாக்குகிறார்கள். எந்த மாதிரி என்று சொன்னால், தெலுங்கு மொழியில் நீங்கள் Teacher Post போடவில்லை; அதை வைத்து அவர்கள் பிரச்சினைகளை create பண்ணுகிறார்கள். அந்த மாதிரி அடிப்படை வசதிகள். இப்போது, கர்நாடகத்திலிருந்து ஒசூர் தொகுதிக்கு என்எச்7 போன்ற road-கள் எல்லாம் போடப்பட்டு, ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆனால் எங்கள் தளி தொகுதியில் 15 வருடங்களாக ஒரு highways road-கூட சரியாகப் போடவில்லை



இன்றைக்கு தளி தொகுதியிலிருந்து மைசூர்வரை போய்க்கொண்டிருந்த இரண்டு வண்டிகளைக்கூட நிறுத்திவிட்டார்கள், சாலை வசதி சரி இல்லை என்று சொல்லி. அதிலே, I.L.O. International Labour Organisation என்ற ஒரு துறை 15 வருடங்களுக்கு முன்னால் 4, 5 road-களை 60 கிலோ மீட்டருக்கு எடுத்துச் செய்தது. இப்போது அதை Highways Department-ம் எடுத்துக்கொள்ளவில்லை; யூனியனிலேயும் funds இல்லை என்று கூறுகிறார்கள். எம்.எல்.ஏ. funds-ல் 32 இலட்ச ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி நாங்கள் இதைச் செய்ய முடியும்? ஒரு கிலோ மீட்டருக்கு 8 இலட்ச ரூபாயில் நாங்கள் போட முடியவில்லை. கண்டிப்பாக நீங்கள் அந்த 5 road-ஐயும் எடுத்துச் செய்ய வேண்டும். இந்தமாதிரி road சரியில்லை, அது சரியில்லை என்று சொல்லி நக்சலைட்டுகளை உருவாக்குகிறார்கள்.

அதே மாதிரி வீரப்பன் gang அஞ்செட்டி ஏரியாவில் உள்ளது. அதற்குக்கூட முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே Low-voltage காரணமாக பிரச்சினை இருந்தது. அதுகுறித்து நிறைய முறை cut-motion கொடுத்தோம். அமைச்சரிடம் மனு கொடுத்தோம், கலெக்டரிடம் மனு கொடுத்தோம். 50 வருடங்களாக இருந்துவந்த 2 கோடி ரூபாய் Project முதல்வர் அம்மா அவர்கள் வந்த பின்னால்தான் கொடுத்தார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். Current இல்லாத சமயத்தில் அந்த ஊரில் உள்ள இளைஞர்களை உட்கார வைத்து உங்களுக்கு எல்லாம் அடிப்படை வசதிகள் இல்லை, நீங்கள் தெலுங்கு படித்தும் உங்களுக்கு Post போடவில்லை என்று சொல்லி பிரச்சினையை Create பண்ணி, நக்சலைட்டுகளை உருவாக்குகிறார்கள். இதுகுறித்து நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து இளைஞர்கள் நக்சலைட்டுகள் ஆகாமல் இருப்பதற்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும்.

தளி தொகுதியில் நிறைய அடிப்படை வசதிகள் வேண்டும். Thalli is the biggest constituency in Tamil Nadu. அதிலே யூனியனைப் பார்த்தால், compare செய்யும்போது population-இல் கன்னியாகுமரி மாவட்டத்தை குறைவுதான். ஆனால் Area-wise பெரியது. தொகுதிக்கான entrance அக்கொண்டபள்ளியிலிருந்து உரிகம் போக வேண்டுமென்றால் 100 கிலோ மீட்டர் போக வேண்டும், அந்த அளவிற்கு பெரிய தொகுதி அதிலே மலைப் பகுதி, tribal block, tribals நிறைய பேர் இருக்கிறார்கள் அங்கே, Central Government மூலமாக tribal block-ஆக வனப்

பகுதியில் 14 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதை tribal block-ஆக நீங்கள் announce பண்ணினால் நக்சலைட்டுகள் மற்றும் பிற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். கண்டிப்பாக நீங்கள் இதை ஏற்று, அஞ்செட்டி ஒன்றியத்தை எடுத்து அந்த 14 வனப் பகுதி பஞ்சாயத்துகளை develop செய்து தனியாக, யூனியனாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேன்கனிக்கோட்டை என்பது Taluk Headquarter. அங்கே Bus stand இல்லை. அதற்கு Bus Stand அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கெலமங்கலம் டவுனில் Bus Stand வேண்டும். TUFIDCO மூலமாக 23 இலட்சு ரூபாயிலே Complex கட்டி இருக்கிறார்கள். ஆனால் தார்ச்சாலை, drainage வசதி இல்லாத காரணத்தால் R.D.O. அவர்கள் Bus Stand கொடுப்பதற்கு Permission கொடுக்கவில்லை. அதற்கு 21 இலட்ச ரூபாயில், drainage வசதி, தார் ரோடு இல்லையென்றால் சிமெண்ட் ரோடு, drainage போட்டு, கெலமங்கலம் Bus Stand திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Hill Area Development Programme-ல் தளி தொகுதியைச் சேர்க்க வேண்டும். அதற்கு State Highways roads போடுவது சம்பந்தமாக அமைச்சரிடம் போனால், அமைச்சர் எப்போதும் 'தலைவா' என்று சொல்கிறார். அதையே நாங்கள் ஒரு பாராட்டாக நினைத்துக்கொள்கிறோம். 'செய்கிறேன் தலைவா' என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் செய்வது இல்லை. (சிரிப்பு) உங்களிடம், State Highways-ல் Funds இல்லாவிட்டால்கூட, Central Road Fund என்று Central Government-ல் ஒரு Scheme இருக்கிறது. மினிஸ்டர்கூட சொல்லியிருக்கிறார். State Government-லிருந்து Proposal ஒன்றும் வரவில்லை என்று Central Government-ன் C.R.F. - Central Road Fund-ன்கீழ் அதைச் சேர்க்க நீங்கள் பரிந்துரை செய்தால் எங்கள் Thalli Constituency-ஐ develop செய்துகொள்ளலாம்.

பிற்பகல் 1-00

எனவே நீங்கள் Central Road Fund-லிருந்து பணம் ஒதுக்க பரிந்துரை செய்தால் எங்கள் தளி தொகுதியை develop பண்ணிக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது அவரது தொகுதியில் நக்சலைட்டுகள் உருவாவதற்கான காரணங்களைப் பற்றி இங்கே தெரிவித்தார். ஏற்கெனவே இது அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறது. அரசு இதில் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரையும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரையும் நான் இங்கே வரவழைத்து, ஒரு நாள் முழுவதும் அவர்களுடன் அமர்ந்து, தலைமைச் செயலாளர், Development Commissioner மற்றும் காவல் துறை இயக்குநர் போன்ற உயர் அதிகாரிகளையும் அமரவைத்து, தருமபுரி மாவட்டத்தில் இந்த நக்சலைட்டுகள் உருவாவதை எப்படித் தடுப்பது, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை எப்படி ஒடுக்குவது, அங்கே ஏழ்மையின் காரணமாக இளைஞர்கள் குறிப்பாக படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்கள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் எந்தவிதமான வேலைவாய்ப்பும் இன்றி, முன்னேற்றத்திற்கான வாய்ப்பும் இன்றி இருக்கிற இளைஞர்கள், இந்த நக்சலைட்டுகளால் மனம் மாறி அவர்களோடு போய்ச் சேருவதை எப்படித் தடுப்பது, இதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது பற்றி எல்லாம் ஒரு நாள் முழுவதும் விவாதித்து தருமபுரி மாவட்டத்திற்கு என்றே ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி அதைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இதில் ஒரு அம்சம்தான், இளைஞர்களுக்காக விளையாட்டு மையங்களை அமைப்பதும், இளைஞர்களுக்காக சுய உதவிக் குழுக்களை அமைப்பதும் ஆகும். நான் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்தேன். மகளிருக்கான சுய உதவிக் குழுக்களை அமைப்பதைப் போலவே ஆண்களுக்காகவும் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தபோது, ஏற்கெனவே இதை தருமபுரி மாவட்டத்தில் செய்து வருகிறோம், பிற மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என்று தெரிவித்தேன்.

மேலும் கிராமப்புறங்களில், மக்களுக்கு பல குறைகள் இருக்கின்றன. அவர்களுக்குச் சட்ட உதவியும் தேவைப்படுகிறது. அவர்கள் நீதிமன்றங்களை அணுகுவதில் சில சிரமங்களும் இருக்கின்றன. அத்தகைய நேரத்தில், அவர்களுக்கு உள்ளூர் பிரச்சினைகள் இருக்கின்றபோது, நக்சலைட்டுகள் அங்கே சென்று

அவர்களாக ஒரு போலி நீதிமன்றத்தைப்போல் ஒன்றை நடத்தி அவர்களாக அங்கே நீதி வழங்குவதைத் தடுக்கவே Lok Adalat போன்றவற்றை அங்கே நடத்த வேண்டும்; அதில் ரெவின்யூ அலுவலகத்திலிருந்து ஒருவர், மாவட்ட ஆட்சித் தலைவர் சார்பில் ஒருவர், காவல் துறையிலிருந்து ஒருவர், ஆகிய ஒரு குழுவினர் அங்கே அமர்ந்து மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும் என்பது போன்ற சிறப்புத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறோம்.

மேலும் இப்போது புதிய தொழில்களை உருவாக்குவதற்கும்--பெரிய தொழில்கள் மட்டும் அல்ல, நடுத்தரத் தொழில்கள், சிறுதொழில்கள் ஆகியவற்றையெல்லாம் ஒசூர் பகுதியிலேயே செய்து வருகிறார்கள். ஆகவே இனிமேல் அதைத் தவிர்த்து நான் டிட்கோவிற்கும் ஆணையிட்டு இருக்கிறேன். சிட்கோவிற்கும் ஆணையிட்டு இருக்கிறேன். தொழில் துறைக்கு ஒட்டுமொத்தமாக ஆணையிட்டு இருக்கிறேன். இனிமேல் தருமபுரி மாவட்டத்தில் அதிகப்படியான புதிய தொழில்களைத் துவங்கவேண்டும். அதை அந்த மாவட்டம் முழுவதும் பரவலாக, குறிப்பாக, மிகவும் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கவேண்டும். எல்லாவற்றையும் ஒசூருக்கே கொண்டு செல்லக் கூடாது என்று கூறியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பிரச்சினைகள் ஏற்கெனவே அரசின் கவனத்தில் இருக்கின்றன. அரசு தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கையெல்லாம் தளி தொகுதியில் இன்னும் அதிகமாகச் செயல்படுத்த நான் உத்தரவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பின்தங்கிய, மற்றுமுள்ள சூழ்நிலையிலே நெருக்கடியாக இருக்கக்கூடிய மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தை அறிவிப்பதாக இங்கே விளக்கி இருக்கிறார்கள். இப்படி நல்ல திட்டம் என்று சொன்னால் நாங்கள் அதை வரவேற்கிறோம். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. அதேநேரத்திலே பின்தங்கிய மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்க இருக்கிறீர்கள்? ஒதுக்கப் போகிறீர்கள்? அதைப்போலவே அந்த மாவட்டத்திலே கடுமையான குடிநீர்ப் பஞ்சம் எல்லாம் அதிகமாக இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சீக்கிரம் முடியுங்கள். கேள்வி கேட்கிற மாதிரி கேட்டீர்கள் என்றால் எப்படி? நக்சலைட்டுகள் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதுதான் எவ்வளவு ஒதுக்கப் போகிறார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் தனியாகக் கேளுங்கள். முரளிதரன் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பைச் செய்தார்கள், தருமபுரி மாவட்டம் சம்பந்தமாக. நல்ல அறிவிப்பு. இதிலே தீவிரவாதத்திற்கு இடம் அளிக்காத வகையிலே, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்கக்கூடிய வகையிலே, சமூகத்தில் நலிந்து இருக்கிற மக்களின் முன்னேற்றத்திற்கான முயற்சியாக அறிவிக்கப்பட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன்.

இதேபோல தென் மாவட்டங்களிலே ஜாதிய மோதல், சமூக மோதல்கள் இருப்பதைக் கருத்திலே கொண்டு சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன—

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜாதிய மோதல்கள் ஒன்றும் கிடையாது. இப்போது ஒன்றுமே கிடையாது அங்கே. நாடு நன்றாக இருக்கிறது. கெடுத்துவிடாதீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் சொல்லிவிடுகிறேன். முழுமையாக சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முரளிதரன் சொன்ன அந்தக் கருத்திற்கு விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். முரளிதரன் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அதையெல்லாம் தனியாகக் கேட்கலாம். சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திற்கு Special Schemes allot பண்ணியதற்கு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், உட்காருங்கள், உட்காருங்கள். சம்பந்தம் இல்லாதது.

**திரு. கே.வி. முரளிதரன்:** Backward-ஆன தளி தொகுதிக்கு. அந்த மாவட்டத்திலே Backward-ஆக இருக்கிற Constituency-க்கு Industries கொடுக்கிறோம் என்று சொன்னதற்கு மிகவும் நன்றி. இதே ஆண்டு பட்ஜெட் கூட்டம் நடக்கும்போது எங்கள் தொகுதியில் தளி யூனியன் சேர்மன், தி.மு.க. வைச் சேர்ந்தவர், பட்டப் பகலில் நக்சலைட்டுகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அவர் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மூன்று பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அவருக்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையைக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி தேன்கனிக்கோட்டை டவுனுக்கும், கெலமங்கலம் டவுனுக்கும் நிரந்தரக் குடிநீர் வசதிக்காக தண்டரை ஓடை அருகே ஒரு Check Dam கட்டி, தேன்கனிக்கோட்டை டவுனுக்கும், கெலமங்கலம் டவுனுக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஒசூர் தொகுதியில் இராஜாஜி பிறந்த ஊரிலே ஒரு ஆறு இருக்கிறது. 50 வருடங்கள் ஆகியும் இராஜாஜி பிறந்த ஊருக்குக்கூட பாலம் கட்டாமல் இருக்கிறார்கள். நீங்கள் கண்டிப்பாக அதை கவனத்தில்கொண்டு, பாத்துக்கோட்டையிலும், தொரப்பள்ளியிலும் அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த பேரவைத் தலைவருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**•திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'



என்ற குறளுக்கேற்ப, எந்த ஒரு செயலிலும் காலம் தாழ்த்தாத தன்மை, சிறந்த அறிவுக்கூர்மை, எந்த ஒரு சக்தியையும் கண்டு பயப்படாமல் எதிர்நோக்கி துணிந்து எதிர்கொள்ளும் வல்லமை கொண்ட அத்தனை இயல்புகளையும் உடைய, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், பிறருக்கு வழிகாட்டக்கூடிய மாபெரும் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் பொற்பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன்.

ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், உள்ளாட்சி ஆகிய மூன்றும் அரசின் முதுகெலும்பு போன்று செயல்படக்கூடிய மூத்த முதன்மைத் துறைகள்.

கிராமப்புற மக்களின் சமூக வளர்ச்சிக்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஊரக வளர்ச்சித் துறை அரிய பணியாற்றுகிறது. ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார, சமூக மேம்பாட்டிற்காக வழிவகை செய்வது உள்ளாட்சித் துறை.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற ஏழை மக்களின் வேலை வாய்ப்பினை உறுதி செய்து முன்னேற்றுகிறது. கிராமப்புறங்களில் நீர் நிலைகளை அதிகப்படுத்துவதன் பொருட்டு குளங்கள் வெட்டுதல், கதிர் அடிக்கும் களங்கள் அமைத்தல் போன்ற அரும்பெரும் பணிகளைச் செய்து வருகிறது.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிராமப்புறப் பெண்களின் வளர்ச்சிக்காக சிறப்புத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் திட்டச் செயல்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 'மேலாண்மை வளர்ச்சி மைய' மதிப்பீட்டின்படி தமிழகம் இந்தியாவின் முன்னோடி முதன் மாநிலமாக—மாண்புமிகு அம்மாவின் இலட்சியத்தின் ஓர் மைல் கல்—தமிழகம் முதலிடத்தை நோக்கி சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்று.

முழுச் சுகாதார இயக்கம். கிராமப்புற ஏழை எளிய மகளிரின் சுத்தம், சுகாதாரம் பேணிக் காப்பதற்காக 2003-2004 ஆம் நிதி ஆண்டில் கிராமச் சுகாதார இயக்கம் அமைக்கப்பட்டது. மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் 2003-2004 ஆம் ஆண்டில் கட்ட ரூ.104.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலர்களுக்குச் சொந்தக் கட்டடங்கள். சுத்தம் சுகம் தரும் என்பது பழமொழி. அப்பழமொழிக்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கும் எதிலும் புரட்சி செய்து தனக்கென தனி முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறப் பெண்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருப்பதற்கு சுகாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற நீர் நிலைகளைப் புனரமைத்து நிலத்தடி நீர் ஏற்றம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டக்கூடிய குடியிருப்புகளில் மழை நீர் சேகரிப்பு மையம். கிராமப்புற ஏரி, குளங்கள், தூர்வாரி செப்பனிட்டு, நீர் ஆதாரம் பெருக்க எடுத்துள்ள முயற்சிகள் எண்ணில் அடங்கா.

பிற்பகல் 1-10

ஊரக சுய உதவிக் குழுக்கள் வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையில் 'தொழில் தொகுப்பு' போன்ற பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்யும் எண்ணற்ற திட்டங்கள்.

இந்த மாமன்றத்தில் வழங்கப்படுகின்ற மக்களின் வரிப்பணம் மக்களுக்கே சென்று சேரவேண்டுமென்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் முழு உறுதியுடன் உள்ளார்கள். எங்கள் தலைவியின் தேர்விலே எப்போதும் தவறு இருக்காது. அது இங்குள்ள சிலருக்குத் தெரியாவிட்டாலும், இந்தியத் திருநாட்டில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

சிங்காரச் சென்னை என்று ஏலம் விட்டவர்கள் எங்கே? அவர்கள் கொண்டு வந்த விஞ்ஞான வழி ஊழல் திட்டங்கள். தனியாருக்குத் தாரை வார்த்த துப்புரவுத் திட்டத்தில் பல கோடி மோசடி. 'செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம்' என்றார்கள்; சிங்காரச் சென்னை ஆக்குவோம் என்றார்கள். சீரழிந்துவிட்ட சென்னையை உருவாக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பசுமைப் புரட்சி செய்ய ரூ.5 கோடி செலவில் பசுமை சென்னை உருவாக்கம், இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட புனிதத் தலைவியே, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலே; பெண்ணாலும் இந்த மண்ணை ஆளமுடியும் என்று புதிய சகாப்தம் படைத்த புனித மகாசக்தியே; தங்கள் பாதம் பட்டால் கழனி செழிக்கும்; பார்வை பட்டால் சோலை மலரும்.



எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள 29 கிராம ஊராட்சிகளில் உள்ள மக்கள் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பயன்பெற, ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள, சுமார் 323 ஏக்கர் பரப்பளவில் உள்ள மிகப் பெரிய குளம்தான் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியின் பெரிய நீர் ஆதாரம். அதனை தூர் வாரி சுத்தப்படுத்தி மதகு, மற்றும் கலங்கல்களை பழுது நீக்கி 29 கிராம ஊராட்சி மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்த்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்யுமாறு அன்போடு விழைகிறேன்.

திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் ரூ7870 கோடி செலவில் 400 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீருக்காக 'மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்' அறிவித்துள்ளதை பெரிதும் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

விருதுநகர் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் சிவகாசி நகராட்சி, திருத்தங்கல் நகரப் பேரூராட்சி பயன்பெறும் வகையில் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. பின்தங்கிய எனது தொகுதியான ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, மம்சாபுரம், வத்திராயிருப்பு, S.கொடிக்குளம், W.புதுப்பட்டி, சுந்தரபாண்டியம் என ஐந்து பேரூராட்சிகளும், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஒன்றியங்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் 29 கிராம ஊராட்சிகளும், வத்திராயிருப்பு ஒன்றியத்தில் 27 கிராம ஊராட்சிகளும் அடங்கியுள்ளன. ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகை சுமார் 3.50 இலட்சமாக உள்ளது. கங்கை நதிபோல் கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு' அதிக நிதி ஒதுக்கீடு செய்து எனது தொகுதியில் தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுப்படுத்தித் தந்து உதவிடுமாறு தங்கள் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா தொகுதியான ஆண்டிப்பட்டியிலிருந்து எனது தொகுதிக்குட்பட்ட வத்திராயிருப்பு பேரூராட்சிப் பகுதிக்கு இணைப்புச் சாலைப் பணிக்காக ரூ.4.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாக வத்திராயிருப்பு-ஆண்டிப்பட்டி இணைப்புச் சாலை சுமார் 2 கி.மீ. தூரம் விடுபட்டு தற்போது இருவழிப் பாதைக்கென ரூ.96 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனை ஒதுக்கீடு செய்தால்தான் ஆண்டிப்பட்டி - வத்திராயிருப்பு வழியாக தேனி-கம்பம்-பெரியகுளம் செல்ல, மதுரையைச் சுற்றி 50 கி.மீ. தூரம் சென்று

வரக்கூடிய சூழ்நிலை வராது. எனவே தென் மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று அந்த 2 கி.மீ. இணைப்புச் சாலைக்கு ரூ.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு தங்களை தாள் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ஊராட்சிப் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க தற்போது 200 அடி மட்டுமே அனுமதித்து அரசு ஆணை உள்ளது. கடுமையான வறட்சியின் காரணமாக 200 அடியில் தற்போது குடிநீர் கிடைப்பதில்லை. எனவே ஆழ்துளைக் கிணறு 300 அடி வரை அமைத்து குடிநீர் எடுத்திட ஆவன செய்யுமாறும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கிடுமாறும் தங்கள் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள 'பிளவக்கல்' அணையிலிருந்து வரக்கூடிய நீர்வரத்துப் பிரிவுகளில் 'சமரணை' என்ற கால்வாய்ப் பகுதியில் கால்வாய் தெரியாமல் மண்மேடாக காட்சியளிக்கிறது. இந்த நீர்வரத்துப் பிரிவு 'சமரணை' மூலம் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பும் 5,000 விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். எனவே மாண்புமிகு அம்மா அவர்கள் 'சமரணை' பகுதியைச் செப்பனிட்டு தூர் வாரி, நீர்வரத்தினை தங்குதடையின்றி வரவழைத்துத் தருமாறு தங்கள் திருப்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட வத்திராயிருப்பு பேரூராட்சியில் உள்ள மக்கள் சுமார் 10,000 பேர் பயன்பெறத்தக்க வகையில் தாணிப்பாறையிலிருந்து ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து வத்திராயிருப்பு பேரூராட்சியின் தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட உதவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெஞ்சமும் கொண்ட அம்மா அவர்கள், பாரதி கண்ட புதுமைப் பெண்ணே, உங்கள் பொற்பாதம் வணங்கி, எனது வத்திராயிருப்பு ஒன்றியத்தில் உள்ள கட்டையதேவன்பட்டி என்ற கிராமத்தைச் சார்ந்த திரு. ஜெயக்குமார் என்பவர் இந்திய இராணுவத்தில் ஸ்ரீநகரில் பணிபுரிந்து வந்தபோது 2-3-2003 அன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் அவர் மரணம் அடைந்தார். அவரின் இறுதிச் சடங்கில் மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு அதிகாரிகள் வந்து கலந்துகொண்டனர். மிகவும் ஏழ்மையான அக்குடும்பத்திற்கு எந்த நிதி உதவியும் கிடைக்கப்பெறவில்லை. எனவே மாண்புமிகு அம்மா அவர்கள்



கருணை உள்ளம் கொண்டு அக்குடும்பத்திற்கு நிதி உதவி கிடைக்க உதவிடுமாறு தங்கள் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலம் தழுவிய நெசவாளர் பிரச்சினையை தங்கத் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்கள் திறம்படச் செயல்பட்டு இருண்ட நெசவாளர் குடும்பங்களில் ஒளிவிளக்கேற்றி இன்றும் என்றும் தன்னிகரில்லாப் புகழ் பெற்று விளங்குகிறார். நெசவாளர்கள் சார்பாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார நன்றிக்கூறக் கடமைப்பட்டுள்ளேன். இதனை அரசியல் ஆக்கி அதன்மூலம் சுயலாபம் தேட நினைத்த அரசியல்வாதிகள் முகத்திரையைக் கிழித்து, வீரத் திருமகள் வெற்றி உலா வருகிறார். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சிரம் தாழ்த்தி மீண்டும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 1-15

நாட்டின் அரசியலில் அம்மா அவர்களைக் காண்கிறோம். தாயினை மறக்கும் பிள்ளை தாயகம் எங்கும் இல்லை. தூய நின் உள்ளம் எங்கள் தோளினைக் காக்கும். மக்கள் நல்வாழ்க்கை வாழும் வரை நின்பெயர் வாழும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் நிர்வாகம், குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மக்களினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, ஒரு அரசுக்கு நல்ல பெயரினை ஈட்டித் தருகிற துறை என்று சொன்னால், அது இந்த உள்ளாட்சித் துறைதான். இதன் மூலமாகத்தான் மக்களுடைய தேவைகளாகிய குடிநீர், சாலை வசதிகள் போன்றவற்றை எல்லாம் செய்து தருகின்ற ஒரு துறையாகவும், கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்ற ஒரு துறையாகவும் இருக்கிற

காரணத்தினால் இந்தத் துறையினுடைய செயல்பாடுதான் ஒரு அரசுக்கு உரைகல்லாக அமைகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே கொள்கைக் குறிப்புகளைப் பார்க்கிறபோது இந்தத் துறை மிகச் சிறப்பாக, மிகத் திறமையாகச் செயல்பட்டு இருக்கிறது என்பது மிகத் தெளிவாக விளங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதனுடைய பொறுப்பை ஏற்றிருக்கின்ற அமைச்சர் அவர்களும், அதுபோல இந்தத் துறையினுடைய அதிகாரிகள் அத்தனை பேர்களும் மிகத் திறமையாகச் செயல்பட்டு மத்திய அரசின் சார்பிலே, மத்திய அரசினுடைய நிதியினைப் பெற்றுச் செயல்படுகின்ற அனைத்துத் துறைகளிலும் அவர்கள் விதித்த இலக்கைக் காட்டிலும்—மிகக் கூடுதலாக நிதியினைப் பெறுகின்ற அளவிற்கு, சம்பூர்ணா கிராமத் திட்டமாக இருந்தாலும் சரி, பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்டமாக இருந்தாலும் சரி, ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, பாரதப் பிரதமர் நிதியிலிருந்து கிராமச் சாலைகளை அமைக்கின்ற திட்டமாக இருந்தாலும் சரி, அத்தனை திட்டங்களுக்கும் அவர்கள் அளித்த இலக்கைக் காட்டிலும்—மிக அதிகமான நிதியை மைய அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தத் துறையினுடைய இயக்கம் இந்தத் தமிழகத்திலே மிகச் சீராக செயல்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலும் இருந்திருக்கிறது என்பதன் மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட்டதோடு, பிரதம அமைச்சருடைய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக அமைக்கப்பட்ட சாலைகளை எல்லாம் பார்வையிடுவதற்கு மத்திய அரசிடமிருந்து ஒரு குழு இங்கே வந்த நேரத்திலே, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்ற சாலைகளினுடைய தரம் மிக நன்றாகவும், மத்திய அரசு வழங்கிய நிதியை முறையாகச் செலவு செய்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற செய்தியை எண்ணிப் பார்க்கின்றபோது அது தமிழகத்திற்கு ஒரு பெருமையைத் தேடித் தந்திருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியை நம்முடைய உள்ளத்திலே ஏற்படுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது ஒரு சின்ன சிக்கலும் இருக்கிறது. வனத் துறைப் பகுதிகள் அதிலே குறுக்கிடுகின்ற நேரத்திலே அந்த வனத் துறையினுடைய—அங்கீகாரத்தைப் பெற முடியாத



நிலையில், சில திட்டங்கள், அதுவும் குறிப்பாக நமது முதலமைச்சர் தொகுதியாகிய ஆண்டிப்பட்டி தொகுதியில்கூட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே அந்த வனத் துறையினுடைய—அங்கீகாரம் பெறுவதிலே சில சிரமங்கள் இருக்கின்றன. இதிலே முதலமைச்சர் அவர்கள் கவனத்தை எடுத்துக்கொண்டு அப்படிப்பட்ட சிக்கலான இடங்களுக்கு எல்லாம் வனத் துறையின் அனுமதியைப் பெற்று அந்தச் சாலைகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்திற்கு தேனி மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொகுதியில் இலவன்கோவில், காமராஜபுரம் ஆகிய பகுதிகளில் வனத் துறையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக அந்தச் சாலைத் திட்டப் பணிகள் துரிதமாக நடத்தப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. பல்வேறு தொகுதிகளிலும் இப்படி ஒரு நிலைமை இருக்குமேயானால் அதையும் இந்த அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஊராட்சிப் பகுதிகள், 3 அடுக்கு முறையிலே ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் என்று செயல்பட்டாலும்கூட ஒவ்வொன்றிற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமல், கிராம ஊராட்சிகளினுடைய நிலைப்பாட்டை ஊராட்சி ஒன்றியங்கள் அறிந்துகொள்ள முடிவதில்லை. அதுபோல ஊராட்சி ஒன்றியத்தினுடைய செயல்பாடுகளை மாவட்ட ஊராட்சிகள் அறிந்துகொள்ள முடியவில்லை. மாவட்ட ஊராட்சிகளுடைய செயல் திட்டங்களை நம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களே அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு இந்த 3 அடுக்கு முறையும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாத நிலையில் இருக்கிறது. கடந்த காலங்களில் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்து அதுபோல ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் என்ற ஒரு அமைப்பு இருந்தது. அதிலே நாடாளுமன்ற,

சட்டமன்ற, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துகளை மாவட்ட அளவிலே அவர்கள் தீட்டுகின்ற திட்டங்களுக்குச் செயல்வடிவங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி முடிவு எடுப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்தது. இப்போது அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களே இல்லை என்கிற நிலையிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மாவட்டங்களிலே நடக்கின்ற பணிகளிலே பங்குகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இதை இந்த அரசு கவனத்திலே கொண்டு மாவட்ட அளவிலே வளர்ச்சி மன்றக் கூட்டங்களை உருவாக்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அது மிக நன்றாக இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு நேரடியாக மக்கள் வாக்களிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதுபோல மற்ற அமைப்புகளுக்கு எல்லாம்—நகராட்சி மன்றங்களுக்கும், மாநகராட்சிகள், ஊராட்சிகளுக்கு—நேரடியாக வாக்குகளைப் பெற்று அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஓரளவிற்குச் சிரமமில்லாத சூழ்நிலை. அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது என்ற ஒரு பாதுகாப்பு இருக்கிறது. அதுபோல ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் கடந்த காலங்களில் மக்கள், ஓட்டு மூலமாக அவர்களை தேர்வு செய்கின்ற ஒரு நல்ல நிலை இருந்தது. ஆனால் இப்போது அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள் மூலமாகத் தேர்வு செய்கின்ற-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு two-tier system தான் இருந்தது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபடி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்கின்ற முறை இருந்தது. ஆனால் பின்னர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது பாராளுமன்றத்தில் 73rd மற்றும் 74th amendments-களை, பஞ்சாயத்து ராஜ் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தார்; Constitutional amendments-களைக் கொண்டு வந்தார். அதனால்தான் இந்த three-tier system, 3 அடுக்கு முறை ஏற்படுத்தப்பட்டது. அப்போதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த 3 அடுக்கு முறைக்கு தன்னுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால் நாடாளுமன்றத்தில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் நாங்கள் வேறு ஒன்றும் செய்ய



முடியவில்லை. இப்போதும் ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமானால் நாடாளுமன்றத்தில்தான் கொண்டு வர வேண்டும். அதனை தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திக் கொண்டே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இப்போது இருக்கிற நடைமுறையில் மாநில அரசு எதுவுமே செய்ய முடியாது. இது மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட விஷயம் அல்ல. இப்போது இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமானால் அதை நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம்தான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

**திரு. லா. சந்தானம்:** ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நேரடியாக மக்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுடைய செயல்திறன் சற்று அதிகமாக இருப்பதற்கு வாய்ப்பாக இருக்குமென்கிற காரணத்தினால்தான்—ஏனென்றால், அந்த ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களை அரவணைத்து அவர்களிடத்திலிருந்து அவர்கள் சில திட்டங்களைச் செய்கின்ற நேரத்திலே, பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான்— அதை மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே கடுமையான வறட்சி நிலவுகின்ற காரணத்தினால், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஓரளவிற்கு அரசு நல்ல முயற்சிகளை மேற்கொண்டு எல்லா இடங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது மத்திய அரசின் சார்பிலேகூட சுவஜல்தாரா என்ற அந்தத் திட்டத்தின் மூலமாக—எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குகின்ற ஒரு திட்டம்; அந்தத் திட்டத்திலே—மத்திய அரசு 90 சதவீதம் கிராமக் குடிநீருக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். 10 சதவீதத்தை அந்தக் கிராமப்புற மக்கள் தங்களுடைய பங்குத் தொகையாக செலுத்த வேண்டுமென்கிற திட்டம் அதிலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் அந்த 10 சதவீதம் செலுத்துவதற்கு இயலாத நிலையில்...

[2003 ஏப்ரல் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மூலமாக அனைத்து ஊரகப் பகுதிகளுக்கும் முழுமையாக குடிநீர் வழங்க வேண்டுமென்று சுவஜல்தாரா என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அந்தத் திட்டத்தில் 90 சதவீதம் grant-ஆக கொடுக்கப்படுகின்றது. ஆதிதிராவிடர் பகுதிகளுக்கு 95 சதவீதம்; 5 சதவீதம்தான் பொதுமக்களுடைய பங்களிப்புத் தொகை வேண்டுமென்ற அடிப்படையில் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. முழுமையாக அவ்வளவும் grant-ஆக கொடுத்தால் அதில் பொது மக்களுடைய ஈடுபாடு அந்த ஊராட்சிப் பகுதியிலே அந்தக் குடிநீருக்கு வராது; அந்த ஈடுபாடு இருக்காது முழுமையாக grant-ஆக கொடுத்தால். அந்த ஒரு காரணத்தினால், பொதுமக்களுடைய பங்களிப்பு இருந்தால்தான் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு, முறையாகப் பயன்படுத்துவார்கள், முறையாகக் கையாளுவார்கள், அந்தத் திட்டம் முழுமையாக வெற்றிகரமாக அமையும் என்ற அடிப்படையிலே நமது தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக முழுமையாக அத்தனை கிராமப் பகுதிகளுக்கும் சுவஜல்தாரா திட்டம் உடனடியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும், மத்திய அரசின் மூலமாக எவ்வளவு grant கிடைக்கிறதோ அதிகப்படியான பணத்தைப் பெற வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் பங்களிப்பு முழுமையாகத் தேவை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் லா. சந்தானம் அவர்களும் இரண்டு தடவை ஏற்கெனவே சட்டமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். பொதுமக்கள் பங்களிப்பு இல்லை, வறட்சியின் காரணமாக அதை நிராகரிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பொதுமக்கள் பங்களிப்பு இருந்தால்தான் அந்தத் திட்டத்தை முழுமையாக அந்த மக்களும் "எங்களுக்காக அந்தத் திட்டம்", "எங்கள் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டம்" என்ற அடிப்படையில் அவர்கள் பராமரிக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் கொண்டு வந்த திட்டம் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.



2003 ஏப்ரல் 29]

**•செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். அதாவது மத்திய அரசாங்கம் 10 சதவீத நிதியைக் கொடுக்க முடியாமல் ஒன்றும் இருக்காது. அந்த 10 சதவீதம் கொடுக்காமல் இருப்பதினுடைய நோக்கமே எதிர்காலத்தில் குடிநீரை நீங்களே தேடிக் கொள்ள வேண்டும், நீங்களே செய்து கொள்ள வேண்டும் என்ற கொள்கை அதற்குள் இருக்கிறது என்று நான் பார்க்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதுதான். கிராமப்புற மக்களுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒவ்வொன்றுக்கும் உள்நோக்கம் சொல்ல வேண்டாம். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுடைய பங்களிப்பு வேண்டும் என்பது ஒரு நியாயமான எண்ணம்தான். இருந்தாலும்கூட இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் சாதாரணமாக 10 ஆயிரம் ரூபாய்க்கு பங்கீடு கொடுப்பது என்றால் அதை இலகுவாக கொடுத்துவிடலாம். ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என்பது ஏறக்குறைய 10 இலட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய பங்குத் தொகை என்பது மிகப் பெரிய தொகையாக இருக்கிறது என்கிற காரணத்தினால்தான் அப்படிப்பட்ட திட்டங்களுக்கு கிராமப்புறங்களிலே ஏறக்குறைய அந்த 10 சதவீதம் என்பது 10 ஆயிரம், ஒரு இலட்சம் என்று கட்டுகின்ற ஒரு நிலை இருக்க முடியாது. சிறிய திட்டங்களாக இருந்தால், ஒரு ஆயிரம், இரண்டாயிரம் *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்களே, மாலையிலும் சில மணித்துளிகள் எடுத்துக் கொண்டு பேச்சை நிறைவு செய்து விடுங்கள்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003—2004 -ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம்—தொடர்ச்சி. திரு. லா. சந்தானம். ஐந்து மணித்துளிகள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே தாகத்தைத் தீர்க்கின்ற தண்ணீரைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, தாகம் அதிகமுள்ள நேரத்திலே இதைப் பேச வேண்டாம் என்கின்ற முறையிலே ஒத்திவைத்துவிட்டு, சற்று தாகம் தணிந்த பிறகு, மாலை வேளையிலே பேசட்டும் என்கின்ற நோக்கத்தோடு இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறீர்கள். மாலையிலே பேச வாய்ப்பு கொடுத்ததனால் நமது பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் என்னிடத்திலே வந்திருக்கின்றன. மேலும் ஐந்து மணித்துளிகள் என்பதை சற்று நீட்டித்துத் தரவேண்டும் என்று சொல்லி, தங்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்தரை மணித்துளிகளாக வைத்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

**திரு. லா. சந்தானம்:** இந்தச் சமுதாயத்திலே எப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள், மேல் உள்ளவர்கள் என்கிற நிலை இருக்கிறதோ அதைப்போல இந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் சிற்றூராட்சிகள் அனைத்திலுமே வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அமைப்புகளும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள ஒன்றியங்கள், சிற்றூராட்சிகள், நகராட்சிகள் போன்றவை எல்லாம் இருக்கிற காரணத்தால், நலிவுற்ற நகராட்சிகள், பேரூராட்சிகள், சிற்றூராட்சிகளுக்கு அரசு ஏதாவது ஒரு தனித் திட்டத்தின் மூலமாக அவர்களுக்கும் ஏற்படுகின்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுக்க வேண்டும். சில ஊராட்சிகளிலே_



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் இந்தப் பேரூராட்சிகள்—டவுன் பஞ்சாயத்துகள் தான் மிகவும் நலிவுற்ற நிலையில் இருக்கின்றன. பேரூராட்சிகள் என்று இருப்பதால் அவை நகராட்சிக்குரிய நிதியையும் பெற முடியவில்லை. ஊராட்சிகள்--பஞ்சாயத்துகள்—பெறுகின்ற நிதியையும் பெற முடியவில்லை. ஆகவே இந்த அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து, இந்தப் பேரூராட்சி என்பதையே இல்லாமல் செய்துவிடலாம்; கொஞ்சம் பெரிதாக உள்ளவற்றை 'முனிசிபாலிட்டி' என்று, நகராட்சி என்று up-grade செய்யலாம் என்றும், சிறியதாக உள்ளவற்றை பஞ்சாயத்து என்று, ஊராட்சி என்று down-grade செய்யலாம் என்றும் முடிவு எடுத்தோம். ஆனால் அதைச் செய்வதற்குள் de-limitation exercise-ஐ மத்திய அரசு தொடங்கி விட்டது. ஆகவே, அது நடைமுறையில் இருக்கின்றவரை, அந்தப் பணி நடைபெறுகின்றவரை, இதைச் செய்ய முடியாது. இந்த de-limitation முடிந்தவுடன் இந்த நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. நானும் இதைத்தான் குறிப்பிடுவதற்கு இருந்தேன். பேரூராட்சிகள் பல மிக மோசமான நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அரசின் மூலமாக வழங்கப்படுகின்ற தொகுப்பு வீடுகள் மற்றும் கடன் வழங்குதல் போன்ற திட்டங்கள் அந்த இடத்திற்குப் போய்ச் சேர முடியவில்லை. அவர்களும் சரியாக அதைச் செயல்படுத்த முடியவில்லை என்கின்ற காரணத்தினால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிந்துகொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல் கடந்த காலங்களிலே இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுகின்றபோது, concrete போட்ட வீடுகளாகக் கட்டாமல் ஓடுகள் பதித்த வீடுகளாகக் கட்டியதால்--ஆதிதிராவிடர் மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம், அவை 10 ஆண்டுகள், 14 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால்--அவையெல்லாம் இப்போது ஓடுகள் பிரிந்து, உள்ளே தண்ணீர், வெயில் போன்றவை எல்லாம் படுகின்ற நிலையில் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அந்த மக்களைப் பொறுத்தவரையில் அதைக்கூட சீர் செய்ய முடியாத அளவிலே

மிகுந்த சிரமத்திலே இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தினால், நாங்கள் செல்கின்ற இடத்திலே எல்லாம், இதைச் சீர் செய்வதற்குத் தனியாக அரசாங்கம் நடவடிக்கையை எடுத்து, அதற்கென்று தனியாக நிதி ஒதுக்கி, எங்களுக்குச் சீர் செய்து தரவேண்டும் என்கின்ற கோரிக்கையை பல்வேறு இடங்களிலே வைக்கிறார்கள். எனவே இந்த கச்சா வீட்டுத் திட்டத்தின் மூலமாகக்கூட அவர்களுடைய வீடுகளுக்கு ஓடுகள் போடுவதற்குப் பதிலாக Concrete கூரைகளாக வேய்ந்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

அதுபோல நமது சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். மாவட்ட ஊராட்சிகளின் மூலமாக ஒவ்வொரு தடவையும் ஆண்டு அறிக்கை வைக்கிறார்கள். நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது கிடைக்கிறது. மாவட்ட ஊராட்சிகளினுடைய ஆண்டு அறிக்கையைப் பார்க்கின்றபோது ஒரு தொகுதிக்கு உள்ளே மூன்று மாவட்ட கவுன்சிலர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நான் கூட்டிப் பார்த்தேன். பார்க்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியைக் காட்டிலும் சற்று அதிகமாகவே இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சருக்குக்கூட நான்—சில மாவட்டங்களிலேயிருந்து அதை—எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அப்படி இருக்கும்போது மாவட்ட ஊராட்சிக் கவுன்சிலர்கள், சட்டமன்ற உறுப்பினர்களைக் காட்டிலும் கிராமப்புறங்களிலே அதிகப்படியான வேலைகளைச் செய்யும்போது நிதி ஒதுக்குகின்ற இடத்தில், நிதி ஒதுக்குகின்ற முதலமைச்சரை பக்கத்திலே வைத்துக் கொண்டு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், குறைவாக ஒவ்வொரு கிராமத்திற்கும் செய்கிறார்களே என்கின்ற நிலையை ஒவ்வொரு கிராமத்திலும் நான் செல்கின்றபோது சொல்கிறார்கள். மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் இவ்வளவு செய்து இருக்கிறார்கள், நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த கிராமத்திற்கு எதைச் செய்து இருக்கிறீர்கள் என்று கேட்கும்போது எங்களால் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையிலேயே இருந்து கொண்டு இருக்கிறோம். எனவே எங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி மக்களுக்குத்தான், அந்தத் தொகுதியிலே இருக்கின்றவர்களுக்குத்தான் போய்ச் சேரவிருக்கிறது.



கடந்த இரண்டு ஆண்டுகளும் அரசு மிகுந்த நிதி நெருக்கடியிலே இருக்கிறது என்பதை நாங்களும் உணர்ந்து ஒன்றும் கூறவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை சற்று சரி செய்து இருக்கிறீர்கள் என்பதை எங்களால் உணர முடிகிறது. எனவே நீங்கள் நினைத்தால் அதை சற்று அதிகரித்துக் கொடுக்கலாம். அது அவர்களுக்கே தெரியும், முதலமைச்சர் அவர்களுக்கே தெரியும். எப்படிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைத்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. செல்வம்.

•**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டுக்கான உள்ளாட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரியத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பை அளித்த நமது இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் துவக்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை என்பது இன்று தமிழகத்தை ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்ற நமது இதய தெய்வம் அம்மாவினுடைய நல்லாட்சிக்கு ஓர் அச்சாரமான துறை என்பதை நான் பெருமையாக கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரை.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இப்போது பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களைவிட மாவட்ட கவுன்சிலர்களுக்கு அதிகமான சம்பளம் கிடைக்கிறது, (குறுக்கீடு) நிதி, நிதி கிடைக்கிறது என்று சொன்னார். (குறுக்கீடு) சரி. இப்போது சம்பளம் என்பதை எடுத்துக் கொண்டாலே முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் கிடைக்கிற சம்பளத்தைவிட சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் அதிகம். உங்களுக்கு எல்லாம் 12 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. எங்களுக்கு

எல்லாம் மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய்தான் கிடைக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் இங்கே வைத்த கோரிக்கையைப் பரிசீலிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு வாய்ப்பேறுமா!

**திரு. எஸ்.கே. செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் இதயதெய்வம் அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவில் முதல் மாநிலமாக ஆக்குவதற்கு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிக்குத் துணையாகவும், பக்கபலமாகவும் அம்மாவின் எண்ணத்திற்கும், செயலாக்கத்திற்கும் அம்மா அவர்கள் நினைப்பதுபோல சுண்டு விரலைக் காட்டினால் அதைச் செய்து முடிக்கின்ற துறையாக உள்ளாட்சித் துறை இப்போது இருந்து வருகின்றது.

அதுமட்டுமல்ல. இந்தத் துறை ஒரு தனித்தன்மை உடைய துறையாகும். மற்ற துறைகளைப்போல தன்னுடைய துறைக்கு பணிகளை மட்டும் செய்து முடிக்காமல் அனைத்துத் துறைகளிலும் இதனுடைய பங்கும், பணியும் உண்டு என்பதற்கு அந்த அளவிற்கு மற்ற துறைகளைவிட ஒருங்கிணைந்து சிறப்பாக செயலாற்றிக் கொண்டு வருகிறது இந்த உள்ளாட்சித் துறை.

பேரவைத் தலைவர் அவர்களே, இதை உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், உள் துறை, காவல், பொதுப் பணி, நீதி, சட்டம், மக்கள் நல்வாழ்வு, கல்வி, மின்சாரம், தொழில், கூட்டுறவு இப்படி இருக்கின்ற அனைத்துத் துறைகளிலுமே, கிட்டத்தட்ட 13 துறைகளில் இந்த உள்ளாட்சித் துறை நேரடியாகவும், மற்ற துறைகளுக்குத் துணையாகவும் இருந்து நல்லமுறையில் நிர்வாகத்தைச் செயலாற்றிக்கொண்டு வருவதுதான் இந்த உள்ளாட்சித் துறை. அதுமட்டுமல்ல. இன்று தமிழகத்தில் இந்த உள்ளாட்சித் துறை மூலம் செய்துகொண்டு இருக்கின்ற பணிகளைப் பார்த்தால் இந்தியாவில் எந்த மாநில முதல்வரும் செய்து முடித்திராத பணி மட்டுமல்ல, நினைத்துக்கூட பார்த்திட முடியாத அளவிற்கு பல அரிய பணிகளை அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது இந்த உள்ளாட்சித் துறை.



பிற்பகல் 4-40

அந்தப் பணிகளில் சிலவற்றை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் பெண்களுக்கு என்று நவீன கழிப்பிடக் கட்டடங்களும், அதேபோல கிராமத்தில் இருக்கின்ற மகளிர் சுயநிதிக் குழுக்களுக்குக் கட்டடங்களும், கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் கட்டடத்தையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதிகளும், அரசு பால் உற்பத்தியாளர்களுக்குச் சொந்தக் கட்டடங்களும், நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்களும், அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் குடிநீர் வசதிகளும், அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் மற்றும் விவசாயிகளுக்குத் தானியம் அடிக்கும் களங்களும் போன்ற பல அற்புதமான திட்டங்களைச் செயலாக்கிக்கொண்டு வருகிறது இந்த உள்ளாட்சித் துறை.

அதுமட்டுமல்ல. இந்த உள்ளாட்சியினுடைய அமைப்புகளை நாம் எண்ணிப் பார்த்தோம் என்றால், கிட்டத்தட்ட 13,750 எண்ணிக்கையிலான அமைப்புகள் இருக்கின்றன. ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என்று இப்படி இருக்கின்ற, அனைத்து எண்ணிக்கையில் இருக்கின்ற பகுதிகளுக்கு நம்முடைய இதயதெய்வம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நலத் திட்டங்களையும் பயனாளிகளுக்கு உள்ள சலுகைகளை உடனுக்குடன் செய்து கொண்டிருப்பதுதான் இந்த உள்ளாட்சித் துறை. இதைவிட ஒரு முக்கியமான நல்ல கருத்து என்னவென்றால், இந்த உள்ளாட்சியில் இருக்கின்ற ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் தலா ஒவ்வொரு ஊராட்சியிலும் குறிப்பாக 13 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் தமிழகத்தில் அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் நலத் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்ற அளவுக்கு விகிதாச்சார முறையில் ஊராட்சிகளுடைய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த கால தி.மு.க. ஆட்சியாளர்களையும், அவர்கள் ஆட்சியில் இருந்தபோது நடந்துகொண்டிருந்த ஆட்சியின் நிலை பற்றியும், தற்போது நமது இதயதெய்வம் அவர்களுடைய ஆட்சியைப் பற்றியும் ஒரு சிலவற்றை இந்தத் துறையில் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அன்று தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும், அன்றைய தி.மு.க. அமைச்சர்கள் எல்லாம்கூட தங்களுடைய தனிப்பட்ட சொந்தத் தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக்கொள்ள அரசு கஜானாவையும், அரசு இயந்திரத்தையும் அரசினுடைய திட்டம் என்ற பெயரில் செலவழித்து தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் மட்டுமே வளப்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஆனால் இன்று நமது இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியை நினைத்துப் பார்க்கிறேன். இன்று அமைச்சராக இருப்பவர்களும், ஏன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள்கூட தனிப்பட்ட முறையில் தங்களுடைய தேவைகளைச் செய்ய முடியாது.

இதயதெய்வம் அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையில் நேரிடையாக தமிழக மக்களுக்குச் சென்று அடைகின்ற திட்டப் பணிகளைத்தான் செய்து வருகிறார்கள். அந்த அளவுக்கு இது மக்களுடைய அரசாக, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இருந்து வருகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை கோடைக் காலங்களில் வறட்சி நிவாரணப் பணிகளையும், மழைக் காலங்களில் வெள்ள நிவாரணப் பணிகளையும் மிக அற்புதமாக நமது இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆலோசனைகளின் பேரில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பாங்கே இந்தத் துறையினுடைய சிறப்பம்சம் ஆகும்.

பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் எப்போதெல்லாம் தப்பித்தவறி ஆட்சிக்கு வருகின்றாரோ அப்போதெல்லாம் தமிழக மக்களுக்கு துரோகம் செய்வதையே ஒரு குறிக்கோளாகவும், இலட்சியமாகவும் வைத்துள்ளார். அவற்றில் ஒரு சிலவற்றை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவரால் சென்னை மாநகர மக்களுக்குக் கொண்டுவரப்பட்ட குடிநீர்த் திட்டம்தான் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம். இடையில் வந்த கருணாநிதி என்ன செய்தார்? சென்னை மாநகராட்சியில் அன்றைய தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு ஒரு சொம்பு தண்ணீரை எடுத்து இதுதான் கிருஷ்ணா நதிநீர் எனக் காட்டிவிட்டு அந்தத் திட்டத்தை முடக்கினார். அதனால் கருணாநிதி



அவர்கள் தனக்கு வாக்களித்த சென்னை மாநகர மக்களுக்கு மிகப் பெரிய துரோகத்தை இதன் மூலம் செய்தார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தாயுள்ளம் கொண்ட நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கின்ற வகையில் புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்ற உத்தரவு வழங்கியதோடு மட்டும் நிற்காமல் நிதியும் ஒதுக்கி அப்பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகர மக்கள் அனைவரும் இதயதெய்வம் அம்மா அவர்களை மனதார வாழ்த்திக் கொண்டிருப்பதை நாம் நேரில் பார்க்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கும், சென்னை வாழ் மக்களுக்கும் ஆட்சியில் இருந்தபோதும் சரி, ஆட்சியில் இல்லாதபோதும் சரி, கருணாநிதி சும்மா இருந்தாரா என்றால், இன்றும் இந்தப் புதிய வீராணம் திட்டத்தைப் பற்றி கொச்சைப்படுத்தி இந்தத் திட்டம் நிறைவேறாது, இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கிடைக்காது, இது ஒரு ஏமாற்றுத் திட்டம் என்று கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கிறார். இவற்றையெல்லாம் இன்று சென்னை வாழ் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

*பிற்பகல் 4-45*

பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பார்கள். அதுபோல புரட்சித் தலைவியை வீழ்த்த நினைக்கும் கட்சிகளெல்லாம் போராட்டம் அறிவித்து முதல் நாள் ஒன்று சேர்ந்தன. இரண்டாம் நாள் சில கட்சிகள் அதில் கலந்து கொள்ளவில்லை என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதிலே ஒரு கட்சி, மத்தியிலே அமைச்சரவையை விட்டு தி.மு.க. வெளியே வரட்டும் பார்க்கலாம் என்கிறது. மற்றொரு கட்சி வந்தால் யோசிக்கலாம் என்கிறது. இன்னொரு இயக்கமோ, தி.மு.க.-விற்கு சென்னையிலே ஒரு முகம், டெல்லியிலே ஓர் முகமா என்று கேள்வி கேட்கிறது. ஆனால், கருணாநிதியோ மத்திய ஆட்சியில் இருந்து நான் விலகவேமாட்டேன் என்று சொல்லி இப்படி மக்களைக் குழப்புகின்ற குழப்பவாதிகளாக இருக்கிற இவர்கள் எல்லாம் சேர்ந்தாலும் எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவியை வெல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). தமிழக மக்கள் அனைவரும் மிகத் தெளிவாக

இடைத்தேர்தல் மூலம் நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். தமிழக மக்கள் எல்லாம் இதயதெய்வம் புரட்சித் தலைவி பக்கம்தான் என்பதை நிரூபித்துள்ளார்கள். ஆகவே தமிழக மக்களை திசை திருப்ப முடியாது இவர்களால் என்பதை நான் ஆணித்தரமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே குடி நீர் வழங்கல் பற்றி ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். இன்று இயற்கையாகவே வானம் மழை இல்லாமல் பொய்த்தது. இதனால் நாடெங்கும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருந்தாலும், இதயதெய்வம் அம்மா அவர்கள் இவற்றையெல்லாம் போக்கும் வகையில், குடிநீர் தாகத்தை எல்லாம் தீர்க்கின்ற வகையில் போர்க்கால அடிபபடையிலே அனைத்து மாவட்டங்களுக்கும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும், ஆழ்துளைக் கிணறுகளையும், சிறு மின் விசைப் பம்புகளையும், புளோரைடால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல குடிநீரையும், குடிநீர்க் குழாய்களை நீட்டித்துத் தந்தும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துக் கொடுத்தும், அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும் குடிநீரே இல்லை என்ற அளவிற்கு இருந்த இடத்தில் குடிநீரைக் கொடுத்தும், சில இடங்களில் லாரிகள் மூலம் தண்ணீரைக் கொடுத்தும் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை என்கின்ற அளவிற்கு மிகச் சிறப்பான சேவையை குடிநீர் வழங்கல் துறை செய்து வருகின்றது.

பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக நான் என்னுடைய வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சில அத்தியாவசிய பணிகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு இதயதெய்வம் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியிலே, வீரபாண்டி ஒன்றியத்திலே அக்கரப்பாளையம் ஊராட்சியிலே லட்சுமனூர் பகுதியிலே திருமணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு சிறிய பாலம் கட்ட வேண்டும். அதற்காக அதிகத் தொகை செலவு ஆகாது; குறைந்த பணம்தான், சுமார் 15 இலட்சம் ரூபாய்தான் ஆகும்.

அடுத்து எளம்பிள்ளை பேரூராட்சிப் பகுதி—இப்போது இந்தியாவிற்கே ஒரு வர்த்தகமான இடம். எளம்பிள்ளை என்றாலே—.பெரிய வர்த்தகம் பண்ணுகின்ற அளவிற்கு ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. அங்கு ஒரு Bus நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



சேலம் ஒன்றியம் சர்க்கார் கொல்லபட்டியில் இயங்கிவருகின்ற மேல்நிலைப் பள்ளியில் அதிக எண்ணிக்கையிலே மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். மாணவர்களுடைய கல்வித் தரம் உயருவதற்காக மாணவிகளுக்கு என்று இந்தப் பள்ளியைத் தனியாகப் பிரித்து உயர்நிலைப் பள்ளியை அமைத்துக்கொடுத்தாலே போதும்.

அதுபோல சேலம் மாநகர எல்லையிலிருந்து இலவசப் பட்டா வழங்கப்படுவதற்கு 8 கிலோ மீட்டர் வரை தடை. ஆணையை அரசு பிறப்பித்துள்ளது. இந்தத் தடை ஆணை இருக்கின்ற காரணத்தினால் இதயதெய்வம் அம்மா அவர்கள் அனைவருக்கும் இலவசப் பட்டா வழங்கும் திட்டம் அறிவித்து இருந்தாலும்கூட, எனது தொகுதிவாழ் மக்கள் எந்தப் பலனையும் பெற முடியாது. ஆகவே 8 கிலோ மீட்டர் என்றுள்ள தடை உத்தரவை சற்றுத் தளர்த்துமாறு தாயை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைத் தவிர என்னுடைய தொகுதியில் 11 division-கள் புதியதாக மாநகரப் பகுதியிலே இணைக்கப்பட்டன. இந்த 11 division-களும் கிராமப் பகுதிகளாக இருந்து, ஊராட்சிகளாக இருந்து மாநகரத்திலே இணைக்கப்பட்ட பகுதிகள். இந்தப் பகுதிகளுக்கு சிறப்பு நிதியைக் கொடுத்து, மாநகரப் பகுதிகளிலே வேலை நடைபெறும்போது, 25 விழுக்காடு கிராமப் பகுதியிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு அவர்கள் பணிகள் செய்ய ஒரு அரசாணை பிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியினுடைய நீண்டகால கோரிக்கையாக இருந்த சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும், மாநகராட்சியின் மூலம் இப்பொழுது தீர்மானம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்ற, குப்பையிலேயிருந்து மின்சாரம் எடுக்கின்ற திட்டத்தையும் செயலாக்கிக் கொடுக்குமாறு ஆழ்ந்த பணிவுடன் கேட்டு, இவ்வளவு நேரம் எனக்குப் பேச அனுமதி கொடுத்த இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் நன்றி கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவின் பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கருணாநிதியால் படுபாதாளத்தில் தள்ளப்பட்ட தமிழக மக்களைக் காப்பாற்றிய தாயே, தமிழே, தமிழகம் போற்றும் தங்கத் தலைவியே,

உலகம் போற்றும் உத்தமத் தலைவியே, காஞ்சி காமாட்சியே, மதுரை மீனாட்சியே, ஆதிபராசக்தியே, உன் பாதம் பணிந்து என்னுடைய பணிவான கருத்துகளை, இம்மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன். அம்மா இல்லையென்றால் நான் கிடையாது. இந்தத்தெய்வம் இல்லையென்றால் நான் கிடையாது. இங்கு இருக்கின்ற அண்ணா தி.மு.க. மற்ற உறுப்பினர்கள் கிடையாது. ஏன் எதிரணியிலே இருக்கக்கூடிய தோழமைக் கட்சி நண்பர்களும்கூட கிடையாது. என் தெய்வம் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். ஏன் என்றால் சான்றோர்கள் பேசிய மன்றத்தில், பேரறிஞர்கள் பேசிய மன்றத்தில், சாதாரணக் குடிமகனாக, எங்கேயோ ஒரு மூலையில் கிடந்த இந்தச் சிறுவனை இந்த மாமன்றத்திலே நின்று மூன்றாம் முறையாகப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய அன்னையை, நான் பேசுவதற்கு, எனக்கு எத்தனை ஆண்டுகள், எத்தனை கோடி ஆண்டுகளுக்கு நான் தவமிருந்தாலும் அம்மா என்று சொல்லக்கூடிய, அந்த அன்னையைச் சொல்லக்கூடிய, வாய்ப்பை வழங்கியிருக்கக்கூடிய அந்தத் தாயை, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நான் சொன்னாலும், அது ஈடாகாது என்பதனை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் எங்களுடைய அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று சூளுரை எடுத்தார்கள். ஆனால் இங்கே தி.மு.க. உறுப்பினர்கள் வரவில்லை. இருந்தாலும், இங்கே மாற்று அணியிலே இருக்கக்கூடிய நமது அருமை கழக சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு, எவராவது ஒருவரேனும் சொல்ல வேண்டுமென்பதனைச் சொல்கிறேன். நான் என்னுடைய கருத்தைப் பதிய வைக்க வேண்டுமென்பதற்காகவும், இங்கே நான் என்னுடைய தொகுதியில் என்னென்ன—அதாவது என் தாய் கடந்த 2 ஆண்டுக் காலத்தில் இந்த மாமன்றத்திலே நான் கன்னிப் பேச்சில் பேசியபோது என்னென்ன—குறைபாடுகளை, தேர்தலினுடைய வாக்குறுதிகளாக வைத்தேனோ அதை எங்கள் தாய் இன்றைக்கு நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதனை நான் இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டினால் அது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதைப் பெருமையோடு, எங்கள் தாய் செய்த சாதனைகளை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியில் முதல் கோரிக்கை, அம்மா அவர்கள் அங்கே எனக்காக வாக்குக் கேட்கின்றபோது ஒரு தாய் வந்து சொன்னார், 'திருநகர் பேரூராட்சியில், அம்மா குடிப்பதற்கு தண்ணீர் இல்லை, இங்கே 15,000 வாக்காளர்கள் இருக்கின்றார்கள். இது ஒரு பேரூராட்சி, மிகப் பெரிய பேரூராட்சி, ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்தினோம், எத்தனையோ சாலை மறியல்களைப் பண்ணினோம், அதை எல்லாம் அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும், அந்த ஆட்சியாளர்களும் கவனிக்கவில்லை என்று நம் தாயிடத்திலே மனு கொடுத்தார்கள். ஆனால் தாய் அவர்கள் 'அவரிடம் கண்டிப்பாக நீங்கள் நல்லபடியாக சீனிவேலுக்கு வாக்களியுங்கள், நிச்சயமாக குடி தண்ணீர் கிடைக்கும்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதன்படி அன்புள்ளம் கொண்ட தாய் அவர்கள் அன்றைக்கு நான் கன்னிப் பேச்சிலே பேசுகின்றபோது சொன்னதற்கு, 5 கோடி ரூபாய்க்கு வைகை-பெரியார் தண்ணீரே இப்போது திருநகர் பேரூராட்சிக்குக் கொடுத்து முழுவதுமாக, அதனுடைய பணிகள் முடியும் தருவாயில், இன்னும் ஒருசில மாதங்களில் முடியும் தருவாயில் இருக்கின்றது; 5 கோடி ரூபாயில். அதனால் பயனடையக்கூடிய கிராமங்களை நான் சொல்லிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் இந்த 5 ஆண்டுகாலத்தில் தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்றார்கள் அம்மா அவர்கள். கிட்டத்தட்ட இதேபோல நிறைய சொல்லிக்கொண்டே வரலாம். கிட்டத்தட்ட 120 கோடி ரூபாயில் இந்த இரண்டு வருடத்தில் முக்கால்வாசி தன்னிறைவு பெற்றுவிட்டது என்னுடைய தொகுதி. ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே வருகிறேன். பாருங்கள்.

வடபழஞ்சி கிராமம், தென்பழஞ்சி கிராமம், வெள்ளைபட்டி கிராமம், மணப்பட்டி கிராமம், சாக்கிலிப்பட்டி கிராமம், சின்ன சாக்கிலிப்பட்டி, வேடர்புளியங்குளம், கணக்கன்குளம், திருவள்ளுவர் நகர், தோப்பூர், விளாச்சேரி, மணைப்பட்டி, முத்துப்பட்டி, அடைக்கன்பட்டி, குறிஞ்சி நகர், திருவள்ளுவர் நகர், பி.ஆர்.சி. காலனி, முல்லை நகர், ஆகியவற்றில் drinking water, பிரமாதமாக வைகைத் தண்ணீர் வருகிறது. அந்தப் பகுதி மக்கள் அம்மாவை மனதார எப்படி வாழ்த்துகிறார்கள் தெரியுமா? தாயே, தமிழே என்று உலகம் பூராவும் இன்றைக்கு ஒலிக்கக்கூடிய அளவுக்கு அந்தப் பகுதி மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. வெள்ளைக்கல் என்ற ஒரு கிராமம்; அவனியாபுரம் பேரூராட்சியிலே 15-வது வார்டு. 100 ஆண்டுகாலமாக அங்கே குடிக்கவே தண்ணீர் கிடையாது. 100 ஆண்டுகாலம்; ஒரு ஆண்டு, இரு ஆண்டு அல்ல. மாநகராட்சிக்குச் சொந்தமான பகுதி அது. அங்கே அது ஒரு தீவு மாதிரி இருக்கும். அம்மா அவர்களிடம் சொன்னேன்; மனுதான் கொடுத்தேன். 22 இலட்சத்திற்கு வைகைத் தண்ணீர் இன்றைக்கு போய்விட்டது அங்கே. அதேமாதிரி விளாக்குறிச்சிக்கு 22 இலட்சத்திற்கு இன்றைக்கு அங்கே தண்ணீர் வருகிறது. மேல்நிலை குடிநீர்த் தொட்டியோடு அந்த மக்கள் நல்ல ஒரு ஆகாரமாக அருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதி தமிழகத்திலேயே மிகப் பெரிய தொகுதி. ஒரே ஒன்றியம், ஒரே தொகுதிதான். அதிலே மாநகராட்சிக்கு உள்ளேயே 14 வார்டுகளும் அடங்கியிருக்கின்றன. அண்ணன் ரஹீம், நன்மாறன் போன்றவர்களுக்கெல்லாம் 13 வார்டுகள், 14 வார்டுகள்தான் ஒரு தொகுதி. எனக்கு அதிலேயே 14 வார்டுகள் வருகின்றன. அதிலே இரண்டு இலட்சம். வெளியிலே தொகுதியில் 4 பேரூராட்சிகள். கிராமங்கள் என்று எடுத்துக்கொண்டால் 110 கிராமங்கள். ஆகவே இந்தக் கிராமங்களையெல்லாம் உள்ளடக்கியது. மதுரை மாநகராட்சியை விட்டுத்தான் வெளியே போக வேண்டும். அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பாருங்கள், எந்தக் காலத்திலேயும் நடக்கவில்லை. அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. திருநகரை விட்டு பல்கலை நகருக்கு 28½ கோடி ரூபாய்க்கு. மொத்தம் 6 ரோடுகள், ஆர்.ஆர். சாலைகள். திருநகர்-பல்கலைநகர்; கோச்சடை-மேலக்கால்; திருப்பரங்குன்றம்-அவனியாபுரம், மதுரை-அவினியாபுரம், மதுரை-விராதனூர், மதுரை-வலையங்குளம், ஆகிய இடங்களுக்கு 28½ கோடிக்குச் சாலைகள். 28½ கோடிக்கு. அம்மா அவர்களிடம் மனு கொடுத்தவுடன், பொதுப் பணித் துறையைக் கூப்பிட்டு உடனே sanction பண்ணிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். இவையெல்லாம் நினைத்துப் பார்க்கின்ற காரியமா? எந்தக் காலத்திலேயாவது யாராவது நினைத்துப் பார்க்க முடியுமா? கிட்டத்தட்ட 7½ மீட்டர் அகலத்திலே—சும்மா Plane போகும் அந்த ரோட்டில், அந்த மாதிரி—அந்தப் பணி முடியக்கூடிய அளவுக்கு இன்றைக்கு அம்மா ஆட்சியிலே நடந்து கொண்டிருக்கிறது.



பிற்பகல் 4-55

கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் கட்டடம். இன்றைக்கு எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தைப் பாருங்கள். உதாரணத்திற்கு ஒரு கிராமத்திலே நீதிமன்றத்திற்குப் போக வேண்டும் என்றால் அந்தக் கிராம நிர்வாக அலுவலரைத் தேடி எங்கெங்கோ அலைய வேண்டியிருக்கிறது. இதெல்லாம் ஒரு சின்ன காரியம். 70 நாளிலே கட்டக்கூடிய கட்டடம். ஒரு கிராம நிர்வாக அலுவலர், அவரைத் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிறது. இப்போது அது கிடையாது. எங்கள் அம்மா, அந்தக் கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்த பிறகு அவர் அங்கேதான் இருக்கிறார். வேறு எங்கேயும் போவது இல்லை. சாதாரணமாக, கோர்ட்டுக்கு ஒருவன் ஜாமீன் எடுக்கப்போகும்போது, உடனே V.A.O. அங்கே உட்கார்ந்து இருக்கிறார், போங்கள் ஐயா, ரொம்ப லேசாக சர்வ சாதாரணமாகப் போய் கையெழுத்து வாங்கிக் கொண்டு போய் விடுகிறான். இல்லை என்றால், தேடிப்பிடிக்க வேண்டும். எவ்வளவு பெரிய திட்டம். புரட்சித் தலைவர் கொண்டு வந்தார் 2 ரூபாய்க்கு மின் விளக்கு. Doubles போகிறது சைக்கிளிலே, ஒரு சின்ன சமாசாரம்தான் சைக்கிளிலே Doubles போய்க் கொள்ளலாம் என்று சொன்னார். அது மாதிரி சாதாரண கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் கட்டடத்தை எங்கள் அம்மா வந்து கட்டிக் கொடுத்ததினாலே மாணவனாக இருந்தாலும் சரிதான், விவசாயியாக இருந்தாலும் சரிதான், யாருக்குக் கையெழுத்து வேண்டுமானாலும் சரிதான், கிராம நிர்வாக அலுவலரைப் பார்த்து கையெழுத்து வாங்குவதிலிருந்த ஒரு அவல நிலையை இப்போது அம்மா அவர்கள் போக்கிக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. நிலையூர் கால்வாய், என்னுடைய Channel. 19 கோடி ரூபாய்; 1 கோடி, 2 கோடி அல்ல; 19 கோடி ரூபாய். 19 கோடி ரூபாயை வழங்கிய எங்கள் அம்மா தெய்வம். கொடுக்கக், கொடுக்கக் கொடுத்தார் என்று சொல்வார் பாருங்கள். வாரி வாரி வழங்கிய வள்ளல் தெய்வம். ஒரு மனுதான் கொடுத்தேன். தி.மு.க.காரர்கள் பாதியிலே போட்டுவிட்டார்கள் கிடப்பிலே. அது எங்கே போயிற்று. அருப்புக்கோட்டைவரைக்கும் போகிறது அந்தக் கால்வாய். இன்றைக்கு 19 கோடி ரூபாயில் அது பாட்டுக்கு வேலை மள மள என்று நடந்து கொண்டிருக்கிறது.

காசி விசுவநாதர் கோயில், திருப்பரங்குன்றம் கோயிலுக்கு 36 இலட்சம். மலைமேலே பக்தர்கள் ஏறிப் போவதற்கு மண்டபப் படி. இதை ஏன் சொல்கிறேன் என்றால், தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்பதற்காக எடுத்துக் காட்டுகின்ற வகையிலேதான் இன்றைக்கு அம்மா அவர்கள் இவ்வளவையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்போடு ஒன்றை கேட்டுக்கொள்கிறேன். சுருக்கமாகப் பேசச் சொல்லியிருக்கிறார்கள். நான் வழிவிட்டுச் செல்கிறேன். நானே அதிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

நான் ஒன்றை பேரவைத் தலைவரிடம் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் அம்மா செய்த சாதனை, 350 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி. விவசாயிகளுக்கு 310½ கோடி ரூபாய். எனக்கு அதிலே ரூ.20,000 தள்ளுபடி. நான் ஒரு சாதாரண விவசாயி. எங்கள் அம்மாவிற்கு அன்றைக்கே வாழ்த்துத் தந்தி எல்லாம் நிறையபேர் கொடுத்திருக்கிறார்கள். வால்போஸ்டர் அடித்து ஒட்டினார்கள். விவசாயிக்கு 1/2 பைசா குறைக்கச் சொல்லி திமுக. காலத்திலே போராட்டம் எல்லாம் நடத்தி, அண்ணன் பழனிசாமி எல்லாம் இங்கேயிருந்து பேசி, நான் மாடத்திலேயிருந்து கேட்டேன். அரை பைசா குறைக்கக் கேட்டால், துப்பாக்கிச் சூடு. கொக்கு, குருவியைச் சுடுவதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே சுட்டுத் தள்ளியதை நாம் மறந்துவிட முடியாது. இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் மறந்துவிட முடியாது. எங்கள் அம்மா, கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று இயேசு பெருமான் சொன்னார் என்று பைபிளிலே சொல்கிறார்கள். அது கிடையாது. யார் கேட்டார்கள். யாரும் கேட்காமலேயே சட்டமன்றத்திலே உட்கார்ந்த உடனே 310½ கோடி ரூபாய் அபராத வட்டித் தள்ளுபடி. இப்போது 350 கோடி ரூபாய் கிஸ்தி வரி எல்லாம் தள்ளுபடி. தென்னை மரத்திற்குத் தள்ளுபடி மானியம். நான் இன்னும் ஒன்றைச் சொல்லி அன்போடு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய, எதிரணியிலே இருக்கக்கூடிய மன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்வது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், அவர்கள் இருக்கக்கூடிய காலத்தில்--நான் காங்கிரஸ் நண்பர்களைச் சுட்டிக்காட்டி அன்போடு கேட்கவிருப்பது எல்லாம்—என்னுடைய தொகுதி பக்கத்தில்தான் அண்ணன் பேரவைத் தலைவர் அவர்களுடைய வீடு.



என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே. இந்திரா காந்தி அவர்கள் வந்து இறங்கினார்கள். அடித்தார்கள் ஐயா. இவ்வளவுதான் என்று இல்லை. இரத்தம் சொட்டச் சொட்ட அடித்தார்கள். அடித்தவுடனே அந்த இரத்தம் எங்கேயிருந்து வந்தது என்றுகூடக் கேட்டார்கள். அது மட்டுமல்ல. எங்கள் அம்மா சொல்கிற மாதிரி இந்தியாவினுடைய இளைய பிரதமர் இராஜீவ் காந்தி என்று சொல்லக்கூடிய அந்தத் தலைவனை தமிழக மண்ணிலே என்ன பாடுபடுத்தி அலங்கோலப்படுத்திக் கொன்றார்களே, அவர்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய, அந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கையேந்தி, எதற்கெடுத்தாலும் வெளிநடப்பு, எதற்கெடுத்தாலும் வெளிநடப்புச் செய்கிறீர்கள். தயவுசெய்து வேண்டாம். தயவுசெய்து இராஜீவ் காந்தியினுடைய பாவம் நம்மை மன்னிக்குமா? இராஜீவ் காந்தியினுடைய ஆத்மா நம்மை மன்னிக்குமா? இந்திரா காந்தியினுடைய ஆத்மா நம்மை மன்னிக்குமா? (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து நான் அன்போடு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தனித்தன்மையோடு நடந்துகொள்ளுங்கள். தயவுசெய்து அவர்கள் எழுந்தவுடன் நாங்களும் வெளிநடப்பு என்பது வேண்டாம். கையெடுத்து கும்பிட்டுக் கேட்கிறேன். ஏன் என்றால் கண்ணாலே பார்த்தேன். ஆகவே நான் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் தோழர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அண்ணன் நன்மாறன் அவர்களே, என்னுடைய தொகுதியில் 59-வது வார்டு, மாநகராட்சியில் லீலாவதி; அந்த லீலாவதி 'நியாயமான முறையில் ரேஷன் பொருட்களை நல்ல முறையில் போடுப்பா' என்று கேட்டதற்கு இதே திமுக.-காரன்தான் நடு ரோட்டில் வைத்து வெட்டினான், பட்டப் பகலில். நீங்களும் நானும்தான் தெருத் தெருவாக கடை அடைத்தோம். ஏனப்பா இப்படி? லீலாவதி ஆத்மா நம்மை விடுமா? எங்கள் அன்னை சொல்வதைக் கேளுங்கள். எங்கள் தாய் சொல்வதைக் கேளுங்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலே, உலக அரசியல் வரலாற்றிலே இன்றைக்கு இது போன்று, எங்கள் அம்மா மாதிரி யார் செய்து கொண்டிருக்கிறார்கள்? எந்த நாட்டிலே எந்த மாநிலத்திலே இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது? அரிசியை எடுத்துக்கொள்ளுங்கள், பருப்பை எடுத்துக்கொள்ளுங்கள், மண்ணெண்ணெயை எடுத்துக்கொள்ளுங்கள், Bus ticket-ஐ எடுத்துக்கொள்ளுங்கள்; மற்ற மாநிலங்களைக் காட்டிலும் என்ன இங்கே கூட இருக்கிறது? தவறைச் சொல்லுங்கள்; தவறு இருந்தால்

சுட்டிக்காட்டுங்கள். நாங்கள் திருத்திக்கொள்கின்றோம். என் தாய், எங்களுடைய அன்புத் தெய்வம், தமிழகத்தினுடைய 6½ கோடி மக்களுடைய உள்ளங்களிலே குடிகொண்டிருக்கக்கூடிய அன்புத் தெய்வம், 5,000 ஆண்டுகள், பல்லாயிரம் கோடி ஆண்டுகள் வாழ வேண்டுமென்று, என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் வாழ்த்தி அமைகின்றேன். தாயே வணக்கம்.

*பிற்பகல் 5-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு மிகுந்த தாய், அருள் கனிந்த தாய், அறிவு நிறைந்த தாய், ஆற்றல் சிறந்த தாய், அண்டுவோர்க்கு ஆதாரமான தாய், நாட்டுக்கே ஆதாரமான தாய், ஆட்சித் திறம்மிக்க தாய், எதிர்ப்புக்கு அஞ்சாத தாய், ஒரு கணமும் ஓயாத தாய், நாள் எல்லாம் உழைக்கின்ற தாய், கண் மூடி உறங்காத தாய், சோதனைகளால் கலங்காத தாய், அகிலமே இன்று 'அம்மா' என்று அழைக்கின்ற தாய், எங்கள் தாய், தனி நிகர் தாய், தர்மத் தாய், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து வணங்கி இந்த நல்லாட்சியின் சாட்சியாக உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையை மன்றத்தின் முன்வைக்க விரும்புகிறேன்.

2001 ஆம் ஆண்டு வானம் பொய்த்தது; வற்றாத காவிரியில் அண்டை மாநிலம் கை விரித்தது. முன்பு ஆண்டவர்கள் தங்களை வளமாக்கிக் கொண்டு, தமிழ்நாட்டை தரித்திர பூமியாக்கிவிட்டு, தாங்காத கடன் சுமைகளை வைத்துவிட்டுப் போனார்கள். இப்படிப்பட்ட இயற்கையின் சோதனைகளும், செயற்கையான சோதனைகளும், கைகோர்த்துக் கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்ல ஆட்சிக்கு இடையூறு விளைவிக்கின்ற நிலையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக்கிக் காட்டுவேன் என்று சூளுரைத்து, தோள் உயர்த்தி, அந்த இலட்சியப் பாதையில் அம்மா அவர்கள் பீடுநடை போட்டுக் கொண்டிருப்பதை, நல்ல உள்ளங்கள் பாராட்டுகின்றன. இருந்தாலும் சோதனைகளுக்கு எல்லாம் அஞ்சாது, கண் துஞ்சாது, ஏழையெளியோர், உழைக்கின்ற மக்கள், விவசாயிகள், நெசவாளிகள் ஆகிய அடித்தட்டு மக்களின் நலத்திலே அக்கறை



கொண்டு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆட்சி தொடர்ந்து பீடுநடை போட்டு வருகிறது. தேவையற்ற போராட்டங்களைத் தூண்டிவிடுவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து இன்னல் தந்தாலும், இடையூறு செய்தாலும் அம்மா அவர்களின் மக்கள் பணி தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

ஒரு காட்டு ராஜாவும், ஒரு நாட்டு முன்னாள் முதல் மந்திரியும் கைகோர்த்துக் கொண்டு, அந்தரங்கத்தில் நடத்திய காரியங்கள் எல்லாம் அம்பலத்துக்கு வருவதனால், ஒருவருக்கு ஏற்பட்ட கலக்கம்; அதனால் இந்த ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க நினைக்கின்றார்கள். குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுகிறார்கள். ஆனால் இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அம்மா அவர்களின் பணி தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒரு நல்லாட்சிக்கு மாபெரும் துணையாக இருக்க வேண்டியது உள்ளாட்சித் துறை என்பதை அனைவரும் அறிவார்கள்.

மரத்துக்கு வேர்கள் எப்படியோ, ஒரு மாநிலத்துக்கு ஊர்கள் அப்படி. ஊர் செழித்தால் ஒன்றியம் செழிக்கும்; ஒன்றியம் செழித்தால் தொகுதி செழிக்கும்; தொகுதி செழித்தால் மாவட்டம் செழிக்கும்; மாவட்டம் செழித்தால் மாநிலம் செழிக்கும் என்று ஊர்தோறும், ஒன்றியம்தோறும், நகரம், மாநகரம்தோறும் நாட்டு மக்களுக்கு நல்ல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள்.

ஒரு சாதாரணத் தொண்டனாகிய எனக்கு, இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையை அவைமுன் வைக்க வாய்ப்பு வழங்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி மலர்களை அவரது பொற்பாதங்களில் சமர்ப்பித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

*பிற்பகல் 5-05*

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை மாநகராட்சி நீங்கலாக 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 611 பேரூராட்சிகள், 80,421 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளைச் செய்து வருகிறது. முன்பு எப்போதும் இல்லாத அளவில் பருவமழை நான்கு ஆண்டு காலமாக தமிழகத்தில் தொடர்ந்து குறைந்த அளவே பெய்துள்ளது. இதன் காரணமாக பாசனத்திற்கும், குடிநீருக்கும் கடுமையான நீர்ப் பற்றாக்குறை மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது.

இதனை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தார்கள். இதனால் நிவாரணப் பணிகள் மாநிலம் முழுவதும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு தங்குதடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.149 கோடியே 48 இலட்சம் வழங்கியுள்ளார்கள். இத்தொகை ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கும், இருக்கின்ற கிணறுகளை தூர் வாரி ஆழப்படுத்துவதற்கும், குடிநீர் இல்லாத பகுதிகளுக்குக் குடிநீர்க் குழாய்களை நீட்டிக்கவும் வழங்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க ஆண்டு ஒன்றுக்கு ரூ.310 கோடி செலவு செய்யப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஆண்டுக்கு ரூ.488 கோடி செலவு செய்யப்படுகிறது. இது முந்தைய அரசு செலவிட்டதைவிட 57 சதவிகிதம் கூடுதல் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நகரக் குடிநீர்த் திட்டங்களுக்கு சராசரியாக 91 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆனால் தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு 166 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காட்டிலும் 82 சதவிகிதம் கூடுதலான செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊரகப் பகுதிகளில் உள்ள 5,000 அரசுப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், கடந்த இரண்டு ஆண்டு காலங்களுக்குள் 14 ஆயிரத்து 564 அரசுப் பள்ளிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.



2002 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மறு ஆய்வின்படி, தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள 80 ஆயிரத்து 421 குடியிருப்புகளில், 28 ஆயிரத்து 623 குடியிருப்புகள் முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை. 51 ஆயிரத்து 294 குடியிருப்புகள் பகுதியான குடிநீர் வசதி பெற்றவை. மீதமுள்ள 504 குடியிருப்புகள் சரியான நீர் ஆதாரம் அற்றவை. நகரப் பகுதியை எடுத்துக்கொண்டால், 38 நகராட்சிகள் மற்றும் 252 பேரூராட்சிகள் உட்பட, 290 நகரங்கள், முழுமையான குடிநீர் வசதி பெற்றவை. எஞ்சியுள்ள நகரங்களும் பகுதியான குடிநீர் வசதி பெற்றவையாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக, அதிகப்படியான நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்துவதாலும், கடந்த நான்கு ஆண்டுகாலமாக பருவமழை தொடர்ந்து குறைந்ததாலும், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. இந்நிலையைப் போக்க, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியினால், இன்று மழைநீர் சேகரிக்கும் திட்டம் மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 300 அடி ஆழத்திற்கு மேலாக போடப்பட்ட அடிப் பம்பு மூலம் தாய்மார்கள் தண்ணீர் அடிக்கும் அவல நிலையைக் கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிருடைய அவல நிலையைப் போக்குவதற்காக, ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே தரைமட்டத் தொட்டியுடன்கூடிய சிறு மின்விசை இறைப்பான் என்ற புதிய குடிநீர்த் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இதன்படி 14 ஆயிரத்து 661 சிறு மின்விசை இறைப்பான்கள் தமிழகம் முழுவதும் ஊரகப் பகுதிகளில் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மூலை முடுக்குகளில் உள்ள தொலைதூர ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திற்கு முதலிடத்தைப் பெற்றுத் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சேரும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-10

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும் புதிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர்

அம்மா அவர்களைப் பணிந்து, வணங்கி இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்:

(1) 6 ஆயிரம் ஊரகக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர் வசதி செய்து தரப்படும்.

(2) தரைமட்டத் தொட்டியுடன்கூடிய 10 ஆயிரம் சிறு மின்விசை இறைப்பான்கள் அமைக்கப்படும். இதில் 4 ஆயிரம் சிறு மின்விசை இறைப்பான்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளில் அமைக்கப்படும்.

(3) ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 5 ஆயிரம் அரசுப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து தரப்படும்.

(4) தமிழகம் முழுவதும் 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.602 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 43 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

(5) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 12 நகராட்சிகள் மற்றும் 47 பேரூராட்சிகளுக்கு ரூ.268 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதன்மூலம் சுமார் 26 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

(6) துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ரூ.70 கோடி மதிப்பீட்டில், 1,000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

(7) பொதுமக்கள் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடி மாநிலமாக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் மாற்றியுள்ளார்கள். கோயம்புத்தூர், வேலூர், கடலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களிலுள்ள 837 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.36 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

(8) நடப்பு நிதியாண்டில் காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பொதுமக்கள் பங்கேற்புடன் 400 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.19 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

(9) ரூ.66 கோடி மதிப்பீட்டில் 1,598 ஊரகக் குடியிருப்புகளில் 'சுவஜல்தாரா' குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.



(10) லப்பைக்குடிகாடு, ஒரத்தநாடு, பள்ளிப்பட்டு, சிவகிரி, பொன்னேரி, ஓவேலி, கோட்டக்குப்பம், வளவனூர், கோபாலசமுத்திரம், குமாரலிங்கம், கருங்குழி, கும்மிடிப்பூண்டி, கொளத்தூர், பள்ளிகொண்டா, திருவலம், திருத்தங்கல், பி. மீனாட்சிபுரம், ஊஞ்சலூர், திருப்போரூர், சோலூர், உண்ணாமலைக்கடை மற்றும் திருவேங்கடம் ஆகிய 22 பேரூராட்சிகளில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 3 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

(11) ரூ.79 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகளுக்கு, தாமிரபரணி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும். இதன்மூலம் 5 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

(12) ரூ.58 கோடி மதிப்பீட்டில், திண்டிவனம், இராஜபாளையம், விருத்தாசலம், சங்கரன்கோயில் மற்றும் சிவகாசி நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதன்மூலம் 3 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

(13) ரூ.1 கோடியே 81 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் கடயம் ஒன்றியத்தில் 47 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

(14) ரூ.8 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் 98 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் துறையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

(15) ரூ.2 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம், மணமேற்குடி ஒன்றியத்தில் 34 குடியிருப்புகளுக்கும், ஆவுடையார் கோயில் ஒன்றியத்தில் 10 குடியிருப்புகளுக்குமான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

(16) ரூ.15 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டத்தில் கொடுமுடி ஒன்றியத்தில் 14 குடியிருப்புகள், ஈரோடு ஒன்றியத்தில் 10 குடியிருப்புகள், சின்னக்காம்பாளையம், கொளத்துப்பாளையம் பேரூராட்சிகள் மற்றும் 75 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அறிவிப்புகளை மொத்தமாகக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே பிரித்துப் பிரித்துப் படிக்கிறேன்; ஊர் வாரியாகப் படிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** படிப்பது அதிலே இருக்கிறதா என்று மட்டும் பார்த்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(17) ரூ. 22 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாவட்டத்தில் கே. பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களில் 378 குடியிருப்புகளுக்கும் தாந்தோணி ஒன்றியத்தில் 18 குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

(18) ரூ. 49 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒன்றியத்தில் 138 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

(19) ரூ. 13 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், வேர்க்கிளம்பி, பொன்மணி, குலசேகரம், குமாரபுரம், விளாவூர், கோதைநல்லூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

(20) ரூ. 78 இலட்சம் மதிப்பீட்டில் தேனி மாவட்டம், கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்தில் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

(21) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அருப்புக்கோட்டை, நாமக்கல், செங்கல்பட்டு மற்றும் பண்ருட்டி நகராட்சிகள், 18 நகரப் பேரூராட்சிகள், 29 ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 3,653 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 558 கோடி உத்தேச மதிப்பீட்டில் 58 குடிநீர்த் திட்டங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(22) ஊரகப் பகுதிகளில், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஊரகக் குடிநீர்த் திட்டம் ஒன்றினை உருவாக்கி நிதி உதவி கோரி உலக



வங்கிக்கு விண்ணப்பிக்கப்பட்டது. இதன் மதிப்பீடு ரூபாய் 1,000 கோடியாகும். இதற்கு உலக வங்கியும் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னை நகரின் குடிநீர் வழங்குதலுக்கும், கழிவு நீர் அகற்றுதலுக்கும் பொறுப்பேற்றுள்ளது. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தனது 15 அம்சத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகச் சேர்த்துள்ளார்கள். பெருகி வரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள நகரப் பகுதிகளுக்கும், ஊரகப் பகுதிகளுக்கும் தேவையான குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதலுக்குத் தேவையான திட்டங்களை அமல்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

நடப்பு ஆண்டில் சென்னை நகரில் செயல்படுத்தப்பட உள்ள குடிநீர்த் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(1) மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் சென்னை நகரில் குடிநீர் விநியோக நிலைமையினை ஆய்வு செய்தார்கள். அப்போது செங்கற்பட்டு அருகேயுள்ள கொளவாய் ஏரியிலிருந்து ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்காத வகையில் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை அமல்படுத்திட ஆணையிட்டார்கள். அதன்படி, ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் தினசரி 20 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம், 2004 செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) சென்னை நகரில் வாழும் மக்களின் குடிநீர் தேவைக்கு மழை நீரை மட்டுமே நம்பிக்கொண்டிருக்கும் நிலைமை உள்ளது. பருவமழை குறைவாகப் பெய்யும் ஆண்டுகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண மாண்புமிகு அம்மா அவர்கள், கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, நாள் ஒன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் கடல் நீர் நன்னீராக்கி மக்களுக்கு விநியோகிக்கப்படும். இது

ஒப்பந்தக்காரர் தனது சொந்த முதலீட்டில் நிறுவி, இயக்கி, பராமரித்து பின்னர் வாரியத்திற்கே மாற்றி தரக்கூடிய BOOT என்ற அடிப்படையில் செயல்படுத்தப்படும். இதற்கான திட்ட மதிப்பீடு ரூபாய் 1,500 கோடி ஆகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே, இவ்வளவு பெரிய அளவில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைப் பெருமையோடு இம்மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

(3) இரண்டாம் சென்னைத் திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடைய உள்ளது. இதன் தொடர்ச்சியாக மூன்றாம் சென்னைத் திட்டம் ரூ.600 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

ஆரணியாறு மற்றும் கொசஸ்தலை ஆற்றுப் படுகையிலுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களில் இருந்து நீர் எடுப்பது; ரூ.67 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே திருத்தண்டலத்தில் தடுப்பு அணை கட்டுவது; ரூ.20 கோடி மதிப்பீட்டில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே வள்ளூர் அணையைப் புதுப்பிப்பது; ரூ.5 கோடி செலவில் அம்பத்தூர் ஏரி, கொரட்டூர் ஏரி மற்றும் மாதவரத்திலுள்ள இரட்டை ஏரி ஆகியவற்றைத் தூர் வாரி அதன் கொள்ளளவை அதிகப்படுத்துவது ஆகியவை இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) ரூ.95 கோடி மதிப்பீட்டில் பாலாற்றின் குறுக்கே வயலூர் அருகே தடுப்பு அணை ஒன்று கட்டப்படும். இதன் மூலம் தினமும் 20 மில்லியன் லிட்டர், சென்னைக்குக் கூடுதலாகக் குடிநீர் கொண்டு வரப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தினால் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, அங்கே நீரை அதிகமாகத் தேக்கி, சென்னை நகர் வாழ் மக்களுக்குக் கொண்டு வரும் திட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயலூர் அல்ல. வாயலூர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** (5) கழிவு நீர் இணைப்பு கொடுப்பதற்கு வாரியம் தற்போது ரூ.3 ஆயிரத்து 390 கட்டணம்



வசூலிக்கிறது. ஆனால் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களால் இத்தொகையைச் செலுத்த இயலவில்லை; இணைப்புப் பெற முடியவில்லை. இதனை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களிடமிருந்து, இணைப்பு ஒன்றிற்கு ரூ.3 ஆயிரத்து 390-க்குப் பதிலாக ரூ.100/- மட்டுமே பெற்றுக்கொண்டு இணைப்பு வழங்க வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை 23,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் வாரியத்திற்கு ரூ.8 கோடியே 50 இலட்சம் வருவாய்க் குறைவு ஏற்பட்டாலும் ஏழையெளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்கு உதவிட வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனைச் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) சென்னை நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பே, நகரில் கழிவு நீர் அகற்றுவது தொடர்பான அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி அதிகத் திறனுள்ள கழிவு நீர்க் குழாய்கள் அமைத்தல் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களின் ஏற்றுத் திறனை அதிகரித்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகளை விரைவாகச் செயல்படுத்திட, ஆகஸ்ட் மாதத்திற்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூ.125 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் இத்திட்டம், வடசென்னைப் பகுதிகளுக்கும் மற்றும் நகரின் தாழ்வான பகுதிகளுக்கும் மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) மழைக் காலங்களில் மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, அதனைச் சேகரித்து வைத்தால், எதிர்காலத்தில் பயன்படுத்த முடியும் எனத் திட்டமிட்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்த உத்தரவிட்டார்கள். மழைநீர் சேகரிப்பு முறைகள் பற்றிய பிரச்சாரம் மக்கள் மத்தியில் விரிவுபடுத்தப்படும். வடகிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கு முன் அதிக எண்ணிக்கையிலான கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு முறையினை அமைக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசுத்

துறைக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்திட இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தி அமைக்கப்பட்ட நிலத்தடி நீர்ச் சட்டத்தினைக் கடுமையாக அமல்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் எடுக்கும் முறை சீரமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) அரசு மருத்துவமனைகளின் குடிநீர்த் தேவைகளைச் சுயமாக நிறைவு செய்ய அருகில் கிடைக்கும் உவர் நீரை மறுசவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரித்து உபயோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் சென்னை உள்ளிட்ட மாநிலத்தின் ஆறு மாநகராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில், அங்கு கிடைக்கும் நீரின் அளவைக் கண்டறிந்து அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி. நடப்பாண்டில் சென்னை மாநகராட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்களைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு, அறிவிப்புகளை மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

(1) சென்னை மாநகரில் முன்னோடித் திட்டமாக 25 நவீன பொதுக் கழிப்பிடங்கள் "கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, பின் ஒப்படைப்பது" என்ற BOOT அடிப்படையில் கட்டப்படும்.

(2) மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான சென்னை மாநகரைப் பசுமையாக்கும் திட்டம் ரூ. 5 கோடி செலவில் நிறைவேற்றப்படும். சாலைத் தீவுகள், சாலை மையத் தடுப்புகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவை தோட்டக்கலை நிபுணர்களின் உதவியுடன் அழகுற மாற்றி அமைக்கப்படும்.

(3) சென்னை மாநகரிலுள்ள கால்நடைகள், மாதவரத்திலுள்ள புதிய இடத்திற்கு மாற்றப்படும். இதனால் நகரினுள் சுகாதாரம் மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(4) சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைக்கும் திட்டத்தின்கீழ் மண்டலம் 5 மற்றும் 7-ல் துப்பரவுப் பணி தனியார் மூலம் குறைந்த செலவில் செயலாக்கப்படும். இதன்மூலம் தற்பொழுதுள்ள நிரந்தரப் பணியாளர்களுக்கு எந்தவித பணி பாதிப்பும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-25

(5) சென்னை நகரில் சேரும் திடக்கழிவைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டுமென்று இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு உன்னதத் திட்டம் தீட்டியுள்ளார்கள். அதன்படி, நாள் ஒன்றுக்கு 600 டன் திடக்கழிவைப் பயன்படுத்தி 14.85 மெகா வாட் திறன் கொண்ட மின் சக்தியாக மாற்றும் திட்டம் பெருங்குடியில் நிறைவேற்றப்படும். இது ஒரு ஆஸ்திரேலிய தொழில்நுட்ப உதவியுடன் "நிறுவி, சொந்தமாக்கி, நிர்வகிக்கும்" BOOT என்ற அடிப்படையில் நிறுவப்படும். இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய உன்னதத் திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி சென்னை நகரில் நிறைவேற்றப்படும் வெள்ள நிவாரணப் பணிகள் சிலவற்றை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் சென்னை மாநகரில் 10 நாட்களாக தொடர்ந்து மழை. இதன் காரணமாக, தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கி, பெரும்பாலான சாலைகள், பெரிதும் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சாலை வழியாகவும், வான் வழியாகவும் பார்வையிட்டார்கள். ஆய்வுக்குப் பின்பு, அம்மா அவர்கள் பழுதடைந்த சாலைகளை உடனடியாக சீர் செய்யவும், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டார்கள். மேலும் எதிர்காலத்தில் இத்தகைய வெள்ள பாதிப்புகள் ஏற்படுவதை முழுமையாகத் தடுக்க திட்டம் ஒன்றைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, சென்னை மாநகராட்சி, ரூபாய் 159 கோடியே 30 இலட்சம் மதிப்பில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருக்க, 25 கிலோமீட்டர் நீளத்திற்கு, 95 இடங்களில் புதிய வடிகால்கள் கட்டப்படும்.

16 மழைநீர் வடிகால்கள் தூர் வாரப்படும். இதற்கு ரூபாய் 16 கோடி செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூபாய் 33 கோடியே 64 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளில் மழைக் காலங்களில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை குடிநீர் வடிகால் வாரியம் சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 41 ஆயிரத்து 239 ஆள்நுழைவாயில்களில் தூர் வாரியுள்ளது. 1 இலட்சத்து 54 ஆயிரத்து 559 மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்களில் அடைப்புகள் வெளியேற்றப்பட்டன. 98 ஆயிரத்து 158 மீட்டர் நீளத்தில் கழிவுநீர்க் குழாய்கள் சுத்தம் செய்யப்பட்டன. பெரிய அளவிலான கழிவுநீர்க் குழாய்களில் 1450 மீட்டர் நீளத்திற்கு தூர் வாரப்பட்டுள்ளது. இதற்காக, ரூபாய் 55 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில், புளியந்தோப்பு பகுதியிலுள்ள கோவிந்தபுரம், வீரா செட்டித் தெரு, லால் சிங் தெரு, பார்த்தசாரதி தெரு ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடையில் அடைப்புகளை அகற்றி, கழிவு நீர் தடையின்றி செல்ல பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மே மாதம் 2003-ல் முடிவடையும்.

ரூபாய் 58 இலட்சம் செலவில், பூங்கா நகர் பகுதியில் உள்ள டிகாஸ்டர் சாலை, அம்மை அம்மாள் தெரு, நாச்சார அம்மாள் சந்து ஆகிய பகுதிகளில், கழிவுநீர் செல்லும் அமைப்புகள் மேம்படுத்தப்படும். தேவையான இடங்களில் புதிய கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு, புரசைவாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கழிவுநீர் ஏற்று நிலையத்தில் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஆகஸ்ட் 2003-ல் முடிவடையும்.

ரூபாய் 5 கோடியே 93 இலட்சம் செலவில், இராயபுரம் பகுதியில் உள்ள கும்மாளம் அம்மன் கோவில் தெரு, ஜீவரத்தினம் சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை மார்க்கெட் ஆகிய பகுதிகளில் புதிய கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை மூலம் இப்பகுதிகளில் உள்ள கழிவுநீர், புதிதாக அமைக்கப்பட்டு வரும் காசிமேடு கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் சேகரிக்கப்பட்டு, அங்கிருந்து கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படும். இப்பணிகள் முடிவடைந்தவுடன்



வடசென்னை காசிமேடு பகுதியில் தற்போது கழிவுநீர் கடலில் கலப்பது முற்றிலுமாகத் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

நகராட்சிகள். மாநிலத்தின் மக்கள் தொகையில் 44 சதவிகித மக்கள் நகரப் பகுதிகளில் வாழ்வதால், நாட்டிலேயே அதிக அளவில் நகரப் பகுதிகளைக் கொண்ட முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. நடப்பாண்டில், நகராட்சி நிர்வாகத் துறை மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலோடு செயல்படுத்தப்படும் பணிகளைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே குறிப்பிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், 'நகர்ப்புற உள்ளாட்சிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்பது முன்னுரிமைப் பணியாகும். இந்த நோக்கத்தை அடையும் வகையில், ரூபாய் 844 கோடி மதிப்பீட்டில், அம்பத்தூர், திருவொற்றியூர், காஞ்சிபுரம், ஆம்பூர், இராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை, திருப்பூர், தாம்பரம், பல்லாவரம், ஆவடி, ஈரோடு, திருவாரூர், வேலூர், செங்கற்பட்டு ஆகிய நகராட்சிகளிலும், கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாநகராட்சிப் பகுதிகளிலும், புதிய பாதாளச் சாக்கடைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

(2) ரூபாய் 36 கோடியே 20 இலட்சம் செலவில், மகளிர் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 5 மாநகராட்சிகள் மற்றும் 102 நகராட்சிகளில் 905 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்படும்.

(3) ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில், உபயோகத்தில் இல்லாத, பழுதடைந்த 350 கழிப்பறைகள் பழுது பார்க்கப்படும். இதற்காக அரசு மானியம் ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சம் வழங்கப்படும்.

(4) நகர்ப்புறங்களில் உள்ள 700 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 7,000 மகளிர்க்கு சுயமாகத் தொழில் தொடங்க, ரூபாய் 3 கோடியே 54 இலட்சம் கடனுதவி வழங்கப்படும். இதில் ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் அரசு மானியமாகும்.

(5) சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 5,000 நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், சுய தொழில் தொடங்க, ரூபாய் 13 கோடி தனி நபர்க் கடன் அளிக்கப்படும். இதில் ரூபாய் 2 கோடியே 52 இலட்சம் அரசு மானியமாகும்.

(6) திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நகர்ப்புறங்களில் உள்ள 10,000 பயனாளிகளுக்குத் திறன் மேம்படுத்தும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதில் 30 விழுக்காடு பயனாளிகள் பெண்கள் ஆவார்கள். தொலைக்காட்சிப் பெட்டி, விசிஆர், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷாக்கள், குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றைப் பழுதுபார்த்தல், கணினிகளைப் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் இதர மெக்கானிக் பணிகளை முன்னிறுத்தி இப்பயிற்சிகள் அளிக்கப்படும்.

(7) தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 24 கோடியே 40 இலட்சம் செலவில், 1456 குடிசைப் பகுதிகளில், சாலைகள், வடிகால்கள், தெரு விளக்குகள், குடிநீர் வசதி, கழிப்பிடங்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

(8) குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 2 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டில், குடிசைப் பகுதியில் வசித்து வரும் 1,510 குடும்பங்கள் பயனடையும் வகையில், அவர்களது குடியிருப்புகள் மேம்படுத்தப்படும்.

(9) மாவட்டத் தலைநகரங்களில், புதிய பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது ஒரு மிகச் சிறந்த திட்டம். நகர்ப் பகுதியில் மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்டத் தலைநகரங்களிலுள்ள அனைத்து மாவட்ட நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் அதற்கான ஆய்வுகள் நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10) ரூபாய் 17 கோடி செலவில், எல்காட் நிறுவனம் மூலம், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்குக் கூடுதலான கணினிகளும், மென்பொருள்களும் வழங்கப்படும்.



(11) 11-வது நிதிக் குழு பரிந்துரையின்படி ரூபாய் 38 கோடியே 67 இலட்சம் மானியமாக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும்.

(12) ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூபாய் 20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

(13) நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, உரக் கிடங்கு அமைப்பதற்கு நிலம் வாங்க, ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் நிதி வழங்கப்படும்.

(14) உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2 தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2004-ல் முடிவடையும். உலக வங்கி உதவியுடன், ரூபாய் 750 கோடி திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-3 செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 5-35

பேரூராட்சிகள். பேரூராட்சிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்திட, நடப்பாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலோடு, பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(1) ரூபாய் 21 கோடி மதிப்பீட்டில், 300 கிலோ மீட்டர் மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கப்படும்.

(2) மாநில நிதி ஆணைய சமன்பாடு நிதியிலிருந்து, பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 10 கோடி வழங்கப்படும்.

(3) ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 20 பேரூராட்சிகளில், ஆண்களுக்காக 20 ஒருங்கிணைந்த துப்பரவு வளாகங்கள் அமைக்கப்படும்.

(4) ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில், 306 பேரூராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

(5) ரூபாய் 8 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில், ஒரத்தநாடு, புதுவயல், ஆலம்பாளையம், லால்குடி, அன்னூர், முசிறி, திருக்காட்டுப்பள்ளி மற்றும் ஜலகண்டாபுரம் ஆகிய 8 பேரூராட்சிகளில், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

(6) ரூபாய் 7 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டில், ஆண்டிப்பட்டி, கிள்ளியூர், பெண்ணாகரம், வெள்ளலூர், சின்ன சேலம், கயத்தாறு, பவானிசாகர், டி. கல்லுப்பட்டி போன்ற 28 பேரூராட்சிகளில், வணிக வளாகங்கள், சமுதாயக் கூடங்கள், பேருந்து நிலையங்கள் கட்டப்படும்.

(7) மாநகரத் திட்டத்தின்கீழ் (Mega City Programme) ரூபாய் 7 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில், செம்பாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், பீர்க்கன்கரணை, மாங்காடு, சிட்லபாக்கம், அனகாபுத்தூர், பம்மல் மற்றும் திருநின்றவூர் ஆகிய 9 பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

(8) ரூபாய் 8 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில், உள்ளகரம்-புழுதிவாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

ஊரக வளர்ச்சித் துறை. ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12,618 ஊராட்சிகளுக்கும், ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு கதிர் அடிக்கும் களம், ஒரு குளம் அதோடு மட்டுமல்லாமல் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம், மகளிர் ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம், அதோடு கிராம அலுவலர் கட்டடம் இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லா ஊராட்சிகளுக்கும் அந்தத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அந்தத் திட்டம் முறையாக நடைபெற்றுக்கொண்டுவருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லா ஊராட்சிகளிலும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு ஒருங்கிணைந்த சுகாதார வளாகமும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குண்டான கட்டடமும் கதிர் அடிக்கும் களம், குளம், கிராம அலுவலர் கட்டடமும் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் நிறைவேற்றித் தரப்பட வேண்டுமென்ற உன்னதத் திட்டத்தைத் தந்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே கிராம மக்களின்



வாழ்க்கை வளம் அடைய வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விருப்பம். மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பம் நிறைவேறும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டு ஊரக வளர்ச்சித் துறை 3 இலட்சத்து 68 ஆயிரத்து 321 பணிகளைச் செய்து முடித்துள்ளது. இது எந்த ஆண்டிலும் செய்யாத ஒரு மிகப் பெரிய சாதனையாகும் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் வழக்கமான ஆண்டு ஒதுக்கீடு ரூபாய் 165 கோடியே 43 இலட்சம் ஆகும். இத்திட்டத்தை, கடந்த நிதி ஆண்டில், ஊரக வளர்ச்சித் துறை சிறப்பாகச் செயல்படுத்தியதால், கூடுதலாக ரூபாய் 46 கோடியே 17 இலட்சம் தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டைக் காட்டிலும் 28 சதவீதம் கூடுதலாகும். மேலும் ரூபாய் 62 கோடியே 41 இலட்சம் மதிப்புள்ள 52 ஆயிரத்து 893 மெட்ரிக் டன் அரிசியை மத்திய அரசு கூடுதலாக வழங்கியுள்ளது. இது, இத்திட்டத்தின்கீழ் இதுவரை எந்த ஆண்டும் நடைபெறாத ஒரு மிகப் பெரிய சாதனையாகும் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக வழக்கமான ஒதுக்கீடான ரூபாய் 27 கோடியே 13 இலட்சத்துடன் கூடுதலாக ரூபாய் 5 கோடியே 92 இலட்சம் நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இதுவும் இதற்கு முன்பு எப்போதும் தமிழகத்தில் இதுவரை இல்லாத ஒரு சாதனையாகும்.

பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட செயல்பாடு குறித்து ஆராய, மத்திய அரசால் திருவனந்தபுரத்தில் உள்ள மேலாண்மை வளர்ச்சி மையம், Centre for Management Development நியமிக்கப்பட்டது. இத்திட்டத்தை அகில இந்திய அளவில் சிறப்பாகச் செயல்படுத்தும் முன்னோடி மாநிலங்களில் முதலிடத்தை தமிழகம் பெற்றுள்ளது என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆய்வு மையத்தின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாட்சிக்கு இது ஓர் அத்தாட்சி, அம்மாவின் தலைமைக்கு

மற்றுமொரு அங்கீகாரம் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-40

பிரதம மந்திரி கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தினை, தமிழகம் சிறப்பாகச் செயல்படுத்தியதற்கு ரூபாய் 35 கோடி கூடுதல் ஒதுக்கீடாக மத்திய அரசு வழங்கியுள்ளது. இது மத்திய அரசின் வழக்கமான ஆண்டு ஒதுக்கீடான ரூபாய் 80 கோடியைவிட 44 சதவிகிதம் கூடுதலாகும். நாடு முழுவதும், இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் சாலைப் பணிகளை ஆய்வு செய்வதற்கு மத்திய அரசால் தேசிய தரக் கட்டுப்பாட்டு கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழகத்திற்கு வந்து 353 பணிகளை நேரடியாக சோதனை செய்தனர். இதில் 92 சதவீதப் பணிகள் மிகச் சிறந்தவையாக உள்ளன என்று சான்று அளித்துள்ளனர். மேலும் அகில இந்திய அளவில் ஊரகச் சாலைகளின் தரத்தில் தமிழகமே முதல் இடத்தைப் பெறுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு இதயதெய்வம் முதல்வர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலே முதல் மாநிலமாக மாற்றுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றி என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் துறைகளிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் இலக்கு. இந்த இலக்கினை அடையும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை செயல்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஒப்புதலோடு மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(1) ரூபாய் 50 கோடி செலவில் கிராமக் குளங்கள் புனரமைக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.



(2) சுய உதவிக் குழுக்கள் மேற்கொள்ளும் தொழிலை வெற்றிகரமாக நடத்திட தொழில் தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறை பின்பற்றப்படும். கைத்தறி மற்றும் நெசவு, மூலிகைச் செடிகள் பயிரிடுதல், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுதல், தரிசு நில மேம்பாடு, கைவினைப் பொருட்கள் தயாரித்தல், மீன் வளர்ப்பு ஆகிய துறைகளில் தொழில் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

(3) கைத்தறி மற்றும் நெசவுத் துறையுடன் இணைந்து 13 மாவட்டங்களில் உள்ள 25 ஆயிரம் நெசவாளர் குடும்பங்கள் பயன் பெறும் விதத்தில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

(4) ஊரக உற்பத்திப் பொருளின் நேரடி விற்பனைக்கு உதவும் வகையில் "ஊரகச் சந்தை" என்ற இணையதளம் ஏற்படுத்தப்படும்.

(5) சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் மண்டல அளவிலான கைவினைப் பொருட்காட்சிகள் நடத்தப்படும்.

(6) ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் 385 மகப்பேறு மருத்துவமனைகள் ரூபாய் 3 கோடியே 85 இலட்சம் செலவில் கட்டித் தரப்படும்.

(7) ஊரக மக்கள், குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்கள் பயன்பெறும் வகையில் நடப்பு ஆண்டில் 31 ஆயிரத்து 453 தொகுப்பு வீடுகள் புதிதாகக் கட்டித் தரப்படும். இதற்கு ரூபாய் 100 கோடியே 65 இலட்சம் செலவிடப்படும்.

(8) குடியிருக்கத் தகுதியில்லாத 16 ஆயிரத்து 164 கச்சா வீடுகள் குடியிருக்கத் தகுந்த வீடுகளாக மேம்படுத்தப்படும். இதற்கு ரூபாய் 16 கோடியே 16 இலட்சம் செலவிடப்படும்.

(9) கிராமப்புற மக்களுக்கு, வேலைவாய்ப்பளிக்கவும், உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவும், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 1 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

(10) ஆர். எஸ். மங்கலம், கமுதி மற்றும் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்தம் ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் செலவில் ஒன்றிய அலுவலகங்கள் கட்டித் தரப்படும்.

(11) வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பெரியகுளம், தென்காசி மற்றும் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களைப் பழுதுபார்க்க ரூபாய் 32 இலட்சம் செலவிடப்படும்.

(12) ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் கணிப்பொறி வசதி மேம்பாட்டிற்காக ரூபாய் 3 இலட்சத்து 77 ஆயிரம் செலவிடப்படும்.

(13) கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுர மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களுக்கு ரூபாய் 45 இலட்சம் செலவில் குடியிருப்புக் கட்டடம் கட்டித் தரப்படும்.

(14) 2 ஆயிரத்து 937 கிலோ மீட்டர் ஊரகச் சாலைகள் ரூபாய் 367 கோடியே 22 இலட்சம் செலவில் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(15) இரப்பர் கலந்த தார்ச் சாலைகள் அமைக்கும் பணி ஒவ்வொரு மாவட்டத்திலும் பரிட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்படும்.

(16) தூத்துக்குடி, திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பரிட்சார்த்த முறையில் நிலக்கரி சாம்பல் கலந்த Concrete சாலைகள் அமைக்கப்படும்.

(17) ரூபாய் 141 கோடியே 95 இலட்சம் செலவில் 6 ஆயிரத்து 309 மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்படும்.

பிற்பகல் 5-45

(18) முழு சுகாதாரத் திட்டம் 22 மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டம் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களுக்கு சுமார் ரூபாய் 120 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் இந்தியாவிலேயே அனைத்து மாவட்டங்களிலும், முழு சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் முதல் மாநிலம் என்ற சிறப்பு தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(19) ஊரகப் பகுதிகளில் தெரு விளக்கு மற்றும் குடிநீர் பம்புகளை இயக்குவதற்கு மரபுசாரா எரிசக்தி பயன்படுத்தப்படும். சூரிய சக்தியால் இயங்கும் ஆயிரம் தெருவிளக்குகள் பரிசோதனை அடிப்படையில் நிறுவப்படும்.



(20) உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் நிர்வாகத் திறனை வளர்க்கும் வகையில் பயிற்சி வழங்கப்படும். ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு படிப்படியாக கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படும்.

(21) தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தின் பயன் கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டுமென்று, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் video conferencing மூலம் தொடர்பு கொள்ளும் வசதியினை ஏற்படுத்தித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(22) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 30 ஆயிரம் மகளிர்க்கு தொழில் முனைவோர் பயிற்சி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

(23) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த வேலையில்லாத 10 ஆயிரம் ஊரக இளைஞர்களுக்கு ரூபாய் 29 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும்.

(24) ரூபாய் 63 கோடி மதிப்பீட்டில் 6 ஆயிரத்து 309 சிறு பாசனக் குளங்கள் தூர் வாரப்படும்.

(25) ரூபாய் 39 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் 6 ஆயிரத்து 309 கதிர் அடிக்கும் களங்கள் அமைக்கப்படும்.

(26) ரூபாய் 63 கோடியே 9 இலட்சம் செலவில் 6 ஆயிரத்து 309 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்டித் தரப்படும்.

(27) மாநில அளவில் ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் முதல் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இதில், முதலிடம் வகிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(28) ரூபாய் 33 கோடியே 31 இலட்சம் செலவில் 4 ஆயிரத்து 758 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

(29) ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில், இனம் பிரிக்கப்படாத சாலைகள் மேம்படுத்தப்படும்.

(30) கிராமங்களில் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்த, பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தை முழுமையாகக் குறைத்தல், நீர் நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தும் ஊராட்சிகளுக்கு கிராம சுகாதார விருது வழங்கப்படும். விருதுடன் ஊக்க நிதியும் வழங்கப்படும். இதற்காக ரூபாய் 75 இலட்சத்தை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாமன்றத்தில் மற்றுமொரு செய்தியைப் பதிவு செய்ய விழைகிறேன். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களை நாடி மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். முதல் கட்டமாக தேனி மாவட்டத்தில் ஆரம்பித்து, மதுரை மாவட்டத்தில் முடித்து 5 மாவட்டங்களும், இரண்டாவது கட்டமாக கடலூர் மாவட்டத்தில் ஆரம்பித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் தனது சுற்றுப்பயணத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள். இந்த விழாக்களில் நாங்கள் கண்ட மக்கள் சக்தி தமிழக மக்களின் உள்ளத்தில் தக்க சிம்மாசனம் இட்டு, வீற்றிருப்பவர் தாங்கள் ஒருவர்தான் என்பதைப் பறைசாற்றுகிறது. இலட்சோப இலட்சம் மக்கள் தங்கள் வருகையை அவர்களது இல்ல விழாக்களாகவே கொண்டாடினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களின் மாவட்ட சுற்றுப்பயணங்களில் நிகழ்ந்திட்ட அற்புதங்கள் பலப் பல. ரூபாய் 4 ஆயிரத்து 794 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினீர்கள். முடிவுற்ற வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தீர்கள். 3 இலட்சத்திற்கும் மேலான ஏழை எளிய ஊனமுற்ற மக்களுக்கு ரூபாய் 162 கோடி மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகளை வாரி வழங்கினீர்கள். இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். தங்களைக் காண, அலைகடலென, கடல் வெள்ளம் போல் மக்கள் கூடினார்கள். இந்த மக்கள் வெள்ளம், இனி என்றென்றும், மாண்புமிகு அம்மா அவர்கள் பக்கம்தான் என்பதை இந்த நாட்டுக்குப் பறைசாற்றுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)



"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

என்று தமிழ்மறை சொல்கிறபடி வெல்லும் சொல் கூறும் வித்தகத் தலைமை மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களுக்கு ஆகாயம் தலை வணங்கும்; அலைகடலும் உங்கள் பெயர் முழங்கும்; தென் பொதிகைத் தென்றல் உங்களுக்கு வாழ்த்துப் பாடும்; நிகரற்ற அறிவு, நெஞ்சில் துணிவு, சிந்தனைத் தெளிவு, அன்னை மனக் கனிவு, ஏழைகள்பால் பரிவு, எளியோர்க்கும் உறவு, இன்னும் வரையறுத்துச் சொல்ல இயலாத வகை வகையான பண்பாடுகளின் பெட்டகமாக விளங்குகின்ற எங்கள் தாயே, நான் உங்கள் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 5-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் பேசும்போது சில நகராட்சிகளில் ஆணையாளர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 102 நகராட்சிகள் உள்ளன. தற்பொழுது இரண்டாம் நிலை நகராட்சிப் பணியில் 22 பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்படி 22 பணியிடங்களையும் நிரப்புவதற்கு தமிழ்நாடு தேர்வாணையக் குழுவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதற்கான தேர்வுகள் நடந்து முடிவடைந்த நிலையில் உள்ளன. தேர்வின் முடிவுகளின் அடிப்படையில் 22 இரண்டாம் நிலை நகராட்சி ஆணையாளர் பணியிடங்கள் அரசால் நிரப்ப ஆணை வெளியிடப்படும். எனவே தற்பொழுது ஆணையாளர் இல்லாத நகராட்சிகளில், நகராட்சிப் பொறியாளர் மற்றும் மேலாளர்கள் கூடுதல் பொறுப்பை கவனித்து வருகிறார்கள். அந்தத் தேர்தல் ஆணையத்தின் முடிவுக்குப் பிறகு, உடனடியாக நகராட்சி ஆணையாளர்கள் பணி நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேர்வாணைக் குழுவின் மூலம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** தேர்வாணைக் குழுவின் மூலம் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் மேம்பாலப் பணி தொடங்குவது பற்றி சட்டமன்ற உறுப்பினர் அவையில் ஒரு கேள்வியை வைத்தார்கள். பெரம்பூர் மேம்பால கட்டுமானப் பணி குறித்து அரசு விசாரணைக் குழு அமைத்து, குழுவின் முடிவறிக்கை அரசின்

பரிசீலனையில் உள்ளது. அதன் பரிந்துரையின் அடிப்படையில் இதுகுறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு, சென்னை மாநகராட்சியில் இந்த ஆண்டு 13.62 கி.மீ. நீளத்திற்கு 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17 தார்ச் சாலைகள் Concrete சாலைகளாக மாற்றப்படும். இதில் வியாசர்பாடியில் உள்ள கணேசபுரம் மற்றும் சுந்தரபுரம் சாலைகளும் அடங்கும். இச்சாலைகளுக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கி செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்கா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வினாயகமூர்த்தி அவர்கள், குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன, உடனடியாக அகற்றவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாநகராட்சி நிருவாகம் முழு முயற்சி எடுத்து அவர் குறிப்பிடுகின்ற இடத்தில் பொதுவாக சுகாதாரம், துப்புரவு, தூய்மை இவை மூன்றையும், இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தலையாயக் கொள்கையாகக் கடைப்பிடித்து--சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை முழுமையாக துப்புரவையும், தூய்மையையும் குறிப்பாக பிளாஸ்டிக் பொருட்களை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டுமென்றும் தரம் பிரிக்க வேண்டுமென்றும், குப்பைகளை மக்கச் செய்யவேண்டுமென்றுதான் இந்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் தலையாயக் கொள்கை என்ற அடிப்படையில்--செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கேள்விக்கு, இந்த அரசு நிச்சயமாக துரிதப்படுத்தி குப்பைகளை அப்புறப்படுத்தும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு அரிய கருத்துக்களை இங்கே தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போதே, அவர்கள் குறிப்பிடும்போதே, நானும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பதில் அளித்துள்ளோம்.



பிற்பகல் 5-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மானியத்தில் 232 வெட்டுத் தீர்மானங்களையும் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தில் 228 வெட்டுத் தீர்மானங்களையும் மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திற்கும், தனித் தனியே பதிலளிக்க எனக்கு விருப்பம் இருந்தாலும், காலத்தின் அருமை கருதி, சில வெட்டுத் தீர்மானங்களுக்கு மட்டும் பதிலளிக்க விரும்புகிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களில் பெரும்பாலானவை குடிநீர் வசதி கோருதல், சாலைகள் அமைத்தல், பொதுச் சுகாதாரம், பாதாளச் சாக்கடை, தெரு விளக்கு அமைத்தல், பேருந்து நிலையம் அமைத்தல், கழிப்பிடங்கள் கட்டுதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், சிறு பாலம் அமைத்தல், குளம் தூர் வாருதல், வணிக வளாகம், மகப்பேறு மருத்துவமனைகள் கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளைக் கேட்டுக் கொடுக்கப்பட்டவையாகும். மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின்கீழ் சாலைகள், சிறுபாலங்கள், கழிப்பறைகள், பேருந்து நிலையங்கள், தொகுப்பு வீடுகள், வணிக வளாகங்கள் போன்றவை நடப்பு ஆண்டிலும் மேற்கொள்ளப்பட உள்ளன.

குடிநீர் வழங்குவது சம்பந்தமாகவும் மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் கூறியுள்ள இதர கோரிக்கைகள் சம்பந்தமாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே எனது உரையில் விவரமாக பதிலளித்து இருக்கின்றேன். எனவே இதனையே வெட்டுத் தீர்மானங்களின்மீது எனது பதிலாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 180

மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வீராணம் திட்டம் துரிதப்படுத்தப் படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டதாகத் தெரிகிறது. தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகம், ஆய்வு அறிக்கையைக் கொடுத்திருக்கின்றன. அந்த ஆய்வு அறிக்கைகளை அவையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அது சம்பந்தமாக 4 File-களாக விடப்பட்ட டெண்டர் ஆவணங்கள் அனைத்தையும் அவையிலே வைத்து, அதுசம்பந்தமாக Board Meeting Minutes-ஐயும் இந்த அவையிலே வைக்கவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் வைப்பாரா? எப்போது வைக்க இருக்கிறார் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 33, (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) பதில் சொல்ல வேண்டியதில்லை. பதில் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. (குறுக்கீடு) பதில் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் கிடையாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் வலியுறுத்துகிறோம். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அவ்வாறு பதில் சொல்ல வில்லையென்றால் அந்தப் போக்கினைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 33-ல் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண் 33-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,005,08,09,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 545,00,03,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.276,22,87,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை, திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய 'வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. திருமதி டி. யசோதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

*பிற்பகல் 6-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 40-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 1,846,50,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 12,84,51,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 6-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

221. போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் ஆய்வு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

222. மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம்—மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

223. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம்— மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிர்வாகச் செயல் திறன் பற்றிய குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

224. மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

225. ஊரக வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

226. உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

227. போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

[2003 ஏப்ரல் 29

228. மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2001—2003)

229. மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2001—2003)

230. மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2001—2003)

231. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2001—2003)

232. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பதாவது அறிக்கை. (2001—2003)

233. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001—2003)

234. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2001—2003)

235. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2001—2003)

236. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2001—2003)

237. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2001—2003)

238. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2001—2003)

239. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2001—2003)

240. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து எட்டாவது அறிக்கை. (2001—2003)

241. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2001—2003)

242. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை. (2001-2003)



2003 ஏப்ரல் 29]

243. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை. (2001—2003)

244. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை. (2001—2003)

245. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை. (2001—2003)

246. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை. (2001—2003)

247. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை. (2001—2003)

248. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை. (2001—2003)

249. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினொன்றாவது அறிக்கை (2001—2003)

250. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பன்னிரண்டாவது அறிக்கை. (2001—2003)

251. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதிமூன்றாவது அறிக்கை. (2001—2003)

252. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

253. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (இருபதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

# இணைப்பு I

(93ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை 33

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2003-2004

**முகவுரை**

நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படையான குடிமைப் பணிகளை நிறைவேற்றுதல், ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல் ஆகியவை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணிகளாகும்.

கிராம, நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் குடிநீர் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள 15 அம்சத் திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும்.

**I. நகராட்சி நிர்வாகம்**

1. 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நிர்வாகம் இத்துறையின் பொறுப்பில் உள்ளது. கடந்த ஆண்டுகளில் இம்மாநிலத்தின் நகர்ப்புற வளர்ச்சி அதிவேகமாக முன்னேறி வருவதால் இவ்வுள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் வழங்குவது, தேர்தல்கள் நடத்துவது மற்றும் அவற்றின் ஒட்டுமொத்த நிர்வாகத்தினை கவனிப்பது போன்ற பல்வேறு பணிகள் இத்துறையின் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இவ்வுள்ளாட்சி அமைப்புகள் சுகாதாரம், கல்வி, குடிநீர் உள்ளிட்ட 13 அத்தியாவசியப் பணிகளைச் செய்து வருகின்றன.

**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

2. நம் நாட்டில் அதிக நகர்ப்புறப் பகுதிகள் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 2001ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கட் தொகை 6.21 கோடியாகும். இதில் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளின் மொத்த மக்கட்தொகை

[2003 ஏப்ரல் 29

2.72 கோடியாகும். இது மாநில மொத்த மக்கட்தொகையில் 44 விழுக்காடாகும்.

இம்மாநிலத்தில் 6 மாநகராட்சிகளும், 102 நகராட்சிகளும், 611 பேரூராட்சிகளும் உள்ளன. நகராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:-

| வரிசை எண். | நிலை | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | 13 |
| 2. | தேர்வு நிலை | 28 |
| 3. | முதல் நிலை | 36 |
| 4. | இரண்டாம் நிலை | 25 |
| | மொத்தம் | 102 |

குடிநீர் வழங்குதல், சாலைகள் அமைத்து அதனைப் பராமரித்தல், திடக்கழிவு மேலாண்மை, தெருவிளக்கு மற்றும் சுகாதாரம், ஆகியவை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் அத்தியாவசியப் பணிகளாகும். சொத்து வரி என்பது நகர்ப்புற உள்ளாட்சிகளில் மிக முக்கியமான வருவாய் ஆகும். உள்ளாட்சிகளின் மொத்த வருவாயில் 33.10 விழுக்காடு சொத்து வரி மூலம் கிடைக்கிறது.

3. 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மற்றும் 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட வரவு-செலவு கீழ்க்கண்டவாறு உள்ளது:-

| உள்ளாட்சி அமைப்பின் வகைப்பாடு | 2002-2003 | | 2003-2004 | |
|---|---|---|---|---|
| | வரவு | செலவு | வரவு | செலவு |
| | | ரூபாய் கோடியில் | | |
| 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) | 374.16 | 390.95 | 411.58 | 430.05 |
| நகராட்சிகள் | 607.70 | 618.03 | 668.47 | 679.83 |



2003 ஏப்ரல் 29]

இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் வழங்குதல்

4. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 481.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை திருத்திய மதிப்பீட்டில் ரூ. 398.08 கோடியாகக் குறைக்கப்பட்டது. அரசு இத்தொகை முழுவதையும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவித்துள்ளது. இம்மானியத்தை மாதந்தோறும் விடுவிக்க அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மானியம் கீழ்க்கண்ட கோட்பாட்டின்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது:-

| | |
|---|---|
| நிதிப்பகிர்வு கோட்பாடுகளின் அடிப்படையில் | 87% |
| சேம நிதிக்கு | 2% |
| ஊக்க நிதிக்கு | 5% |
| சமன்பாட்டு நிதிக்கு | 6% |

**திடக்கழிவு மேலாண்மை**

5. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில் வலியுறுத்தியவாறு இந்த அரசு, நகர்ப்புற மக்களுக்கு சுத்தமான, சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலை அமைக்க அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. திடக்கழிவு மேலாண்மை என்பது ஆதார நிலையிலேயே மட்கும் மற்றும் மட்காத பொருட்களைப் பிரித்தெடுப்பது, மட்கும் பொருட்களிலிருந்து கலவை உரம் தயாரிப்பது, மட்காத கழிவுகளை மீண்டும் பயன்படுத்தும் பொருட்களாக மாற்றுவது. அதன் பின்னர் பாதுகாப்பான முறையில் அவற்றினை அப்புறப்படுத்துவது ஆகியன அடங்கியதாகும். மத்திய அரசு வெளியிட்டுள்ள 2000 ஆம் ஆண்டு திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின் அடிப்படையில் இது பற்றிய விளக்கமான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

6. தற்பொழுது மட்கும் மற்றும் மட்காதது என பிரிக்கப்பட்ட குப்பைகளை வீடு வீடாகச் சென்று சேகரிக்கும் பணி நகராட்சிகளிலுள்ள 3392 வார்டுகளில், 2,221 வார்டுகளிலும் மாநகராட்சிகளிலுள்ள 319 வார்டுகளில், 95 வார்டுகளிலும் நடைபெற்று வருகின்றது. இப்பணி 31-3-2004-க்குள் அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்படும்.

7. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தேவைக்கேற்றபடி பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் இல்லாததாலும், நவீன முறைகளைப் பயன்படுத்த முடியாததாலும், தொழிலாளர் பிரச்சினைகள் போன்றமையாலும் திடக்கழிவு மேலாண்மையைக் கையாளுவதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாணையின்படி திடக்கழிவு மேலாண்மையை தனியார் மயமாக்குவது வலியுறுத்தப்படுகிறது. திருப்பூர், ஆலந்தூர், இராஜபாளையம், தேனி-அல்லிநகரம், வேலூர், சிவகாசி, காரைக்குடி நகராட்சிகள் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை தனியார் மயமாக்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கழிவுகளிலிருந்து பாதுகாப்பான முறையில் உரம் தயாரித்தல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தயாரித்தல் ஆகியவற்றிற்கு வழிகாட்டு நெறிமுறைகள் தயாரிப்பது குறித்து ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்படவுள்ளது.

8. பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையின்கீழ் வழங்கப்படும் நிதியிலிருந்தும், டுபிட்கோ நிறுவனத்தின் நிதியின் மூலமும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் வாகனங்களின் எண்ணிக்கை 130 விழுக்காடு அதிகமாவதுடன் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேங்கும் குப்பைகள் 100 விழுக்காடு அப்புறப்படுத்தப்படும்.

9. குப்பைகளைப் பிரித்தல், வீடுவீடாகச் சென்று குப்பைகளைச் சேகரித்தல் போன்ற திடக்கழிவு மேலாண்மையின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் தெரு நாடகங்கள், மேடை நாடகங்கள் மற்றும் ஊர்வலங்கள் ஆகியவை பெருமளவில் நடத்தப்படும். மேலும் நகரப் பகுதிகளை தூய்மையாகவும் மற்றும் பசுமையாகவும் வைத்திருக்கத்தக்கவகையில், பிளாஸ்டிக் உபயோகத்தினை தடுத்தல், மட்கும் மற்றும் மட்காத பொருட்களைப் பிரித்தெடுத்து அவற்றைப் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தல், பொது இடங்களை தூய்மையாக வைத்திருத்தல்



போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்கள் பெருமளவில் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

10. நகர்ப்புறங்களில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளைச் சேகரித்து வைப்பதற்கு நிலம் தேவைப்படுகிறது. பெரும்பான்மையான நகராட்சிகளில் உரக்கிடங்கு அமைக்க தேவைக்கேற்ப நிலம் இல்லை. நகராட்சியின் நிதி நிலைமையும் போதுமானதாக இல்லாததால் நில எடுப்பிற்கான செலவினத்தை ஈடு செய்ய முடியவில்லை. நகராட்சிகளின் நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டு 2003-2004 ஆம் ஆண்டில் உரக்கிடங்குகள் அமைப்பதற்காக நிலம் வாங்குவதற்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்தல்**

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, 20 மைக்ரான்களுக்குக் குறைவான பிளாஸ்டிக் பொருட்களை நகராட்சி எல்லைக்குள் பயன்படுத்துவதைத் தடைசெய்து அனைத்து நகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. குப்பைகளை வீடு வீடாகச் சேகரிக்கும்போது மட்கும் மற்றும் மட்கா குப்பைகளாக பிரிப்பதுடன், பிளாஸ்டிக் பொருட்களை தனியாகப் பிரித்தெடுத்து மீண்டும் உபயோகப்படுத்துவதற்கு அல்லது நிலத்தின் பள்ளங்களை மூடுவதற்கு அனுப்பப்படுகிறது. தடையை மீறும் கடை உரிமையாளர்கள், வியாபார நிறுவனங்கள் போன்றவர்கள்மீது சில நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சிறிய அளவில் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஒழுக்கத்தினை நிலைநாட்டியுள்ளது.

**தற்போதுள்ள கழிப்பறைகளை மேம்படுத்துதல்**

12. நகராட்சிகளில் திறந்தவெளியை கழிப்பிடமாக உபயோகிப்பதைத் தடுக்கவும், சுத்தமான சுற்றுப்புறச் சூழலை உருவாக்கும் நோக்கில் தற்போது உபயோகத்தில் இல்லாத பழுதடைந்த கழிவறைகளை பழுது பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.50 கோடி செலவாகும். இதன் மூலம் பயன்படுத்த முடியாத 3.50 கழிப்பிடங்கள் பழுது பார்க்கப்படவுள்ளன. இதற்கு 2003-2004 ஆம் ஆண்டில் அரசு மானியமாக ரூ. 1.25 கோடி வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள தொகையினை நகராட்சிப் பொது நிதியிலிருந்து செலவிட

திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் நாள் ஒன்றுக்கு சுமார் 1.5 இலட்சம் மக்கள் பயனடைவர். மேலும் திறந்தவெளியைக் கழிப்பிடமாக உபயோகிப்பதைத் தடுத்து நிறுத்துவதுடன் நகரில் சுத்தமான சுற்றுப்புறச் சூழல் ஏற்படுத்தப்படும்.

**பதினோராவது நிதிக் குழு பரிந்துரைகள்**

13. 2003-2004 ஆம் ஆண்டிற்கான பதினோராவது நிதிக் குழு பரிந்துரையின்படி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (102 நகராட்சிகள், 6 மாநகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகள்) ரூ. 38.67 கோடி மானியம் வழங்கப்படவுள்ளது. இந்நிதி நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான தொடக்கக் கல்வி வசதி, அடிப்படை சுகாதார வசதி, பாதுகாப்பான குடிநீர் வசதி, தெருவிளக்குகள் அமைத்தல், துப்புரவுப் பணிகளான வடிகால் மற்றும் பாதாளச் சாக்கடை வசதி, இடுகாடு-சுடுகாடு பராமரித்தல், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் பொதுச் சொத்து ஆதாரங்களைப் பராமரித்தல் ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்படும்.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டம்**

14. நகரங்களில் பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 2003-2004 ஆம் நிதியாண்டில், மைய அரசு மற்றும் தமிழக அரசின் மூலம் ரூ. 20 கோடி இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 10 நகராட்சிகளில் 50 திட்டங்கள் எடுத்துச் செய்யப்படும்.

**மகாநகரத் திட்டம்**

15. 2003-2004 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர எல்லைக்குட்பட்ட 8 நகராட்சிகள் மற்றும் 9 பேரூராட்சிகளுக்கு வருவாய் தரத்தக்க திட்டம் மற்றும் சேவைப் பணிகளுக்கு மத்திய அரசு மற்றும் தமிழக அரசு மூலம் ரூ. 50 கோடி நிதியுதவி பெறப்படும்.

**மின்னணு ஆளுகை**

16. சேவைப் பணிகளைத் திறமையுடனும், விரைவாகவும் செயல்படுத்த அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன. கணிப்பொறி சேவைகள் மற்றும் இயக்குதலுக்காக கணிப்பொறி வல்லுநர்கள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



17. மேம்பட்ட கணினி தொழில்நுட்பத்தைக் கொண்டு பிறப்பு-இறப்பு, சொத்து வரி, குடிநீர்க் கட்டணம், நகராட்சி நிதிக்கணக்கு, வரி அல்லாத இனங்கள், தொழில் உரிமங்கள், கட்டட அனுமதி, பணியாளர் மேம்பாட்டு அலகு, திடக்கழிவு மேலாண்மை, அசையும், அசையாச் சொத்துக்களை நிர்வகித்தல், வசூல் மைய அலகு, வங்கிகள் அலகுகள் மற்றும் குறை தீர்க்கும் பிரிவுகள் ஆகிய அலகுகளுக்கு மென்பொருள் தயார் செய்யப்பட்டு அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் இதர அலகுகளான தொழில் வரி, வாகனங்கள் பராமரிப்பு, குடும்பக் கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் வாக்காளர் பட்டியல் ஆகியவற்றிற்கான கணினி மென்பொருள் தயார் செய்யப்பட்டு ஆய்வு நிலையில் உள்ளது. இவை அனைத்தும் நடப்பு ஆண்டில் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படும். மாநகராட்சிகள், நகராட்சிகள், நகராட்சி நிர்வாகத் துறை, பேரூராட்சிகள், பேரூராட்சிகள் துறை ஆகியவற்றிற்கு கூடுதலாக தேவைப்படும் கணினிகள், கணினி உபகரணங்கள் மற்றும் கணினி மென்பொருள் போன்றவை வாங்கும் பணி ரூ. 17.00 கோடி மதிப்பீட்டில் எல்காட் நிறுவனத்தின் மூலம் நடந்து வருகிறது. இவை நடப்பாண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் வாங்கி அமைக்கப்பட்டுவிடும். குடிமைப்பணிகள் கணினி தொழில் நுட்பத்தைக் கொண்டு சேவை மையங்கள் மற்றும் வங்கிகள் மூலமாக 10 நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இச்சேவை அனைத்து மாநகராட்சிகள் மற்றும் இதர நகராட்சிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் உள்ளன. இச்சேவை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் வரும் டிசம்பர் 2003-க்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் நாட்டிலேயே முதன்முதலாக, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் இயல்பு நிலை கணக்கு முறைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய பெருமை தமிழ்நாட்டைச் சாரும்.

**மழைநீர் சேகரிப்பு**

18. மழைநீர் சேகரிப்பு தொழில் நுட்பத்தைக் கொண்டு நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வரின்

15 அம்ச திட்டத்தின்கீழ் (இனம் 1 மற்றும் இனம் 7) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விழிப்புணர்வு முகாம்கள் வெற்றிகரயாக நடத்தப்பட்டு இதுவரை 1,46,565 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:—

| இனங்கள் | நகராட்சிகள் | மாநகராட்சிகள் | மொத்தம் |
| --- | --- | --- | --- |
| தனியார் கட்டடங்கள் | 90,982 | 22,067 | 1,13,049 |
| நிறுவனங்கள் வணிகக் கட்டடங்கள் மற்றும் மற்றவைகள் | 5,930 | 495 | 6,425 |
| அரசு கட்டடங்கள் | 5,616 | 1,439 | 7,055 |
| கோவில் குளங்கள் | 194 | 43 | 237 |
| ஏரிகள்/குளங்கள்/ ஊருணிகள் | 136 | 3 | 139 |
| பொதுக் குழாய்கள் | 16,571 | 3,089 | 19,660 |
| மொத்தம் | 1,19,429 | 27,136 | 1,46,565 |

19. புதிதாகக் கட்டப்படவிருக்கும் அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கென 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள பழையக் கட்டடங்களிலும் 11-10-2002 முதல் ஓர் ஆண்டுக்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்படுவதற்கு கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

20. இந்தத் திட்டம் வெற்றி பெற விழிப்புணர்வுத் திட்டங்கள் 2003-2004 ஆண்டிலும் தொடரப்படும்.

21. நீர் நிலை அமைப்புகளை புனரமைத்தல், சீரமைத்தல், புதுப்பித்தல் எனும் சிறப்புத் திட்டத்தின்கீழ், நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து கோயில் குளங்கள், ஏரிகள், குட்டைகள்



போன்றவற்றை தூர் வாருதல், நீராதாரங்களுடன் இணைத்தல், கரை அமைத்தல் போன்ற முறைகளின் மூலம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெள்ளநீர் தேக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கை**

22. 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் பெய்த தொடர் மழையினால் சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள நகராட்சிக்குட்பட்ட சுற்றுப்புறப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சாலைகள் மற்றும் இதர கட்டமைப்புகளுக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டன.

23. இந்நகரங்களில் மீண்டும் வெள்ளப்பெருக்கினால் சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு உடனடி நடவடிக்கையாக புதிய கழிவுநீர் வடிகால் அமைத்தல், ஏற்கெனவே பழுதடைந்துள்ள சாலைகளைச் சரிசெய்தல், திடக்கழிவு மேலாண்மை வேலைகள் ஆகிய பணிகள் இந்த ஆண்டு ரூ.33.64 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் இவ்வாண்டு செப்டம்பருக்குள் முடிக்கப்படும்.

24. நீண்டகால நடவடிக்கையின் மூலம், வெள்ளப்பெருக்கைத் தடுக்கும் பொருட்டு நகரங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள், குடிநீர் விநியோகத் திட்டம் ஆகியவை ரூ.490.38 கோடி மதிப்பீட்டில், அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

25. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது முன்னுரிமை நடவடிக்கைப் பணியாகும். இந்த நோக்கத்தை அடையும் வகையில் அம்பத்தூர், திருவொற்றியூர், காஞ்சிபுரம், ஆம்பூர், இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை, திருப்பூர், தாம்பரம், பல்லாவரம், ஆவடி, ஈரோடு, திருவாரூர், வேலூர், செங்கற்பட்டு ஆகிய நகராட்சிகளிலும், கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.844 கோடி மதிப்பீட்டில் 2003-2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

இம்மாநிலத்தில் மாவட்டத் தலைநகரங்களில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆய்வுப் பணிகள் இவ்வாண்டில் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டம் வரும் மூன்றாண்டுகளில் ரூ.800 கோடியில் நிறைவேற்றப்படும்.

மேற்கூறிய பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மற்றும் பிற நிதி நிறுவனங்களிலிருந்தும் நிதியுதவி பெறப்படும். மேலும் இத்திட்ட மதிப்பீட்டில் ஒரு பகுதி உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பிலும் ஈடு செய்யப்படும்.

**தெரு விளக்குகள்**

26. தெரு விளக்கு உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதில் தரக்கட்டுப்பாடு நியதிகள் கடைப்பிடிக்கப்படும். இதன் மூலம் மின்சக்தி சேமிப்பு செய்யப்படுவதுடன் தரமற்ற பொருட்கள் குறைவான மின் வெளிச்சம் போன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படும். பயனீட்டாளர்களுக்கு திருப்தி ஏற்படுத்துவதற்காகவும், செலவினத்தைக் குறைப்பதற்காகவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தெரு விளக்கு பராமரிப்பினை தனியார்மயமாக்குதல் ஊக்குவிக்கப்படும்.

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான கழிப்பறைகள்**

27. வாம்பே - நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) குறிப்பாக குடிசைப்பகுதிகளில் வசிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதார வசதிக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்படவுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.52.50 கோடி செலவில் 525 வளாகங்கள் (16 இருக்கைகள் கொண்டது) கட்டப்பட்டன. மக்கள் பிரதிநிதிகள், நகராட்சி, மாநகராட்சி ஆணையர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில் அதிக குடிசைப் பகுதிகள் பயனடையும் வகையில் சிறிய அளவிலான வளாகங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டது. 2003-2004-ல், 10 இருக்கைகளுடன்கூடிய சுகாதார வளாகங்கள் கட்டப்படவுள்ளன. ஒவ்வொன்றின் மதிப்பீடு ரூ.4 இலட்சமாகும். இதனால் சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கான நிலத்தேவை குறைகிறது. இவ்வாண்டில் ரூ.36.20 கோடி செலவில் 905 சுகாதார வளாகங்கள் கட்டப்படும். இதில் ரூ.18.10 கோடி மைய அரசின் மானியமாகும். மீதமுள்ள தொகை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து கடனாகப் பெறப்படும்.



இவற்றைப் பராமரிப்பதற்கு பயனாளிகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும்.

**நிதி ஒதுக்கீடு விவரம்**

| மொத்தக் கழிப்பிடங்கள் எண்ணிக்கை | மைய அரசு மானியம் | மாநில அரசு பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | |
| 905 | 18.10 | 18.10 | 36.20 |

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

28. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி போன்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு, சுயவேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு அளிக்கப்படும். நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 700 மகளிர் குழுக்களில் உள்ள 7,000 பெண்களுக்கு ரூ.1.77 கோடி மானியத்துடன்கூடிய ரூ.3.55 கோடி கடனுதவி அளிக்கப்படும். நகர்ப்புறத்தில் உள்ள 5,000 ஏழைகளுக்கு சுய தொழில் செய்வதற்கு ரூ.2.55 கோடி மானியத்துடன் கூடிய ரூ.13 கோடி கடனுதவி வழங்கப்படும். இதில் 30 விழுக்காடு மகளிர் ஆவர். இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் கலந்து ஆலோசித்து மேற்கொள்ளப்படும். 10,000 நகர்ப்புற ஏழைகளுக்கு ரூ.2.30 கோடியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதில் 30 சதவீதம் மகளிர் ஆவர். தொலைக்காட்சிப் பெட்டி, வி.சி.ஆர்., மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷா, குளிர்சாதனப் பெட்டி போன்றவை பழுதுபார்த்தல் மற்றும் இதர மெக்கானிக் பணிகளை முன்நிறுத்தி இப்பயிற்சிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு அளிக்கப்படும். கூலிக்கு வேலைவாய்ப்பு திட்டத்தில் சிறிய வடிகால் கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல், சத்துணவு மையங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல், சாலைகள், நடைபாதைகள், பூங்காக்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற பணிகள், நடப்பாண்டில் ரூ.2.75 கோடியில் செய்யப்பட்டு 2.50 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

29. இத்திட்டம் 1996-1997 முதல் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், வடிகால் கட்டுதல், தெருவிளக்கு

அமைத்தல், குடிநீர் விநியோகம், சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் ஒருங்கிணைக்கப்பட்ட துப்புரவுப் பணி செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு மையங்கள் உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இத்திட்டம் தேர்வு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும். குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மேலும் குடிசைப் பகுதிகளை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற குடியிருப்புப் பகுதியாக மாற்றும் நோக்கத்துடன் மேற்கூறிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

30. 2002-2003 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.19.27 கோடியில், ரூ.17.35 கோடி அடிப்படை வசதித் திட்டங்களையும் ரூ.1.92 கோடி (அதாவது மொத்தத் தொகையில் 10 விழுக்காடு) குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகளின்கீழ் புதிய குடியிருப்புகள் மற்றும் பழைய குடியிருப்புகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. இதனால் 960 குடும்பங்கள் பயனடையும்.

31. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.27.11 கோடி ஒதுக்கீட்டில் ரூ. 24.40 கோடி அடிப்படை வசதிப் பணிகளுக்காகவும், 10 விழுக்காட்டுத் தொகை, அதாவது ரூ.2.71 கோடி குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் குடிசைப்பகுதிகளில் வாழும், 1,510 குடும்பங்கள் பயனடையும்.

## II சென்னை மாநகராட்சி

1. சென்னை மாநகராட்சி சட்டம் 1919-ன்படி, சென்னை மாநகராட்சி தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. சென்னை மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோ மீட்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கட் தொகை 42.16 இலட்சமாகும்.

### பணிகள்

2. சென்னை மாநகரில் இது வரை இல்லாத அளவிற்கு 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 10 நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்ததின் காரணமாக, பல இடங்களில் மழை நீர் தேங்கி பெரும்பாலான சாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வட சென்னை மற்றும்



நகரின் பிற இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சாலை வழியாகவும், வான்வழியாகவும் பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து பாதிக்கப்பட்ட சாலைகளை உடனடியாக சீர் செய்யவும், நிரந்தரமாக சீரமைக்கவும், மழை நீர் வடிகால்கள் மற்றும் நீர் வழிகளைத் தூர் வாரவும் ஆணையிட்டார்கள். எதிர்காலத்தில் இத்தகைய வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சென்னை மாநகராட்சி ரூ.159.30 கோடி மதிப்பில் பல்வேறு மூலதன பணித் திட்டங்களைத் தீட்டி தற்போது அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### சாலைகள்

3. சென்னை மாநகராட்சி 222 கி.மீ பேருந்து வழி தடச்சாலைகளையும், 1900 கி.மீ. உட்புறச் சாலைகளையும் பராமரித்து வருகிறது. இதில், தண்ணீர் தேங்குவதாலும், கனரக வாகனங்கள் செல்வதாலும் அடிக்கடி ஏற்படும் சேதத்தைக் தடுக்கும் வகையில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றியமைக்கப்படவுள்ள 13.62 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் அடங்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி பேருந்து வழித் தடச்சாலைகள் இரப்பர் கலந்த தார்ச் சாலைகளாக மாற்றப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி நீண்டகாலம் பயன்படும் வகையில், மெருகேற்றப்படாத எளிதில் சேதமடையாத வெள்ளை கிரானைட் நடைபாதை ஓரக்கற்கள் மற்றும் கிரானைட் பலகைகள் பதிக்கப்பட்டு நடைபாதைகள் மேம்படுத்தப்படவுள்ளன. 2003-2004-ல் சாலைப் பணிகளுக்காக ரூ.100 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மழை நீர் வடிகால்கள்

4. சென்னை மாநகராட்சி சுமார் 804 கி.மீ நீளத்திற்கு மழை நீர் வடிகால்களை பராமரித்து வருகிறது. 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தொடர்ந்து பெய்த மழையினால் சாலையோரங்களில் மழைநீர் தேங்கி சாலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. மழைநீர் வடிகால்கள் குறித்து ஓர் ஆய்வு செய்யப்பட்டு, 95 இடங்களில் மழை நீர் வடிகால்கள் இணைப்புகள் விடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் 25 கி.மீ. நீளத்திற்கு புதிய மழை நீர் வடிகால்கள் கட்டப்படும். மழை நீர் சாலைகளில் தேங்காவண்ணம் மழைநீர் அதிக அளவுக்கு பூமிக்குள் செல்ல ஏதுவாக அனைத்து மழைநீர் வடிகால்களும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளாகச் செயல்படும் இந்த

நிதியாண்டில் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படவுள்ளன.

**நீர் வழிகளில் தூர்வாருதல்**

5. சென்னை எல்லைக்குட்பட்ட நீர்வழிகளில் 16 நீர்வழிகள் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளன. இவை 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டு மேம்படுத்தப்படும். இப்பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மழை நீர் சேகரிப்பு**

6. சென்னை மாநகராட்சி, பொது மக்களிடையே அவர்களது சொந்தக் கட்டடங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை அமைத்திட விழிப்புணர்வை ஏற்படுத்த ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மாநகராட்சி தனது அனைத்து கட்டமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. சென்னை நகரில் 38 கோயில் குளங்கள் உள்ளன. அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில், அருள்மிகு கங்காதீஸ்வரர் கோயில், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி கோயில் மற்றும் அருள்மிகு குருங்காளீஸ்வரர் கோயில் ஆகியவற்றைச் சார்ந்த நான்கு கோயில் குளங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள தெருக்களில் தேங்கும் மழை நீர், மழை நீர்க் கால்வாய்கள் மூலம் வந்து சேரும்படி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள 34 கோயில் குளங்களிலும் படிப்படியாக இந்து சமய அறநிலையத் துறையோடு ஒருங்கிணைந்து மழை நீர் வந்து சேரும்படி வழிவகைகள் செய்யப்படும்.

**பசுமை சென்னை**

7. சென்னை மாநகரை மேலும் பசுமையாக்கத் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன. சென்னை மாநகரின் சாலை மையத் தடுப்புகள் மற்றும் சாலைத் தீவுகள் போன்றவை அழகுபடுத்தப்படும். பிற அரசு துறைகளைச் சார்ந்த சாலையோர பயன்படாத நிலங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவை சிறந்த தோட்டக்கலை நிபுணர்களின் உதவியுடன் அழகுற எழிலூட்டும் பூங்காக்களாக மேம்படுத்தப்படும். இதற்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**திடக் கழிவு மேலாண்மை**

8. குப்பைகளை ஆதார நிலையிலேயே தரம் பிரித்துச் சேகரிக்கும் முறை மற்றும் குப்பை அறவே இல்லாத பகுதியாக மாற்றும் முறை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அப்பகுதி குடியிருப்போர் சங்கங்கள் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும். பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டுமிடங்களில் அடிப்படை வசதிகளான சாலைகள், மின் வசதி மற்றும் பொறியியல் பணிமனைகள் போன்றவை அமைத்து மேம்படுத்தப்படும். இதுபோன்று இரு குப்பை மாற்றுமிடங்களும் நவீனப்படுத்தப்படும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவகற்றல் மற்றும் மின் உற்பத்தி**

9. திடக்கழிவு அகற்றுதல் மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒரு தனியார் நிறுவனத்தின் மூலம் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் " கட்டி சொந்தமாக்கி நிர்வகிக்கும்" (Build, Own and Operate) அடிப்படையில் நிறைவேற்றப்படவுள்ளது. இதற்காக சென்னை பெரு நகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், 20 ஏக்கர் நிலத்தை 30 ஆண்டுகளுக்கு அந்நிறுவனத்திற்கு குறைந்த தொகைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கும். அந்த நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சி நாள்தோறும் வழங்கவுள்ள 600 மெட்ரிக் டன் குப்பையிலிருந்து 14.85 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி செய்யப்படும். குப்பையை எரிக்காமல் வாயுவாக மாற்றப்படும் தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான கட்டமைப்புகள் இரு ஆண்டுகளில் முடிக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**துப்புரவுப் பணியைத் தனியார் மயமாக்குதல்**

10. துப்புரவுப் பணித் திறனை மேம்படுத்தி அப்பணிக்கான செலவினத்தைக் குறைத்து சென்னை மாநகரைச் சுத்தமான நகரமாக்கும் நோக்குடன், முதற்படியாக மாநகராட்சி மண்டலங்கள் 5 (அண்ணாநகர்) மற்றும் 7 (நுங்கம்பாக்கம்) ஆகியவற்றிலும் மற்றும் உயர்நீதிமன்றம், சென்ட்ரல் ரயில் நிலையம் போன்ற சில தேர்வு செய்யப்பட்ட பகுதிகளிலும், துப்புரவுப் பணி தனியார் மூலம் குறைந்த செலவில் செயல்படுத்தப்படும். இதனால் தற்பொழுதுள்ள நிரந்தரப் பணியாளர்களுக்கு பணிப்பாதிப்பு ஏற்படாது. இத்திட்டம் படிப் படியாகப் பிற மண்டலங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**புதிய நவீன கட்டண பொதுக் கழிப்பிடங்கள்**

11. சாலை ஓரங்களில் குறிப்பாக, தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் பொது மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் முக்கியச் சாலை ஓரங்களில் பொதுமக்கள் அசுத்தம் செய்வதைத் தவிர்க்கும் நோக்குடன், சுத்தமான சுற்றுப்புறத்துடன் அழகிய தோற்றமுள்ள நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் சென்னை நகரில் அமைக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியிருந்தார்கள். அதன்படி நவீனக் கழிப்பிடங்கள் கட்ட சென்னை நகரில் 100 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில், முதற்கட்டமாக நகரின் பல்வேறு பகுதிகளில் நவீன வசதிகளுடனான 25 புதிய கட்டணக் கழிப்பிடங்கள், "கட்டி, சொந்தமாக்கி, நிர்வகித்து திரும்ப ஒப்படைக்கும்" அடிப்படையின்கீழ் (BOOT BASIS) உடனடியாகக் கட்டப்படும்.

**கால்நடைகளை அப்புறப்படுத்துதல்**

12. சென்னை நகரில் ஏறக்குறைய 13,000 கால்நடைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. பெரும்பாலான மாட்டுத் தொழுவங்கள் முறையாகப் பராமரிக்கப்படாமல், வைக்கோல் மற்றும் சாணம் நேரிடையாக மழைநீர் வடிகால்களிலும் கழிவு நீர் வாய்க்கால்களிலும் விடப்படுவதால், அடிக்கடி அவற்றில் அடைப்புகள் ஏற்படுகின்றன. மேலும் கால்நடைகள் சாலைகளில் கட்டுப்பாடின்றி திரிவதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதுடன் பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர். எனவே மழை நீர் மற்றும் கழிவு நீர் வாய்க்கால்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடனும், சென்னை மாநகரைத் தூய்மையாக வைப்பதை நோக்கமாகக் கொண்டும் தமிழ்நாடு நகர்ப்புற விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1997-ன்படி, சென்னை நகரில் கால்நடைகள் வளர்ப்பது தடை செய்யப்படும்.

**வருவாய் பெருக்கம்**

13. சென்னை மாநகராட்சியின் முக்கிய வருவாய் சொத்துவரி ஆகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் ஆலோசனையின்படி, அண்ணா பல்கலைக்கழகத்தின் உதவியோடு, சென்னை மாநகரிலுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை அவை கட்டப்பட்ட அளவு, கட்டடங்களின் உபயோகத் தன்மை ஆகியவற்றை மதிப்பிட செயற்கைக்கோள் உதவியுடன் செயல் திட்ட வரைபடம் (TAX MAPPING) தயாரிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சீரான சொத்து



வரி நிர்ணயிக்க முடியும். மேலும் சொத்து உரிமையாளர்கள் தாங்களே சொத்து பற்றிய விவரத்தை அறிவித்து அதன் மூலம் சொத்து வரி நிர்ணயிக்க இயலும். இதன் மூலம் சென்னை மாநகராட்சியின் சொத்து வரி வசூல் கணிசமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கம்பியில்லாத் தொடர்பு சாதனம்**

14. சென்னை மாநகராட்சியின் தகவல் தொடர்பு, அதிக அதிர்வெண் கொண்ட நவீன கம்பியில்லாத் தொடர்பு சாதனங்கள் கொண்டு மேம்படுத்தப்படும். பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் கம்பியில்லாத் தொடர்பு கை சாதனங்கள் (Wireless Hand Sets) வழங்கப்படும். 1000 கம்பியில்லாத் தொடர்பு கை சாதனங்கள் அலுவலர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும்.

**ரிப்பன் மாளிகையின் கட்டடக் கலையைப் பாதுகாத்தல்**

15. சென்னை மாநகராட்சியின் தலைமையிடமான ரிப்பன் மாளிகை, 1913 ஆம் ஆண்டு இந்திய-சாராசினிக் கலையம்சத்துடன் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் அழகுமிக்க மணிக்கூண்டு சிறந்த கலை அம்சமாகும். இது பழம்பெரும் சரித்திரப் புகழ் வாய்ந்த கட்டடமாகும். இக்கட்டடம் சுண்ணாம்புக் கலவையைக் கொண்டு கட்டப்பட்டதாகும். அண்ணா பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியுடனும், மாமல்லபுரம் அரசு சிற்ப கலைப் பள்ளியின் ஒத்துழைப்புடனும் ரிப்பன் மாளிகையின் கட்டடக் கலையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## III. மதுரை மாநகராட்சி

1. மதுரை மாநகராட்சி 51.85 சதுர கிலோமீட்டர் பரப்பளவும், 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, 9.23 இலட்சம் மக்கட் தொகையையும் கொண்டுள்ளது.

**சாலைப் பணிகள்**

2. 2003-2004 ஆம் நிதியாண்டில், 11-வது நிதிக்குழு மானியத்தின்கீழ் சாலை வேலைகளுக்காக ரூ.10 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 25 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 5.00 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதும் அடங்கும்.

**தெரு விளக்கு**

3. 2003-2004 ஆம் ஆண்டில், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து சாலைகளிலுள்ள 2000 குழல் விளக்குகளையும் மேலும் புறநகர்ப் பகுதியிலுள்ள 1000 குழல் விளக்குகளையும் ரூ.2.25 கோடியில், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் விநியோகம்**

4. 2003-2004 ஆம் நிதியாண்டில் 11-வது நிதிக் குழு மானியத்தின் கீழ், புதிய குடிநீர் விநியோக குழாய் அமைக்கவும் மற்றும் பழுதடைந்த குடிநீர்க் குழாய்களை மாற்றவும் ரூ.2.25 கோடியில் வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**இரண்டாவது பிரதான குடிநீர்க் குழாய் அமைத்தல்**

5. வடக்கு மண்டலத்தின் விநியோகத்திற்கு வைகை அணையிலிருந்து 600 மில்லியன் கன அடி தண்ணீர் கொண்டு வருவதற்கான உத்தேச திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மூலம் கலந்தாலோசகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதி உதவி இத்திட்டத்திற்காக கோரப்படும்.

**திடக்கழிவு மேலாண்மை**

6. மதுரை மாநகராட்சிப் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரிக்கும் முறையை இம்மாநகராட்சி நவீனப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக துருப்பிடிக்காத நவீன குப்பைத் தொட்டிகள் மற்றும் டம்பர் பிளேசர் ஊர்திகள் வாங்க ரூ.2 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**பயணிகள் தங்கும் விடுதி மற்றும் வணிக வளாகம்**

7. தெற்கு மண்டலப் பேருந்து நிலையப் பகுதியில், வணிக வளாகத்துடன் கூடிய பயணியர் தங்கும் விடுதி (யாத்ரி நிவாஸ்) மத்திய—மாநில சுற்றுலா நிதியின்கீழ் அமைக்கப்பட உள்ளது. வருமானத்தைப் பெருக்கும் வகையில் பயணியர் தங்கும் விடுதியுடன் வணிக வளாகமும் கட்டுவதற்கு ஆகும் ரூ.50 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்படவுள்ளது.



**மத்திய காய்கறி அங்காடி இடமாற்றம்**

8. கோயிலுக்கு அருகாமையில் நகரின் முக்கியப் பகுதியில் இயங்கிவரும் மத்திய காய்கறி அங்காடி கூடல் நகருக்கு இடமாற்றம் செய்வதற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் உத்தேச திட்ட மதிப்பீடு அறிக்கை ரூ. 39.90 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதனைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**சரக்கு வாகனம் நிலையம் அமைத்தல்**

9. சரக்கு உந்து நிலையம் ரூ.3.31 கோடி செலவில் கோவில் பாப்பாகுடி வருவாய் கிராமத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நில உபயோக மாற்றம் செய்ய விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மூலம் நிதி பெற்று செயல்படுத்தப்பட உள்ளது.

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

10. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க ஏதுவாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 500 ஏழை மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 140 பெண்களை உள்ளடக்கிய 14 மகளிர் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய கடனுதவி கூட்டு சுய தொழில் செய்ய வழங்கப்படும். சுய தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக, திறன் மேம்படுத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 2000/- செலவில் திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி 700 ஏழை பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். அதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.

**தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

11. இத்திட்டத்தின்கீழ் 4 குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், வடிகால்கள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்**

12. மதுரை மாநகராட்சியில் விடுபட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நீட்டிக்கும் ஒருங்கிணைந்த திட்டம் ரூ.165 கோடியில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் ஆறு கட்டங்களாக நிறைவேற்றப்படும்.

முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் ரூ.112.78 கோடியில் தற்பொழுது நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| மைய அரசு மானியம் | ரூ.88.00 | கோடி |
| தமிழ்நாடு அரசு மானியம் | ரூ.22.00 | கோடி |
| உள்ளாட்சி மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு | ரூ.55.00 | கோடி |
| **மொத்தம்** | **ரூ.165.00** | **கோடி** |

இத்திட்டம் 2005 டிசம்பரில் முடிக்கப்படும்.

## IV கோயம்புத்தூர் மாநகராட்சி

1. கோயம்புத்தூர் மாநகராட்சி 2001 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 9.23 இலட்சம் மக்கட் தொகையினையும், 105.60 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினையும் கொண்டது.

**சாலைகள்**

2. சாலைகளின் மொத்த நீளம் 684 கி.மீ. ஆகும். 2003-2004 ஆம் ஆண்டில் சுமார் ரூ.10 கோடி மதிப்பில் தார்ச் சாலைகள் புதுப்பிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பேருந்து நிலையம்**

3. மேட்டுப்பாளையம், குன்னூர் மற்றும் ஊட்டியிலிருந்து வரும் பேருந்துகளுக்காக கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேட்டுப்பாளையம் சாலையில் ஒரு கூடுதல் பேருந்து நிலையம் ரூ. 2 கோடி மதிப்பில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி 2003-2004ஆம் ஆண்டுக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





**திடக்கழிவு மேலாண்மை**

4. மத்திய அரசின் மானிய உதவியுடன் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அரசின் அனுமதி பெறுவதற்கு மாமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. விவரமான திட்ட அறிக்கை கூடிய விரைவில் தயார் செய்யப்பட்டு இந்த நிதியாண்டு 2003-2004-ல் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**விளையாட்டு அரங்கம்**

5. ஜீ.வி.குடியிருப்புப் பகுதியில் உள் விளையாட்டு அரங்கம் ரூ.1.2 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ளது. மத்திய அரசின் மானிய உதவியுடன் இப்பணியை எடுத்துக்கொள்வதற்காக அரசின் அனுமதி பெறுவதற்கு மாமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. 2003-2004-ல் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்

**வணிக வளாகம்**

6. ஸ்ரீனிவாசபுரத்தில் நவீன வசதிகளுடன்கூடிய ஒரு புதிய வணிக வளாகம் ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ளது. இப்பகுதி பரபரப்பான அங்காடி பகுதியாகும். எனவே இப்புதிய வணிக வளாகத்திற்கு நல்ல வரவேற்புள்ளது.

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

7. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க ஏதுவாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 200 ஏழை மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 110 பெண்களை உள்ளடக்கிய 11 மகளிர் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய கடனுதவி கூட்டு சுய தொழில் செய்ய வழங்கப்படும். சுய தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக திறன் மேம்படுத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.2,000/- செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி 360 ஏழை பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். அதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.

[2003 ஏப்ரல் 29

**தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

8. இத்திட்டத்தின்கீழ் 4 குடிசைப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், வடிகால்கள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## V. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 146.90 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன் 2001 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்குப்படி 7.46 லட்சம் மக்கட் தொகை கொண்டதாகும்.

**குடிநீர் விநியோகம்**

2. குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், ஸ்ரீரங்கம் பழைய நகராட்சிப் பகுதியில், குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 கோடி பொது நிதியிலிருந்து செலவிடப்பட உள்ளது.

**ஒருங்கிணைந்த சுகாதார வளர்ச்சித் திட்டம்**

3. நடப்பாண்டில் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சிப் பகுதியில் 12 இடங்களில் சுகாதார வளாகங்கள் கட்டப்பட உள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

4. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், 150 தள்ளு வண்டிகள், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட உள்ளன.

**சாலைப் பணிகள்**

5. சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிதாக சாலைகள் அமைக்கப்பட உள்ளன.

**அடிப்படை வசதிகள்**

6. அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ், சாக்கடை வசதிகள் மற்றும் நடைபாதைகளுக்கான சிமெண்ட் தளம் அமைக்கும் பணிகள் ஆகியவை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**சத்துணவுக் கூடங்கள்**

7. ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.



2003 ஏப்ரல் 29]

**தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்**

8. தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.132 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஸ்ரீரங்கம் மற்றும் பொன்மலை பகுதிகளில் மேற்கொள்ளப்படும். இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தற்பொழுது அவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மதிப்பாய்வில் உள்ளது.

**கல்வி**

9. 2003-2004-ஆம் ஆண்டில் மாநகராட்சிப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**சந்தை வளாகம்**

10. ஸ்ரீரங்கம், உறையூர், மாணவர் மன்றம், சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் சந்தை வளாகங்கள் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**மகளிர் தங்கும் விடுதி**

11. மகளிர் தங்கும் விடுதி, 75 விழுக்காடு மைய அரசின் மானிய உதவியுடன் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது. இதன் மூலம் பொதுமக்களின் நீண்டகாலத் தேவை பூர்த்தி செய்யப்படும்.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

12. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க ஏதுவாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 230 ஏழை மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 60 பெண்களை உள்ளடக்கிய 6 மகளிர் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி கூட்டு சுய தொழில் செய்ய வழங்கப்படும். சுய தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக திறன் மேம்படுத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.2,000/- செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி 325 ஏழை பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். அதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.

### தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

13. இத்திட்டத்தின்கீழ் 4 குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 48 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், வடிகால்கள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## VI. சேலம் மாநகராட்சி

1. சேலம் மாநகராட்சி, 91.34 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 2001 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 6.93 இலட்சம் மக்கட்தொகையையும் கொண்டுள்ளது.

### சாலைகள்

2. இம்மாநகராட்சி, 623.58 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்கிறது. ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 162 சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல்

3. தற்போது சேலம் மாநகராட்சியில் 59,617 இணைப்புகள் உள்ளன. ரூ.24.84 கோடி செலவில் 18 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் நிதி வழங்கப்பட உள்ளது.

### தெரு விளக்குகள்

4. சென்ற வருடம் 2 மண்டலங்களில் தெரு விளக்குகள் பராமரிக்கும் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. நுகர்வோர்களுக்கு விரைவாக சேவைகளை அளிக்க ஏதுவாக இவ்வருடம் மீதியுள்ள 2 மண்டலங்களுக்கும் இத்தனியார்மயம் விரிவுபடுத்தப்படும்.

### திடக்கழிவு மேலாண்மை

5. திடக்கழிவை பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்லும் வகையில், 2003-2004-ல் ரூ. 1 கோடி நிதியில் டம்பர் பிளேசர் மற்றும் கொள்கலம் வாங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

6. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க ஏதுவாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 270 ஏழை மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 70 பெண்களை உள்ளடக்கிய 7 மகளிர் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய கடனுதவி கூட்டு சுய தொழில் செய்ய வழங்கப்படும். சுயதொழில் தொடங்குவதற்கு ஏதுவாக திறன் மேம்படுத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.2,000/- என்ற செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி 350 ஏழை பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். அதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.

### தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

7. இத்திட்டத்தின்கீழ் 4 குடிசைப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், வடிகால்கள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## VII. திருநெல்வேலி மாநகராட்சி

1. திருநெல்வேலி மாநகராட்சி, 108.65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 2001-ன் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 4.11 இலட்சம் மக்கட்தொகையைக் கொண்டதாக உள்ளது.

### குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால்

2. 2003-2004 ஆம் ஆண்டில், இம்மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளான கே.டி.சி நகர் மற்றும் வி.எம்.நகர் ஆகியவற்றிற்கு குடிநீர் விநியோகத் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும் புதிதாக 2000 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.52 கோடி மதிப்பீட்டில் 2003-2004ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும். இப்பணி மூன்றாண்டுகளில் முடிக்கப்படும்.

**கல்வி**

3. மாநகராட்சிப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், பழுது பார்க்கவும் ரூ.75.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டம்**

4. இத்திட்டத்தின்கீழ் ரூ.4.05 கோடி செலவில் சாலைகள் அமைக்கவும், கடைகள் மற்றும் வணிக வளாகம் கட்டவும், மார்க்கெட் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தெரு விளக்குகள்**

5. 2003-2004-ல் நகரில் கூடுதலாக 300 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மின்னணு ஆளுகை**

6. இம்மாநகராட்சி தொடர்ந்து மின்னணு ஆளுகைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் செயல்படும். கடந்த 07-12-2002 அன்று பாளையங்கோட்டை மண்டல அலுவலக வளாகத்தில் தொலைபேசித் துறை, மாநகராட்சி மற்றும் மின் வாரியம் ஆகிய 3 துறைகள் இணைந்து பல்துறை சேவை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது (மூன்று துறைக்கான) கட்டணங்களையும் ஒரே இடத்தில் செலுத்தலாம். இது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வசதி வரும் ஆண்டில் மேலும் ஒரு மண்டலத்திற்கு விரிவுபடுத்தப்படும். மேலும் பொதுமக்கள் தங்களது தெரு விளக்கு பற்றிய புகார்களைத் தெரியப்படுத்தும் விதமாக www.citilight.com என்னும் இணையதளம் ஏற்படுத்தப்பட உள்ளது. தற்போது நீதிமன்ற வழக்குகள் பற்றிய குறிப்புகள் தயாரிக்க ஏதுவாக e-legal என்னும் மென்பொருள் தயாரிப்பிலுள்ளது. தவிர குப்பையகற்றுதல் மற்றும் குடிநீர் விநியோகம் குறித்து e-utility என்னும் இணையதளமும் தயாராகி வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

7. மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைக்கு வரும் ஆண்டில் அதிக முக்கியத்துவம் அளித்து 55 வார்டுகளில் ஆதார நிலையிலேயே குப்பையைப் பிரித்து எடுக்கும் முறை ஏற்படுத்தப்படும் "குப்பையற்ற பகுதி" யாக மாற மண்புழு உரம் தயாரிக்கவும் ஊக்குவிக்கப்படும்.



**மழைநீர் சேகரிப்பு முறை**

8. நகரில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பங்களிப்பு மூலம் இதுவரை 4500 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசுசாரா நிறுவனங்கள், நலச் சங்கங்கள் மற்றும் பள்ளிகள் மூலம் பிரச்சாரம் செய்யப்படும். மேலும் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த நகரில் உள்ள குளம், குட்டைகளைச் சுத்தம் செய்து, ஆழப்படுத்தி, நீர்ப்பரப்புப் பகுதிகளாக மாற்ற, நலச் சங்கங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**பொன்விழா ஆண்டு நகர்ப் புற வேலைவாய்ப்புத் திட்டம்**

9. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க ஏதுவாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 200 ஏழை மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 40 பெண்களை உள்ளடக்கிய 4 மகளிர் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய கடனுதவி கூட்டு சுய தொழில் செய்ய வழங்கப்படும். சுய தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக திறன் மேம்படுத்த பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.2000/- செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி 200 ஏழை பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் அதில் 30 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.

கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு வடிகால்கள் அமைத்தல், தடுப்புச் சுவர்கள் கட்டுதல், சாலைகள் மற்றும் பொதுப் பாதைகள் அமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுவதன் மூலம் 1600 மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும்.

**தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

10. இத்திட்டத்தின்கீழ் 4 குடிசைப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு ரூ. 48 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், வடிகால்கள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2003 ஏப்ரல் 29

## VIII. பேரூராட்சிகள்

1. தமிழ்நாட்டில், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ், 611 பேரூராட்சிகளைக் கொண்ட பேரூராட்சிகள் இயக்ககம், பேரூராட்சிகளின் இயக்குநரின் தலைமையில், தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் இட அமைப்பிற்கேற்றவாறு, நிர்வாக நலன் கருதி 1-3 மாவட்டங்களைக் கொண்ட 16 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இம்மாநிலத்திலுள்ள பேரூராட்சிகள், சுமார் 1 கோடி மக்களுக்கு, அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கியும், குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால், பொதுச் சுகாதாரம், சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்தும் வருகின்றன.

2. 2002-2003ஆம் ஆண்டில், இப்பேரூராட்சிகளின் மொத்த வருவாய் மற்றும் செலவினம் முறையே ரூ. 689.50 கோடி மற்றும் ரூ. 698.06 கோடியாகும். 2003-2004ஆம் ஆண்டில் இவை முறையே ரூ. 706.98 கோடி மற்றும் ரூ.711.24 கோடி தோராய மதிப்பீடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

3. பேரூராட்சிகளுக்கு, மாநில நிதிக் குழு பரிந்துரையின்படி, நிதிப் பகிர்வாக 2002-2003ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில், ரூ. 219.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் 2002-2003ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில், ரூ.190.90 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டில் இது ரூ.201.53 கோடியாக இருக்கும். மத்திய அரசு, பதினோராவது நிதிக்குழு மானியமாக, 2002-2003ஆம் ஆண்டிற்கு ரூ.13.53 கோடி ஒதுக்கீடு செய்தது. 2003-2004ஆம் ஆண்டில் இது ரூ. 13.53 கோடியாக இருக்கும்.

### பேரூராட்சிகளுக்குத் தேர்தல்

4. இம்மாநிலத்தில் உள்ள 611 பேரூராட்சிகளில், 608 பேரூராட்சிகளுக்கு அக்டோபர் 2001-ல் தேர்தல் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு 25-10-2001-ல் பதவி ஏற்றது. 8-4-2002-ல் வேலூர் மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு, அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 18-4-2002 அன்று பொறுப்பு ஏற்றனர். குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளுக்கு ஜூன் 1998-ல் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பில்



2003 ஏப்ரல் 29]

பெண்கள் உள்ளிட்ட நலிவுற்ற பிரிவினர் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு உள்ளனர்:—

| | ஆதி திராவிடர்/ பழங் குடியினர். | ஆதி திராவிடர்/ பழங்குடியினர். (பெண்கள்) | பெண்கள். | ஒதுக்கப்படாதவை. | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தலைவர் | 68 | 35 | 169 | 339 | 611 |
| உறுப்பினர்கள் | 864 | 819 | 2446 | 5665 | 9794 |

குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளுக்கு தேர்தல் ஜூன் 2003-ல் நடைபெற வேண்டும்.

### நிதி வாய்ப்புகள் பெருக்குதல்

5. பேரூராட்சிகளின் மொத்த வருவாயில், சொந்த வருவாய் 31.18 விழுக்காடாக உள்ளது. முக்கிய வருவாயான சொத்து வரி, பொதுவாக, சரியான தொகைக்கும் குறைவாக விதிக்கப்படுகிறது. இது தற்போது பரந்த நோக்குடன், ஒரே மாதிரியாக, மிகையில்லாமல் சமநிலையில் சொத்துக்களின் மதிப்பின் வளர்ச்சிக்கேற்ப நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. கேட்புப் பதிவேட்டினை கணினியில் பதிவு செய்தல், பொதுத் தகவல் முறை தொழில்நுட்பம் பயன்படுத்தி தானாகவே பதிவேடுகளைப் புதுப்பித்தல் ஆகியவை, வருவாயைப் பெருக்குவதற்காகச் செயல்படுத்தப்படும். வரி வசூலில் சிறப்பாகச் செயலாற்றும் பேரூராட்சிகளுக்கு மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு ஊக்கத் தொகையிலிருந்து ஈட்டு மானியம் வழங்கப்படும். வரி வருவாயினைப் பெருக்குவது குறித்து கூர்ந்து கண்காணிக்கப்படும். சிறப்பான நிர்வாக மேலாண்மை, செலவினத்தைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணியைத் தனியார் மயமாக்குதல் போன்றவற்றின் மூலம் செலவினம் குறைக்கப்படும்.

### மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல்

6. பேரூராட்சிகளில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இருத்தல் வேண்டுமென்று தமிழ்நாடு

மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளுக்கு தக்க திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கட்டட வரைபடத்தில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு காண்பிக்கப்பட்டால் மட்டுமே செயல் அலுவலரால் வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும். ஒவ்வொரு கட்டடத்திலும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு அமைக்கப்படாவிடில், சொத்து வரி விதிப்பு செய்யப்படமாட்டாது. குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படமாட்டாது. மேலும் ஏற்கெனவே உள்ள வீடுகளுக்கு அக்டோபர் 2003-க்குள் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த கட்டட உரிமையாளர்களை ஊக்குவிக்க செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். பேரூராட்சிகளிலுள்ள குளங்கள், குட்டைகள், ஊருணிகள் ஆகியவை மழைநீர் சேகரிக்கும்பொருட்டு ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பேரூராட்சியின் கட்டடங்களிலும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேரூராட்சிகளில் பொது மக்கள் விவரம் அறிய அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், அறிவிப்புகள் போன்ற வகைகளில் விரிவாக விளம்பரம் செய்யப்படுவதுடன், மழைநீர் சேகரிப்புக்கான மாதிரிகள் வைக்கப்பட்டு தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 611 பேரூராட்சிகளில் (அரசு அல்லாத தனியார் கட்டடங்கள் உட்பட) 1,12,293 மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**சாலைகள்**

7. பேரூராட்சிகளின் பராமரிப்பில் வரும் பலவகைப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 15,595 கி.மீ. ஆகும். அவற்றில் 3,391 கி.மீ. நீளமுள்ள மண் சாலையினை மாண்புமிகு முதலமைச்சர் விருப்பத்தின்படி, படிப்படியாக தார்ச் சாலையாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில், 300 கி.மீ நீளமுள்ள மண்சாலையினை, பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ. 21 கோடி மதிப்பீட்டில் தார் சாலையாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**தெரு விளக்குகள்**

8. பேரூராட்சிகளில் 3,13,983 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2003-2004-ஆம் ஆண்டில் 10,000 குழல் விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.



**குடிநீர் வழங்கல் நிலை**

9. மாநிலத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு விவரம் பின்வருமாறு:—

| தனிநபர்/நாளொன்றுக்கு குடிநீர் அளவு(லிட்டரில்). | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 20 லிட்டருக்குக் கீழ் | 32 |
| 20 - 39 லிட்டர் | 166 |
| 40 - 69 லிட்டர் | 289 |
| 70 லிட்டருக்கு மேல் | 124 |
| | 611 |

1999-2000 மற்றும் 2000-2001-ல் 117 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டப் பணிகளில் 76 பேரூராட்சிகளில் 2002-2003-ல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 41 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் 2003-2004-ல் முடிக்கப்படும். மேலும் 2001-2002-ல் 37 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டப் பணிகள், 2003-2004-ல் முடிக்கப்படும்.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

10. இராமேஸ்வரம், இனாம் கரூர் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, இப்பேரூராட்சிகளில் முறையே ரூ. 27.29 இலட்சம் ரூ. 8.45 இலட்சம் மற்றும் ரூ.3 இலட்சமும் பயனீட்டாளர் பங்குத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இராமேஸ்வரம், திருச்செந்தூர் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மேலும் 2003-2004 ஆம் ஆண்டில் உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சியில் ரூ. 8.44 கோடி மதிப்பீட்டில், பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

**அடிப்படை வசதி திட்டப் பணி**

11. 2003-2004-ஆம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானிய சமன்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் குடிநீர்,

தெரு விளக்கு, சாலை மற்றும் வடிகால் போன்ற அடிப்படை வசதிப் பணிகளை மேற்கொள்ள செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு கழிப்பிடம் அமைத்தல்**

12. நகர்ப்புறங்களில் வறியவர் வாழும் பகுதியில் மகளிர் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் நோக்குடன், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. 518 பேரூராட்சிகளில் ரூ. 18.72 கோடியில் மகளிருக்கென குளியலறை வசதியுடன்கூடிய 720 பொதுக் கழிவறைகள் கட்ட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (வாம்பே) திட்டத்தின்கீழ், திட்டத்தின் 30 விழுக்காடான ரூ.5.62 கோடி மானியமாகவும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்தின்கீழ், திட்டத்தின் 70 விழுக்காடான ரூ. 13.10 கோடி மானியமாகவும் பெறப்படுகிறது.

இதுவரையில், 648 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் கட்டுவதற்கு ரூ.[illegible] கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கழிவறைகளும் 2003-2004 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இத்துப்புரவு வளாகங்களைப் பராமரிப்பதற்கு பயனாளிகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும்.

**பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்**

13. இத்திட்டத்தின் உட்பிரிவான நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002-ல் ரூ.1.35 கோடி அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 986 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், 92,366 மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டம், 2002-2003ஆம் ஆண்டு தொடர்ந்து செயலாக்கப்பட்டது. இதற்காக ரூ.0.52 கோடி மத்திய அரசின் மானியமாக பெறப்பட்டுள்ளது.

மற்றொரு உட்பிரிவு திட்டமான நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில், ரூ. 2.14 கோடி பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ், குழுக்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்திட, பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், மத்திய அரசின் நிதி உதவி கிடைப்பதற்கேற்ப 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.



**குடிநீர் வழங்கல் மேம்படுத்தும் திட்டம்**

14. நகர்ப்புற உள்ளாட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், 2003-2004ஆம் ஆண்டில், ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தேவையான பேரூராட்சிகளில், குடிநீர் வழங்குதலை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சுகாதார திட்டம்**

15. கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு பேரூராட்சிக்கு ஒன்று என 20 பேரூராட்சிகளில் ஆண்களுக்கென 20 ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் 2003-2004ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில், ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பேரூராட்சிகளின் தூய்மை இயக்கம்**

16. மாநிலத்திலுள்ள பேரூராட்சிகளில் "பேரூராட்சிகள் தூய்மை இயக்கம்" நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சில வார்டுகள், குடிசைப் பகுதிகள், பள்ளிகள் ஆகியவற்றை "முழுமையான சுகாதாரப் பகுதி" என அறிவிக்க பொது மக்களிடையே நகர்ப்புற தூய்மை குறித்து விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்த, 2003-2004ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டம்**

17. பேருந்து நிலையம், வணிக வளாகம், சமுதாயக் கூடம் கட்டுதல் போன்ற வருவாய் பெருக்கும் திட்டங்கள் மற்றும் சேவைத் திட்டங்கள் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2003-2004ஆம் ஆண்டில் ஒரத்தநாடு, புதுவயல், ஆலம்பாளையம், லால்குடி, அன்னூர், முசிறி, திருக்காட்டுப்பள்ளி, ஜலகண்டபுரம் ஆகிய 8 பேரூராட்சிகளில் ரூ. 8.69 கோடி மதிப்பீட்டில் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மகாநகர திட்டம்**

18. 2003-2004ஆம் ஆண்டு மகாநகர திட்டத்தின்கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட செம்பாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, மாங்காடு, சிட்லபாக்கம், அனகாபுத்தூர், பம்மல், திருநின்றவூர் ஆகிய 9 பேரூராட்சிகளில் உள்கட்டமைப்புப் பணிகள், ரூ. 7.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உள்கட்டமைப்பு திட்டம்**

19. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உள்கட்டமைப்பு திட்டத்தின் வாயிலாக, 28 பேரூராட்சிகளில், ரூ. 7.86 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம், சமுதாயக் கூடம், சேவைப் பணிகள் மற்றும் பேருந்து நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும்.

**திடக்கழிவு மேலாண்மை**

20. திடக்கழிவு மேலாண்மை பேரூராட்சிகளின் அத்தியாவசியப் பணியாக உள்ளது. கழிவுகளை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய உத்திகளைக் கையாண்டு அப்புறப்படுத்தவும், தீர்வு செய்யவும், பேரூராட்சிகளுக்கு நிதி தேவைப்படுகிறது. எனவே 2003-2004 ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள 28 சிறப்பு நிலை மற்றும் 278 தேர்வு நிலைப் பேரூராட்சிகளில், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனத்தின் நிதி உதவியுடன், ரூ. 20 கோடி மதிப்பீட்டில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.


**சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் திட்டம்**


21. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதிகளைப் பார்வையிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலுக்கேற்ப சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியிலுள்ள 21 பேரூராட்சிகளில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதி உதவியுடன், சாலைகள், வடிகால், சிறுபாலம், திடக்கழிவு அகற்றுதல் போன்ற பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.


**பேரூராட்சிகளின் திறன் மேம்படுத்துதல்**


22. தற்போது மாநிலத்தில் பேரூராட்சிகளில் பின்பற்றப்படும் கணக்கீட்டு முறையினை மாற்றி 1-4-2002 முதல் இயல்புநிலை கணக்கீட்டு முறையில் பராமரிக்கப்படுகிறது. இதற்கான முழுச் செலவு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்-II-ன் நிதியிலிருந்து மானியமாக பெறப்படும்.











நகராட்சிகளில் பொதுக்கழிப்பறைகள்
கழிப்பறைகளின் எண்ணிக்கை
800
700
600
500
400
300
200
100
0
60
400
755
01--02
02--03
03--04
வருடம்



நகராட்சிகளில் குடிநீர் விநியோகம்
இணைப்புக்களின் எண்ணிக்கை
730000
720000
710000
700000
690000
680000
670000
660000
686762
690364
725000
01--02
02--03
03--04
வருடம்





முன்னேற்றம்
மாநகராட்சிகளில் சாலை வசதிகள் (சென்னை நீங்கலாக)
கிலோ மீட்டரில்
4000
3500
3000
2500
2000
1500
1000
500
0
3035
3181
3840
01--02
02--03
03--04
வருடம்


மாநகராட்சிகளில் தெரு விளக்குகள் ( சென்னை நீங்கலாக)
தெருவிளக்குகள்
150000
100000
50000
0
110479
112332
138693
01--02
02--03
03--04
வருடம்

மாநகராட்சிகளில் பொது கழிப்பிடங்கள்
(சென்னை நீங்கலாக)





மாநகராட்சிகளின் வருவாய் (வரி)









சென்னை மாநகராட்சி
சொத்து வரி வசூல்





சென்னை மாநகராட்சி
தொழில் வரி வசூல்




16200
16000
15800
15600
15400
15200
15000
14800
14600
14400
14200
14000
15595
15850
2001-2002
2002-2003
2003-2004


340000
320000
300000
280000
260000
240000
220000
298772
323983
2001-2002
2002-2003
2003-2004


பேரூராட்சிகளில் சொத்து வரி வசூல்
80.91
64.81
80
70
60
50
40
2002-2003
2003-2004

[2003 ஏப்ரல் 29

IX. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II

1. உலக வங்கி நிதியுதவியுடன் 105 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூபாய் 441 கோடி) செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 80 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.336 கோடி) கடனுதவித் திட்டங்களுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்திற்கும், 25 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 105 கோடி) நிறுவன மேம்பாட்டிற்காகவும் மற்றும் நகர்ப்புற முதலீட்டின்கீழ் ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டத்திற்காகவும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிர்வாக அலகிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவன மேம்பாட்டுக் கூறு**

2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன் நிறுவன மேம்பாட்டுக் கூறின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனை உயர்த்தும் வகையில் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன:-

**(i) நகர கூட்டாண்மைத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் 5 ஆண்டு மூலதன முதலீட்டுத் திட்டங்கள் தயாரித்தல்:**

11 நகரங்களுக்கான நகர கூட்டாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் 20 நகரங்களுக்கு இத்திட்டத்தினைத் தயாரிக்க உத்தேசித்து, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில், மேலும் 30 நகரங்களுக்கு இத்திட்டம் தயாரிக்கப்படும்.

**(ii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மேலாண்மை, நிதி மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வலிமையாக்குதல்:**

இத்திட்ட அமலாக்க அறிக்கையில் 400 குழுக்களுக்கான 32 பயிற்சித் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது மேலும் 7 கூடுதல் பயிற்சித் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதுவரை 5,006 நபர்களுக்கு 286 குழுக்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 2003-2004-ல் எஞ்சியுள்ள 114 குழுக்களுக்கும் பயிற்சியளிக்கப்படும்.



2003 ஏப்ரல் 29]

**(iii) அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்தல்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த அலுவலர்களுக்கும் நகர்ப்புற மேலாண்மை மற்றும் ஆளுமை குறித்த சிறந்த பயிற்சிக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

**(iv) கணினி ஆதரவு:**

நகர்ப்புற பொதுச் சேவையினை மேம்படுத்த மென்பொருள் மற்றும் வன்பொருள் கொள்முதல் மற்றும் பூகோள தகவல்முறை செயலாக்கத்துடன் கூடிய பெருமளவிலான கணினிகள் பயன்படுத்தப்படும். 2002-2003-ல் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் பேரூராட்சிகளில் கணினி மயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 16 மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், 28 சிறப்பு நிலைப் பேரூராட்சிகளிலும் கணினி மயமாக்கும் பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கணினி மயமாக்கல் பணி எஞ்சியுள்ள 583 பேரூராட்சிகளில் கணினி மயமாக்கல் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இது தொடர்பாக, எல்காட் (ELCOT) நிறுவனத்திடம் ரூ. 17 கோடி செலவில் கணினி கொள்முதல் செய்யும் முகமைப் பணி வழங்கப்பட்டுள்ளது.

**(v) இயல்பு நிலைக் கணக்கு முறை:**

இயல்பு நிலைக் கணக்கு முறை 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) அமல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையான கணக்குமுறை அனைத்து 611 பேரூராட்சிகளிலும் 01-04-2002 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்:**

3. ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்தின்கீழ், உலக வங்கி நிதியுதவியுடன், இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமும் இந்திய அரசின் வாம்பே திட்டத்தின் மூலமும் ரூ. 52.5 கோடி செலவில், ஒவ்வொரு சுகாதார வளாகமும் ரூ. 10 இலட்சம் செலவில், 525 சுகாதார வளாகங்கள் 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளால் (சென்னை நீங்கலாக) பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உரிய இடங்களில் கட்டப்படுகின்றன. கழிப்பிட வசதிகள் தவிர இந்த சுகாதார வளாகங்களில் குளிப்பதற்கும்

துணி துவைப்பதற்கும் வசதிகள் செய்து கொடுப்பதோடு இவற்றைப் பராமரிக்க, பயனாளிகளின் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்படும். இதுவரை 314 சுகாதார வளாகங்கள் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவை 2003-2004-ல் முடிக்கப்படும்.

611 பேரூராட்சிகளில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 720 கழிப்பிடங்களை ரூ. 18.72 கோடி செலவில் கட்டும்பணி நடைபெற்று வருகிறது. இச்செலவினத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன் பங்கு ரூ 13.10 கோடியாகும். இவற்றைக் கட்டி முடித்து 2003-2004-ல் பயனுக்குக் கொண்டுவரப்பட உள்ளது.

## X. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

1. தமிழ்நாட்டில் அதிவேக நகரமயமாக்கலினால் சமுதாய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதி அளித்தல் பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பது வெளிப்படையானதாகும். மேலும் தரமான நகர்ப்புற உள்கட்டமைப்பு, பொருளாதார வளர்ச்சிக்கும் வளமான மனித வாழ்க்கைக்கும் உதவுகிறது என்பது நன்கு அறிந்ததே. தமிழ்நாடு அரசு, 1988ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தவும், நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளுக்கு, தனியார் முதலீட்டைக் கவரவும், 1996 நவம்பரில் 'தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி' உருவாக்கப்பட்டது. இது, தமிழ்நாடு அரசு மற்றும் மூன்று நிதி நிறுவனங்கள் (ICICI., HDFC & IL&FS) அடங்கிய, நகர உள்கட்டமைப்புக்குக் காப்புறுதி இல்லாமல் நீண்ட நாள் கடன் வழங்கும் முதலாவது பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகும். தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதி மேலாளராகும்.

### 2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்:—

- நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி (Joint Venture) மூலமாக உள்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.



- நகர்ப்புற ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் மானிய நிதி (Grant Fund) எனும் துணைத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

3. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் இதுவரை ரூபாய் 727.89 கோடி மதிப்பீட்டில் 181 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் 174 திட்டங்களுக்கு, மூன்று சேர ரூ. 459.58 கோடி வழங்கியுள்ளது. இதில் மழைநீர் வடிகால், கழிவுநீர், திடக்கழிவு நிர்வாகம் போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் திட்டங்களும், மொத்த வணிகக் கூடங்கள், போக்குவரத்து வசதிகள் போன்ற வணிகத் திட்டங்களும் அடங்கும். 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலான நகர்ப்புறத் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் 15 திட்டங்களுக்கு ரூபாய் 50 கோடி ஒப்புதலளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4. மூலதனச் சந்தைகளை அணுகல்:

(i) மதுரை மாநகராட்சிக்கு அதன் உள்வட்டச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு கடன் பத்திரங்கள் வெளியீட்டின் மூலம் ரூ. 29 கோடி நிதி திரட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனம் உதவி செய்துள்ளது. இதுவே தமிழ்நாட்டில் முதன் முதலாக பத்திரங்கள் வெளியிட்ட உள்ளாட்சி அமைப்பாகும்.

(ii) தமிழ்நாடு அரசு, குறிப்பாக நகராட்சியளவில் நகர்ப்புற உள்கட்டமைப்புப் பணிகளுக்கு நிதியளிப்பதற்காக நிதிச்சந்தையை விரிவுபடுத்துவதன் அவசியத்தை அறிந்து பல்வேறு கொள்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதி உருவாவதற்குத் தேவையான உதவியை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம் செய்துள்ளது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச்சந்தையிலிருந்து கடன் பெறலாம். இதனால் இன்றியமையாத உள்கட்டமைப்புத் தேவைகளுக்குக் கடன் பெறுவதற்கான செலவும், பல்வேறு வணிக நடவடிக்கைகளும் குறையும். இப்போது நிதி நிறுவனம் 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன்பத்திரங்கள் வெளியீட்டின் மூலம் ரூபாய் 30.41 கோடியைத் திரட்டித் தந்துள்ளது. மேலும் கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட அசல் தொகையில் 50 சதவிகிதம் வரைக்கும்

அமெரிக்க பன்னாட்டு வளர்ச்சி முகமை காப்புறுதி அளித்துள்ளது. இக்கடன் வெளியீட்டின் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் அதிக வட்டிக் கடன்களை மாற்றீடு செய்துள்ளன. பொது நிதி அமைப்பு மூலம் வெளிச்சந்தை முதலீட்டைப் பெறுவது இந்தியாவிலேயே இதுவே முதல் முறையாகும்.

### 5. மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

(i) நகர உள்கட்டமைப்பு வசதிகளின் நிதித் தேவைகள் மற்றும் உள்நாட்டு மூலதனச் சந்தையின் இணைப்பாக நகர்ப்புற வளர்ச்சி நிதியம் செயல்படுகின்றது. உலக வங்கியின் பன்னாட்டு வளர்ச்சி முகமை ஏற்கனவே அளித்த நிதியுதவி மூலமாக தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உலக வங்கியின் நிதி உதவியுடன் நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக TNUDP-II செயல்படுத்தப்படுகிறது. இதன் திட்டக் காலம் நவம்பர் 2004-ல் முடிவடைகிறது. உள்கட்டமைப்பு முதலீட்டிற்குத் தேவைப்படும் நிதிக்கும் தற்போதுள்ள நிதி வசதிக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதும், நகர்ப்புற அடிப்படைச் சேவைகளின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்துதல் ஆகியவை நகர்ப்புறப் பகுதியின் பெரும் சவால்களாகும். இது ஒரு தொடர் நடவடிக்கையாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி மற்றும் கடமைகளைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டு பெருமளவில் நகர்ப்புற சீர்திருத்தங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதித் தேவைகளை பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாக தொடர்ந்து அளிப்பதற்காக, மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ii) குறிக்கோள்கள்:**

நகரங்களில் குறிப்பாக குறைந்த வருவாய்ப் பிரிவினர் வசிக்கும் பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சமுதாய கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதே இதன் குறிக்கோள்கள். இந்த குறிக்கோள்களை அடைய:—

* வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்கள் சமுதாயக் கட்டமைப்புகளை நிர்வகிக்கும் பணிகளுக்கு ஆதரவளிப்பது, குடிநீர், துப்புரவு, திடக்கழிவு நிர்வாகம் மற்றும் தாய்சேய் நலப்பணிகளில் பெண் குழுக்களின் பங்கேற்பிற்கு ஊக்கமளித்தல்.

மாநில மற்றும் நகர அளவிலான தொடங்கப்பட்ட மேலாண் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்.



குடிநீருக்கான கட்டணம் செலுத்துவதில் தவறும்பொழுது அவைகளுக்கான ஒப்படைப்பு நிதியிலிருந்து ஒதுக்கி, நேரடியாக வாரியத்திற்கு செலுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளித்தல். இத்திட்டத்தை 1000 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் செயல்படுத்திட, உலக வங்கி கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. உலக வங்கியின் நிலை ஆராயும் குழு இத்திட்டத்திற்கான பேச்சு வார்த்தைகளுக்காக விரைவில் மாநிலத்திற்கு வருகை தர உள்ளது.

### (ii) மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 78.70 கோடி திட்ட மதிப்பீட்டில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சங்கரன்கோயில் நகராட்சி, திருவேங்கடம் ஊரகப் பேரூராட்சி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், சிவகாசி நகராட்சி மற்றும் திருத்தங்கல் நகரப் பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் நடப்பு நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 401728 மக்கள் பயன் பெறுவர்.

### (iii) திண்டிவனம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 14.59 கோடி மதிப்பீட்டில் தென் பெண்ணையாற்றை நீராதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடப்பு நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தினால் 67826 மக்கள் பயன் பெறுவர்.

### 17. ஆய்வில் உள்ள பெரிய குடிநீர்த் திட்டங்கள்

i  திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வேடசந்தூர், பாளையம், கன்னிவாடி ஒட்டன்சத்திரம் ஆகிய நகரப் பேரூராட்சிகள், வேடசந்தூர், மற்றும் ஸ்ரீராமபுரம் ஊரகப் பேரூராட்சிகள், வேடசந்தூர், குஜிலியம்பாறை, ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களில் உள்ள 719 ஊரகக் குடியிருப்புகள், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாந்தோணி ஒன்றியத்திலுள்ள 24 ஊரகக் குடியிருப்புகளுக்காக 190 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

ii) பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செந்துறை, வேப்பூர் மற்றும் ஆலத்தூர் ஆகிய ஒன்றியங்களிலுள்ள 628 ஊரகக் குடியிருப்புகளுக்காக 57 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

iii) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த குறிச்சி, குனியமுத்தூர் நகரப் பேரூராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு ஊரகப் பேரூராட்சிகளுக்காக 40 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

iv) கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கடவூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த வையம்பட்டி ஒன்றியங்களிலுள்ள 529 ஊரகக் குடியிருப்புகளுக்காக 30 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

v) தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஆழ்வார் திருநகரி, உடன்குடி மற்றும் திருச்செந்தூர் ஒன்றியங்களிலுள்ள 151 ஊரகக் குடியிருப்புகளுக்காக 8.55 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

vi) திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தண்டராம்பட்டு ஒன்றியத்திலுள்ள வாணாபுரம், அகரம்பள்ளிப்பட்டு, திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள வேங்கிக்கால், திருவண்ணாமலை, தண்டராம்பட்டு மற்றும் செங்கம் ஒன்றியங்களைச் சார்ந்த 54 இதர ஊரகக் குடியிருப்புகளுக்காக 200 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## 18. மழைநீர் சேகரிப்பு

தொடர்ந்து பருவ மழை பொய்த்ததாலும், நிலத்தடி நீர் அதிக அளவில் எடுக்கப்படுவதாலும் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து வருகின்றது. இதன்மூலம் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் குடிநீரின் தரம் பாதிக்கப்படுகிறது. இதன்காரணமாக, அதிகமான திட்ட மதிப்பீட்டில் தொலைதூரத்திலுள்ள நம்பகமான நீராதாரங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொண்டு வருவது அவசியமாகிறது. இந்நிலையை மாற்றவும், நீடித்த நீராதாரங்களை உறுதி செய்யவும், நீர்ச்செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மழைநீர் சேகரிப்பு



நகர நிதித் தேவைகளையும் உள்நாட்டு மூலதனச் சந்தைகளையும் இணைப்பதன் மூலம், நகரச் சுற்றுச்சூழல் உள்கட்டமைப்பு நிதித் தேவைகளுக்குத் தொடர் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது.

**(iii) உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின் நோக்கங்களாவன:—**

1. சீர்திருத்தங்களுக்கான ஆதரவு கூறு
2. சமுதாய ஆதரவு கூறு
3. நகர்ப்புற முதலீடு கூறு
   - பாதாளச் சாக்கடை (கழிவுநீர்த் திட்டம்)
   - மழைநீர் வடிகால்கள்
   - திடக்கழிவு மேலாண்மை
   - சாலைகளும் பாலங்களும்
4. ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

(iv) மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், ரூபாய் 750 கோடி செலவில் மேற்கொள்ள நிதியுதவிக்காக, உலக வங்கியை அணுக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## XI. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்:

1. தமிழகத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தும் பல்வேறு அரசு அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) ஆரம்பிக்கப்பட்டது. இது குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், சிறிய மேம்பாலங்கள் அமைத்தல், வணிக வளாகம் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டிய பொறுப்பு இருக்கிறது. மேலும் இந்நிறுவனம் மகாநகரத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

ஆகிய மைய அரசு நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தும் முகமை
நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

**மகாநகரத் திட்டம் (MEGA CITY PROGRAMME)**

2. மத்திய அரசு பெருநகரங்களான மும்பை, கொல்கத்தா,
பெங்களூர், ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகியவற்றை மகாநகரத்
திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் பொருட்டு தேர்வு செய்துள்ளது.
இத்திட்டத்தின்கீழ் நிதியை 25:25:50 என்ற விகிதாச்சார
அடிப்படையில் முறையே மத்திய அரசு, மாநில அரசு மற்றும் நிதி
நிறுவனங்கள் பகிர்ந்து அளிக்கின்றன. இத்திட்டம் சென்னை
பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு
உட்பட்ட பகுதிகள் 8 நகராட்சிகள் மற்றும் 28 பேரூராட்சிகளில்
செயல்படுத்தப்படுகிறது. நடப்பு நிதியாண்டிற்கு மத்திய அரசு தனது
பங்காக ரூ. 22.12 கோடியை சென்னை மகாநகரத் திட்டத்திற்காக
வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ரூ 134.07
கோடியை தனது பங்காக இத்திட்டத்திற்கு மத்திய அரசு
அளித்துள்ளது. 2002-03-ல் மகாநகரத் திட்டத்தின்கீழ் ரூபாய் 228
கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மகத்தான திட்டமான, சென்னை பெருநகர் குடிநீர் அபிவிருத்தித்
திட்டத்திற்கு (திட்ட மதிப்பீடு ரூ. 720 கோடி) ரூ. 100 கோடி மகா
நகரத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை
மாநகருக்குக் குடிநீர் வழங்கும் ரூ. 200 கோடி மதிப்பிலான
செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்திற்காகவும்
ரூ. 100 கோடி இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியாண்டு 2003-04-ல் மொத்தம் ரூ. 100 கோடி மதிப்புள்ள
திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டம்
(IDSMT Scheme)**

3. சிறிய நகரங்களிலிருந்து மக்கள் பெரு நகரங்களுக்கு இடம்
பெயருதலைத் தடுக்கும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில்



உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், அதன் மூலம் சிறிய
மற்றும் நடுத்தர நகரங்களில் மக்கள் வாழும் சூழ்நிலையை
மேம்படுத்தவும் மத்திய அரசால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
இத்திட்டம் நகர மற்றும் ஊரகத் திட்ட இயக்குநரகத்தினால் 1979-80-
லிருந்து செயல்படுத்தப்பட்டு 1997-98-ல் தமிழ்நாடு நகர்ப்புற நிதி
மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு திட்டச்
செயலாக்கம் மாற்றப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை
தமிழகத்திலுள்ள 132 நகரங்களில் மொத்தம் ரூ. 162.56 கோடி
மதிப்பிலான திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 2002-03-ல் நமது
மாநிலத்தில் 13 நகரங்களில் செயல்படுத்த ரூ. 29 கோடி செலவில் 68
திட்டங்களுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதேபோல் 2003-2004ஆம் ஆண்டில் ரூ. 30 கோடி செலவில் 10
நகரங்களில் திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒப்புதல்
அளிக்கப்படும்.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன
உள்கட்டமைப்புத் திட்டம்:**

4. அரசினால் செயல்படுத்தப்படும் சென்னை மகாநகரத் திட்டம்
மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த
மேம்பாட்டுத் திட்டங்களை நிர்வகிப்பதுடன், இந்நிறுவனம்
நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு உதவிடும் பொருட்டு
தனியே ஒரு நிதித் திட்டத்தை வகுத்துள்ளது. இதன் மூலம்
நகராட்சிகள், பேரூராட்சிகள், வாரியங்கள் மற்றும் சட்டபூர்வக்
குழுமங்கள் தங்கள் பகுதிகளில் உள்கட்டமைப்புத் திட்டங்களைச்
செயல்படுத்த குறைந்த வட்டியுடன் கடன் வசதியைப்பெற முடியும்.
நிதியாண்டு 2002-03-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ 209 கோடி மதிப்புள்ள
திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டு 2003-
04-ல் ரூ. 200 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கத்
தீர்மானித்துள்ளது.

**2003-04 ஆம் ஆண்டிற்கு [illegible] மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள்:**

| நிறுவனங்கள் | தோராய மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | [illegible] |
| மாநகரத் திட்டத்தின்கீழ் நிதி நிறுவனப் பங்கு | [illegible] |
| சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி நிறுவனப் பங்கு | [illegible] |
| பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைப் பணிகள் | 35.00 |
| இதரப் பணிகள் | 5.00 |
| மொத்தம் | 200.00 |

**XII. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்**

1. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்
நிறுவனமானது, திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை (Tiruppur
Area Development Project) நிறைவேற்றுவதை பிரதான நோக்கமாகக்
கொண்டு, தமிழ்நாடு அரசு, திருவாளர்கள் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், லீஸிங்
அண்ட் பைனான்ஷியல் சர்வீஸஸ் (Tvl. Infrastructure, Leasing and Financial
Services Ltd.) மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (Tiruppur
Exporters Association) ஆகிய அமைப்புகளால், 1995ஆம் ஆண்டு பிப்ரவரி
மாதம் 1956ஆம் ஆண்டைய இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் சிறப்பு
நோக்க நிறுவனமாக (Special Purpose Vehicle) உருவாக்கப்பட்டது.
இத்திட்டம், நம் நாட்டிலேயே முதன் முதலாக அரசும் தனியாரும்
இணைந்து உருவாக்கிய முதல் குடிநீர் வழங்கு திட்டமாகும்.

**திட்ட நோக்கம்**

2. இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோக அமைப்பு கட்டுமானப்
பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திருப்பூரில் உள்ள சாயப்பட்டறைகள்
மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீர் மட்டுமின்றி, திருப்பூர்
நகராட்சி, 3 பேரூராட்சிகள், 15 ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி
அமைப்புகள் அடங்கிய "திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதி"யில்
(Tiruppur Local Planning Area) உள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குத்



தேவையான குடிநீரும் விநியோகிக்கப்படும். மேலும் நீரேற்றுக்
குழாய்கள் பதிக்கப்படும் வழியில் உள்ள வழியோர ஊராட்சிகளுக்கும்
இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம்
நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர்கள் (185 MLD) நீர் விநியோகம்
செய்யப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்
2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் தேதி இத்திட்டத்திற்கான
அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தங்கள்
அனைத்தும் முடிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வொப்பந்தங்கள்
அக்டோபர் 2002 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.
இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் 2005ஆம் ஆண்டு ஏப்ரல்
மாதம் முடிக்கப்பட்டு, தொழிற்சாலைகளுக்கு நீர் விநியோகம்
செய்யப்படும். இரண்டாவது மற்றும் இறுதிக் கட்டப்பணிகள்
அக்டோபர் 2005-ல் முடிக்கப்பட்டு திருப்பூர் நகராட்சிக்கும் இதர
உள்ளாட்சிகளுக்கும் குடிநீர் வழங்கப்படுவதுடன் திருப்பூர்
நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டமும் நடைமுறைக்கு வரும்.
இத்திட்டத்திற்கான களப்பணிகள் உரிய நேரத்தில் துவங்கப்பட்டு
கால அட்டவணைப்படி செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நிதி**

3. இத்திட்டத்திற்காக இதுநாள்வரை ரூ. 179 கோடி செலவு
செய்யப்பட்டுள்ளது. நிதி நிறுவனத்தினரும், முதலீட்டாளர்களும்
இத்திட்டத்திற்கு பணம் செலுத்தத் துவங்கியுள்ளனர். தமிழக அரசின்
சமபங்குத் தொகையான (Equity Contribution) ரூ. 50 கோடி
முழுவதும் அரசால் வழங்கப்பட்டுவிட்டது.

## XIII. குடிநீர் வழங்கல்

மனித நலத்தில் குடிநீர் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. எனவே
இதை கவனத்தில் கொண்டு மனித நலம் மற்றும் வாழ்க்கைச் சூழல்
ஆகியவற்றை மேம்படுத்த போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட
குடிநீர் பொதுமக்களுக்கு வழங்குவது அவசியமாகிறது. மாண்புமிகு
முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில் "நீர் பாதுகாப்பு" ஓர் அங்கமாக
இணைக்கப்பட்டுள்ளதிலிருந்து நீர் பாதுகாப்பை அமல்படுத்துவதில்
இந்த அரசு உறுதியாக உள்ளது தெளிவாகிறது.

1. கடந்த 4 ஆண்டுகளில் தொடர்ச்சியாக பருவ மழை பொய்த்ததின்
காரணமாகவும், மேலும் நிலத்தடி நீர் அதிக அளவில்
எடுக்கப்படுவதாலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே

நீராதாரத்தின் நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு மழை நீர் சேகரிப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இறுதியாக நீர் மேலாண்மை கையாளுதல் மற்றும் நீர் சேமிப்பு நடவடிக்கைகள் மூலம் மட்டுமே வருங்காலங்களில் போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலும்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்:**

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றும் ஓர் அனுபவம் மிகுந்த நிறுவனமாகும். இவ்வாரியம் மாவட்ட நிர்வாகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசின்கீழ் உள்ள பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றுவதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**2002-2003 ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கம்:**

**3. ஊரகக் குடிநீர்த் திட்டம்**

| திட்டத்தின் பெயர் | இலக்கு | சாதனை | விழுக்காடு |
|---|---|---|---|
| மின்விசைத் திட்டங்கள் மூலம் ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் வசதி கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் | 6500 | 6628 | 102 |
| சிறு மின்விசைத் திட்டங்கள் | 50 | 51 | 102 |
| குடிநீரின் தன்மை | 10000 | 10272 | 103 |
| பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல் | 1000 | 2740 | 274 |
| அரசு பள்ளிகளுக்கான குடிநீர் திட்டம் | 6000 | 6064 | 101 |
| தளத்திலேயே குறைந்த செலவில் சுத்திகரிப்பு கலன்கள் நிறுவுதல் | 50 | 53 | 106 |

கடந்த 2002-2003 ஆம் ஆண்டு மத்திய அரசு துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் (ARWSP) கீழ் தமிழகத்திற்கு 63.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அளித்தது. 1500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாநில அரசு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதையும் திட்டத்திற்குப் பயன்படுத்தியபின், மத்திய அரசு 2002-2003 ஆம் ஆண்டிற்கு மேலும் கூடுதலாக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது.



**நகரக் குடிநீர்த் திட்டம்**

4. 2002-2003 ஆம் நிதியாண்டில் 10.63 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூபாய் 231.24 கோடி மதிப்பீட்டில், 12 நகராட்சிகள் மற்றும் 60 பேரூராட்சிகள், ஆக மொத்தம் 72 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. இவற்றில் மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட 5 நகரங்களும் அடங்கும்.

**ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை:**

5. 1999-2000 ஆம் ஆண்டு ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலையைக் கண்டறிய ஒரு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 1-4-2002 நிலவரப்படி ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை வகைப்படுத்தப்பட்டது. அதன்படி, 1-4-2002-ல் மாநிலத்தில் உள்ள 80,421 ஊரகக் குடியிருப்புகளில், 28,623 குடியிருப்புகள் முழுமையாக குடிநீர் வசதி பெற்றவையாகவும், 51,294 குடியிருப்புகள் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்றவையாகவும், மீதமுள்ள 504 குடியிருப்புகள் நிலைத்த நீராதாரமற்ற குடியிருப்புகளாகவும் வகைப்படுத்தப்பட்டன.

6. 2002-2003 ஆம் ஆண்டில் நிலைத்த நீராதாரமற்ற 465 குடியிருப்புகளும், 6,103 பகுதியாக குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளும், முழுமையாக குடிநீர் வசதி பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

7. மார்ச் 2003-ல் மத்திய அரசு, ஒரு புதிய குடிநீர் நிலை ஆய்வினை மேற்கொண்டு ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலையை 1-1-2003 நிலவரப்படி வகைப்படுத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளது. அதன்படி ஒரு மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இப்புதிய குடிநீர் ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடப்பு நிதியாண்டு முதல் ஊரகக் குடியிருப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

**2003-2004 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்:**

**8. ஊரகக் குடிநீர்த் திட்டம்**

i. நடப்பு நிதியாண்டில் 6000 குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதி செய்து தர திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றில் மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 1000 குடியிருப்புகளுக்கு ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து தருவதும் அடங்கும்.

[2003 ஏப்ரல் 29

ii. 2003-2004 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதியில், மீதமுள்ள சுமார் 5000 அரசுப் பள்ளிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

iii. கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் பெறுவதில் கிராமப்புற மக்கள், குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் படும் இன்னல்களைக் களையும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு மின்விசைத் திட்டங்கள் மிகவும் வெற்றியடைந்துள்ளன. இத்திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், இதுவரை ஊரகப் பகுதிகளில் 14,661 கையிறைப்பான்கள், சிறு மின் இறைப்பான்களாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் அமைக்கப்பட்ட 4,026 உள்பட மொத்தம் 10,272 கையிறைப்பான்கள், சிறுமின்இறைப்பான்களாக மாற்றி அமைக்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில், மேலும் 10,000 கையிறைப்பான்கள், சிறு மின்இறைப்பான்களாக மாற்றி அமைக்கப்படும். அவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் மாற்றி அமைக்கப்படும் 4,000 சிறு மின்இறைப்பான்களும் அடங்கும்.

## 9. சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை மேம்படுத்துவதில் இவ்வரசு அதிக கவனம் கொண்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 2,479 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ரூபாய் 106.63 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் 4,000 சிறு மின்விசைத் திட்டங்களும் இக்குடியிருப்புகளுக்கு செயல்படுத்தப்படும்.



2003 ஏப்ரல் 29]

## 10. பொது மக்கள் பங்கேற்போடு கூடிய ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்

### i) பகுதி சீரமைப்புத் திட்டம்

1999-2000 ஆம் ஆண்டு முதல் மக்கள் பங்கேற்புடன்கூடிய பகுதி சீரமைப்புத் திட்டம், வேலூர், கோயம்புத்தூர், கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2002-2003ஆம் ஆண்டு, காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மேலும் இரண்டு மாவட்டங்கள் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டிலேயே பகுதி சீரமைப்புத் திட்டம் செயல்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு.

| வரிசை எண் | விவரம் | கோயம்புத்தூர் | வேலூர் | கரூர் | பெரம்பலூர் | காஞ்சிபுரம் | விருதுநகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை | 389 | 753 | 682 | 322 | 648 | 450 | 3244 |
| 2 | அமைக்கப்பட்ட கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுக்கள் | 389 | 753 | 682 | 322 | 648 | 450 | 3244 |
| 3 | பொதுமக்களின் பங்களிப்பு (ரூ. இலட்சத்தில்) | 457 | 340 | 350 | 284 | 39 | 85 | 1555 |
| 4 | அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் | 1650 | 2780 | 1578 | 964 | 44 | 89 | 7105 |
| 5 | நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | 1599 | 2573 | 1162 | 665 | 3 | 3 | 6005 |
| 6 | மொத்த செலவினம் (ரூ. இலட்சத்தில்) | 2564 | 2800 | 2052 | 1547 | 251 | 243 | 9457 |

2003-2004 ஆம் நிதியாண்டில் 1237 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 55 கோடி உத்தேச மதிப்பீட்டில் மேற்கண்ட ஆறு மாவட்டங்களில் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

[2003 ஏப்ரல் 29

ii) " சுவஜல்தாரா" ஊரகக் குடிநீர்த் திட்டம்

டிசம்பர் 2002-ல் மத்திய அரசு, பொதுமக்களின் பங்கேற்புடன் கூடிய கோட்பாடுகளை உள்ளடக்கிய 'சுவஜல்தாரா', என்ற ஊரகக் குடிநீர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

**'சுவஜல்தாரா' திட்டம் கீழ்க்கண்ட கோட்பாடுகளை உள்ளடக்கியதாகும்:**

- எந்த ஒரு கிராமத்திலும், மக்கள் சமுதாயத்திலும் பகுதி சீரமைப்புத் திட்டக் கோட்பாடுகளைப் பின்பற்ற முன்வரும் மக்கள் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளலாம்.
- மூலதன மதிப்பீட்டில் 10 விழுக்காடு பொதுமக்களின் பங்களிப்பாக வழங்க வேண்டும். இருப்பினும் மக்கள் தொகையில் 50 விழுக்காடு ஆதி திராவிடர் மற்றும பழங்குடியினராக இருப்பின் இக்குடியிருப்புகளில் மூலதன மதிப்பீட்டில் 5 விழுக்காடு பொதுமக்களின் பங்களிப்பாக அளிக்க வேண்டும்.
- பராமரிப்பிற்கு ஒரு முறை மானியமாக மத்திய அரசு வழங்கும் தொகையினை, இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கான சுழல் நிதியாக வைத்துக் கொள்ளலாம்.
- பகுதி சீரமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரும் மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் ஒவ்வொரு திட்டமும் ரூபாய் 25 இலட்சம் வரை திட்ட மதிப்பீடு உள்ள திட்டங்களை நிறைவேற்றுதல்.
- விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் வரையறை மற்றும் கோட்பாடுகளை பின்பற்றுதல்.

11. இதுவரை 44.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,227 திட்ட மதிப்பீடுகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் 396 திட்ட மதிப்பீடுகள் 15.84 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டு 1200 குடியிருப்புகள் பயன் பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்படும்.



2003 ஏப்ரல் 29]

## 12. பிரதமரின் கிராம யோஜனா திட்டம்

மழை நீரை தகுந்த முறையில் சேமிக்கும் பொருட்டு மாநிலத்தில் உள்ள முக்கிய நீர் நிலைகளைத் தூர் வாரும் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள தொலை தூர உணர்வு தொழில் நுட்ப மையத்தினால் தயாரிக்கப்பட்ட நிலத்தடி நீர் செறிவூட்டல் வரைபடங்களின் அடிப்படையில், தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நிலத்தடித் தடுப்பணைகள் உள்ளிட்ட 409 செறிவூட்டல் கட்டமைப்புகளை, தமிழகத்தில் பிரதமரின் கிராம யோஜனா திட்ட நிதியின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடந்த 2 ஆண்டுகளில் உருவாக்கியுள்ளது. இவற்றில் 292 கட்டமைப்புகள் 2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டவை ஆகும்.

தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகள், ஊருணிகளை மேம்படுத்தல் மற்றும் செறிவூட்டல் குழிகள் போன்ற மழை நீர் சேகரிக்கும் கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டு, 300 கட்டமைப்புகள் ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

13. திருவள்ளூர், தருமபுரி, தேனி, கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 182 மழை நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் உருவாக்க தேசிய ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) ரூபாய் 6.25 கோடி அனுமதித்துள்ளது. இப்பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

**நகரக் குடிநீர்த் திட்டங்கள்**

14. 2002-2003ஆம் ஆண்டில் 2 மாநகராட்சிகள், 31 நகராட்சிகள் மற்றும் 137 பேரூராட்சிகள் ஆகிய 170 நகரங்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே செயலாக்கத்திலுள்ள திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இதில் சுமார் 19.63 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 72 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் நிதியாண்டில், செயலாக்கத்தில் உள்ள 98 நகரங்களுக்கானத் திட்டப்பணிகள் தொடரப்படுவதுடன் கூடுதலாக 45 நகரங்களுக்குப் புதிதாக குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 2003-2004 ஆம் ஆண்டில் 60 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றி பயனுக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15. மத்திய அரசு துரிதப்படுத்தப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 31-3-2002 வரை ரூபாய் 57.40 கோடி மதிப்பீட்டில், 36 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துருவிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியது. மேலும் 2002-2003 ஆம் ஆண்டில் மத்திய அரசு 10.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 10 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இதுவரை 31 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில், கன்னியாகுமரி, பாலக்கோடு, ஏர்வாடி, முத்துப்பேட்டை, திருப்பெரும்புதூர், ஆடுதுறை, திருபுவனம் மற்றும் திருவிடைமருதூர் ஆகிய 8 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்படும். நடப்பு நிதியாண்டில் சுயத்தாறு, கழுகுமலை, எட்டயபுரம், ஒரத்தநாடு மற்றும் நத்தம் ஆகிய நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூபாய் 22.24 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

## 16. பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்கள்

### i) தமிழ்நாடு ஊரகக் குடிநீர்த் திட்டம்

10,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ள ஒரு கருத்துரு மத்திய அரசு மூலமாக, உலக வங்கியின் நிதியுதவி பெறுவதற்காக அனுப்பப்பட்டது. உலகவங்கியின் கண்டறியும் குழு மார்ச் 2002-ல் மாநிலத்திற்கு வருகை தந்து மாநில அரசின் அதிகாரிகளுடன் விவாதித்த பின்னர், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 8 மாவட்டங்களிலும் மக்கள் பங்களிப்புடன் ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தலாம் எனத் தெரிவித்தது. உலக வங்கி கீழ்க்கண்ட 3 பொருள்கள் குறித்து சில தீர்வுகளைக் கோரியது. i) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் குறித்த அரசின் கொள்கை ii) பொதுக்குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் வசூலித்தல் iii) வாரியத்தின் நிதி நிலைமையில் பின்னடைவு. உலக வங்கியின் குழு மீண்டும் பிப்ரவரி 2003-ல் மாநிலத்திற்கு வருகை தந்து அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. உலக வங்கியின் குழு எழுப்பிய குறிப்புகளுக்கு மாநில அரசு கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுத்துள்ளது. i) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை இரத்து செய்தது. ii) பொதுக் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணத்திற்காக வீட்டுவரியின் மீதான கூடுதல் கட்டணம் iii) குடிநீருக்கானக் கட்டணத்தை அதிகப்படுத்துதல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்





கட்டமைப்புகளை அமைக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழக அரசு அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவுவதை கட்டாயமாக்கி உள்ளது. மேலும் ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டடங்களில் அக்டோபர் 2002 ஆம் ஆண்டில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவுவதை கட்டாயமாக்கி உள்ளது. இதன் காரணமாக, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பழமை வாய்ந்த நீராதாரங்களான ஊருணிகள் மற்றும் குட்டைகள் ஆகியவற்றைப் புனரமைத்து குடிநீர் ஆதாரங்களாகவும் மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளாகவும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19. பொதுமக்களுக்கு மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மேடை நாடகம், பரவலான மக்கள் தொடர்பு அமைப்புகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழை நீர் சேகரிப்பு தொழில் நுட்பத்தை, பொதுமக்கள் அறியும் வகையில் மழை நீர் சேகரிப்பு மையங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தலைமை இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலை அருகாமையில் உள்ள கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 20. குடிநீர் தரத்தின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தன்மை அவ்வப்போது மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பரிசோதனைக் கூடங்களில் சோதனை செய்யப்படுகின்றன. அளவிற்கு அதிகமான நிலத்தடி நீரினை உபயோகத்திற்கு எடுப்பது, பருவமழை பொய்ப்பது போன்ற காரணங்களினால், குடிநீரின் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. குடிநீரின் தர ஆய்வு மற்றும் கண்காணிப்பை கிராம அளவில் செயல்படுத்த மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தை அந்தந்த ஊராட்சிகள் மற்றும் அங்குள்ள பள்ளிகள் மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இத்திட்டம், கடலூர் மாவட்டத்தில் ஒரு ஊராட்சியில் டானிடா நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது மற்ற ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படும்.

[2003 ஏப்ரல் 29

### 21. ஃபுளூரைடு பாதிப்பினைத் தணிக்கும் நடவடிக்கை

தருமபுரி, சேலம், ஈரோடு, திண்டுக்கல், நாமக்கல், வேலூர் முதலிய மாவட்டங்களில் குடிநீராதாரங்களில் ஃபுளூரைடு அதிக அளவில் இருப்பது பொதுவானதாக உள்ளது. குடிநீரில் இருக்கும் அதிக அளவு ஃபுளூரைடு, பல் மற்றும் உடலில் ஃபுளூரோஸிஸ் நோய் பாதிப்பு ஏற்படக் காரணமாகிறது ஃபுளூரைடைல் பாதிக்கப்பட்ட நீராதாரங்களைக் கண்டறிதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஃபுளூரைடால் பாதிப்பு பற்றிய நல ஆய்வு நடத்துதல், ஃபுளோரைடினைப் போக்க தகுதியான தொழில் நுட்பங்கள் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு முதலிய முக்கியமான நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மாநில அளவில் பல்நோக்கு ஃபுளோரைஸிஸ் கட்டுப்பாடு மையம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை ஒருங்கிணைப்பு அமைப்பாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஃபுளோரைடால் பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துள்ளது. மாற்று நீராதாரங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் தொலைதூரமுள்ள நீராதாரங்களிலிருந்து நீர் பெறுதல், மற்றும் குடியிருப்புகளில் உள்ள நீராதாரங்களில் ஃபுளோரைடினை நீக்கத் தகுந்த தொழில் நுட்பமுறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நீடித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில், ஒரு முன்மாதிரி திட்டமாக 10 ஃபுளோரைடு நீக்கும் கலன்கள் நிறுவப்பட்டு அதன் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. 2002-2003ஆம் ஆண்டில் தொலைதூரத்தில் உள்ள நீராதாரங்களிலிருந்து நீர் எடுத்து ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட 390 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### 22. இரும்புச் சத்து நீக்கும் கலன்கள்

அதிக இரும்புச் சத்து உள்ள 43 குடியிருப்புகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இரும்புச் சத்து நீக்கும் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

### 23. நகரங்களுக்கான பாதாளச் சாக்கடைப் பெருந் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 367 நகரப் பேரூராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் ஒரு பெரும் பாதாளச் சாக்கடைத் திட்ட வரைவு அறிக்கை ரூபாய் 4,500 கோடி மதிப்பில்



2003 ஏப்ரல் 29]

தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 20 ஆண்டு கால வரையறையில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 24. தேசிய நதிநீர் தூய்மைத் திட்டம்

தேசிய நதிநீர் தூய்மைத் திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி, ஈரோடு, பவானி, குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் நகரப் பகுதிகளில் காவிரியாறு மாசுபடுதலைத் தடுக்க, மத்திய அரசு 31.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் பணிகளில், திருச்சிராப்பள்ளி நகரப் பகுதியில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, மாநகராட்சியிடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஈரோடு, பவானி மற்றும் குமாரபாளையம் நகரப் பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 25. தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டச் செயலாக்கப் பணிகள் ரூபாய் 175.84 கோடி மதிப்பீட்டில நடைபெற்று வருகின்றன.

1. திருநெல்வேலி மாநகராட்சி
2. தஞ்சாவூர் நகராட்சி
3. மயிலாடுதுறை நகராட்சி
4. கரூர் நகராட்சி
5. இனாம் கரூர் நகரப் பேரூராட்சி

2003-2004ஆம் நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ரூபாய் 116.67 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட 3 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ரூபாய் 43 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்த திட்ட மதிப்பீடுகள் மத்திய அரசின் ஒப்புதல் பெற மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

1. இராமேஸ்வரம் நகரப் பேரூராட்சி
2. திருச்செந்தூர் நகரப் பேரூராட்சி
3. ஆம்பூர் நகராட்சி

[2003 ஏப்ரல் 29

வேலூர் மாவட்டத்தில், இராணிப்பேட்டை மற்றும் வாலாஜாபேட்டை
நகராட்சிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் ரூபாய் 25 கோடி
மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக விரைவில்
அனுப்பப்பட உள்ளது.

**26. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்**

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் ஏரி
மற்றும் உதகமண்டலம் ஏரி மாசுபடுவதைத் தடுக்க, புனரமைப்புத் திட்டம்
மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**27. கொடைக்கானல் ஏரி**

ஏரிக்குள் செல்லும் கழிவுநீரை இடைமறித்து திசைமாற்றும் பணிகள்,
கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், ஏரியை ஆழப்படுத்துதல், தூர் வாருதல்
ஆகிய பணிகள் ரூபாய் 9.13 கோடி மதிப்பீட்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மத்திய அரசின் பங்கீடு ரூபாய்
5.13 கோடி ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூபாய் 3.47
கோடி மதிப்பீட்டில் தடுத்தல் மற்றும் திருப்புதல் பணிகள், கழிவுநீர்
சுத்திகரிப்புப் பணிகள் முதலியவை செயலாக்கத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் 6/2004-ல் முடிக்க
திட்டமிடப்பட்டுள்ளது. கொடிகள் அகற்றுதல், தூர் வாருதல் மற்றும்
உயிரியல் முறையில் சுத்திகரித்தல் முதலிய பணிகள் பொதுப் பணித்
துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறைந்த செலவு சுகாதாரம்
மற்றும் சமுதாயக் கழிப்பிடப் பணிகள் உள்ளாட்சி அமைப்பால்
செயல்படுத்தப்படவுள்ளது.

**28. உதகமண்டலம் ஏரி**

உதகமண்டலம் ஏரி மாசுபடுதலைத் தடுப்பதற்கான பணிகள், பொதுப்
பணித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**29. கணினிமயமாக்கல்**

தற்பொழுது வாரியத்தில் செயல்பட்டு வரும் தனித்தியங்கு
அமைப்புகளுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த உடன்நிகழ் பயன்பாட்டு
மென்பொருளினை, பெரும் பரப்பு வலையமைப்பு மூலமாகச்
செயல்படுத்த, இராஜீவ் காந்தி தேசியக் குடிநீர்க் குழுமத்திடம் நிதி
உதவி கோரப்பட்டுள்ளது.

**30. கணிப்பொறி வலையமைப்பு**

தற்பொழுது வாரியத்தில் 100 அலுவலகங்களில் இணையம் TCP/IP



2003 ஏப்ரல் 29]

வசதி ஏற்படுத்தப்பட்டு தகவல்கள் மின்னஞ்சல் மூலம் பரிமாறிக்
கொள்ளப்படுகின்றன. மேலும் இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்
குழுமத்திடம் அனுமதி மற்றும் நிதி உதவி பெறப்பட்ட பின்னர் பெரும்
பரப்பு வலையம் மூலமாக அலுவலகங்களை இணைக்க முடிவு
செய்யப்பட்டுள்ளது. இப்பெரும் பரப்பு வலையம், தலைமை
அலுவலகத்தில் இருந்து மண்டலங்கள் மற்றும் வட்டங்களுக்கு குத்தகை
இணைப்புகள் மூலமாகவும், வட்டத்தில் இருந்து கோட்டங்களுக்கு மோடம்
(modem) இணைப்புகள் மூலமாகவும் இணைக்க முடிவு
செய்யப்பட்டுள்ளது.

**31. இணையதள தொழில்நுட்பம்**

ஏற்கெனவே உள்ள வாரியத்தின் இணையதளம் முழுமையாக
மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. மாற்றியமைக்கப்படும்
இணையதளத்தில் கீழ்க்கண்ட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

(i) கிராமக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை அறிதல்.

பொதுமக்கள், குடிநீர் வசதி நிலை பற்றிய தகவல்களை கிராமங்களின்
பெயர்களைத் தட்டச்சு செய்தோ அல்லது மாவட்டம், ஒன்றியம்,
பஞ்சாயத்து மற்றும் கிராம குடியிருப்பின் பெயர்களை தேர்வு செய்தோ
பார்க்கலாம்.

(ii) செயலில் உள்ள நகர மற்றும் கிராமக் குடிநீர்ப் பணிகளின் நிலை
அறிதல்.

கோட்டத்தில் நிறைவேற்றப்படும் பணிகளின் முன்னேற்ற விவரங்களை
இணையதளத்தில் உடனுக்குடன் பதிவு செய்ய இயலும். பணி
முன்னேற்ற அறிக்கைகள், வாரிய தலைமை அலுவலகம், தலைமைப்
பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களால் உருவாக்க
இயலும். வாரியத்தில் செய்யப்பட்டு வரும் பணிகளின் நிலைகளை,
பொதுமக்கள் தெரிந்து கொள்ள இணையதளத்தில் வழிவகை
செய்யப்பட்டுள்ளது.

(iii) செயலில் உள்ள குறிப்பிட்ட நகரக் குடிநீர்த் திட்டங்களின் நிதி ஆதார
அமைப்பு.

பொதுமக்கள், நடைபெற்று வரும் நகரப் பணிகளுக்கு எவ்வழியில்
நிதி ஆதாரம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

(iv) குறைகள் கண்காணிக்கும் செயல் திட்டம்

பொதுமக்களுக்கு, இப்பணிகளைப் பற்றிய குறையிருப்பின் அவற்றை இணையதளம் மூலம் பதிவு செய்து பதில்களை தங்கள் மின்னஞ்சல் முகவரி மூலம் பெறலாம்

(v) ஒப்பந்தப் படிவங்கள் வழங்குதல்.

வாரியத்தின் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை இணையதளம் மூலம் ஒப்பந்தக்காரர்கள் நேரிடையாக பெற்றுக் கொள்ளலாம்.

குடிநீரின் தன்மை பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் மற்றும் வாரியத்தில் வெளியிடப்படும் பொதுமக்கள் நலன்கள் தொடர்புடைய செயல்முறை ஆணைகள் தொடர்பான விளக்கங்களை பொதுமக்கள்பெற கூடுதல் வசதிகள் இணையதளத்தில் உள்ளன. மேலும் பொதுமக்கள் நலன் தொடர்புடைய அரசு ஆணைகள் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தகவல்கள் சட்டபூர்வமான விளக்கங்கள் போன்றவற்றிற்கும் தொடர்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(vi) பயிற்சி

வாரியத்தில் கணினி உபயோகிக்கும் அலுவலர்களுக்கு இயக்க அமைப்பு மற்றும் அலுவலகத்தில் உபயோகப்படுத்தப்படும் மென்பொருள்களை இயக்குதல் போன்றவற்றிற்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வாரியத்தில் உள்ள அனைத்து கணினி உபயோகிப்பாளர்களுக்கும் 31-12-2003-க்குள் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 32. குடிநீர்ப் பற்றாக்குறை நிலையை நீக்குதல்

கடந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை பொய்த்ததின் காரணமாகவும், வரைமுறையின்றி நிலத்தடி நீர் உபயோகத்தின் காரணமாகவும், நிலத்தடி நீரின் தரம் மற்றும் அதன் கொடுதிறன் குறைந்து கொண்டு வருகிறது. ஜனவரி 1999ஆம் ஆண்டு 12.20 மீட்டரில் இருந்த நிலத்தடி நீர் மட்டம் ஜனவரி 2003இல் 24.40 மீட்டராகக் குறைந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள 2002-2003ஆம் ஆண்டில் இடர் நிவாரண நிதியாக ரூபாய் 158.41 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த இடர் நிவாரண நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி



நீராதாரத்தை மேம்படுத்துதல், கையிறைப்பான்கள் பொருத்துதல், சிறு மின்விசைத் திட்டம் அமைத்தல், குடிநீர்க் குழாய்கள் மற்றும் மின்னிறைப்பான்களைப் பழுது நீக்கம் செய்தல்/புதிதாக அமைத்தல், லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் போர்க்கால அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இடர் நிவாரண நிதியின்கீழ் அரசு ஒதுக்கீடு செய்த நிதியைக் கொண்டு 21,597 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## XIV. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர்ப் பகுதியில், குறிப்பாக பொதுச் சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில், வளர்ந்து வரும் குடிநீர்த் தேவை மற்றும் கழிவுநீர் வசதிகளை முழுமையாக மேம்பட்ட முறையில் செயல்படுத்துவதே சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 1. நீர் மேலாண்மைத் திட்டம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஒவ்வொருவருக்கும் வழங்கும் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்கும், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீர் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கும், நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதாரங்களை மேம்படுத்த நீர்மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்தும் இத்திட்டம் மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் இணைத்துச் செயல்படுத்துவது ஆகும்.

உத்தேசிக்கப்பட்ட நீர் மேலாண்மைத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழ்வருமாறு:

1) ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி முதல் தேதியில், ஏரிகளில் உள்ள நீர்த் தேக்க அளவு மற்றும் கிணற்றுத் தளங்களில் உள்ள நிலத்தடி நீர் அளவின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாநகர் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவினை நிர்ணயிக்கவும் மற்றும் அடுத்த பருவ மழை துவங்குவதற்கு முன் அதாவது அக்டோபர் 1 ஆம் தேதிவரை, ஏரிகளில் குறைந்த பட்சக் கொள்ளளவில் தண்ணீர் இருக்குமாறு திட்டம் தீட்டப்படும்.

2) மேற்படித் திட்டம், தெலுங்கு-கங்கா திட்டத்தின்கீழ் கண்டலேறு மற்றும் சோமசிலா/ஸ்ரீசைலம் ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள தண்ணீர் அளவைச் சார்ந்து இருக்கும்.

3) குடிநீர் வழங்கல் ஆதாரங்களை மேம்டடுத்துவதற்காகக் கடந்த ஆண்டு திட்டமிட்டபடி, வீராணம் ஏரியில் இருந்து தினமும் நாள் ஒன்றிற்கு 180 மில்லியன் லிட்டர் வீதம் சுத்திகரித்த நீர் சென்னைக்குக் கொண்டு வரும் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-ன் பணிகள் திட்டமிட்டபடி துரிதப்படுத்திச் செயலாக்கப்படும்.

4) சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-2-ன்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வயலூர் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது ஒரு பகுதிப் பணியாகும் இப்பணி பொதுப் பணித் துறையின் விரிவான ஆய்விற்குப்பின், மங்களம் அருகே சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் 1-ன்கீழ் செயலாக்கப்படும். குழாய் அமைக்கும் பணிகளோடு கூடுதல் பணியாகச் செயல்படுத்தி இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

5) செங்கல்பட்டு அருகே உள்ள கொளவாய் ஏரியில் இருந்து சென்னை நகருக்கு நீர் எடுத்துவரப்படும் திட்டம் இந்த நிதி ஆண்டு 2003-2004-ல் செயல்படுத்தப்பட்டு, செப்டம்பர், 2004-ல் முடிக்கப்படும்.

6) உலக வங்கி உதவியுடன் இரண்டாம் சென்னைத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மற்றும் கூடுதல் பணிகளான (1) குளோரினேட்டர்கள் அமைத்தல் (2) கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்துதல் (3) மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்படும் தண்ணீருக்கு அளவுமானி வைத்தல் (4) பரிசோதனை உபகரணங்கள் வாங்குதல் (5) கருவிகள் மற்றும் மாற்றுக் கருவிகள் வாங்குதல் (6) மாதிரிப் பகுதிகளில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தகவல் அமைப்பு மற்றும் தொழில் நுட்பத் திட்டம் போன்றவற்றைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.



7) சென்னைக் குடிநீர் வாரியம், ரூபாய் 600 கோடி (அல்லது) அமெரிக்க டாலர் 125 மில்லியன் மதிப்பீட்டில் "மூன்றாவது சென்னைத் திட்டத்திற்கு" உலக வங்கியிடம் நிதியுதவி கோரத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் (1) சென்னை நகரக் குடிநீர் வழங்கலை முறையான விதத்தில் மேம்படுத்துதல் (2) ஆரணியாறு, கொசஸ்தலையாறு பகுதிகளில் கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கான உள்ளமைப்பு வசதி (3) விடுபட்ட பகுதிகளில் தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்ப விரிவாக்கப் பணி (4) புவியியல் தகவல் முறைகளைச் செயல்படுத்துதல் (5) கணக்கிடப்படாத குடிநீர்ப் பிரிவின்கீழ் விடுபட்ட பகுதிகளில் குடிநீர்க் கசிவு காணல் மற்றும் நிவர்த்தி செய்யும் பணிகள் செய்தல் (6) சென்னைக்கு அருகாமையில் உள்ள நகரப் பகுதிகளுக்கும் தொலைவில் உள்ள நகரப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் அடிப்படை வசதிகளை அமைத்தல் (7) ஏழு நகர உள்ளாட்சி அமைப்புகளில் கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையங்களைக் கட்டுதல் போன்றவை அடங்கும்.

8) திருக்கண்டலம் அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், மீஞ்சூர் அருகே உள்ள வள்ளூர் அணைக்கட்டைப் புதுப்பித்தல், மாதவரம் ஏரி (இரட்டை ஏரி), கொரட்டூர் ஏரி மற்றும் அம்பத்தூர் ஏரிகளை ஆழப்படுத்தி தூர்வாருதல் போன்ற பணிகள் மூன்றாம் சென்னைத் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறைவேற்றப்படும்.

9) நிலத்தடி நீரை மேம்படுத்தும் அளவில் மழைநீர் சேகரிப்பு முறையின் குறிக்கோளை மக்கள் மத்தியில் மேலும் பிரபலப்படுத்துதல் மூலம் மக்கள் தாங்களாகவே இத்திட்டத்தில் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொள்ளச் செய்தல். மேலும் திருத்தப்பட்ட நிலத்தடி நீர் ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் மூலம், நிலத்தடி நீர் எடுக்கப்படுவது முறைப்படுத்தப்படும்.

10) பொதுக் கட்டடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அப்பகுதிகளில் கிடைக்கும் உவர்நீரை எதிர் சவ்வூடு பரவல் முறை மூலம் சுத்திகரித்து எந்த அளவிற்குப் பயன்படுத்த இயலுமோ அந்த அளவிற்கு உபயோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் குழாய் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதைக் குறைக்கலாம்.

11) வெள்ளத்தைத் தடுக்கும் திட்டமாக, சென்னை நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்ட கழிவுநீர் மேம்படுத்தும் பணிகள் வட கிழக்குப் பருவ மழை ஆரம்பிப்பதற்கு முன் முடிக்கப்படவுள்ளன.

12) கொடுங்கையூர், நெசப்பாக்கம், பெருங்குடி மற்றும் கோயம்பேடு ஆகிய நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறனை நாளொன்றுக்கு 268 மில்லியன் லிட்டரிலிருந்து 532 மில்லியன் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.

13) நடைமுறையில் உள்ள சென்னை நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் மழைநீர்க் கால்வாய்கள், மற்றும் நகர நீர்வழித் தடங்களில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி நீரை மாசுபடாமல் பாதுகாத்தல்.

14) சென்னைக் குடிநீர் வாரியம், கூடுதல் நீர் ஆதாரமாக நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் அளவு கடல் நீரை நன்னீராக்கும் நிலையத்தை நிறுவி, உரிமத்துடன் இயக்கி, பின்னர் உரிமம் மாற்றும் (பி.ஓ.ஓ.டி.) முறையில் வாரியத்திற்குக் கொடுத்தல் முறையினை வறட்சி நிவாரணப் பணியாகச் செயல்படுத்தவுள்ளது.

15) வாரியம், அடுத்த 3 ஆண்டுகளில் படிப்படியாக 100 விழுக்காடு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் பகுதியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ஓர் இணைப்பிற்கு வழக்கமான கட்டணமான ரூபாய் 3,390/-க்குப் பதிலாக மிகக் குறைந்த தொகையான ரூபாய் 100/- செலுத்துவதன் மூலம் கழிவுநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது. நகர குடிசைப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குமேல் வாழும் ஏழைகளுக்கு 50 சதவீத சலுகை இணைப்புக் கட்டணத்தின் கீழ் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுத்தம் மற்றும் சுகாதார மேம்பாட்டின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட திட்டம் செயல்படுத்தப்படுவதால் வாரியத்திற்கு ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் செலவு ஏற்படும்.



16) தெலுங்கு-கங்கை திட்டத்தின்கீழ் ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்படும் கூடுதல் நீரை சுத்திகரிப்பதற்காக பிரெஞ்சு உதவியுடன் செம்பரம்பாக்கத்தில் 530 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கும் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணிகள் ஜனவரி 2005-ல் முடிக்கப்படும்.

17) தொழிற்சாலை உபயோகத்திற்குத் தேவைப்படும் நீர் தங்கு தடையின்றி வழங்குவதற்கு நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூன்றாவது முறை மறு சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கும் பணி இவ்வாண்டில் தொடங்கப்படவுள்ளது.

18) நீர்க் கசிவு இழப்புகளைக் குறைக்க பூண்டி நீர்த்தேக்கத்தில் உள்ள பேபி கால்வாயிலிருந்து தாமரைப்பாக்கத்தில் உள்ள மேற்புறக் கால்வாய் வரைக்கும் மற்றும் செங்குன்றம் அருகே (மெக்லின் கால்வாய்) இணைக்கும் கால்வாயிலும் சிமெண்ட் பூச்சு வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

## 2. 2003 ஆம் ஆண்டில் சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் நிலை

2002 ஆம் ஆண்டு சென்னை மாநகரில் வட கிழக்குப் பருவ மழை தேவையான அளவு பெய்திருந்தாலும், குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழையளவு போதுமானதாக இல்லை. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வழக்கமான ஆண்டு மழை அளவான 1,400 மி.மீ. அளவுக்குப் பதிலாக, 110 மி.மீ. மழையே பெய்துள்ளது. 2001 ஆம் ஆண்டு, இந்நீர் பிடிப்புப் பகுதிகளில் 1,400 மி.மீ. அளவு மழை நீர் பெறப்பட்டுள்ளது. இதைத்தவிர 2001 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்திலுள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 3.26 ஆயிரம் மில்லியன் கன அடி நீரும் பெறப்பட்டது. இவற்றைக் கொண்டு 2002 ஆம் ஆண்டில் தினமும் வழக்கமான அளவு குடிநீர் வழங்கப்பட்டது.

பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஆகிய மூன்று ஏரிகளின் மொத்த நீர் இருப்பு ஜனவரி 2003 ஆம் ஆண்டு சுமார் 39 விழுக்காடு மட்டுமே இருந்தது. இந்த இருப்பிலிருந்து, ஏப்ரல் 2003 வரை மட்டுமே சென்னைக் குடிநீர் வாரியத்தால் தினசரி குடிநீர் விநியோகம் செய்திருக்க முடியும். ஆந்திர மாநிலத்தில் குறைந்தளவே மழை பெய்ததால் ஸ்ரீசைலம், சோமசீலா மற்றும் கண்டலேறு ஆகிய

நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைந்த அளவு நீர் இருப்பே உள்ளது மேலும் நீர்த்தேக்கங்களில் தற்போதுள்ள நீரின் மட்டம் நீர் எடுக்கும் மட்டத்தைவிடக் குறைவாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க ஆந்திர மாநில அரசு ஜூலை 2003-க்குப்பின் வரும் தென் மேற்குப் பருவ மழையின் அளவைப் பொறுத்து நீர் இருப்பு அதிகரிக்குமானால் தமிழ்நாட்டிற்கு ஜூலை 2003-க்கு பிறகு தண்ணீர் அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது.

இந்தக் கடினமான சூழ்நிலையில் மாநகரவாழ் மக்களுக்குக் குடிநீர் வழங்க உறுதி செய்யும் வகையில் குடிநீர் வாரியம் 18-1-2003ல் இருந்து விநியோகக் குழாய்கள் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகிக்கும் முறை குழாய் இணைப்பின் கடைக்கோடி வரை செல்லுமாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குடிநீர்க் குறைபாடு மற்றும் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத தெருக்களுக்குத் தண்ணீர் லாரி மூலமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் விநியோகிக்கும் நாட்களில் குழாய்கள் மூலமாக நாளொன்றுக்கு 275 மில்லியன் லிட்டர் அளவும், விநியோகிக்கப்படாத நாட்களில் லாரி மூலம் நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் நீரும் வழங்கப்படுகிறது. செங்குன்றம் ஏரியிலிருந்து வழங்கப்படும் குடிநீரோடு கிணற்றுத் தளத்து நீரையும் சேர்த்து நாளொன்றுக்குத் தற்போது வழங்கப்படும் 80 மில்லியன் லிட்டர் அளவிலிருந்து 100 மில்லியன் லிட்டர்அளவுக்குப் படிப்படியாக உயர்த்தப்படவுள்ளது.

கோடைக் காலத்தில் நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் அளவைப் பெறுவதற்காக, கூடுதலாக 75 தனியார் விவசாயக் கிணறுகள் வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளன. இதன்மூலம் நாள் ஒன்றிற்கு 25 மில்லியன் லிட்டர் அளவு நீர் கூடுதலாகப் பெறப்படும். விவசாயக் கிணறுகளிலிருந்து பெறப்படும் கூடுதல் நீரை வழங்குவதற்காகக் கூடுதல் குழாய்கள் மற்றும் பம்ப் செட் அமைக்கும் பணிக்கும் மற்றும் கிணற்றுப்பகுதிகளின் உள்ளமைப்பை மேம்படுத்தலுக்காகவும் ரூபாய் 12 கோடியே 58 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏரிகளில் உள்ள நீருடன், அதிகப்படியான நீரைக் கொண்டு வருவதற்கான கூடுதல் பணிகளுக்காக எதிர்பாராச் செலவினத்தில் ரூபாய் 55 கோடி திட்டம் ஒன்று கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.



### 3. பேபி கால்வாய் மற்றும் இணைப்புக் கால்வாயில் சிமெண்ட் பூச்சு அமைத்தல்

பூண்டி ஏரியிலிருந்து சோழவரம் ஏரிக்கு மேல்நிலைக் கால்வாய் மூலம் நீர் கொண்டுவரும் போது ஏற்படும் நீர் இழப்புகளைக் குறைப்பதற்காக ரூபாய் 280 இலட்சம் செலவில் பேபி கால்வாய் பூண்டியிலிருந்து மேல்நிலைக் கால்வாய் வரைக்கும் 15.65 கி.மீ. தூரத்திற்கு சிமெண்ட் பூச்சு செய்வதற்காக இந்த ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோல், ரூபாய் 500 இலட்சத்தில் நீர் இழப்புகளைக் குறைக்க, பூண்டியிலிருந்து செங்குன்றம் வரை செல்லும் இணைப்புக் கால்வாயில் 6.25 கி.மீ. தூரத்திற்கு சிமெண்ட் பூச்சு செய்ய எடுத்துக்கொள்ளப்படும்.

### 4. சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1

வீராணம் ஏரியிலிருந்து குழாய் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து, சுத்திகரித்து சென்னை நகருக்குக் கொண்டு சென்று விநியோகம் செய்வதற்காக, ரூபாய் 720 கோடி மதிப்பீட்டில் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-ஐச் செயல்படுத்த சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் எடுத்துக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜூன் 2004-ல் இத்திட்டம் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்—2-ன்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வயலூர் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது ஒரு பகுதிப் பணியாகும். பொதுப் பணித் துறையின் விரிவான ஆய்விற்குப்பின், இப்பகுதியினை மங்களம் அருகே சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-ன்கீழ் அமைக்கப்படவுள்ள குழாயுடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நீர் அளவு 20 மில்லியன் லிட்டர் ஆகும். மொத்த முதலீட்டுத் தொகை ரூபாய் 9.5 கோடியாகும்.

### 5. செங்கல்பட்டு அருகே உள்ள கொளவாய் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கலைப் பெருக்குவதற்கான வழிகள்

செங்கல்பட்டு அருகே அமைந்துள்ள கொளவாய் ஏரி நீரை சென்னை நகரின் குடிநீர் வழங்கல் தேவைக்காக எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசனத்துக்குரிய தேவையை நிறைவு செய்தபின் எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு தினசரி 20 மில்லியன் லிட்டர் ஆகும். செங்கல்பட்டு நகரிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் கொளவாய் ஏரி தற்போது மாசடைந்துள்ளதால், கழிவு நீரை இடைமறித்தல், மடைமாற்றி அமைத்தல் மற்றும் சுத்திகரித்தல் ஆகியவற்றை ரூபாய் 5

கோடி செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. சோளவாய் ஏரியை
"உயிரியற் தீர்வு" தொழில்நுட்பத்தின் (ஊட்டி மற்றும் கொடைக்கானல்
ஏரியைச் சுத்தப்படுத்திய முறை) மூலம் சுத்தப்படுத்தும் பணி சுமார்
ரூபாய் 10 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. சென்னை
மாநகருக்குக் சோளவாய் ஏரியிலிருந்து நீர் எடுத்தல், திருக்கழுக்குன்றம்
அருகில் உள்ள மங்களத்தில் சுத்திகரித்தல் மற்றும் சென்னைக் குடிநீர்
வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-I-ன்கீழ் அமைக்கப்படவுள்ள 1,875
மில்லி மீட்டர் விட்டமுள்ள இரும்புக் குழாயுடன் இணைத்தல்
ஆகியவற்றிற்கு ஏறக்குறைய ரூபாய் 14 கோடியே 20 லட்சம் மதிப்பீடு
செய்யப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் வெகுவிரைவில்
எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மொத்தச் செலவினம் ரூபாய்
29 கோடி ஆகும்.

**6. இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம்**

1996-ம் ஆண்டு ரூபாய் 778 கோடியே 79 இலட்சம் செலவில்
மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் தற்போது விரைவாகச்
செயல்படுத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. சென்னை மாநகருக்கு
ஒரே சீரான அளவில் குடிநீர் விநியோகம் வழங்கும்பொருட்டு, 7 புதிய
நீர் பகிர்மான நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
குடிநீர் கொண்டுசெல்லும் பிரதானக் குழாய்கள் அமைக்கும் பணி
முடிவடையும் தருவாயில் உள்ளது. 16 பகிர்மான மண்டலங்களில், 8
மண்டலங்களான பட்டேல் நகர், ஈக்காட்டுத்தாங்கல், பள்ளிப்பட்டு,
நந்தனம், கொளத்தூர், வியாசர்பாடி, ஆனைமேடு மற்றும் கண்ணப்பர்
திடல் ஆகியவற்றில் பகிர்மான அமைப்பைப் பலப்படுத்தும் பணி
முடிவுபெற்றுள்ளது. மற்றும் 3 மண்டலங்களான வள்ளுவர் கோட்டம்,
மைலாப்பூர், வேளச்சேரி ஆகியவற்றின் பணிகள் மே 2003-க்குள்
முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவிருக்கும் கூடுதல் பணிகள்**

மார்ச் 2004-க்குமுன் இரண்டாம் சென்னைத் திட்டத்தில் இருக்கும்
சேமிப்பில் இருந்து கீழ்க்கண்ட கூடுதல் பணிகள்
செயல்படுத்தப்படவுள்ளன: (1) குளோரினேட்டர்கள் அமைத்தல் (2)
கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்துதல் (3) மிக
அதிகமாகத் தண்ணீர் பயன்படுத்தப்படும் இடங்களுக்குத் தண்ணீர்
அளவு மானி பொருத்துதல் (4) பரிசோதனை உபகரணங்கள் வாங்குதல்
(5) கருவிகள் மற்றும் மாற்றுக் கருவிகள் வாங்குதல் (6) மாதிரிப் பகுதிகளில்



புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் செயல்படுத்துதல்.

**(அ) குளோரினேட்டர்கள் அமைத்தல்**

மார்ச் 2004-க்கு முன்பாக, கடைக்கோடியில் உள்ள நுகர்வோருக்குக் க்ளோரின் அளவு 0.2 பி.பி.எம்-ஆகக் கிடைக்கும் பொருட்டு 15 குடிநீர் பகிர்மான நிலையங்களில் குளோரினேட்டர்கள் பொருத்தப்படவுள்ளன.

**(ஆ) கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்துதல்**

தற்போது கீழ்ப்பாக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 1914-ல் துவக்கப்பட்டு, கடந்த வருடங்களில் பல மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டன. இருந்தபோதிலும் அந்நிலையத்தை மேலும் மேம்படுத்துதல் அவசியமாகிறது. எனவே கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இந்த வருடத்தில் மேம்படுத்த பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு ஒப்பந்தம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாட்டுப் பணிகளை மார்ச் 2004-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ) அதிகமாக உபயோகப்படுத்தப்படும் தண்ணீருக்கு அளவு மானி பொருத்துதல்**

அனைத்து நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும், குடிநீர் பகிர்மான நிலையங்களிலும் மற்றும் கிணற்றுத் தளங்களிலும் எடுக்கப்படும் நீரின் அளவை அளப்பதற்காகவும் மற்றும் நிலையங்களின் திறனை அறிந்து கொள்வதற்காகவும் 100 மில்லி மீட்டரிலிருந்து 1,200 மில்லி மீட்டர் அளவு வரையிலான 56 அளவு மானிகள் பொருத்தப்படும்.

**(ஈ) பரிசோதனை உபகரணங்கள் வாங்குதல்**

குடிநீர் மற்றும் கழிவு நீர்த் தரத்தைப் பரிசோதனை செய்வதற்காக தற்போதுள்ள பரிசோதனைக் கூடங்களின் வசதிகள் நவீன கருவிகள் மூலம் பலப்படுத்தப்படும்.

**(உ) கருவிகள் மற்றும் மாற்றுக் கருவிகள் வாங்குதல்**

தற்போதுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர்ப் பகிர்மான நிலையங்களைத் திட்டமிட்டு பராமரிக்கும்பொருட்டு

அவற்றிற்குத் தேவையான கருவிகள், சோதனைச் சாதனங்கள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஊ) புவியியல் தகவல் அமைப்பு**

நடைபெறும் இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் 10 பகுதிகளில் ஒன்றான பகுதி 5-ல் புவியியல் தகவல் அமைப்பு ஒரு மாதிரித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கண்ணுக்குப் புலப்படும் சொத்து மற்றும் பூமிக்கு அடியில் உள்ள சொத்துகள் (குழாய் அமைப்பு, குழாய் இணைப்புகள்) ஆகியவற்றின் நிலப்படத்தைச் சேகரிப்பதே புவியியல் தகவல் அமைப்பின் நோக்கமாகும். ரூபாய் 35 மில்லியன் மதிப்பீட்டில் 30 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு இந்த அமைப்பு எடுத்துக்கொள்ளப்படும். இப்பணியில் (1) டிஜிட்டல் நிலப்படம் தயாரித்தல் (2) புவியியல் தகவல் அமைப்பு (மென்பொருள்) வாங்குதல் (3) சொத்து ஆய்வு மற்றும் நிலப்படத்திற்கு ஒப்பந்தம் தெரிவு செய்தல் ஆகியவை அடங்கும்.

**(எ) தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்ப திட்டமிடல்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும், பகுதி அலுவலகங்களில் ஒன்றான பகுதி 5 மற்றும் அதன் 19 டிப்போ அலுவலகங்களிலும், கணக்கிடல், வசூலித்தல், நிதி கணக்கிடல் மற்றும் பண்டகசாலைக் கணக்கிடல் ஆகியவற்றை ஒரு முன்மாதிரித் திட்டமாக நடைபெறும் இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்ப திட்டமிடல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.3019 மில்லியன் மதிப்பீட்டில் செப்டம்பர் 2003-ல் முடிவுறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்ப திட்டமிடலானது, சன்சர்வர், மெல்லிய க்லெயண்ட் டர்மினல், கணினி, இடர் வராத மின் அளிப்பு, பிரிண்டர், தகவல் சாதனங்கள் மற்றும் எண்டர்பிரைசஸ் ரிசோர்ஸஸ் திட்டமிடல் மென்பொருள், பொது உபயோக மென்பொருள்களைச் (சோலாரிஸ்) செயல்படுத்துதல், விண்டோஸ் செயல்படுத்தும் அமைப்பு, மைக்ரோசாப்ட் ஆபீஸ், எம்எஸ். எக்ஸ்சேஞ் மற்றும் நெட்ஓர்க் மென்பொருள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.





**8. மூன்றாவது சென்னைத் திட்டம்**

சென்னைக் குடிநீர் வாரியம் ரூபாய் 600 கோடி அல்லது 125 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டில் மூன்றாவது சென்னைத் திட்டத்திற்கு உலக வங்கியிடம் மேற்கொண்டு உதவி கோர உள்ளது. அவற்றின் செயல்பாடுகளானவை: (1) சென்னை நகரின் குடிநீர் வழங்கலைச் சீரான முறையில் மேம்படுத்துதல் (2) ஆரணியாறு, கொசஸ்தலையாறு பகுதிகளிலிருந்து கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கான அடிப்படை வசதிகள் செய்தல் (3) அனைத்து விடுபட்ட பகுதிகளுக்கும் தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்ப விரிவாக்கப் பணி (4) புவியியல் தகவல் முறை செயல்படுத்துதல் (5) விடுபட்ட பகுதிகளில் கணக்கிடப்படாத குடிநீர்ப் பிரிவின்கீழ் குடிநீர்க் கசிவு மற்றும் நிவர்த்தி செய்யும் பணிகள் செய்தல் (6) அருகாமையில் உள்ள நகரப் பகுதிகளுக்கும், தொலைவில் உள்ள நகரப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் அடிப்படை வசதிகளைச் செய்தல் (7) 7 நகர உள்ளாட்சி அமைப்புகளில் கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையங்களைக் கட்டுதல்.

ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையில் உள்ள திருக்கண்டலம் அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், மீஞ்சூர் அருகே உள்ள வள்ளூர் அணைக்கட்டைப் புதுப்பித்தல், மாதவரம் ஏரி, (இரட்டை ஏரி), கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரிகளைத் தூர்வாரி ஆழப்படுத்துதல் மற்றும் போரூர் ஏரியைச் சுற்றி, ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் வேலி அமைத்தல் ஆகியவை மேற்காணும் திட்டத்தில் அடங்கும்.

**அ) குடிநீர் விநியோக அமைப்பை 5 மண்டலங்களில் பலப்படுத்துதல்**

இரண்டாம் சென்னைத் திட்டத்தின்கீழ் 16 மண்டலங்களில் 11 மண்டலங்களில் செம்மைப்படுத்தும் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 11 மண்டலங்களிலும் குடிநீர் வழங்கல் நிலை அதிகரிக்கப்பட்டு தண்ணீர் வராத தெருக்கள் ஒன்றும் இல்லை என்ற நிலை உள்ளது. ஆனால் மீதமுள்ள 5 மண்டலங்களில் முன்பு இருந்த நிலையிலேயே தொடர்ந்து தண்ணீர் வராத தெருக்கள் அதிகம் இருக்கின்றன. எனவே இந்த மீதமுள்ள 5 மண்டலங்களான அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி, தெற்கு நீரேற்று நிலையம், மற்றும் கே.கே. நகர் ஆகியவற்றிலும் குடிநீர் விநியோக அமைப்பைப் பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 29

**ஆ) ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையிலிருந்து கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கு அடிப்படை வசதிகள் செய்தல்**

இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் நிலத்தடி நீர் உள்ளாற்றல் பற்றிய மறு மதிப்பீடு செய்யவும், ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையில் மாற்றக்கூடிய நீர் உரிமையை அறிமுகப்படுத்தவும் திருவாளர்கள் ஸ்காட் வில்சன் லிமிடெட் அவர்களால் கலந்தாய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை நடத்தப்பட்ட ஆய்வில் ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையில் கூடுதலாக நிலத்தடி நீர் எடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகையால் குழாய்க் கிணறுகள், பம்ப் செட்டுகள், கொணரும் குழாய்கள், முன்னுக்குத் தள்ளும் நிலையங்கள் அமைப்பதன் மூலமாக ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையில் இருந்து கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கு அடிப்படை வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இ) தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம்**

தற்போது நடந்து கொண்டிருக்கும் இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்திலும், மற்றும் பகுதி அலுவலகம் 5 மற்றும் அதன் 19 பணிமனை அலுவலகங்களிலும் முன்னோடித் திட்டமாக தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்ற வசதிகள் சென்னை மாநகரிலுள்ள, மீதமுள்ள 9 பகுதி அலுவலகங்கள், 140 பணிமனை அலுவலகங்கள், 2 மண்டல அலுவலகங்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் தரக் கட்டுப்பாடு மற்றும் ஆதார நிலையம் ஆகிய இடங்களில் இத்தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வசூலித்தல், நிதி கணக்கிடுதல், புகார்கள் கண்காணித்தல், பழுது ஏற்படாதவாறு முன்கூட்டியே பராமரித்தல் மற்றும் சொத்துடைமைகள் மேலாண்மை செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் கணினி மூலமாகச் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும் சென்னை மாநகரிலுள்ள அனைத்து நுகர்வோர்களும் தங்களுடைய வரிகளையும், கட்டணங்களையும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் ஏதாவது ஒரு பணிமனை அலுவலகத்தில் செலுத்த முடியும்.



2003 ஏப்ரல் 29]

**ஈ) புவியியல் தகவல் அமைப்பு**

தற்போது நடந்து கொண்டிருக்கும் இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் சென்னைக் குடிநீர் வாரியத்தின் 10 பகுதிகளில் ஒன்றான பகுதி 5-ல் புவியியல் தகவல் அமைப்பின் முன்னோடித் திட்டம் நடைபெற்று வருகிறது. மேலே கூறப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு சென்னை மாநகரிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது மீதமுள்ள 9 பகுதிகளில் ஏறத்தாழ 140 சதுர கிலோ மீட்டர் தூரத்திற்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உ) விடுபட்ட பகுதிகளில் கணக்கிடப்படாத குடிநீர்**

சென்னை மாநகரின் குடிநீர் வழங்குதலைப் பராமரிக்க சென்னை மாநகர் 159 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குடிநீர் வழங்கும் குழாய்களின் மொத்த நீளம் ஏறத்தாழ 2300 கிலோ மீட்டர் ஆகும். தற்போதுள்ள குடிநீர் இணைப்புகள் 3 லட்சத்து 12 ஆயிரம் ஆகும். பிரதான குழாய்களிலும், வீட்டு இணைப்புகளிலும் குடிநீர் இழப்பு ஏற்படுவது ஆய்வு மூலமாகக் கண்டறியப்பட்டது. ஆகையால் இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் கணக்கிடப்படாத குடிநீரைக் குறைப்பதற்கு குடிநீர் கசிவு கண்டறிதல் மற்றும் நிவர்த்தி செய்யும் பணி பல கட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,34,000 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் புதுப்பிக்கப்பட உள்ளன. இதுவரை 2,17,000 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை 2003 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிக்கப்படும். பழுதடைந்துள்ள 591 கிலோ மீட்டர் பிரதானக் குழாய்களில் 550 கிலோ மீட்டர் சரிசெய்யப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

விடுபட்ட தெருக்களில் ஏசி/பிவிசி/சி.ஐ. பழுதடைந்த பிரதான குழாய்களை ஏறத்தாழ 300 கி.மீ. நீளம் மாற்றுவதற்கும் மற்றும் மீதமுள்ள ஏறத்தாழ 80,000 வீட்டுக் குடிநீர் இணைப்புகளை மாற்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஊ) அருகாமையிலுள்ள நகரப் பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகரப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அடிப்படை வசதிகளை அமைத்தல்**

உலக வங்கி நிதி உதவியுடன் அருகாமையிலுள்ள 20 நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கலந்தாய்வு நிறுவனத்தினருடன் பெருந்திட்டமொன்று எடுக்கப்பட உள்ளது.

பெருந்திட்டத்தை எதிர்நோக்கி, 12 உள்ளாட்சி அமைப்புகளில் பிரதான அனுப்பும் குழாய்களையும், தேக்கி வைக்கப்படும் கொள்ளளவைப் பலப்புடுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

மேற்கூறிய முடிக்கப்பட்ட பணிகள் பிரதான குழாய்களையும், தேக்கி வைக்கப்படும் கொள்ளளவைப் பலப்படுத்துதல் மட்டுமே. பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகளில் வீட்டு இணைப்புகள் கொடுப்பதற்கு பகிர்மான அமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

குடிநீர் பகிர்மான அமைப்பு மற்றும் குடிநீர் பகிர்மான நிலையங்களை செம்மைப்படுத்தி, அருகாமையில் உள்ள நகரப் பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகரப் பகுதிகளுக்கும் தேவைப்படும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான பணி 2004-க்குள்ளாக நிறைவு செய்யப்படும்.

**எ) ஏழு உள்ளாட்சி அமைப்புகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

சென்னைப் பெருநகரப் பகுதிகளில், சென்னை மாநகரிலும், திருவொற்றியூரில் ஒரு பகுதியில் மட்டுமே தற்போது கழிவுநீர் அமைப்பு உள்ளது. ஆலந்தூர் நகராட்சி மற்றும் வளசரவாக்கம் பேரூராட்சியில் கழிவுநீர் அமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரில் மக்கட்தொகை அதிகமாக உள்ள 7 உள்ளாட்சிப் பகுதிகளில் கழிவுநீர் அமைப்பு செயல்படுத்தப்படவுள்ளது. அவை:

1) திருவொற்றியூர், (விடுபட்ட இடங்கள்) (ஏ.யூ.ஏ) 2) அம்பத்தூர் (ஏ.யூ.ஏ) 3 ஆவடி (ஏ.யூ.ஏ) 4) கத்திவாக்கம் (ஏ.யூ.ஏ) 5) மாதவரம் (ஏ.யூ.ஏ) 6) தாம்பரம் (டி.யூ.ஏ) 7) பல்லாவரம் (டி.யூ.ஏ), ஆலந்தூர் மற்றும் வளசரவாக்கத்தில் நடைபெறும் கழிவுநீர்த் திட்டங்கள் பொதுமக்களும் தனியாரும் சேர்ந்து கூட்டு நடவடிக்கையில் செயல்படுத்தும் திட்டங்களாகும். இத்திட்டத்திற்கு உள்ளாட்சி அமைப்பிலுள்ள குடியிருப்புவாசிகள் சார்பாக 20 விழுக்காடும், மீதமுள்ள 80 விழுக்காட்டை நகராட்சி/அரசும் வழங்குகிறது. இந்த பொதுமக்கள்-தனியார் கூட்டுறவை ஊக்கப்படுத்துவதற்காக மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கழிவுநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.



கழிவுநீர் அமைப்புகளை அமைப்பதற்கும் கழிவுநீரேற்று நிலையம் கட்டுவதற்குமான செலவு நுகர்வோர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் ஏற்றுக் கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான மதிப்பும் அடங்கும்.

**9. செம்பரம்பாக்கம் நாள் ஒன்றிற்கு 530 மில்லியன் லிட்டர்கள் கொள்ளளவுத் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்**

தற்போது சென்னை மாநகரில் செங்குன்றம் (தினசரி 300 மில்லியன் லிட்டர்) மற்றும் கீழ்ப்பாக்கத்தில் (தினசரி 327 மில்லியன் லிட்டர்) கொள்ளளவு திறன் கொண்ட இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கல் நிலை-2 திட்டத்திலிருந்து பெறப்படும் கூடுதல் நீரை சுத்திகரிப்பதற்காக செம்பரம்பாக்கத்தில் நாள் ஒன்றிற்கு 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவுத் திறன் கொண்ட கூடுதல் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று பிரெஞ்சு அரசாங்க நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தப் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜனவரி 2005-ல் முடிவுறும்.

**10. நிலத்தடி நீர் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அமல்படுத்துதல்**

சென்னை மாநகருக்கு வடபகுதியில் உள்ள ஆரணியாறு, கொசஸ்தலையாறு படுகையில் உள்ள மீஞ்சூரில் கடல்நீர் கலந்ததால் நிலத்தடி நீர் எடுப்பதைக் கட்டுப்படுத்த அரசு, சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் ஒழுங்கு சட்டம் கொண்டு வந்தது. இச்சட்டம் 15-02-88 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்புடன் சென்னை மாநகர் மற்றும் மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 243 வருவாய்க் கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் அதிக நன்மைகள் பெற மேற்படி சட்டம் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது:—

1. சட்டத்தின் அமலாக்கப் பிரிவுகளை வலிமைப்படுத்துதல்.
2. ஏற்கெனவே இருந்து வரும் சட்டத்தின் அட்டவணையிலுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள 243 வருவாய்க் கிராமங்களுடன்,

கூடுதலாக ஊத்துக்கோட்டை, பொன்னேரி, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வட்டங்களில் உள்ள 59 வருவாய்க் கிராமங்களை இணைத்தல்.

3. இச்சட்டத்தின் பிரிவுகளை மீறுபவர்களுக்கான அபராதத் தொகையை ரூ.2000/-லிருந்து ரூபாய் 5000/-க்கு அதிகப்படுத்துதல்.

4. புதிய மற்றும் ஏற்கெனவே இருக்கின்ற கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்கக் கட்டாயப்படுத்துதல்.

5. குறிப்பிட்ட வீட்டு உபயோகத்திற்காகவும், தொழிற்சாலை உபயோகத்திற்காகவும், குடிநீர் அல்லாத தேவைகளுக்காக மறு சுழற்சி செய்யப்பட்ட சுத்திகரிப்பு நீரை உபயோகப்படுத்துதல்.

6. குழாய்க் கிணறுகளின் ஆழத்தைக் கட்டுப்படுத்துதல்.

**11. மழைநீர் சேகரிப்பு**

சென்னை மாநகரம் ஆண்டிற்கு சராசரியாக 1100 மில்லி மீட்டரிலிருந்து 1400 மில்லி மீட்டர் வரை மழைநீர் பெறுகின்றது. மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டும், விலை மதிப்பற்ற நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காகவும், சென்னைக் குடிநீர் வாரியம் முழு நேர சேவைக்காக "மழைநீர் சேகரிப்புக் குழு" ஒன்றை அமைத்துள்ளது. சென்னை மாநகர மக்களுக்கு இந்த மழைநீர் சேகரிப்புக் குழு, மழைநீர் சேகரிப்பில் விழிப்புணர்வையும், மற்றும் இலவச தொழில்நுட்ப உதவியையும், மதிப்பீடு முறைகளையும் வழங்குகிறது.

2002-2003 ஆம் ஆண்டில், தனிப்பட்ட நபர்கள், அரசு அல்லாத பொது நிறுவனங்கள், குடியிருப்புக் கழகங்கள், பயிற்சி பொறியாளர்கள், கட்டடம் கட்டுபவர்கள் மற்றும் குழாய்ப்பணி செய்பவர்களுக்கு 28 கூட்டங்களின் வாயிலாக மழைநீர் சேகரிப்பு முறைகள் பற்றி இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர, பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரி, பொதுநலக் கழகங்கள், அரசு அல்லாத பொது நிறுவனங்கள் மற்றும் இதர கல்வி நிலையங்கள் என 35 இடங்களில் வெளிப்புற இயக்கங்களில் விரிவுரைகள் வழங்கப்பட்டன.



மக்களுக்கு பலவகையான கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு முறைகள் பற்றி விளக்குவதற்காக பொது இடங்களான மேதகு ஆளுநர் மாளிகை, அருங்காட்சியகம், குழந்தைகள் விளையாட்டுத் திடல், லேடி விலிங்டன் பள்ளி ஆகிய இடங்களில் செயல்முறை விளக்கத்தை சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்பாடு செய்தது. மற்றும் அண்ணா நகரில், எளிதான குறைந்த செலவின அமைப்புகளின் மாதிரிகள் கொண்ட மழை மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு வழிகாட்டும் வகையிலும், தகவல்கள் அளிக்கும் வகையிலும் உயர் நீதிமன்ற வளாகத்தில் தகவல் தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொலைக்காட்சி வாயிலாக பாடல்கள் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வரின் வேண்டுகோளுடன் கடிதம் வாயிலாக மக்களுக்கு அவ்வப்போது விவரங்கள் தெரியப்படுத்தப்படுகின்றன.

இந்த மழைநீர் சேகரிப்பு ஏற்பாடுகளை, நகர மக்கள் தங்கள் வீடுகள் தோறும் ஏற்படுத்துவதற்காக, கட்டட விதிமுறைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து புதுக் கட்டடங்கள் கட்டும்போதும் மற்றும் இருக்கின்ற கட்டடங்களிலும் ஓர் ஆண்டு காலத்திற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. கட்டடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் கட்டிய பின்னரே, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன. இது ஒரு மக்கள் இயக்கமாக உருவாகி வருகிறது.

மேற்கூறிய ஏற்பாடுகளின்படி சென்னை மாநகரில் 70,000 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் 34000 கட்டடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகரில் எஞ்சியுள்ள கட்டடங்களில் நவம்பர் 2003-க்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கப்படும்.

**12. கழிவுநீரமைப்பு மேம்பாடு**

சென்னை மாநகரில் தற்பொழுது கழிவுநீர் அகற்றும் திட்டம் 97 விழுக்காடு பகுதிகளில் அமலில் உள்ளது. தற்போதைய திட்டத்தில், 2300 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது.

1. குடிசைப் பகுதிகளில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் வசிக்கும் பகுதிகளில் சுற்றுப்புறத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக, அனைத்து

குடியிருப்புகளிலும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனை நிறைவேற்ற குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு தற்போது உள்ள குடிநீர்க் கட்டணம் பாதியாகக் (50 விழுக்காடாக) குறைக்கப்பட்டுள்ளது. (அதாவது ரூபாய் 1930/-ல் இருந்து ரூபாய் 965/- வரை) இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்குக் கழிவுநீர் இணைப்பு வழக்கமான கட்டணமாகிய ரூபாய் 3390/-க்குப் பதிலாக ரூபாய் 100/-க்கு வழங்கப்படுகிறது. அனைத்து வீடுகளும் கழிவுநீர் இணைப்பு பெற்று சுற்றுப்புறத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்துவதையே சென்னைக் குடிநீர் வாரியம் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரை சுமார் 23,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு ரூ. 8.50 கோடி செலவாகும்.

2. கொடுங்கையூர், நெசப்பாக்கம், பெருங்குடி மற்றும் கோயம்பேடு ஆகிய நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவுத் திறன் நாளொன்றுக்கு 268 மில்லியன் லிட்டரிலிருந்து 532 மில்லியன் லிட்டராக ரூபாய் 117 கோடி செலவில் உயர்த்தப்படவுள்ளது.

3. நடைபெற்றுக் கொண்டிருக்கும் சென்னை நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் மழைநீர்க் கால்வாய்கள் மற்றும் அனைத்து நீர்வழித் தடங்களில் கழிவுநீர் கலக்காமல் தடுத்து நிறுத்தி, நீர் மாசுபடாமல் பாதுகாக்கப்படும்.

## 13. வெள்ளம் தடுக்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வெள்ளத்தைத் தடுக்கும் திட்டமாக, கழிவுநீர் மேம்படுத்தும் பணிகள் மற்றும் பெரிய குழாய்கள் அமைத்தல், கழிவுநீரேற்று நிலையங்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவை 2003 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பாக, அதாவது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முடிக்கப்படவுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ரூபாய் 125 கோடி ஆகும். இது வடசென்னை மற்றும் நகரில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதாக இருக்கும்.



## 14. தினசரி 300 மில்லியன் லிட்டர் உவர் நீரை நன்னீராக மாற்றும் திட்டம்

சென்னை நகரில் கிடைக்கும் நீரின் அளவில் உள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்காக தினசரி 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ரூ.1500 கோடி மதிப்பீட்டில், ஒப்பந்தக்காரர் கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, பின் வாரியத்திடம் ஒப்படைப்பது (பிஓஓடி) என்ற அடிப்படையில் வறட்சி தடுப்புப் பணியாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டம், உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 2003-2004-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 15. தினசரி 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு/மறுசவ்வூடு பரவல் நிலையம் நிறுவுதல்

தற்போதுள்ள இருமுறை சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு, கொடுங்கையூரில் தினசரி 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு/மறுசவ்வூடு பரவல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. இந்த நீர், மணலி பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் அதிகரித்து வரும் நீரின் தேவையை நிறைவு செய்யும். இத்திட்ட மதிப்பீடு ரூபாய் 160 கோடியாகும்.

## 16. சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் இந்திய அரசின் ஒரு பகுதி மானிய உதவியுடன் திட்டமிட்டபடி தொடர்ந்து செயல்படுத்தப்படும். நீர்வழிகள் மற்றும் கழிவுநீரகற்றுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நீண்டகால நோக்கமாகும்.

இப்பணிகளானது நகர நீர் வழிகளில் விடப்படும் கழிவுநீரை இடைமறித்தல், மடைமாற்றி அமைத்தல், மற்றும் சுத்திகரித்தல், மேலும் தற்போதுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலுள்ள கொள்ளளவைக் கூடுதலாக்குதலுமாகும். இப்பணிகள் 16 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. அவற்றில் 14 சிப்பங்களுக்கு ஒப்பந்தங்கள் நிறைவு பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 சிப்பங்களுக்கு ஒப்பந்தங்கள் ஆய்வில் உள்ளன. ரூபாய் 120 கோடி மொத்தச் செலவினத்தில் மத்திய அரசு இதுவரை மானியமாக ரூபாய் 11 கோடியே 90 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2004-ல் முடிக்கப்படும்.

[2003 ஏப்ரல் 29

## கோரிக்கை 33

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 2003-2004 வரவு-செலவு திட்ட மதிப்பீடு


(ரூபாய் ஆயிரத்தில்)

| வரிசை எண் | துறைத் தலைவர்கள் | வருவாய் | முதலீடு | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 2,92,64 | 1 | .. | 2,92,65 |
| 2 | நகராட்சி நிருவாக ஆணையரகம் | 596,64,54 | 33,00,01 | 150,08,01 | 779,72,56 |
| 3 | பேரூராட்சி இயக்ககம் | 217,77,59 | 1,00,00 | .. | 218,77,59 |
| 4 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 181,75,72 | 431,00,01 | 69,77,86 | 682,53,59 |
| 5 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | 5,97,60 | 55,00,00 | 56,37,00 | 117,34,60 |
| 6 | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் | .. | 25,00,00 | .. | 25,00,00 |
| | மொத்தம் | 1005,08,09 | 545,00,03 | 276,22,87 | 1,826,30,99 |





2003 ஏப்ரல் 29]

## தமிழ்நாடு மழையளவு விவரம்




## தமிழ்நாடு நிலத்தடி நீர்மட்ட விவரம்








# இணைப்பு II

*(93-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண்-40**

**ஊரக வளர்ச்சித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004**

## 1. முன்னுரை

கிராமப்புற ஏழை மக்களின் சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை உறுதி கொண்டுள்ளது. கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

சுற்றுப்புறச் சூழலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை வகுக்குமாறு தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் ஊரகக் குடியிருப்புகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு 2003-2004-ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எய்தும் விதத்தில் இத்துறை செயல்படும். வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், போதிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். வீட்டுவசதி, சாலை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் ஊரக துப்புரவு ஆகியவற்றின்மீது இத்துறை சிறப்புக் கவனம் செலுத்தும். கிராமங்களின் முழுமையான, நிரந்தர வளர்ச்சிக்கு துடிப்புடன் செயல்படும் ஊராட்சி அமைப்புகள் அவசியமாகும். எனவே, ஊராட்சி அமைப்புகளின் திறன் வளர்ச்சிக்கு இத்துறை உரிய முக்கியத்துவம் அளிக்கும்.

## 2. 2002-2003-ம் ஆண்டின் சாதனைகள்

சென்ற நிதியாண்டில், இத்துறையின் சிறப்பான செயல்பாடு காரணமாக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதியும், அரிசியும் பின்வரும் திட்டங்களின்கீழ் பெறப்பட்டது:

[2003 ஏப்ரல் 29

**2.1. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்:**

கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவதற்காக, மத்திய அரசின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

* இத்திட்டத்தின்கீழ், ரூ.46.17 கோடி நிதி கூடுதலாக பெறப்பட்டது. இது மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ.165.43 கோடியை விட 27.87 சதவீதம் கூடுதலாகும். மேலும் ரூ.62.41 கோடி மதிப்புள்ள 52,893 மெ. டன் அரிசியை மத்திய அரசு கூடுதலாக விடுவித்தது. இது சென்ற ஆண்டின் ஒதுக்கீடான 2,07,118 மெ. டன் அரிசி அளவைவிட 25.44 சதவீதம் கூடுதலாகும்.
* 105.78 இலட்சம் கூடுதல் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன. இது ஆண்டு இலக்கான 414.24 இலட்ச மனித சக்தி நாட்களைவிட 25.54 சதவீதம் கூடுதலாகும்.
* 8,165 கிராம குளங்கள், 6,779 கதிர் அடிக்கும் களங்கள் மற்றும் 5,655 சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் உள்ளிட்ட 84,657 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* இத்திட்ட சிறப்புக்கூறின்கீழ் ரூ. 147.50 கோடி மதிப்புள்ள 1,25,000 மெ. டன் அரிசியை மத்திய அரசு விடுவித்தது. இதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 178.57 இலட்ச கூடுதல் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்படும்.
* தொழிலாளர்களுக்கு கூலியின் ஒரு பகுதியாக ரொக்கப் பணம் வழங்குவதற்கு மாநில அரசு ரூ. 85.48 கோடி நிதி விடுவித்துள்ளது.

**2.2. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

கிராமப்புற ஏழை மக்கள் சுயதொழில் மேற்கொள்ள பல்வேறு வகையான உதவிகளை வழங்கும்விதத்தில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

* 30,160 கிராமப்புற பெண்களுக்கும், `6,745 கிராமப்புற இளைஞர்களுக்கும் சிறப்பு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது.



2003 ஏப்ரல் 29]

* இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ரூ.5.92 கோடி கூடுதல் நிதி பெறப்பட்டது. இது, மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ. 27.13 கோடியை விட 22 சதவீதம் கூடுதலாகும்.
* கோயம்புத்தூர் மாவட்டத்தில், உடல் ஊனமுற்றோர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 3.80 கோடி மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்றினை மத்திய அரசு அனுமதித்துள்ளது.
* இராமநாதபுரம் மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோரின் மறுவாழ்க்கென ரூ. 2.10 கோடி மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்றினை மத்திய அரசு அனுமதித்துள்ளது.
* திட்டச் செயல்பாட்டினை மதிப்பிடுவதற்கு, மத்திய அரசு நியமித்த திருவனந்தபுரத்திலுள்ள மேலாண்மை வளர்ச்சிமைய (Centre for Management Development) ஆய்வறிக்கையின்படி, தமிழ்நாடு இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் முன்னோடி மாநிலங்களில், முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

**2.3. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகம்**

இத்திட்டத்திற்காக, மத்திய அரசிடமிருந்து ரூ.2.51 கோடி கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டது. இது, மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ. 12 கோடியைவிட 21 சதவீதம் அதிகமாகும்.

**2.4 ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டம்**

மத்திய அரசிடமிருந்து ரூ. 1.44 கோடி கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டது. இது மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ. 60.61 கோடியைவிட 2.38 சதவீதம் கூடுதலாகும்.

**2.5 முழு சுகாதார இயக்கம்**

கிராமப்புற ஏழை மக்களிடையே சுத்தம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினை பொது மக்களுக்கு கொண்டுசெல்ல தகவல், கல்வி, தொடர்புக்கு கூடுதல் முக்கியத்துவம் தரப்படும். இத்திட்டம், தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* இத்திட்டத்தினை, தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு கூடுதலாக அனுமதித்துள்ளது.

* இத்திட்டத்தினால் பின்வரும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்:

| | | |
|---|---|---|
| வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்குத் தனி நபர் கழிப்பறைகள் | - | 3,47,800 |
| பள்ளிக் கழிப்பறைகள் | - | 5,182 |
| அங்கன்வாடி மைய கழிப்பறைகள் | - | 4,632 |
| மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் | - | 595 |
| ஊரகச் சுகாதார அங்காடிகள் | - | 55 |

* இந்தியாவிலேயே முழுமையான சுகாதார வசதி பெற்ற முதல் ஒன்றியங்களாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தக்கலை மற்றும் மேல்புரம் ஊராட்சி ஒன்றியங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

* மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

* சுகாதார வளாகங்களைப் பராமரிப்பதில் உபயோகிப்போர் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### 2.8. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

* ரூ. 35.00 கோடி கூடுதல் ஒதுக்கீடாக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. இது மத்திய அரசின் ஆண்டு ஒதுக்கீடான ரூ. 80.00 கோடியை விட 43.75 சதவீதம் கூடுதலாகும்.



* தேசிய தர கண்காணிப்பாளர்கள் (National Quality Monitors) சாலைகளின் தரத்தினைப் பாராட்டியுள்ளனர். இவர்கள் ஆய்வு செய்த 353 பணிகளில் 91.78 சதவீதம் மிகச் சிறந்தவை மற்றும் சிறந்தவை எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது. இது அகில இந்திய அளவில் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## 3. வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, 2003-2004

மானியக் கோரிக்கை எண் 40-ன்கீழ் ஊரக வளர்ச்சிக்காக ரூ. 1855.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.906.13 கோடி திட்டம் சார்ந்த செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ எண் (1) (6) | கணக்குத் தலைப்பு (2) | | திட்டம் சாராதது. (3) | திட்டம் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|---|
| 1. | 2202 | பொதுக் கல்வி | 2784 | .. | 2784 |
| 2. | 2210 | மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் | 27193 | .. | 27193 |
| 3. | 2215 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 24897 | 225735 | 250632 |
| 4. | 2216 | வீட்டு வசதி | ... | 346946 | 346946 |
| 5. | 2225 | ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் நலம் | 50148 | .. | 50148 |
| 6. | 2236 | சத்துணவு | 99054 | 1817223 | 1916277 |
| 7. | 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | .. | 229177 | 229177 |

[2003 ஏப்ரல் 29

| வ. எண். (1) | கணக்குத் தலைப்பு (2) | | திட்டம் சாராதது (3) | திட்டம் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|---|
| 8. | 2505 | ஊரக வேலை வாய்ப்பு | .. | 1197307 | 1197307 |
| 9. | 2515 | இதர ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 1246692 | 4174936 | 5421628 |
| 10 | 2551 | மலைப் பகுதிகள் | | 3 | 3 |
| 11 | 2810 | மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் | | 12750 | 12750 |
| 12 | 3454 | மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரங்கள் | 2102 | .. | 2102 |
| 13 | 3604 | உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு மற்றும் ஒதுக்கீடு | 8034496 | 932226 | 8966722 |
| 14 | 4515 | இதர ஊரக வளர்ச்சி மூலதனப் பணிகளுக்கான ஒதுக்கீடு | 3450 | 1 | 3451 |
| 15 | 4702 | சிறுபாசனம் | - | 125000 | 125000 |
| | | மொத்தம் | 9490816 | 9061304 | 18552120 |
| | | கூட்டுக (வசூலிக்க வேண்டியவை) | | | 21 |
| | | பெரு மொத்தம் | | | 18552141 |



2003 ஏப்ரல் 29]

## 4. 2003-2004-ஆம் ஆண்டின் சிறப்புத் திட்டங்கள்

### 4.1 கிராம சுகாதார இயக்கம் மற்றும் ஊரகத் துப்புரவு

இதுவரை மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்படாத 6,309 ஊராட்சிகளில் இவ்வளாகங்கள் கட்டப்படும். இதனால் மகளிருக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளில் மேலும் முன்னேற்றம் காணப்படும். இவ்வளாகங்களுக்கான அலகுத் தொகை ரூ.2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் இந்த வளாகங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் கழிவறைகள் கட்டுவது ஊக்குவிக்கப்படும். முதற்கட்ட நடவடிக்கையாக உபயோகிப்பாளர் தெரிவு செய்யப்படும். வளாகங்களுக்கான இடத்தைத் தேர்வு செய்தல், வளாகங்களைக் கட்டுதல் மற்றும் பராமரிப்பதில் இக்குழு உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்படுவர். குளியலறை கழிவுநீர், காய்கறி பயிர்கள் மற்றும் வேளாண் காடுகளை வளர்க்க பயன்படுத்தப்படும். இதன் மூலம் சுய உதவிக் குழுக்களின் வருமானம் அதிகரிக்கும். காற்றோட்ட வசதி, விளக்கு மற்றும் நீர் ஏற்றத்திற்குத் தேவையான மின்சக்தியை உருவாக்க சாண எரிவாயு கலன்கள் புதிய வடிவமைப்பில் இடம்பெறும். இதனால் இவ்வளாகங்களின் தொடர் செலவினம் குறையும். சுற்றுப்புறச் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிடில் வளர்ச்சி முழுமை பெறாது. மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இத்திட்டம் இம்மாநிலத்தில் ஒரு சுகாதார மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

சுற்றுப்புறச் சுகாதாரத்தின் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கிய, "கிராம சுகாதார இயக்கம்" ஒன்றை இத்துறை நடைமுறைப்படுத்தும். மனித மற்றும் மிருகக் கழிவுகள் உள்ளிட்ட திட மற்றும் திரவக் கழிவுகளைப் பயன்படுத்துதல், பிளாஸ்டிக் மீதான தடையைத் திறம்படச் செயல்படுத்துதல், நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகியவை கிராம சுகாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்களாகும். மண் புழுக்களைக்கொண்டு கழிவுகளிலிருந்து மக்கு உரம் தயாரித்தல், பிளாஸ்டிக் முதலான மக்காத கழிவுப்பொருட்களைச் சேகரித்து அவற்றை பாதுகாப்பான முறையில் அகற்ற முக்கியத்துவம் அளிக்கப்படும். இதற்காக முழு சுகாதார இயக்கத்தின்கீழ் திடக்கழிவு நிர்வகித்தலுக்கு வழங்கப்படும் 5 சதவீத நிதி பயன்படுத்தப்படும். கழிவுகளிலிருந்து

கிடைக்கப்பெறும் மக்கு உரம் விவசாயிகளுக்கு விற்கப்படும். மக்கு உரங்களைத் தயாரித்து விற்பது சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு தொழிலாக அமையும்.

இந்தச் சுகாதார இயக்கம், யூனிசெப் அமைப்பின் துப்புரவுத் திட்டத்துடன் முதன்முறையாக இணைந்து செயல்படுத்தப்படும். தகவல், கல்வித் தொடர்பு மற்றும் துப்புரவு இயக்க விழிப்புணர்வு முகாம்களுக்கு யூனிசெப் நிதி பயன்படுத்தப்படும். மாநில அளவில் இந்த இயக்கத்தினை ஒருங்கிணைக்கவும் மற்றும் வழிநடத்திடவும் "ஊரகத் துப்புரவுக் குழு" ஒன்று அமைக்கப்படும்.

மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களுடன் சமுதாய சாண எரிவாயுக் கலன்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2006 ஆம் ஆண்டுக்குள் கழிவறை வசதிகளைப் பயன்படுத்துவோர் அளவு தற்போதுள்ள 14 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக உயரும். கழிவுப் பொருட்களைப் பாகுபடுத்தல் மற்றும் கழிவுகளிலிருந்து உரம் அல்லது எரி சக்தி போன்ற ஆதார வளத்தை உருவாக்குவது ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவிக்கப்படும். இதற்காக பெரிய அளவில் விழிப்புணர்வு மற்றும் தீவிர தகவல், கல்வி, தொடர்பு இயக்கமும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகளுக்கு ஊக்க நிதியுடன் கூடிய "சுகாதார கிராம விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும். இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமங்களின் சுகாதாரக் குறியீடு மற்றும் வளர்ச்சி நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டத்தின் செயல்விளைவு அளவிடப்படும். இத்திட்டம் சமுதாய மற்றும் பள்ளி சுகாதாரத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும்.

**4.2 கிராம நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் மழை நீர் சேகரித்தல்**

கட்டடங்களின் கூரைப்பரப்பில் விழும் மழை நீரையும், நிலத்தின் மேற்பரப்பில் ஓடி வீணாகும் வெள்ள நீரையும் சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதே, தொடர்ந்து ஏற்படும் வறட்சியைச் சமாளிப்பதற்கான வழியாகும் என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள நீர்வளப் பாதுகாப்பிற்கான அறிவியல் அடிப்படையில் கிராம நீர்நிலைகளைப் புனரமைக்கும் ஒரு சிறப்புத் திட்டம்



செயல்படுத்தப்படும். 89,746 குளங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ளன. 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்பளவுள்ள குளங்கள் ரூ.50.00 கோடி ஒதுக்கீட்டில் படிப்படியாகப் புனரமைக்கப்படும். இதனால் ஊரகப் பகுதிகளில் நீர்வளப் பாதுகாப்பு வலுப்படும்.

நீர்ப்பிடிப்புப் பகுதியினை மேம்படுத்துதல், நீர்வரத்துக் கால்வாய்களைச் சுத்தப்படுத்தி பலப்படுத்துதல், நீர்நிலை ஆதாரங்களைத் தூர்வாரி, அவற்றின் கொள்திறனை மேம்படுத்துதல், மதகு மற்றும் கலிங்குகளைச் சீரமைத்தல், நீர்நிலை ஆதாரங்களைப் பாதுகாக்க சுற்றுவேலி அமைத்தல் முதலானவை இத்திட்டத்தின் முக்கியப் பயன்களாகும். முதற்கட்டமாக ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் பயன்பாட்டிற்காக ஒரு குளமும், கால்நடைப் பயன்பாட்டிற்காக ஒரு குளமும், இவ்விதம் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செயற்கைக் கோள் மற்றும் தொலையுணர்வுத் தொழில்நுட்ப அடிப்படையிலான தகவல்கள் இத்திட்டத்தில் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தை அறிவியல் அடிப்படையில் வெற்றிகரமாகச் செயல்படுத்த அண்ணா பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் பிற மண்டல அறிவியல் நிறுவனங்களுடனும், ஊராட்சி அமைப்புகளுடனும் ஊரக வளர்ச்சித் துறை இணைந்து செயல்படும். இத்திட்டத்திற்கான நிதியை நபார்டு வங்கியிலிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கூட்டு முயற்சியால், 1.59 இலட்சம் உபயோகத்தில் இல்லாத கிணறுகள் மழை நீர் சேகரிக்கும் அமைப்புகளாகப் புனரமைக்கப்படும்.

**4.3 ஊரக உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துதல்**

சுய உதவிக் குழுக்கள், குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வருவாயைப் பெருக்குவதில் சிறந்த சாதனை படைத்து வருகின்றன. இதுபோன்ற குழுக்கள் மேலும் உருவாவதை ஆதரிப்பதுடன், இக்குழுக்கள் "தொழில் தொகுப்பு" அணுகுமுறையில் வளர்வது ஊக்குவிக்கப்படும். பொது உள்கட்டமைப்பு வசதி மற்றும் விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல் போன்ற பயன்களைப் பெறும் விதத்தில் இத்தொகுப்பு அணுகுமுறையில் அதிக அளவிலான குழுக்கள் இடம்பெறும். கைத்தறி மற்றும் நெசவு, மூலிகைச் செடிகள் பயிரிடுதல், தோட்டக்கலை, தரிசு நில மேம்பாடு, கைவினைப்

பொருட்கள், மீன் வளர்ப்பு, உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் இயற்கை நாரினாலான பொருட்கள் தயாரித்தல் ஆகிய துறைகளில் இவ்விதமான தொழில் தொகுப்புகளை ஊரக வளர்ச்சித் துறை ஊக்குவிக்கும். கைத்தறி மற்றும் நெசவுத் துறை, தேசிய நவநாகரிகத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், இந்திய முறை மருத்துவத் துறை, சணல் பொருட்களுக்கான தேசிய மையம் மற்றும் கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணையர் ஆகியோருடன் இணைந்து இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கைத்தறி மற்றும் நெசவுத் துறையுடன், 13 மாவட்டங்களிலுள்ள 25,000 நெசவாளர்கள் பயன்பெறும் விதத்தில் வர்த்தக ரீதியில் விற்பனையாகக்கூடிய கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்தும். இதேபோல் மத்திய அரசின் கைவினைப்பொருட்கள் வளர்ச்சி ஆணையர் தெரிவு செய்துள்ள 11 இடங்களில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் சுய உதவிக் குழுக்களுக்கு, ஏற்றுமதித் தொடர்பு ஏற்படுவதுடன், வடிவமைப்பு மற்றும் திறன் வளர்ப்பில் பயிற்சியும் கிடைக்கும்.

புதுதில்லியில் உள்ள தில்லி ஹாத் போன்று, உற்பத்தி மற்றும் விற்பனை வளாகம் ஒன்று மத்திய அரசின் கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணையத்தின் உதவியுடன் நிறுவப்படும். உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் கிராமப்புற சுய உதவிக் குழுக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றன. உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகள் நடைமுறையில் உள்ள இந்த காலகட்டத்தில், உயர் தொழில்நுட்ப அடிப்படையிலான விற்பனையில் சுய உதவிக் குழுக்களுக்கு உரிய ஆதரவும், வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது. எனவே மத்திய அரசின் தேசிய தகவல் மையத் தொழில்நுட்ப உதவியுடன் "ஊரகச் சந்தை என்ற இணையதளத்தை" அரசு ஏற்படுத்தும். நேரடி விற்பனை செய்வதுடன், சந்தை வாய்ப்புகள் குறித்து தகவல்களை சுய உதவிக்குழுக்கள் பெறுவதற்கு இந்த இணைய தளம் உதவும். இது தவிர ஊரக சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மேம்பாட்டிற்காக சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் மண்டல அளவிலான கைவினைப் பொருட்காட்சிகள் நடத்தப்படும். மேலே விவரிக்கப்பட்ட முயற்சிகளின் செயலாக்கத்தைக் கண்காணிக்க, ஊரக வளர்ச்சித் துறை செயலரின் தலைமையில், சம்பந்தப்பட்ட துறைச் செயலர்கள்/தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும்.



### 4.4 மகப்பேறு மனை

ஆரம்பச் சுகாதார வசதி நிலையில் போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை, ஊரகப் பகுதிகளில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வளர்ச்சி அடைந்த கிராமங்களைவிட வளர்ச்சி அடையாத கிராமங்களில் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறக்கும் விகிதம் அதிகமாக உள்ளது. மேலும் மருத்துவ வசதிக்காகத் தனியார் மருத்துவமனைகளை அணுகுவது கிராம மக்களுக்கு கடன் சுமையை ஏற்படுத்துகிறது. இந்தச் சுமையை நீக்க பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கிராமங்களில் மகப்பேறு மனைகள் அரசால் படிப்படியாகக் கட்டித் தரப்படும். 2003-04 ஆம் ஆண்டில் ரூ.38.5 இலட்சம் செலவில் 385 மகப்பேறு மனைகள் கட்டப்படும்.

### 4.5 உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் திறன் வளர்ப்பு

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டாவது சாதாரணத் தேர்தல் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்றது. மொத்தம் 1,17,781 பிரதிநிதிகள் ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவி இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 23,848 தாழ்த்தப்பட்டோர் மற்றும் 964 பழங்குடியினர் அடங்குவர். மொத்தத்தில் 39,583 பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நடப்பு நிதியாண்டில், இவர்களது செயல் திறன் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்குச் சிறந்த மேம்படுத்தப்பட்ட தகவல் மேலாண்மை அவசியமாகும். உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் திறன் வளர்ப்புக்கு இரு நிலைகளிலான அணுகுமுறை பின்பற்றப்படும். தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு ஆகியவை மூலமாகப் பெறப்படும் விவரங்களைக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் இயற்கை வளங்கள் பற்றிய தொகுப்பு தயாரிக்கப்படும். இதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மைய உதவி பெறப்படும். இவ்விதம் உருவாக்கப்படும் ஊராட்சி ஆதாரத் தகவல் அமைப்பு, விரைவாகவும் அறிவியல்பூர்வமாகவும் முடிவுகள் எடுக்கப் பெரிதும் உதவும். மேலும் 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் பொது நிர்வாகம் மற்றும் மின்னணுவியல் அடிப்படையிலான நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படும். கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாக கணிப்பொறிகள் நிறுவப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மாவட்ட மற்றும் மாநில நிர்வாகத்துடன் 'வீடியோ கான்ஃப்ரன்ஸிங்' முறை மூலமாகத் தொடர்புகொள்ளும் வசதி

பரிட்சார்த்த முறையில் ஏற்படுத்தப்படும். முன்னுதாரணமாகத் திகழும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பிற மக்கள் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் ஈடுபடுத்தப்படுவர். உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் இணையதளம் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும். நிதி மேலாண்மையை மேம்படுத்தும் பொருட்டு படிப்படியாக வணிகக் கணக்கு முறை அறிமுகப்படுத்தப்படும். தற்போது நடைமுறையிலுள்ள வீட்டு வரி மற்றும் தொழில் வரியைத் திருத்தியமைப்பதன் மூலம் தங்களது வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்த கிராம ஊராட்சிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### 4.6 சிறந்த மாவட்டங்களுக்கான பரிசு

மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட நிர்வாகம் ஊரக வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. கிராமப்புற வளர்ச்சியில் மாவட்ட நிர்வாகம் கொண்டுள்ள உறுதிப்பாட்டினையும், கடின உழைப்பையும் அங்கீகரிப்பது பல்வேறு ஆதாரங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடையே ஓர் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தும். மாநில அளவில் ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் முதல் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இதில் முதலிடம் வகிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தங்கப் பதக்கம்" வழங்கப்படும்.

### 4.7 நிர்வாக உள்கட்டமைப்பு மேம்பாடு

ஊரக வளர்ச்சிக்காக, துறை எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவாகவும், அவற்றை வலுப்படுத்தவும், பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசு ரூ.248.77 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ரூ.50 இலட்சம் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் பயிற்சிக்காக செலவிடப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் கமுதி ஊராட்சி ஒன்றியங்களுக்கும், வேலூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கும் மொத்தம் ரூ.118 இலட்சம் செலவில் அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தரப்படும். மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி மற்றும் உசிலம்பட்டி, தேனி மாவட்டத்தில் பெரியகுளம், திருநெல்வேலி



மாவட்டத்தில் தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூ.32.00 இலட்சம் செலவிடப்படும். ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில், கணிப்பொறிகளை இணைக்கும் வசதி (Local Area Net Work) ஏற்படுத்த ரூ.3.77 இலட்சம் செலவிடப்படும். இது ஊரக வளர்ச்சித் துறையில் பெருகி வரும் வேலைப் பளுவினைக் கூடுதல் பணியாளர்கள் இன்றியே கையாள உதவும். காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்களுக்கு ரூ.45 இலட்சம் செலவில் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும்.

### 4.8. கிராம எரிசக்தித் திட்டம்

சூரிய ஒளி, காற்று மற்றும் தாவரக் கழிவு ஆகியவை தூய்மையான எரிசக்தி ஆதாரங்களாகத் திகழ்வதால் அங்கேயே கிடைக்கும் இவற்றை பயன்படுத்தி, கிராமங்களின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வது மிகப் பொருத்தமானதாகும்.

வேளாண் விளைபொருட்களை உலர்த்தவும், எளிதில் சென்று அடையமுடியாத பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் தெரு விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கவும் சூரிய சக்தி அதிக அளவில் பயன்படுத்தப்படும். உமி, நார்க் கழிவு ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் எரிவாயுவைக்கொண்டு ஜெனரேட்டர்களை இயக்கி மின்சாரம் தயாரிக்கப்படும். இது விளக்குகள் மற்றும் சிறு, குறு தொழிற்சாலைகளின் தேவைக்குப் பயன்படுத்தப்படும். மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களில் சாண எரிவாயுக் கலன்களை இணைப்பதன் மூலம் பெறப்படும் சக்தியைக்கொண்டு அந்தந்த வளாகங்களில் விளக்குகள் மற்றும் நீர் ஏற்றுவதற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற முடியும். இதனால் மின்சாரப் பயன்பாட்டுக்கென ஏற்படும் தொடர் செலவு கணிசமாகக் குறையும்.

புதுப்பிக்கப்படக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் ஒருங்கிணைந்த எரிசக்தித் திட்டம் தயாரிக்கப்படும். சூரிய சக்தி மற்றும் சாண எரிவாயுக் கலன்களில் ஏற்படும் பழுதுகளைச் சரிசெய்யவும் மற்றும் உதிரி பாகங்களை மாற்றுவதற்கும் இளைஞர்கள் மற்றும் பெண்களைக்கொண்டு அமைக்கப்படும் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில்

முதலில் அறிமுகப்படுத்தப்படும். அதில் கிடைக்கும் அனுபவம் மற்றும் வெற்றியைக்கொண்டு பிற கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

முதற்கட்டமாக, நடப்பு நிதி ஆண்டில் மாநிலம் முழுவதும் தொகுப்பு அடிப்படையில் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு எரிசக்தி திட்டம் தயாரிக்கப்படும். தெரு விளக்கு மற்றும் குடிநீர்ப் பம்புகளை இயக்குவதற்கு சூரிய சக்தியுடன், புதுப்பிக்கப்படக்கூடிய பிற எரிசக்தி ஆதாரங்களும் பயன்படுத்தப்படும். இவ்விதமாக மாற்று எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கிராம ஊராட்சிகள் மின்சாரத்திற்கென செய்யும் செலவினை வெகுவாகக் குறைக்கும். நடப்பு ஆண்டில், சூரிய சக்தியால் இயங்கும் 1000 தெரு விளக்குகள் பரிசோதனை அடிப்படையில் நிறுவப்படும். இதேபோல மனித மற்றும் விலங்குக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள், மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களில் கட்டப்படும்.

## 5. மாநில அரசுத் திட்டங்கள்

### 5.1 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

வளர்ச்சிக்கான உள் கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியை நிறைவு செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.82.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2002-03ஆம் ஆண்டு மொத்தம் 11,809 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதிகள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய முன்னுரிமைப் பணிகளும் அடங்கும்.

2003-04 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.240.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 தன்னிறைவுத் திட்டம்

வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்துவதிலும், சமுதாயச் சொத்துக்களைப் பராமரிப்பதிலும் மக்களை நேரிடையாகப் பங்கேற்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில், அரசு மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு



75:25 என்ற விகிதத்தில் இருக்கும். 2002-03 ஆம் ஆண்டில் 1,172 பணிகள் ரூ.26.69 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன.

2003-04 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3 மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்

கழிவறை, குளியலறை மற்றும் துணி துவைப்பதற்கான வசதி ஆகியவற்றுடன்கூடிய மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டும் திட்டம் 2001-02 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு வளாகம் கட்டத் திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு வளாகமும் 564 சதுர அடி பரப்பளவில் 10 கழிவறைகள் மற்றும் 3 குளியலறைகளைக் கொண்டிருக்கும். இது தவிர, துணி துவைப்பதற்கான கற்களும் பதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வளாகத்திற்கும் தனிப்பட்ட நீர் ஆதாரம் ஏற்படுத்தித் தரப்படுகிறது. 2002-03 ஆம் ஆண்டில் ஒரு வளாகத்திற்கான அலகுத் தொகை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டது. வளாகங்களின் அன்றாடப் பராமரிப்பை உபயோகிப்பாளர் குழுக்கள் மேற்கொள்கின்றன. கிராம, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 6,309 வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 6,309 வளாகங்களைக் கட்ட 2003-04 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.104.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.4 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டுதல்

நடைமுறையில் உள்ள இத்திட்டத்தின்கீழ் 12,506 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு கட்டடமும் ரூ.70,000/- அலகுத் தொகையில் கட்டப்படும். இதுவரை 7,684 கட்டடங்கள் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2003-04 ஆம் ஆண்டில், 2,856 கட்டடங்கள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும். மேலும் 1,902 கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்படும். நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.19.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 29

### 6. மத்திய அரசுத் திட்டங்கள்

### 6.1 ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டம்

#### 6.1.1 புதிய விடுகள்

கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வீடில்லாத குடும்பங்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் இலவச வீடுகள் கட்டப்படுகின்றன. சாதாரண வகை நிலப்பரப்பில் ஒரு வீட்டிற்கு ரூ.20,000-மும், கடின வகை நிலப்பரப்பில் ஒரு வீட்டிற்கு ரூ.22,000-மும் அலகுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியை, மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. மேலும் மாநில அரசு, சிமெண்ட் கான்கிரீட் மேற்கூரை அமைக்க, ஒவ்வொரு வீட்டிற்கும் தலா ரூ.12,000/- கூடுதலாக அளிக்கிறது.

2003-04 ஆம் ஆண்டில், 31,453 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 60 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 40 சதவீதம் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். குறைந்த செலவிலான கட்டட தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கும், பயனாளிகளே வீடுகளைக் கட்டிக்கொள்ளச் செய்யவும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

நடப்பு ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.24.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### 6.1.2 குடியிருக்க இயலாத கச்சா விடுகளை மேம்படுத்துதல்

இது ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.10,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

2003-04 ஆம் ஆண்டில் 16,164 பழுதடைந்த கச்சா வீடுகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 60 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 40 சதவீதம் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.



2003 ஏப்ரல் 29]

நடப்பு ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காகரூ4.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.2 நூதன ஊரக விட்டு வசதி மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை, எளியோருக்கு குறைந்த செலவிலான கட்டடத் தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தி வீடுகள் கட்டித்தருவதுடன் உள்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசால் அளிக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள இதர திட்டங்களிலிருந்தும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டு வரை 20 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூ.7.06 கோடி மதிப்பீட்டில் செயல் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில் ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் 14 மாவட்டச் செயல் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளது. மற்ற கருத்துருக்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. 2003-04 ஆம் ஆண்டில் கூடுதல் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 6.3 பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)

இத்திட்டத்தின்கீழ் குடியிருப்பு, ஆரம்பக்கல்வி, ஆரம்பச் சுகாதாரம், சத்துணவு, குடிநீர் மற்றும் மின் வசதி ஆகிய அடிப்படை வசதிகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்தித்தர மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இதில் குடியிருப்பு வசதி ஏற்படுத்தும் பணி ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. 2003-04 ஆம் ஆண்டில் 5,868 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.18.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

கிராமப்புறங்களில் பொது உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதிலும், தொழிலாளர்களுக்கு கூலியின் ஒரு பகுதியாக அரிசி வழங்குவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதிலும் இத்திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்திற்கான நிதியை மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

2003-04 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், வறட்சி நிவாரணப் பணிகள் அதிக அளவில் எடுத்துச் செய்யப்படும். குளங்களை

தூர்வாருதல், கதிரடிக்கும் களங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை உள்ளிட்ட 1,00,000க்கும் மேற்பட்ட பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டச் சிறப்புக்கூறின்கீழ் பெறப்படும் அரிசி, ஊரக வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களிலும் பயன்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.55.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதியிலும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசால் ரூ.2.00 கோடி ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களும் 18 மாநிலங்களவை உறுப்பினர்களும் உள்ளனர். 2003-04ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**6.6 பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம்**

இணைப்புச் சாலை இல்லாத அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் சாலை வசதி ஏற்படுத்தித்தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 2000-01ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.267.19 கோடி மதிப்பீட்டில் 2,291.150 கி.மீ. சாலை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. மத்திய அரசால் நியமிக்கப்படும் தேசிய தர கண்காணிப்பாளர்கள், தமிழ்நாட்டில் நடைபெறும் சாலைப் பணிகளின் தரம் சிறப்பாக உள்ளதென மதிப்பிட்டுள்ளனர். இது அகில இந்திய அளவில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். திட்ட நிதியைப் பயன்படுத்துவதில் தமிழகம் அடைந்துள்ள முன்னேற்றத்தை மத்திய அரசு பாராட்டியுள்ளது. அதனால் 2001-02ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.35.00 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. இது ஆண்டு ஒதுக்கீடான ரூ.80.00 கோடியைவிட 43.75 சதவீதம் கூடுதலாகும். ரூ.367.22 கோடி செலவில் 2,937 கி.மீ. சாலைகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரப்பர் கலந்த தார்ச் சாலை அமைக்கும் பணி பரிட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி, திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மொத்தம் 33.10 கி.மீ. கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படும். முறைப்படுத்தப்படாத சாலைகளின் பராமரிப்புக்கென ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



கிராமப்புறங்களில் சிறந்த சாலை வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னுரிமைகளில் ஒன்றாகும். எனவே 2006 ஆம் ஆண்டுக்குள் ரூ.937.68 கோடி செலவில் 7,584 கி.மீ. ஊரகச் சாலைகளை மேம்படுத்த துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளும். 500 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகையுள்ள 2,102 குடியிருப்புகளுக்கு ஊரக இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

**6.7 பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம்**

இது கிராமப்புற ஏழைமக்கள் சுய தொழில் மேற்கொள்வதற்கான பல்வேறு உதவிகளை உள்ளடக்கிய ஒரு முழுமையான திட்டமாகும். ஏழைமக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல், மானியத்துடன்கூடிய தொழில் கடன் வழங்குதல், உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் மற்றும் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்காக உதவுதல் ஆகியவை இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும். இத்திட்டத்திற்கான நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. 2002-03ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.43.87 கோடி ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் துவக்கப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரை 5,19,735 குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் 34,649 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.34.65 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2,04,930 குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் 13,662 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.131.72 கோடி மானியமும், ரூ.179.12 கோடி வங்கிக் கடனும் அடங்கும். இது தவிர 33,359 தனிநபர் பயனாளிகளுக்கும் தொழில் கடன் அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.22.44 கோடி மானியமும், ரூ.40.36 கோடி வங்கிக் கடனும் அடங்கும். மொத்தத்தில் இதுவரை 1,15,505 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும் 2,14,808 பெண்களும் பயனடைந்துள்ளனர்.

2003-2004-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.9.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.8 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகம்**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் நிர்வாகச் செலவினத்திற்கான நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

2003-2004ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.4.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.9 மறுவடிவமைக்கப்பட்ட மத்திய கிராமத் துப்புரவுத் திட்டம்

முழு சுகாதார இயக்கத்தை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும் செயல் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இத்திட்டம் 16 மாவட்டங்களில் ரூ.184.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டில் மீதமுள்ள 6 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். மொத்தத்தில் 21,08,136 தனிநபர் கழிவறைகளும், 2,281 பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களும், 25,184 பள்ளிக்கழிவறைகளும், 21,466 அங்கன்வாடி கழிவறைகளும், 2006-க்குள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.13.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.10 தேசிய சாண எரிவாயுத் திட்டம்

சுற்றுப்புறச் சூழலுக்குகந்த மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான முழு நிதியும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சமவெளிப் பகுதிகளில் அமைக்கப்படும் ஒவ்வொரு எரிவாயுக் கலனுக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ. 2300-ம், இதர பிரிவினருக்கு ரூ. 1,800-ம் மானியமாக வழங்கப்படுகிறது. மலைப்பகுதிகளில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஒரே சீராக ரூ.3,500 மானியம் வழங்கப்படுகிறது. 2002-03ஆம் ஆண்டு 2000 கலன்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2003-2004ஆம் ஆண்டில் இத்திட்டத்தை ஒருங்கிணைந்த குடியிருப்புத் திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றுடன் இணைத்து செயல்படுத்தப்படும். மோட்டார்களை இயக்கவும், விளக்குகளை எரிக்கவும் தேவையான மின்சக்தியைத் தயாரிக்க சாண எரிவாயுவைப் பயன்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.



ரூ. 0.62 கோடி ஒதுக்கீடு
வரவு-செலவுத் திட்டத்தில்
செய்யப்பட்டுள்ளது.

### 7. மனித வள மேம்பாடு

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் நிர்வாகத் திறனை வளர்க்கவும், மக்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும், சிறந்த முறையில் பணியாற்றவும், தேவையான மனப்பான்மையை அவர்களிடத்தில் உருவாக்கவும் பயிற்சி அவசியமாகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலைநகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் எஸ்.வி. நகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை மற்றும் டி. கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் செயல்படும் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் ஆகியவை ஊரக உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கும், துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. 2002-2003ஆம் ஆண்டு 1,368 மக்கள் பிரதிநிதிகளுக்கும், 4,556 அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு முறையான 2003-2004ஆம் ஆண்டு தொடர் பயிற்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். ஒளிவு மறைவற்ற நிர்வாகம், பொறுப்புணர்வு மற்றும் தகவல் உரிமை ஆகியவற்றிற்கு பயிற்சித் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இதில் வகுப்பறை பயிற்சியுடன் கலை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டங்களும் இடம் பெறும். அனைத்து உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கும் இப்பயிற்சி கட்டாயமாக்கப்படும். முறையான கால இடைவெளியில் ஒவ்வொரு உள்ளாட்சி மன்றப் பிரதிநிதியும் ஏதேனும் ஒரு பயிற்சியில் பங்குபெறும் விதத்தில் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்படும். முதல் சுற்றுப் பயிற்சியை முடித்த ஊராட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கு மறு பயிற்சியளிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளில் கருத்தரங்குகளும் நடத்தப்படும். இதற்கென மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி பெற நடவடிக்கை எடுக்கப்படும். பொருத்தமான, தரமான பயிற்சி அளிக்கும் விதத்தில் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள் மறு வடிவமைக்கப்படும். உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கான பயிற்சியில் வீடியோ கான்ஃபரன்சிங் முறையைப் பயன்படுத்த இத்துறை நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2003 ஏப்ரல் 29

## 8. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள்

### 8.1. மாநில நிதிக் குழு மானியம்

அரசு பொது சேர்மம் 'ஆ' வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 8 சதவீதம் நிதியிலிருந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவு முந்தைய 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் முன்பிருந்த காலாண்டுக்கொரு முறை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி விடுவிக்கும் முறையை மாற்றி, ஒவ்வொரு மாதமும் விடுவிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பெரிதும் பயனடைந்துள்ளன. 2002-2003ஆம் ஆண்டு ரூ. 7,30.29 கோடி ஒதுக்கப்பட்டது.

2003-04 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.773.45 கோடி ஒதுக்கீடு ஜெய்யுப்பட்டுள்ளது.

### 8.2 பதினோராவது நிதிக் குழு மானியம்

2002-03ஆம் ஆண்டில் கிராம ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ.85.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகளைப் பராமரிப்பதற்காக இந்த நிதியை பயன்படுத்திக் கொள்ள உள்ளாட்சி மன்றங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2003-04ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.93.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.3 சமூகக் கல்வி மானியம்

அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், தமிழரசு மற்றும் திட்டம் ஆகிய இதழ்களை வழங்கவும், சென்னையில் நடைபெறும் அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் பங்குகொள்ளவும், இந்த மானியம் பயன்படுகிறது.

2003-04-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.4 ஊரக மருந்தகங்களுக்கான மானியம்

ஊரக மருந்தகங்களைத் தோற்றுவித்தல் மற்றும் பராமரித்தல் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். முழு நேர மருந்தகங்களுக்கு ரூ.5400/-ம், பகுதி நேர மருந்தகங்களுக்கு ரூ.2040/-ம் அல்லது ஆண்டுச் செலவினத்தில் 50 சதவீதம், இதில் எது குறைவோ அந்த அளவில்



2( )3 ஏப்ரல் 29]


மானியம் அளிக்கப்படுகிறது. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.7.14 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.0.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


## 9. நிறைவுரை

ஊரக வளர்ச்சித் துறை தனது உயர்நிலைச் செயல்பாட்டினை 2003-2004ஆம் ஆண்டிலும் தொடர அயராது பாடுபடும். கிராமப்புற ஏழை மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத்தர மேம்பாடு அதிக முக்கியத்துவம் பெறும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்துத் தந்துள்ள வளர்ச்சி இலக்குகளை அடைவதில் பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து இத்துறை செயல்படும்.


நூலகம்
185080


இணைப்பு-6
அரசு வணிகத் துறையால் எடுக்கப்பட்ட மொத்தப் பணிகளின் எண்ணிக்கை
310234
318428
368321
2000-2001
2001-2002
2002-2003




நிதி ஒதுக்கீடு
ரூ. 33.30 கோடி
ரூ. 23.66 கோடி
ரூ. 26.18 கோடி
எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை
4000
3740
4758
2001-2002
2002-2003
2003-2004


இணைப்பு-8


பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம்
சுயஉதவிக் குழுக்கள்/தனிநபர் பயன்பெற்றோர் சதவீதம்
7.6
92.4
சுய உதவிக்குழுக்கள்
தனிநபர்
பயனடைந்தவர்களில் மகளிர் சதவீதம்
100
80
60
40
20
0
88.1
90.1
97.9
2000-2001
2001-2002
2002-2003





இணைப்பு-9



ஒருங்கிணைந்த ஊரகக் குடியிருப்புத் திட்டம் - வீடுகளின் எண்ணிக்கை
34672
16169
32621
16010
42023
19896
2000-2001
2001-2002
2002-2003
புதிய வீடுகள்
கச்சா வீடுகள்

[2003 ஏப்ரல் 29


இணைப்பு-10

## சம்பூரண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்

நிதி ஒதுக்கீடு
(ரூ. இலட்சத்தில்)




உருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்கள்
(இலட்சத்தில்)







2003 ஏப்ரல் 29]


இணைப்பு 11

## முழு சுகாதார இயக்கம்

எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை




நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)



Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.